

# இரட்டை அவதாரங்கள்



ரூஹி பயிற்சிக்கழகம்





நூல் 4

# இரட்டை அவதாரங்கள்

ரூஹி பயிற்சிக்கழகம்

இந்தத் தொடர்வரிசையில் வரும் நூல்கள்

ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட இந்தத் தொடர்வரிசையில் உள்ள தலைப்புகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்களும் முதியவர்களும் தங்கள் சமூகங்களுக்குச் சேவை செய்வதற்கான திறனாற்றலை மேம்படுத்துவதற்குரிய ஒரு முறைமையான முயற்சியில் இந்த நூல்கள் பிரதான தொடர்வரிசையாகப் பயன்படுத்தப்படும். பஹாய் குழந்தைகள் வகுப்பு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தொடர்வரிசையில் வரும் மூன்றாவது நூலின் கிளைப்பயிற்சித் தொகுப்பு ஒன்றை உருவாக்கி வருவதுடன், இளைய இளைஞர் குழுமங்களுக்கு எனிமேட்டர்களை உருவாக்குவதற்கு நூல் 5'இன் கிளை பயிற்சிகள் தொகுப்பு ஒன்றையும் ரூஹி பயிற்சிக்கழகம் உருவாக்கி வருகின்றது. அவையும் கீழ்காணும் பட்டியலில் குறிப்பிடப்படுகின்றன. களத்தில் அனுபவம் பெருகி, மேம்பாட்டில் உள்ள பாடத்திட்ட அம்சங்கள் பல விரிவாகக் கிடைக்கும் கட்டத்தை அடையும்போது இந்தப் பட்டியலும் மாற்றம் கண்டு, கூடுதல் தலைப்புகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| நூல் 1 | *ஆன்மாவைப் பற்றி பிரதிபலித்தல்* |
| நூல் 2 | *சேவைக்காக எழுதல்* |
| நூல் 3 | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 1* |
| | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 2 (கிளை பயிற்சி)* |
| | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 3 (கிளை பயிற்சி)* |
| | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 4 (கிளை பயிற்சி)* |
| நூல் 4 | *இரட்டை அவதாரங்கள்* |
| நூல் 5 | *இளைய இளைஞர் சக்திகளை விடுவித்தல்* |
| | *ஆரம்ப உந்தம்: நூல் 5'இன் முதல் கிளை பயிற்சி* |
| | *விரிவடையும் வட்டம்: நூல் 5'இன் இரண்டாவது கிளை பயிற்சி* |
| நூல் 6 | *சமயத்தைப் போதித்தல்* |
| நூல் 7 | *ஒரு சேவை பாதையில் ஒன்றாகப் நடப்பது* |
| நூல் 8 | *பஹாவுல்லாவின் திருவொப்பந்தம்* |
| நூல் 9 | *ஒரு வரலாறு சார்ந்த முன்னோக்கைப் பெறுதல்* |
| நூல் 10 | துடிப்பான சமூகங்களை நிர்மாணித்தல் |
| நூல் 11 | *லௌகீக வழிமுறைகள்* |
| நூல் 12 | *குடும்பமும் சமூகமும்* |
| நூல் 13 | *சமுதாய நடவடிக்கையில் ஈடுபடல்* |
| நூல் 14 | *பொது சொல்லாடல்களில் பங்கு பெறுதல்* |

பதிப்புரிமை © 2013, 2023, - ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பு 2.1.2.PE டிசம்பர் 2023
Printed in India

Originally published in Spanish as *Las Manifestaciones Gemelas*
Copyright © 1987, 1997, 2021 by the Ruhi Foundation, Colombia
ISBN 978-958-53332-2-2

Permission for a limited printing of this book in Tamil has been granted by the Ruhi Institute.

ரூஹி பயிற்சிக்கழகம்
காலி, கொலம்பியா
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org

# உள்ளடக்கம்


பயிற்றுனருக்கான சில சிந்தனைகள் ........ v

இந்நாளின் மகத்துவம் ........ 1

பாப் பெருமானாரின் வாழ்க்கை ........ 17

பஹாவுல்லாவின் வாழ்க்கை ........ 77

# பயிற்றுனருக்கான சில சிந்தனைகள்

ரூஹி பயிற்சிக்கழகத்தினால் வழங்கப்படும் பயிற்சிப்பாடமாகிய இந்த நான்காவது பாடத்தைப் பங்கேற்பாளர்கள் வந்தடையும் போது, அதன் பிரதான பயிற்சிவரிசையினால் திறக்கப்படும் சேவைப் பாதையில் அவர்கள் உறுதியாக மேம்பாடு கண்டிருப்பர். அவர்களின் பின்னணி என்னவாக இருப்பினும், நூல் 1-இல் பிரவேசிக்கும் போது, பஹாவுல்லாவின் திருவாக்குகளில் விவரிக்கப்படும் தனிநபர் மற்றும் கூட்டு தன்மைமாற்றம் குறித்த தொலைநோக்கிற்கு அவர்கள் தங்களை அர்ப்பணித்திருப்பர். இதற்காக, பஹாவுல்லாவின் திருவாக்குகளை அனுதினமும் படிக்கும் பழக்கத்தை உருவாக்கிட ஆரம்பித்தும், பக்திக் கூட்டங்களிலிருந்தும் அமைதியான தியானம், மற்றும் அவர் வெளிப்படுத்தியுள்ள பிரார்த்தனைகள், அறிவுரைகள் ஆகியவற்றிலிருந்தும் ஆன்மீக ஊட்டத்தைப் பெறுவர். அவர்கள், அவர் உச்சரித்துள்ள ஆன்மீக கொள்கைகளைப் பற்றி நண்பர்களுடனும் அறிமுகங்களுடனும் உரையாடலில் ஈடுபட கற்றுக்கொள்ள ஆரம்பித்திருப்பர்; உலகை புத்தாக்கம் செய்வதற்காக அவர் கொண்டுவந்துள்ள போதனைகளைப் பற்றி பேசுவதற்கு அவர்கள் தங்கள் கிராமத்தில் அல்லது அண்டைப்புறத்தில் உள்ள இல்லங்களுக்கு விஜயம் செய்வர். சிலர் சிறுவர்களின் ஆன்மீகக் கல்விக்கு வகுப்புகள் நடத்தி வருவர். பின்னர், சேவை பாதையில் இத்தருணத்தில், தங்கள் மீது ஆழமாகத் தாக்கம் செலுத்திய அப் பரமரின் போதனைகளுடன் மேலும் அதிகமாக பரிச்சயமாகிடவும் அவரது திருவெளிப்பாட்டின் பிறப்பு மற்றும் படிப்படியான மடிப்பவிழ்வுடன் தொடர்புகொண்ட வரலாறு சார்ந்த சூழ்நிலைகள் குறித்து மேலும் ஆழமான ஒரு மதிப்புணர்வை பெற்றிடவும் அவர்கள் தயாராக – உண்மையில், ஆர்வத்துடன் – இருப்பர். நூல் 4-இன் மூன்று பாடப்பிரிவுகளும் பங்கேற்பாளர்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கிட நோக்கம் கொண்டுள்ளன.

நிச்சயமாகவே, ஓர் அவதாரத்தின் வாழ்க்கையானது பிற மனிதப் பிறவிகளின் வாழ்க்கையிலிருந்து அடிப்படையில் வேறுபட்டதாகும்; மற்றும், அவரது மகத்துவத்தை அவரது வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள நிகழ்ச்சிகளைப் படிப்பதன் வாயிலாக மட்டுமே புரிந்துகொள்ள முடியாது. பூமியில் அவர் வாழும் காலங்களில், அவரது அசாதாரன சக்திகள் உலகம் முழுவதும் பரவச் செய்யப்பட்டு, எல்லா படைக்கப்பட்ட பொருள்களின் மெய்நிலையில் ஓர் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தி, மனிதகுலத்தை அபிவிருத்தியின் ஒரு புதிய கட்டத்தை நோக்கி உந்தித்தள்ளுகின்றன. வெளிப்பார்வைக்கு அவரது வாழ்க்கை, துன்பங்களால் நிறைந்திருப்பது போன்று தோன்றினாலும் ஆன்மீகக் கண்கள் ஒவ்வொரு நிகழ்விலும் அவரது மகிமை மற்றும் மாட்சியின் அடையாளங்களைக் நுணுகிக்காண்கின்றன. இரண்டாம் மற்றும் மூன்றாம் பாடப்பிரிவுகளில் கலந்துரையாடப்படும், பாப் பெருமானார் மற்றும் பஹாவுல்லாவின் வாழ்க்கை வரலாறுகளின் படிப்பாய்வுக்குப் பங்கேற்பாளர்களைத் தயாராக்குவதற்கு, முதலாம் பாடப்பிரிவு, கடவுளின் இரண்டு அவதாரங்களின் தோற்றத்தை கண்ட, நாம் வாழும் இந்நாளின் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கின்றது.

இந்தப் பாடப்பிரிவு சற்று குறுகியது. இது, சில எளிய பயிற்சிகளுடன், இந்நாளின் மகத்துவத்தைப் பற்றி உரைக்கும் பஹாய் திருவாக்குகளிலிருந்து பல உரைப்பகுதிகளை இது உள்ளடக்கியுள்ளது. ஒன்றாக, நீண்டகாலத்திற்குப் பிறகு மனிதகுலத்தின் ஒன்றிப்பு சாத்தியமாகியுள்ள, வரலாற்றின் இத்தருணத்தின் இயல்பைப் பற்றி மட்டுமின்றி, இந்த அறிவு நம் ஒவ்வொருவர் மீதும் சுமத்துகின்ற கடமைகள் பற்றியும் பங்கேற்பாளர்கள் பிரதிபலிப்பதற்கு உதவிடும். நூல் 4-இன் பயிற்றுனர்களாகச் செயல்படுவோர், பங்கேற்பாளர்கள் ஏற்கனவே பயின்றுள்ள பயிற்சிகளிலிருந்தும் தங்கள் சமூகத்தின் வாழ்வில் ஈடுபடுவதன் மூலமும் சமயத்தின் சில அடித்தலமான கருத்தாக்ககங்கள் பற்றி ஏற்கனவே ஓர் அடிப்படை புரிதலைப்

பெற்றிருப்பர் என அனுமானிக்கின்றது என்பதை அறிந்திட வேண்டும். கடந்தகால மதநூல்கள் அனைத்தும் உலகில் அமைதியும் நீதியும் ஸ்தாபிக்கப்படப்போகும், கடவுளின் வாக்களிக்கப்பட்ட நாளைப் பற்றி குறிப்பிட்டுள்ளன பஹாவுல்லா சர்வலோக அமைதிக்கான பதாகையை உயர்த்தியுள்ளதுடன் மனிதகுலம் அதன் சொந்த சாராம்ச ஒருமையை ஒப்புக்கொள்ளும்படி கோரியுள்ளார்; அவர் தமது நம்பிக்கையாளர் சமூகத்தின் பார்வையை ஒரு புதிய உலக ஒழுங்கமைப்புமுறை பற்றிய இலக்கின் மீது பதித்துள்ளார் -- இவையே “இந்நாளின் மகத்துவம் என்னும் பாடப்பிரிவின் கலந்துரையாடலில் வலியுறுத்தப்படும் கருத்தாக்கங்களுள் சிலவாகும்.

அடுத்த இரண்டு பாடப்பிரிவுகளும் 1844-இல் பாப் பெருமானார் தமது அருட்பணியை பிரகடனம் செய்த அந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க மாலை நேரத்திலிருந்து ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்குப் பிறகு பஹாவுல்லாவின் ஆன்மா இவ்வுலக மட்டத்திலிருந்து விண்ணேற்றம் எய்திய அந்த அதிகாலை வேளை வரையில் சமயத்தை முன்னோக்கி உந்தித்தள்ளிய நிகழ்வுகளை வரிசையாக மொழிகின்றன. குறிப்பாக, மூன்றாவது பாடப்பிரிவில் வரும் இந்தக் காலவரிசையான மொழிபு, திருஅவதாரத்துடன் தொடர்புகொண்ட குறிப்பிட்ட சில ஆன்மீகக் கருப்பொருள்களை விளக்குகின்ற, திருவாக்கிலிருந்து வரும் உரைப்பகுதிகளால் நிரப்பம் செய்யப்படுகின்றன. இவ்வுரைப்பகுதிகளுள் பலவற்றைத் தொடர்ந்து பயிற்சிகள் வருகின்றன; மற்றவை திரும்பத்திரும்ப வாசிக்கவும் சுய பிரதிபலிப்பையும் கோருகின்றன. பங்கேற்பாளர்கள் பாடப்பிரிவுகளைப் படிக்கும்போது பாப் பெருமானார் மற்றும் பஹாவுல்லாவின் வாழ்க்கைகள் பற்றிய முற்றிலுமான மற்றும் முறைமையான அறிவைப் பெறுவதை பயிற்றுனர் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பும் அதே வேளை, விவரிக்கப்படும் கதைகளிலிருந்து சேகரிக்கப்படும் ஆழ்ந்த ஆன்மீக உண்மைகளே அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

ஒரு குழுவை இரண்டாம் மற்றும் மூன்றாம் அலகுகளினூடே வழிநடத்திட ஆயத்தமாவதில், பயிற்றுநர் அவற்றில் அடங்கியுள்ள ஆன்மீகக் கருப்பொருள்களின்பால் உன்னிப்பான கவனம் செலுத்தவேண்டும். அவற்றுள், உதாரணத்திற்கு, ஒவ்வொரு தெய்வீக ஒளிப்பிழம்பும் தனது சொந்த விருப்பத்தினாலின்றி கடவுளின் திருவிருப்பத்தினாலேயே உலகில் வெளிப்படுத்தப்பட்டு, அவரால் உள்ளார்ந்த அறிவும் அருளப்படுகின்றனர்; அவரது ஸ்தானத்தை முதன் முதலில் கண்டுணர்வோர், அவரது சமயத்தின் தன்மைமாற்றும் சக்திக்கு சாட்சியாக விளங்கும் பெரும் வீரம் நிறைந்த செயல்களைப் புரிந்திடும்படி கோரப்படுகின்றனர்; மானிடத்தை உண்மையின்பால் வழிநடத்தவும் கடவுளின் படைப்பினங்கள் அவரது சித்தம் மற்றும் நோக்கத்தை அறிந்துகொள்ளவும் துன்பம் நிறைந்த ஒரு வாழ்க்கையை வாழ்ந்திட அவர் ஒப்புக்கொள்கின்றார்; எவ்வளவு வலிமையுடையதாக இருப்பினும், உலக சக்தி எதுவுமே அவரது செல்வாக்கைக் குறைப்பதில் வெற்றிபெறவோ அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அருட்பணியை சாதிப்பதிலிருந்து அவரைத் தடுத்திடவோ இயலாது. இதன் தொடர்பில், மூன்றாவது அலகில் கவனம் செலுத்தப்படும் ஒரு முக்கிய கருத்தாக்கம் நெருக்கடி மற்றும் வெற்றி குறித்ததாகும். கடவுள் சமயத்தில் ஒவ்வொரு நெருக்கடியும் அதன் உள்ளார்ந்த சக்தியின் ஓர் அளவை வெளிப்படுத்துவதற்கு உதவுகின்றது என்னும் இக்கருத்தாக்கம் குறித்த ஒரு புரிதல், சேவைப் பாதையில் கால்பதிப்போருக்கு இன்றியமையாததாகும். அது, அவர்கள் சமயத்தின் சரித்திரத்தை மதித்துணர்வதற்கு மட்டுமின்றி, அவர்கள் தங்களின் அண்டைப்புறங்கள், கிராமங்கள் ஆகியவற்றில்--நெருக்கடிகள் மற்றும் வெற்றிகளின் வரிசை ஒன்றின் வழி தவறாது கடந்துசெல்லும் ஒரு செயல்முறையான--அதன் சீரான மடிப்பவிழ்விற்குப் பங்களிப்பதற்கும் ஆகும்.

இது போன்ற கருப்பொருள்களின் மீது பிரதிபலித்தல், பாப் பெருமானார் மற்றும் பஹாவுல்லாவின் வாழ்க்கைகளுடன் தொடர்புகொண்ட நிகழ்வுகளில் அவ்விருவரும் மானிடத்தின் மீது கொண்டிருந்த அன்பின் ஆழத்தையும் அவர்களின் அடுத்தடுத்த அருட்பணிகளின் மேன்மையான பண்பையும் உணர்ந்துகொள்ள பங்கேற்பாளருக்கு உதவிடும். அது, அவர்களின் உள்ளங்களைக் கடவுள் அவதாரங்களுடன் அணுக்கமாக்கிடவும் அவரது சமயத்திற்கான சேவை பாதையில் அவர்களின் காலடிகளை உறுதியாகப் பதிப்பதற்கும் உதவிடும். அது, பஹாவுல்லா என்னும் பேராளுமை மற்றும் அவரது திருவெளிப்பாடு ஆகியவை பற்றி பிறருடன் உரையாடுகவதற்கான—அவரது வாழ்க்கை பற்றி நூல் 2-இல் படித்ததிலிருந்து அவர்கள் உருவாக்கிக் கொண்டு வந்துள்ள—திறனாற்றலை மேம்படுத்திடும். செவிமடுப்போரின் உள்ளத்தைத் தொடும் வகையில் அவரது வாழ்க்கை மற்றும் அவரது முன்னோடியின் வாழ்க்கை பற்றி வரலாற்றை மொழிவதற்கான செயல்திறனானது, யாவற்றுக்கும் மேலாக, எடுத்துரைக்கப்படும் நிகழ்வுகளின் ஆன்மீக முக்கியத்துவம் குறித்த புரிதலைச் சார்ந்துள்ளது. நிச்சயமாகவே, அதிக பயிற்சி தேவைப்படுகிறது, மற்றும் இரட்டை அவதாரங்களின் வாழ்க்கைகளிலிருந்து நிகழ்ச்சிகளை ஒருவர் மற்றவரிடம் கூறுவதற்கு நிறைய வாய்ப்பு வழங்கப்படுவதை பயிற்றுனர் உறுதிப்படுத்திட வேண்டும். சில பங்கேற்பாளர்கள், குடும்ப விஜயங்கள் வரிசை ஒன்றின் பகுதியாக, தங்களின் நண்பர்கள் மற்றும் அண்டையர்களுடன் நடைபெறும் உரையாடல்களில் தாங்கள் கற்றவற்றை அறிமுகப்படுத்தவதற்கு வாய்ப்புகள் ஏற்படுவதையும் காணலாம். இது மற்றும் இது போன்ற பிற நிகழ்வுகளில் அவர்களுக்கு உதவியாக, சுருக்க விவரங்கள் அடங்கிய சில வரைபடங்களைக் கொண்ட ஒரு கையேடு வரலாறு சார்ந்த அவ்விரு அலகுகளிலும் சேர்ந்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. தேவைப்படும் வகையில், அந்தக் கையேடுகள் பிரதியெடுத்துக்கொள்ளப்படலாம் அல்லது ரூஹி பயிற்சிக்கழகத்தின் பொது இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

இரட்டை அவதாரங்களின் வாழ்க்கையுடன் தொடர்புடைய நிகழ்வுகள் அவை நிகழ்ந்த கிரிகோரியன் தேதிகளின்படி அலகுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இங்கே குறிப்பிடுவது முக்கியம். இன்று, மிக முக்கியமான நிகழ்வுகளின் ஆண்டுவிழாக்கள் படீ' நாட்காட்டியின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, அவற்றின் பஹாய் தேதிகளில் நினைவுகூரப்படுகின்றன, மற்றும் அவற்றின் கிரிகோரியன் தேதிகளுக்குச் சமமான தேதிகள் ஆண்டுக்கு ஆண்டு மாறுபடலாம். இவ்விஷயம் குறித்து, பயிற்றுனர் குழு உறுப்பினர்களுடன் ஒரு கலந்துரையாடலில் ஈடுபட வேண்டியதில்லை; அது பங்கேற்பாளர்கள் தங்கள் சமூகத்தில் புனிதநாள்கள் அனுசரனையில் பங்கேற்கும் போது அவர்களுக்குப் படிப்படியாக வெளிப்பட்டு வரும். உண்மையில், இந்த நடவடிக்கையும் பிற கூட்டு நடவடிக்கைகளின் போதும் அவதாரங்களின் வாழ்க்கையிலிருந்தும் சமயத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தும் இடைக்கதைகள் அடிக்கடி விவரிக்கப்படுகின்றன, மற்றும் இது இன்று பங்கேற்பாளர்களுக்குத் தங்கள் கிராமத்திலோ அல்லது சுற்றுப்புறத்திலோ முன்னெடுத்துச் செல்லப்படும் செயல்முறைகளுக்கு ஆரம்ப உந்துதலைக் கொடுத்த வரலாற்றுச் சூழ்நிலைகள் பற்றிய கூடுதல் நுண்ணறிவை வழங்கும்.



# இந்நாளின் மகத்துவம்

## நோக்கம்

இந்த நாளின் மகத்துவம் குறித்தும்,
அது மனிதகுலத்திற்கு அளிக்கும்
வாக்குறுதிகள் பற்றியும்
நுண்ணறிவு பெறுதல்

# பகுதி 1

எல்லா படைக்கப்பட்ட பொருள்களையும் புதுப்பிக்க வந்துள்ள, பஹாவுல்லா மற்றும் அவரது முன்னோடியான பாப் பெருமானார் என்னும் இரண்டு கடவுளின் அவதாரங்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு யுகமான, மனித வரலாறு சார்ந்த ஒரு விசேஷ காலத்தில் வாழும் நாம் பாக்கியம் செய்தோராவோம். நமது கண்முன்பாகவே அவ்விரு அவதார புருஷர்களும் வெளிப்படுத்தியுள்ள ஆற்றல்கள், மனித சமுதாயத்தை எவ்வாறு மாற்றிக்கொண்டிருக்கின்றன -- எப்படி ஒரு பழைய உலகம் மறைந்து அதன் இடத்தில் ஒரு புதிய உலகம் தோன்றி கொண்டிருக்கின்றது --என்பதை, நாம் காண்கின்றோம். ஒரு பழைய உலகம் தேய்ந்து போகையில், அளவுகடந்த துன்பங்கள் அதனோடு சேர்ந்தே வரும் என்பது உண்மை. அந்த துன்பங்களால் நாம் பாதிக்கப்பட்டும், நம்மை சுற்றி நேரும் அழிவுகளால் மிகுந்த கவலைக்கு ஆளாகாமலும் இருக்க முடியாது. ஆனால், அவ்வித துன்பங்களினால் நாம் பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில், பஹாவுல்லா இவ்வுலகிற்கு விதித்துள்ளதை நோக்கி அது சீராகச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

இது இறைவனின் திருநாள். கடவுளின் நாளில் வாழ்வதென்பது, நிகரற்ற ஒரு அருட்கொடையாகும்; அது தன்னுடன் முக்கிய பொறுப்புக்களையும் தாத்பரிக்கின்றது. இப்பேற்றின் பரிமாணத்தை மதித்துணரவும் நமது கடமைகளை விளைவுத்திறத்துடன் நிறைவேற்றவும், இத்திருநாளின் தனி சிறப்பு, மகத்துவம் ஆகியவற்றைப் பற்றி அடிக்கடி சிந்தித்து, மானிடத்திற்கான இறைவனின் நோக்கத்தை அதிகரித்த அளவில் அறிந்துகொள்ள வேண்டும். நாம் வாழும் இக்காலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி குறிப்பிடும் பஹாய் திருவாக்குகளிலிருந்து சில உரைப்பகுதிகளுடன் நீங்கள் பரிச்சயமாவதே சற்று குறுகியதான இப்பாடப்பிரிவின் நோக்கமாகும். இவ்வுரைப்பகுதிகளைப் படித்து அவற்றின் அர்த்தம் குறித்து பிரதிபலிப்பதற்கு முன், இன்று மானிடத்திற்கென கடவுள் நோக்கமாகக் கொண்டிருக்கும் சில சாதனைகளை உங்கள் குழுவின் பிற உறுப்பினர்களுடன் அடையாளம் காண முயல்வது உதவியாக இருந்திடக் காண்பீர். உலக மக்கள் அனைவரையும் ஒரே சர்வலோக குடும்பமாக ஒருங்கிணைத்தல், இக்காலத்தில் அடையப்பட வேண்டிய இலக்குகளில் அடங்கும் என்பதை நாம் அறிவோம். வேறு சில வற்றைக் குறிப்பிடவும்:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## பகுதி 2

பஹாவுல்லா கூறுகின்றார்:

**"மெய்யாகவே யான் கூறுகின்றேன், மனித இனம், வாக்களிக்கப்பட்டவரின் திருவதனத்தைக் கண்ணுற்று, அவரது குரலினைச் செவிமடுத்திடும் நாள் இதுவே. இறைவனின் குரல் எழுப்பப்பட்டு விட்டது; அவரது திருவதனத்தின் பிரகாசம் மனிதர் மீது ஒளிரச் செய்யப்பட்டுவிட்டது. ஒவ்வொரு மனிதனும், பயனற்ற வார்த்தை ஒவ்வொன்றையும் தனது இதயமெனும் ஏட்டிலிருந்து துடைத்தொழித்துவிட்டுப், பின், திறந்த, பாரபட்சமற்ற மனதுடன், அவரது திருவெளிப்பாட்டின் அடையாளங்களையும், அவரது தூதுப்பணியின் நிரூபணங்களையும், அவரது பேரொளியின் சின்னங்களையும் கூர்ந்து நோக்குவது ஏற்புடையதாகும்."**[1]

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இந்நாளில் மனிதர்கள் வாக்களிக்கப்பட்டவரின் __________________ கண்ணுறவும் அவரது __________________ செவிமடுக்கவும் இயலும்.

ஆ. _______________________________ எழுப்பப்பட்டுவிட்டது. அவரது ____________________ன் ________________ நம்மீது ஒளிரச்செய்யப்பட்டுள்ளது.

இ. நமது _________________ ஒவ்வொரு ___________________ ___________________ துடைத்தொழித்து, அவரது வெளிப்பாட்டின் ________________, அவரது தூதுப்பணியின் ________________ அவரது பேரொளியின் ________________ கூர்ந்து நோக்குவது ஏற்புடையதாகும்.

2. பின்வருபவைகளில் பஹாவுல்லாவைக் கண்டுகொள்வதிலிருந்து மக்களை தடுக்கும் வீண் வார்த்தைகள் எவை?

— எனது பெற்றோரின் சமயமே எனக்கும் போதுமானது.
— மனிதகுலத்திற்கு ஒரு ஆன்மீக வசந்தகாலம் தேவையாக உள்ளது.
— மதம் தேவைப்படுவோருக்கு மட்டும் போதுமானது.
— மதங்கள் சச்சரவுகளுக்கு காரணமாக உள்ளன, ஆகவே அவற்றைஒழித்துவிடவேண்டும்.
— எனக்குத் தெரிந்தவரை எல்லா சமயங்களும் ஒன்றாகவே உள்ளன, ஆகவே எதைச் சார்ந்திருக்கின்றோம் என்பது முக்கியமல்ல.
— இறைவன் மனிதகுலத்தை கைவிட்டுவிட்டார்.
— சமயங்கள் உட்பட அனைத்துமே புதுப்பிக்கப்பட வேண்டும்.

— அறிவியல் கடவுள் என ஒருவர் இல்லை என நிரூபித்துள்ளது. பகுத்தறிவைப் பயன்படுத்தி நமது அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம்.
— நான் எந்த மதத்தையும் சார்திருக்க விரும்பவில்லை.
— ஆன்மீகமாக இருப்பதற்குச் மதம் தேவையில்லை.
— ஒவ்வொரு தனிமனிதனும் தனது சொந்த வழியில் இறைவனைக் கண்டுகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். அதற்கு அவதாரபுருஷர்கள் ஏன் தேவை?
— நமது சொந்த சமயத்தில் புனித நூல்கள் உள்ளன. மேலும் ஒரு புதிய அவதாரபுருஷர் தேவையில்லை.

3. கீழ்காண்பவற்றில், பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டின் அடையாளங்கள் எவை?

— அவரது மொழிவின் சொல்வன்மை
— அவரது திருவாக்குகளின் ஊடுருவும் சக்தி.
— அவரது புனித வாசகங்களைப் பயன்படுத்தியவர்களின் இதயங்களில் ஏற்படும் தன்மைமாற்றம்.
— மக்களின் சிந்தனைகளிலும் செயல்களிலும் அவரது போதனைகளின் செல்வாக்கு.
— சரித்திரம் செல்லும் திசையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதில் அவரது போதனைகளின் செல்வாக்கு
— மானிடத்திற்கான எதிர்காலம் பற்றிய அவரது தொலைநோக்கின் மேன்மை
— மானிடத்திற்காக அவர் சகித்துக்கொண்ட வேதனைகளும், கொடுமைகளும்
— உலக சக்திகளின் ஒடுக்குதலுக்கு ஆளான போதிலும் அவரது மாட்சிமை குறையாமை.
— ஒவ்வொரு மதம் மற்றும் பின்னணியைச் சேர்ந்த மக்களை ஒன்றுபடுத்திடும் அவரது போதனைகளின் சக்தி
— அவரைப் பின்பற்றுவோர் சமூகத்தின் சீரான வளர்ச்சி.
— ஒவ்வொரு தடையை எதிர்கொள்ளவும் அவரது சமயத்தின் ஒற்றுமையைப் பராமரிக்கவுமான அவரது திருவொப்பந்தத்தின் சக்தி.
— அவரது நிர்வாக ஒழுங்கமைப்பு முறையின் அற்புதத் தன்மை.
— எவ்வாறு அவர் கற்பனை செய்துள்ளதை நோக்கி உலகம் சென்றுகொண்டிருக்கின்றது.

# பகுதி 3

பஹாவுல்லா கூறுகின்றார்:

**"உண்மையாகவே, மேன்மைமிக்கது இந்நாள்! அதனை, ஆண்டவனின் நாள் என எல்லாத் திருமறைகளிலும் குறிப்பிட்டிருப்பதுவே அதன் பெருமைக்குச் சான்றாகும். ஒவ்வொரு தீர்க்கதரிசியின் ஆன்மாவும், ஒவ்வோர் இறைத்தூதரின் ஆன்மாவும் இவ்வற்புதமான நாளுக்காக ஆவலுடன் ஏங்கியிருந்திருக்கின்றது. அவ்வாறே, உலகின் பல்வேறு இனங்களெல்லாம் அதனை அடைய ஆவலுற்றிருக்கின்றன. எனினும், அவரது வெளிப்பாடெனும் பகல் நட்சத்திரமானது இறைவனின் நல்விருப்பமெனும் விண்ணுலகில் தன்னை வெளிப்படுத்திக்கொண்ட உடனே, இறைவன், எவரை வழிநடத்த**

**விரும்பினாரோ, அவர்களைத் தவிர, மற்றனைவரும், வாயடைத்துப்போயும் அக்கறையற்றும் காணப்பட்டனர்.”[2]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

   அ. உண்மையாகவே, ________________ இந்நாள்! அதனை, ________________ __________ என எல்லாத் ________________ குறிப்பிட்டிருப்பதுவே அதன் பெருமைக்குச் சான்றாகும்.

   ஆ. ஒவ்வொரு ________________ ஆன்மாவும், ஒவ்வோர் ________________ ஆன்மாவும் ________________ நாளுக்காக ________________ ________________ __________.

   இ. அவ்வாறே, உலகின் பல்வேறு ______________ அதனை ______________ _________________________.

   ஈ. எனினும், அவரது வெளிப்பாடெனும் பகல் நட்சத்திரமானது இறைவனின் நல்விருப்பமெனும் விண்ணுலகில் தன்னை __________________________ உடனே, இறைவன், எவரை ______________ ______________, அவர்களைத் தவிர, மற்றனைவரும், ______________ ______________ காணப்பட்டனர்.

2. மேற்கண்ட பத்தியிலிருந்து, இந்நாள் நிறைவேற்றத்திற்கான நாள் என்பது தெளிவு. எல்லா தீர்க்கதரிசிகளும் இறைத்தூதர்களும் உலகில் அமைதியும் நல்லிணக்கமும் ஸ்தாபிக்கப்படப் போகும் ஒரு நந்நாளைப் பற்றி முன்கூறியுள்ளனர். மேற்கண்ட பத்தியில், வாக்களிக்கப்பட்ட நாளை ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்த போதும், அவர் தமது வருகையைப் பிரகடனப்படுத்திய போது அவரை நிராகரித்தோரைப் பற்றி பஹாவுல்லா குறிப்பிடுகின்றார். பஹாவுல்லாவைக் கண்டுகொண்ட ஓர் ஆன்மாவைப் பற்றி ஒருவர் சிந்திக்குங்கால் மனதில் பல பிம்பங்கள் தோன்றுகின்றன. பின்வரும் காலியிடங்களைப் பொறுத்தமான வார்த்தைகளைக் கொண்டு நிரப்பவும்:, விழிப்புநிலை, மெய்யுறுதி, விழிப்புணர்வு, நம்பகம்தன்மை, ஆர்வ நம்பிக்கை (wakefulness, certitude, awareness, trust, hope)

   அ. நித்திரை நிலையிலிருந்து ___________________க்குக் கடந்துசெல்தல்

   ஆ. அக்கறையின்மையிலிருந்து ___________________க்குக் கடந்துசெல்தல்

   இ. நம்பிக்கையிழப்பிலிருந்து ___________________க்குக் கடந்துசெல்தல்

   ஈ. சந்தேகப்படுதலிலிருந்து ___________________க்குக் கடந்துசெல்தல்

   உ. ஐயப்பாட்டிலிருந்து ___________________க்குக் கடந்துசெல்தல்

3. பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டின்பால் ஓர் இதயத்தைத் திறக்கச்செய்வது எதுவேன நீங்கள் நினைக்கின்றீர்கள்?

## பகுதி 4

பஹாவுல்லா கூறுகின்றார்:

**"இதுவே, இறைவனின் மிகச் சிறந்த சலுகைகள் மனிதர்மீது பொழியப்பட்டுள்ள நாள்; அவரது வலுமிக்கக் கிருபை எல்லாப் பொருட்களினுள்ளும் வியாபிக்கச் செய்யப்பட்டுள்ள நாள். தங்களிடையே உள்ள வேற்றுமைகளை அகற்றி மீண்டும் ஒன்றிணைந்து, பூரண ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் அவரது பாதுகாப்பு, அன்புப்பரிவு என்னும் விருட்சத்தின் நிழலின் கீழ் வாழ வேண்டியது உலக மக்கள் அனைவருக்கும் கடமையாக்கப் பட்டுள்ளது. இந்நாளில் எவையெல்லாம் தங்கள் ஸ்தானங்களின் உயர்வுக்கு உகந்தவையோ, எவையெல்லாம் தங்களின் மிகச் சிறப்பான நலன்களை மேம்பாடுறச் செய்பவையோ அவற்றைப் பற்றிக்கொள்வது அவர்களுக்குப் பொருத்தமானது."3**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இந்நாளில், கடவுளின் மிகச் சிறந்த _______________ மானிடத்தின் மீது _______________.

ஆ. இந்நாளில், கடவுளின் வலுமிக்கக் _______________ எல்லாப் பொருட்களினுள்ளும் _______________ செய்யப்பட்டுள்ளது.

இ. இந்நாளில், தங்களிடையே உள்ள _______________ _______________ மீண்டும் ஒன்றிணைந்து, _______________ _______________, _______________ அவரது பாதுகாப்பு, _______________ என்னும் _______________ நிழலின் கீழ் வாழ வேண்டியது உலக மக்கள் அனைவருக்கும் கடமையாக்கப் பட்டுள்ளது.

ஈ. இந்நாளில் எவையெல்லாம் தங்கள் _______________ _______________ உகந்தவையோ, எவையெல்லாம் தங்களின் _______________ _______________ _______________ மேம்பாடுறச் செய்பவையோ அவற்றை உலக மக்கள் பற்றிக்கொள்ள வேண்டும்.

2. இந்நாளில் கடவுள் மானிடத்தின் மீது பொழிந்துள்ள "மிகச் சிறந்த சலுகைகள்" சில எவை?

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

3. “உகந்தவை” என்னும் சொல்லின் அர்த்தம் என்ன? ______________________________

___________________________________________________________________________

4. மானிடத்தின் மிகச் சிறந்த சலுகைகளை ஊக்குவிப்பதற்கு நீங்கள் செய்யக்கூடிய சில காரியங்களின் பட்டியல் ஒன்றை தயாரிக்கவும்: ______________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

## பகுதி 5

பஹாவுல்லா கூறுகின்றார்:

> **"இதுவே கடவுளின் கருணை என்னும் சமுத்திரம் மனிதர்பால் வெளிப்படுத்தப்பட்டுள்ள நாள்; அவரது அன்புக் கருணை என்னும் பகல் நட்சத்திரம் அவர்கள் மீது அதன் சுடரொளியினை வீசச் செய்துள்ள நாள்; அவரது வள்ளன்மைமிகு தயை என்னும் மேகங்கள், மனித இனம் முழுவதன் மீதும் அவற்றின் நிழலை விழச் செய்துள்ள நாள். அன்பு, சகோதரத்துவம் என்னும் உற்சாகமூட்டும் தென்றல், மற்றும் நட்பு, ஈகை, என்னும் ஜீவநீரின் மூலம், மனம் தளர்ந்தோருக்கு மகிழ்வும் உற்சாகமும் ஊட்ட வேண்டிய நேரம் இதுவே."**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

 அ. கடவுளின் __________ என்னும் சமுத்திரம் மனிதர்பால் _______________________ நாள் இதுவே.

ஆ. கடவுளின் ____________ ____________ என்னும் பகல் நட்சத்திரம் மானிடத்தின் மீது அதன் __________________________ ______________ செய்துள்ளது.

இ. கடவுளின் ________________ _________________ என்னும் மேகங்கள், மனித இனம் முழுவதன் மீதும் அவற்றின் ________________ ___________ செய்துள்ளது.

ஈ. அன்பு, சகோதரத்துவம் என்னும் _________________________ தென்றல், மற்றும் _________, ___________, என்னும் _______________ மூலம், மனம் தளர்ந்தோருக்கு ________________ _________________ ____________ வேண்டிய நேரம் __________.

2. பின்வருவனவற்றுள் எவை மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி உற்சாகப்படுத்தக் கூடியவை?

— கல்விக்கான அணுகலை அடைதல்
— கலந்தாலோசனைக்கான திறனாற்றலை அதிகரித்தல்
— பரிதாபத்துடன் பார்க்கப்படுதல்
— அறிவியல் மேம்பாட்டினால் பயனடைதல்
— ஏதாவது ஓர் அரசியல் கட்சி அல்லது பிரிவை ஆதரித்திட தூண்டப்படுதல்
— கடவுளின் திருவாக்கை பிறருடன் சேர்ந்து படித்தல் மற்றும் பகிர்ந்துகொள்ளல்
— தங்களுக்குத் தேவைப்படாத பொருளை கடனில் வாங்கிட வலியுறுத்தப்படுதல்
— பிரார்த்தனையின் முக்கியத்துவம் குறித்து அதிக விழிப்புணர்வு பெறுதல்
— தங்கள் முயற்சிகளில் ஊக்குவிப்பைப் பெறுதல்
— சட்டபூர்வ வழிமுறைகளில் அதிகாரிகளிடம் குறைகளை விளக்கத்துடன் முன்வைக்க ஆற்றல் பெறுதல்
— எதிர்ப்பு இயக்கங்களில் பங்கேற்றல்
— தங்கள் பிரச்சினைகளை மறப்பதற்கு மது அருந்துதல்
— ஒரு சுகாதார முறைமையின் பலன்களைப் பெறுதல்
— கேளிக்கைகளுக்காக அருகிலேயே ஓர் இரவு கூத்தரங்கைப் பெறுதல்
— இக்காலத்திற்கான அவதாரத்தைக் கண்டுகொள்ளல்
— தெய்வீக உதவியின் சக்தியைச் சார்ந்திருத்தல்

## பகுதி 6

பஹாவுல்லா கூறுகின்றார்:

> **“இம் மாபெரும், இப் புதிய உலக அமைப்பின் அதிர்வு மிக்க தாக்கத்தின் மூலம் உலகின் சமநிலை நிலைகுலையச் செய்யப்பட்டுள்ளது. மனிதகுலத்தின் சீரான வாழ்வு இத்தனிச்**

**சிறப்புடைய, இவ்வற்புதமிக்க அமைப்புமுறையின் மூலமாக மகத்தான மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இது போன்றதொன்றை கன்கள் என்றுமே கண்டதில்லை.”**

**“எமது வார்த்தைகள் எனும் சமுத்திரத்தில் உங்களை மூழ்கச் செய்வீர்களாக, அதனால் நீங்கள் அதன் இரகசியங்களை வெளிக்கொணர்ந்து, அதன் ஆழத்தில் மறைந்து கிடக்கும் விவேகம் எனும் எல்லா முத்துக்களையும் கண்டுகொள்ளக்கூடும். கவனமாய் இருங்கள், எதன் மூலமாக இந்தச் சமயத்தில் இறைவனின் சக்தியில் உள்ளடங்கிய ஆற்றல்கள் வெளிபடுத்தப்பட்டு, அவரது ஆதிபத்தியம் நிலைநாட்டப்பட்டதோ அந்தச் சமயத்தின் உண்மைதனை தழுவுவதற்கான உங்களது மன உறுதியில் தயக்கம் காட்டிடப் போகின்றீர்.”[5]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இம் மாபெரும், _________________________________ அதிர்வு மிக்க _______________ மூலம் உலகின் _______________ _______________ச் செய்யப்பட்டுள்ளது.

அ. மனிதகுலத்தின் ____________ ______________ இத் ________ ______________, இவ்வற்புதமிக்க ___________________ மூலமாக ______________ ______________ உள்ளாக்கப்பட்டுள்ளது.

இ. அவரது வார்த்தைகள் எனும் _______________ உங்களை ______________ ________________, அதனால் நீங்கள் அதன் _______________ _______________, அதன் ஆழத்தில் மறைந்து கிடக்கும் _______________ எனும் எல்லா முத்துக்களையும் ____________________.

ஈ. இந்த சமயத்தின் __________________ தழுவுவதற்கான உங்களது __________ ________________ ____________ ___________.

உ. இந்தச் சமயத்தின் மூலம்தான் இறைவனின் _____________ உள்ளடங்கிய _____________ வெளிபடுத்தப்பட்டு, அவரது _____________ நிலைநாட்டப்பட்டுள்ளது.

2. சமநிலை என்றால் என்ன? ______________________________________________________
______________________________________________________________________________

3. உலகின் சமநிலையை எது மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது? _________________________
______________________________________________________________________________

4. உலகின் சமநிலை மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது என்பதற்கான சில அடையாளங்கள் யாவை? ____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

5. மனிதகுலத்தின் சீரான வாழ்வு மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது என்பதைக் குறிக்கும் சில அறிகுறிகள் யாவை? ____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

6. பஹாவுல்லா குறிப்பிடும் அந்த அற்புதமிக்க அமைப்புமுறை என்ன? ____________________

____________________________________________________________

7. அவரது வார்த்தைகள் எனும் சமுத்திரத்தில் நாம் எவ்வாறு மூழ்கிடக் கூடும்? ______________

____________________________________________________________

8. அவரது வார்த்தைகள் எனும் சமுத்திரத்தில் நாம் மூழ்கிடும் போது நமது சிந்தனைகளில் ஏற்படும் தாக்கம் யாது? ____________________________________________________________

9. அவரது வார்த்தைகள் எனும் சமுத்திரத்தில் நாம் மூழ்கிடும் போது நமது செயல்களில் ஏற்படும் தாக்கம் யாது? ____________________________________________________________

10. பஹாவுல்லாவின் உலக ஒழுங்கமைப்பு ஸ்தாபிக்கப்படுவதற்குத் தேவைப்படும் ஆன்மீக ஆற்றலை நாம் எங்கிருந்து பெறுகின்றோம்? ________________________________________

____________________________________________________________

11. “தயக்கம்” என்னும் வார்த்தையின் அர்த்தம் என்ன? ____________________________________

____________________________________________________________

12. அவரது சமயத்தின் உண்மயை முழுமையாக ஏற்றுக்கொள்வதில் நாம் தயக்கம் காட்டும் போது நமது ஆன்மீக ஆற்றல் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது? ________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 7

அப்துல்-பஹா பின்வரும் வார்த்தைகளின் மூலம் நமக்குக் கூறுகின்றார்:

> **"கடவுளின் நேசர்களே, இந்நாளே ஒன்றுபடுவதற்கான நாள், மனிதர்கள் அனைவரும் ஒன்றுதிரட்டப்படுவதற்கான நாள். 'மெய்யாகவே, ஒரு திட சுவரைப் போன்று, அவரது சயமத்திற்காக, தோளோடு தோள் சேர்ந்து வரிசையாகப் போர்புரிவர்களை கடவுள் நேசிக்கின்றார். அவர் 'தோளுடன் தோள் சேர்ந்து' எனக் குறிப்பிடுவதைப் பார்க்கவும் -- அதாவது, கூட்டமாகவும், நெருக்கமாகவும், ஒருவர் மற்றவருடன் பிணைந்து, ஒவ்வொருவரும் தனது சகாவுக்கு ஆதரவளிப்பது. புனித வாசகத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று, திருவெளிப்பாடுகளிலேயே அதிவுயர்ந்த இவ்வெளிப்பாட்டில், போர் செய்வதென்பது, வாளுடனும், வேலுடனும், ஈட்டியும், துளைக்கும் அம்புடனும் (போர்புரிய) செல்வதென்பது பொருளல்ல—மாறாக, தூய நோக்கம், நேர்மையான குறிக்கோள்கள், உதவிடக்கூடிய விளைவுத்திறம் மிக்க அறிவுரைகள், தெய்வீகப் பண்புகள், சர்வ சக்திமிக்கவரை மகிழ்விக்கும் நற்செயல்கள், சுவர்க்கத்தின் நற்பண்புகள் ஆகியவற்றுடன் போர்புரிவதென்பதாகும். மனிதகுலம் அனைத்திற்குமான கல்வி, மனிதர்கள் அனைவருக்குமான வழிகாட்டல், ஆவியின் இனிய சுவைகளை உலகெங்கும் பரப்புவது, கடவுளின் சான்றுகளைப் பிரகடனப்படுத்துவது, உறுதியும், தெய்வீகமும் மிக்க வாதங்களை வெளிப்படுத்துவது, தர்ம காரியங்களில் ஈடுபடுவது ஆகியவற்றை அது குறிக்கின்றது."[6]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. இது ________________________ நாள், மனிதர்கள் அனைவரும் ________________________ நாள் என அப்துல்-பஹா கூறுகின்றார்.

ஆ. மெய்யாகவே, ஒரு ________________ போன்று, அவரது சயமத்திற்காக, ________________ ________ ________________ வரிசையாகப் ________________ கடவுள் ________________ என அவர் விளக்குகின்றார்.

இ. ‘தோளுடன் தோள் சேர்ந்து’ என்பது, __________________, __________________, ஒருவர் மற்றவருடன் __________________, ஒவ்வொருவரும் தனது சகாவுக்கு __________________, என அப்துல்-பஹா விளக்குகின்றார்.

ஈ. ______________________________ அதிவுயர்ந்த இவ்வெளிப்பாட்டில், போர் செய்வதென்பது, _____________, _____________, _____________, ____________ம் ___________ம் (போர்புரிய) செல்வதென்பது பொருளல்ல—மாறாக, ________ _______________—, _____________ ______________—, ________________________________ ____________________________________________, ______________ ____________________ ———————, சர்வ சக்திமிக்கவரை ——————————————— ———————————, —————— ——————————— —————————————— ஆகியவற்றுடன் போர்புரிவதென்பதாகும்.

உ. மனிதகுலம் அனைத்திற்குமான ___________, மனிதர்கள் அனைவருக்குமான _______________________, ஆவியின் ___________ __________________ உலகெங்கும் ________________, கடவுளின் ____________________ ___________________________, __________________, __________________ மிக்க ___________________ _____________________, _________ ____________________ __________________ ஆகியவற்றை அது குறிக்கின்றது.

2. இது மானிடத்தை ஒருமைப்படுத்தும் நாளாகும். நமக்கு எதிரில் இருக்கும் பணிகள் எவ்வளவு மகத்தானவை என்பதை மதித்துணர்வதற்கு, மனிதர்கள் தங்களை எத்தனை எண்ணற்ற பிரிவுகளாக தங்களைப் பிரித்துக் கொண்டுள்ளனர் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். உங்களுக்குத் தெரிந்தவற்றின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

3. இந்த பிரிவுகளைச் சமாளிக்கக்கூடிய சக்தி எது? ________________________

____________________________________________________________

4. நாம் ஈடுபட்டிருக்கும் போரின் இயல்பு என்ன? __________________________

____________________________________________________________

5. பின்வருவனவற்றுள் இப்போரில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் எவை?

— தூய நோக்கம்
— தெய்வீகப் பண்புகள்
— நேர்மையான குறிக்கோள்கள்
— தலைமைப் பதவிக்கு ஏங்குதல்
— அகங்காரம் மற்றும் தற்பெருமை
— நீதிக்கான பேரார்வம்
— அகந்தை
— துப்பாக்கிகள்
— கத்திகள்
— திருவாக்கின் சக்தி
— சுய திருப்தி
— சுய முக்கியத்துவம்
— ஆத்திரம்
— பரோபகாரம்
— பிரார்த்தனையின் சக்தி
— பாராட்டுக்குரிய செயல்கள்
— கடவுள் அன்பு
— மானிடம் மீதான அன்பு
— கடவுளை நம்பியிருத்தல்
— உதவும், விளைவுத்திற ஆலோசனை
— ஒற்றுமையின் சக்தி
— பணம்
— (சமய)நம்பிக்கை
— தாழ்மை

6. நீதியை நிலைநாட்டுவதற்காகப் பிறர் மீது ஆதிக்கம் செலுத்த நினைப்பது சரியா?

7. பின்வருவனவற்றுள் எவை மானிடத்தை ஒற்றுமைப் படுத்துவதற்கான ஆன்மீகப் போரில் நாம் ஈடுபட்டிருக்கும் போது நாம் செய்யக்கூடிய செயல்களைப் பிரதிநிதிக்கின்றன?

— கல்வியை ஊக்குவித்தல்

— நாம் விரும்புகின்றதைச் செய்ய பிறரைக் கட்டாயப்படுத்துதல்

— சமயத்தைப் போதித்தல்

— கடவுள் சமயத்தைப் பிரகடனப்படுத்துதல்

— அவர்களின் சொந்த விருப்பங்களுக்கு ஏற்ப கோஷ்டிகளாகப் பிரித்தல்

— நமது சொந்தக் குழுவினரின் நலன்களுக்காகப் போராடுதல்

— மனிதநேய காரியங்களில் ஈடுபடல்

— பஹாவுல்லா திருவெளிப்பாட்டின் உண்மைகளுக்கான தீர்க்கமான வாதங்களை முன்வைத்தல்

— நாம் அவரது திருவாக்கு என்னும் சமுத்திரத்தில் மூழ்குதல்

— பலவீனர்களையும் தாழ்த்தப்பட்டோரையும் ஒடுக்குதல்

— ஆர்வத்துடன் பிரார்த்தித்தல்

— பிறர் சொத்துகளை அபகரித்தல்

— பிறரிடமிருக்கு திருடி செல்வம் சேர்த்தல்

## பகுதி 8

இந்நாளின் மகத்துவம் குறித்த அதிகரித்த விழிப்புணர்வானது, முன்னெழவும், போதிக்கவும், சேவை செய்யவும், தியாகபூர்வமான செயல்களில் ஈடுபடவும் நம்முள் ஓர் ஆவலை உருவாக்குகின்றது. சமயத்திற்கான சேவை செயல்களில் ஈடுபடுவதற்கான அவசரத்தன்மையை தவறவிடாமல் இருந்திட, பாதுகாவலரால் எழுதப்பட்ட கடிதத்திலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் உரைப்பகுதியை மனனம் செய்யவும்:

> **இழப்பதற்கு நேரமில்லை. தயக்கத்திற்கு இடமில்லை. வாழ்வெனும் அப்பத்திற்காக மக்கள் ஏங்குகின்றனர். மேடை அமைக்கப்பட்டுவிட்டது. உறுதியானதும் மாற்ற முடியாததுமான வாக்குறுதி வழங்கப்பட்டுவிட்டது. கடவுளின் சொந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது நாளுக்கு நாள் துரிதமடைந்து வருகின்றது. விண்ணுலக மற்றும் மண்ணுலகின் சக்திகள் மர்மமான முறையில் அதன் செயல்பாட்டிற்கு உதவுகின்றன. இத்தகைய வாய்ப்பு ஈடு செய்யப்பட முடியாதது. சந்தேகப்படுபவர், தானே அத்தகைய கூற்றுக்களின் உண்மையை சரிபார்த்துக்கொள்ளட்டும். முயல்தலும், விடாமுயற்சியுடன் இருத்தலும், இறுதியான மற்றும் பூரணமான வெற்றியை உறுதி செய்வதாகும்.[7]**

## குறிப்புகள்

1. *Gleanings from the Writings of Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing Trust, 1983, 2017 printing), VII, par. 1, p. 10.
2. Ibid., VII, par. 2, pp. 10–11.
3. Ibid., IV, par. 1, p. 5.
4. Ibid., V, par. 1, p. 6.
5. Ibid., LXX, par. 1–2, p. 154.
6. *Selections from the Writings of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing, 2010, 2015 printing), no. 207.2, pp. 359–60.
7. From a letter dated 28 January 1939, published in *This Decisive Hour: Messages from Shoghi Effendi to the North American Bahá'ís, 1932–1946* (Wilmette: Bahá'í Publishing Trust, 2002), p. 28.



# பாப் பெருமானாரின் வாழ்க்கை

## நோக்கம்

பாப் பெருமானாரின் குறுகிய
மற்றும் வியத்தகு தூதுப்பணியின்
ஆற்றல் பற்றிய மதிப்புணர்வைப்
பெறுதல் மற்றும் அவரது வாழ்க்கை
கதையை விவரிக்கக் கற்பது

# பகுதி 1

பாப் அவர்களது தூதுப் பணியின் சமயக்காலம் 1844-இல் ஆரம்பித்து ஒன்பது வருடங்கள் மட்டுமே நீடித்தது. அதன் அடிப்படை நோக்கம், பஹாவுல்லாவின் வருகைக்கு வழி கோளுவதே ஆகும். குறுகியதாக இருந்தாலும், பாப் அவர்களது தூதுப் பணிக்காலம், வரக்கூடிய பல நூறு தலைமுறைகள் அதன் தாக்கத்தை உணரத் தக்க அளவிற்கு ஆன்மீக உத்வேகம் கொண்டதாக இருந்தது.

சையிட் அலி முகம்மது என பிறப்புப் பெயர் கொண்ட பாப் பெருமானார், அக்டோபர் 20-ஆம் தேதி 1819-ஆண்டில், பாரசீகம் என அழைக்கப்பட்டு வந்த இரான் நாட்டின் தெற்கில் உள்ள, ஷிராஸ் எனப்படும் நகரில் பிறந்தார். இரானிய மக்களில் பெரும்பான்யையினர், இறைவனால் வாக்களிக்கப்பட்ட "காய்யிம்," எனப்படும் ஓர் அவதார புருஷரை எதிர்நோக்கிக் காத்திருக்கும் இஸ்லாத்தின் ஒரு பிரிவைச் சார்ந்த மக்களாவர். "காய்யிம்" என்னும் வார்த்தை "அவதரிப்பவர்" எனப் பொருள்படும்.

பாப் பெருமானார், இஸ்லாத்தின் அவதார புருஷரான முகம்மது அவர்களை மூதாதையராகக் கொண்ட, பிரசித்தி பெற்ற ஒரு குடும்பத்தைச் சார்ந்தவராவார். அவர் சிறு குழந்தையாக இருக்கும் போதே அவரது தந்தை இறந்துவிட்டிருந்தார், பின்னர், அவர் தமது தாய்மாமனால் வளர்க்கப் பட்டார். இயல்பாகவே உள்ளார்ந்த அறிவு பெற்றவராக விளங்கி, எந்த ஒரு பள்ளிக் கல்வி பயிற்றுவிக்கத் தேவைப்படாத நிலையில் அவர் இருந்தார். இருந்தபோதும் தமது மாமாவின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து சிறு வயதிலேயே பள்ளி சென்றார். ஆனால், விரைவில் அவரது ஆசிரியர், பாப் பெருமானின் பெரும் திறனைக் கண்டுகொண்டு, தாம் இந்த அசாதாரணக் குழுந்தைக்கு போதிக்கக்கூடியது எதுவுமில்லை என்பதை உணர்ந்தார். அவர் பாப் பெருமானாரின் பள்ளி நாள்கள் குறித்த பின்வரும் கதையைக் கூறியுள்ளார்.

> "ஒரு நாள், நான் பாப் அவர்களை திருக்குரானின் முதல் வசனத்தை ஒப்புவிக்கச் சொன்னேன்... அவர், அவ்வார்த்தைகள் எதைக் குறிக்கின்றன என்பது தெரியாத நிலையில், தாம் அவற்றை உச்சரிக்க இயலாது எனத் தயங்கியவாறு மன்றாடினார். நானும் அவற்றின் அர்த்தம் தெரியாதது போல் நடித்தேன். 'இவை எதைக் குறிக்கின்றன என்பது எனக்குத் தெரியும்,' 'உமது அனுமதியின் பேரில் நான் அவற்றை விளக்குவேன்.' நான் பிரமித்துப் போகுமளவு ஞானத்துடனும் சரளத்துடனும் அவர் பேசினார்... அவர் உச்சரிப்பின் இனிமை இப்பொழுதும் எனது மனதில் நிற்கின்றது. எனது காப்பில் விட்டுச் செல்லப்பட்ட அவரை அப்பொழுதே தூக்கிச் சென்று மறுபடியும் அவரது மாமாவின் கைகளிலேயே ஒப்படைக்க உந்தப்பட்டேன். அசாதாரணமான அக்குழந்தைக்கு கல்வி கற்பிக்க நான் எவ்விதத்திலும் அருகதை அற்றவன் என்பதை அவரிடம் கூற முடிவெடுத்தேன். பாப் பெருமானின் மாமா தமது அலுவலகத்தில் தனிமையில் இருக்கக் கண்டேன். 'உங்கள் மைத்துனனை நான் உங்களிடமே ஒப்படைக்கின்றேன்.' 'அவனை உங்கள் பாதுகாப்பான கண்கானிப்பில் விட்டுச் செல்கிறேன்,' என்றேன். . 'இக்குழந்தையை ஒரு சாதாரண குழந்தையாக நடத்துவது கூடாது. ஏனெனில், அவனிடம் அந்த '·காய்யிமின்' சமய வெளிப்பாடு மட்டுமே வெளிக்கொணரவல்ல மர்ம சக்திகளின் அடையாளங்களை என்னால் காண முடிகிறது. அவனை உங்கள் அன்புப் பாதுகாப்பினால் சூழச் செய்வது உங்களது கடமையாகும். அவனை வீட்டிலேயே வைத்துக்கொள்ளுங்கள், என்னைப்போன்ற ஆசிரியர்கள் அவனுக்குத் தேவையில்லை.' பாப் பெருமானின் மாமா, பாப் அவர்களை கடுமையாக கடிந்துகொண்டார். 'நான் கூறியவற்றை எல்லாம் நீ

மறந்துவிட்டாயா?' என்றார். 'உனது சக மாணாவர்களின் உதாரணத்தைக் கடைபிடித்து மௌனியாக உனது ஆசிரியர் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனத்துடன் கேட்கவேண்டும் என நான் உனக்கு உபதேசிக்கவில்லையா?' தான் மேற்கொண்டு தனது மாமா அவர்களின் உபதேசத்திற்கு விசுவாசமாக நடந்துகொள்வதாகக் கொடுத்த வாக்கிற்கு பிறகு, அவரை மீண்டும் பள்ளி திரும்பும்படி கூறினார். ஆனால் தனது மாமாவின் கடுமையான உபதேசங்கள் அக்குழந்தையின் ஆன்மாவை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியவில்லை. இயல்பாக வெளிப்பட்ட அவனது அறிவை எந்தவொரு கட்டுப்பாடும் முடக்கி வைக்க முடியவில்லை. நாளுக்கு நாள் அக்குழந்தை நான் விவரித்துக் கூற முடியாத, அமானுஷ்யமான விவேகத்தை தொடர்ந்து வெளிப்படுத்தவே செய்தது."[1]

இறுதியாக பாப் பெருமானின் மாமா பாப் அவர்களை பள்ளிப் படிப்பை முடித்துக் கொள்ள அனுமதித்தார். அதன் பிறகு அவர் தனது மாமாவோடு, தென் மேற்கு ஷிராஸில், 'புஷீர்' எனும் நகரில் வணிகராக வேலை செய்ய ஆரம்பித்தார். இக்காலகட்டத்திலேயே பாப் பெருமானார் திருமணம் புரிந்துகொண்டார். பாப் அவர்களுக்கும் அவரது மனைவிக்கும் அஹமது என்னும் பெயர் கொண்ட ஆண் குழந்தை பிறந்தது. இச்சிசு பாப் பெருமானார் தம்மை வாக்களிக்கப்பட்ட ·காய்யிமாக பிரகடணம் செய்வதற்கு முன்பாகவே இறந்து விட்டது.

தனது வாலிபப் பருவத்திலேயே, நிகரற்ற சக்தி மற்றும் மேன்மைக்கான அறிகுறிகளை பாப் கொண்டிருந்தார். அவரது விரைவான மற்றும் சோகம் நிறைந்த சமயப் பணிக் காலந்தோறும் அவரை வேறுபடுத்திக் காண்பித்த அத்தனித் தன்மைகள் அவரது இளைமையிலேயே வெளிப்பட்டுவிட்டன. பாதுகாவலர் ஷோகி எ·பெண்டி, "தமது பணிவில் நிகரற்று, கலைக்க முடியாத சாந்தத்தை கொண்டு, காந்தத்தைப் போன்ற சொல்வன்மை உடைய, இனிமையான, இளமையான மற்றும் பிறரை ஈர்க்கும் தன்மையுடைய பாப் பெருமானார்,"[2] எனக் குறிப்பிடுகின்றார். பின் வரும் பகுதிகள் அவருடைய வாழ்க்கைச் சம்பவங்களை, போதுமான அளவு இல்லாவிட்டாலும், முடிந்த அளவு விவரிக்க முற்படுகின்றன. இருப்பினும், சுருக்கமான குறிப்புகளாயினும், அவரது பல்லாயிரக்கணக்கான நம்பிக்கையாளர்களின் இதயங்களில் அவர் பற்றவைத்த அன்பெனும் நெருப்பிலிருந்து ஒரு பொறியை நமது இதயங்களிலும் இவை தூண்டிவிட வேண்டும்.

1. பாப் பெருமானாரின் பெயர் என்ன? ____________________________________________

______________________________________________________________________

2. பாப் பெருமானார் எப்போது எங்கே பிறந்தார்? ________________________________

______________________________________________________________________

3. “காய்யும்” எனும் நாமத்தின் அர்த்தமென்ன?__________________________________

______________________________________________________________________

4. பாப் பெருமானாரின் குடும்பம் யாரை மூதாதையராகக் கொண்டது?________________

______________________________________________________________________

5. பாப் பெருமானாரின் தந்தை இறந்த பிறகு அவரை வளர்க்கும் பொறுப்பை யார் ஏற்றுக்கொண்டது? ______________________________________________

______________________________________________

6. பாப் பெருமானார் கடவுளால் உள்ளியல்பான (innate) அறிவு வழங்கப்பட்டவர் என்னும் கூற்றின் அர்த்தமென்ன?______________________________________________

______________________________________________

7. பாப் பெருமானாரின் பெரும் திறனாற்றலை கண்டுணர்ந்த அவரது ஆசிரியர் என்ன நினைத்தார்? ______________________________________________

______________________________________________

8. "அமானுஷ்யமான விவேகம்" என்னும் சொற்றொடரின் அர்த்தம் என்ன? ______________

______________________________________________

9. பள்ளியை விட்டு நீங்கிய பிறகு பாப் பெருமானார் என்ன செய்தார்? ______________

______________________________________________

10. பாதுகாவலர் எத்தகைய வார்த்தைகளைக் கொண்டு பாப் பெருமானாரைக் குறிப்பிடுகின்றார் ______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

11. பாப் பெருமானாரின் ஆசிரியர் கூறிய பாப் பெருமானாரின் கதையை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும். ______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

---

---

# பகுதி 2

பாப் பெருமானார் தமது சமயத்தை பிரகடணம் செய்யும் முன்பாகவே, வாக்களிக்கப்பட்டவர் கூடிய விரைவில் தோன்றவிருக்கின்றார் என்பதைப் பலர் தங்கள் உள்ளத்தால் உணர்ந்தனர். இராக் நாட்டின் கர்பிலா நகரில் வசித்த சையிட் காஸிம் இவ்விதப் புனித ஆன்மாக்களில் ஒருவராவார். இந்த சையிட் காஸிமிற்குப் பல மாணவர்கள் இருந்தனர். அவர்களை சையிட் காஸிம், நீண்ட காலமாக எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் காய்யிமின் வருகைக்காக தயார்படுத்திக் கொண்டிருந்தார். தாம் இறந்த பிறகு அவர்கள் அனைவரும் தங்கள் இல்லங்களை நீத்து, தங்கள் இதயங்களிலிருந்து உலக ஆசைகள் அனைத்தையும் நீக்கி, வாக்களிக்கப்பட்ட அன்பரை பரவலாகத் தேடவேண்டும் என தொடர்ந்தாற் போன்று கூறி வந்தார்.

சையிட் காஸிம் இறந்த பிறகு, அவரது சீடர்களில் பிரசித்தி பெற்ற ஒருவரான, முல்லா ஹ¤சேன், ஒரு பள்ளிவாசலில் நாற்பது நாட்கள் பிரார்த்தனையும் தியானமுமாக இருந்து, இறைவனின் வழிகாட்டல் தனது இதயத்தில் தோன்றுவதற்காக, அவ்வேளையில் இறைவன்பால் முழுக்கத் திரும்பியிருந்தார். அந்த நாற்பது நாட்கள் கழிந்தவுடன், வாக்களிக்கப்பட்டவரைத் தேடும் பொருட்டு இரண்டு அன்பர்களுடன் இராக் நாட்டை விட்டு வெளியேறினார். அவர் முதலில் புஷீர் நகருக்குச் சென்றார். ஆனால் அங்கு அவர் நீண்ட நாட்கள் தங்கியிருக்கவில்லை, ஏதோ ஒரு சத்தி அவரை வடக்கு நோக்கி ஈர்த்தது. கூடிய விரைவில் அவர் ஷிராஸ் நகரத்திற்குப் பயணமானார். அந்நகரை அணுகியவுடன், அவர் தமது இரு சகாக்களையும் ஒரு குறிப்பிட்ட பள்ளிவாசலுக்குச் சென்று தாம் அவர்களுடன் திரும்பி வந்து சேர்ந்துகொள்ளும் வரை அங்கேயே காத்திருக்கும்படி பணித்தார்.

அன்றைய நாளே, சூரிய அஸ்தமனத்திற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பாக, அந்நகர வாசலின் அருகே நடந்துகொண்டிருக்கும் போது வாலிப வயதுடைய ஆளுமை ஒருவரை முல்லா ஹுஸேன் சந்தித்தார். அவர் முல்லா ஹுஸேனை வரவேற்று அவரது நீண்ட சிரமான பிரயாணத்திற்குச் சிரம பரிகாரம் செய்துகொள்ள தமது இல்லத்திற்கு அழைத்தார். அந்த அதிசய இளைஞர் மென்மையாகவும் அதே சமயம் அழுத்தமாகவும் பேசிய தோரணை முல்லா ஹுஸேனை மிகவும் கவர்ந்தது. முல்லா ஹுஸேன் அவரைப் பின்தொடர்ந்தார். விரைவில் இருவரும் ஓர் அடக்கமான வீட்டின் வாசலை அடைந்தனர். இருவரும் அவ்வீட்டிற்குள் நுழைந்து அவ்வீட்டின் மேல்மாடிக்குச் சென்றனர். முல்லா ஹுஸேனின் ஓம்புநர் (host) தமது விருந்தினரின் பிரயாண மாசுகள் நீங்க, கை கால்களை அலம்ப ஒரு கூஜா நிறைய ஜலம் கொண்டு வரச் செய்தார். அதன் பிறகு தாமே தேநீர் தயார் செய்து முல்லா ஹ¤சேனுக்கு வழங்கினார். இந்த உபசரனைகளுக்குப் பிறகு அவர் பேச ஆரம்பித்தார். அந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பாஷனையின் விவரங்களைப் பிந்தைய நாள்களில் முல்லா ஹுஸேன் தாமே விவரித்துள்ளார்:

"எனது இளம் உபசாரகர் என்னுடன் பேச அரம்பித்தபோது சூரிய அஸ்தமனம் ஆகி ஒரு மணி நேரம் இருக்கும். 'சையிட் காஸிமிற்குப் பிறகு யாரை நீங்கள் அவரது வாரிசாகவும் உங்கள் தலைவராகவும் கருதுகின்றீர்கள்? 'அவரது மரணத்தருவாயில் மறைந்த எமது

ஆசிரியர் நாங்கள் யாவரும் எங்கள் இல்லங்களைத் துறந்து, தூரப் பிரதேசங்களுக்கெல்லாம் சென்று வாக்களிக்கப்பட்ட அன்பரைத் தேடும் படலத்தில் ஈடுபட வேண்டுமென அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார். அதன்படி நானும், பாரசீகம் வந்தடைந்து, அவரது விருப்பத்தை நிறைவேற்ற முன்னெழுந்து, இன்றளவும் அதில் ஈடுபட்டும் வருகிறேன்.' 'வாக்களிக்கப்பட்டவரின் தனிப்பட்ட அங்க அடையாளங்களைப் பற்றி உங்கள் ஆசிரியர் எதேனும் உங்களுக்கு தெரிவித்துள்ளாரா', என அவர் மேலும் வினவினார். 'ஆமாம், அவர் கலப்பில்லா சந்ததியினராகவும், பிரசித்தி பெற்ற பரம்பரையைச் சார்த்தவராகவும், பாத்திமாவின் வழித்தோன்றலாகவும் இருப்பார். வயதைப் பொறுத்தமட்டில், அவர் இருபதுக்கு மேற்பட்டும் முப்பதுக்கு குறைவாகவும் இருப்பார். அவர் இயல் அறிவு படைத்தவராவார். நடுத்தர உயரமுடையவராகவும், புகை பிடிக்கும் பழக்கம் இல்லாதவராகவும், அங்கஹீனம் அற்றவராகவும் விளங்குவார். 'அவர் சிறிது நேரம் தாமதித்து, அதிர்வுகெழுமிய குரலில்: 'அகோ, இந்த அடையாளங்கள் அனைத்தும் எம்மில் வெளிப்பட்டிருக்கக் காண்பீர்! என பிரகடணம் செய்தார். பிறகு அவர் மேல்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு அடையாளத்தையும் தனித்தனியே விமர்சித்து அவை அனைத்தும் ஒருங்கே தமக்குப் பொருந்துமென்பதை அறுதியுடன் (conclusive) நீரூபித்தார்."[2]

'அன்றிரவு, பாப் பெருமானார், தெளிவானதும் உறுதியானதுமான நீரூபனங்கள் மூலமாக, தாமே வாக்களிக்கப்பட்ட காய்யிம் என்பதை முல்லா ஹ¤சேனுக்கு நிரூபித்தார். திருக்குரானின் ஒரு முக்கிய அத்தியாயமான 'ஜோசப்பின் சூராவைப்' பற்றிய ஒரு விளக்கவுரையின் முதல் பகுதியை, அசாதாரண வேகத்துடன் வெளிப்படுத்தினார். அதன் பின் முல்லா ஹ¤சேனைப் பார்த்துப் பின்வருமாறு உரைத்தார்:

"எம்மில் முதன் முதலாக நம்பிக்கை கொண்டவரே! மெய்யாகவே யாம் கூறுகின்றோம், யாமே பாப்', இறைவனின் வாசல், நீர் பாபு'ல்-பாப், அந்த வாயிலுக்கான வாயில். ஆரம்பத்தில், தூண்டப்படாமலும் சுயமாகவும், ஆன்மாக்கள் பதின் என்மர் எம்மைக் கண்டிப்பாக ஏற்று எமது திருவெளிப்பாட்டின் மெய்மையைக் கண்டுணர வேண்டும். எச்சரிக்கையும் அழைப்பும் இல்லாமல், இவர்கள் ஒவ்வொருவரும் என்னைத் தன்னிச்சையாகக் கண்டுகொள்ள முயல வேண்டும். அவர்களின் என்னிக்கை பூர்த்தியடைந்தவுடன், மக்கா மற்றும் மதினாவுக்கான எமது புனித யாத்திரைக்கு அவர்களுள் ஒருவர் எமது வழித்துணையாகத் தேர்வு செய்யப்படல் வேண்டும். அங்கு நான் இறைவனின் திருச்செய்தியை மக்கா நகரத்து ஷாரிஃபுக்கு பிரகடணம் செய்வேன். பிறகு நான் மீண்டும் கூஃபே நகரம் வந்தடைந்து, அப்புனித நகரின் பள்ளிவாசல்தனில், அவரது (ஆண்டவரது) சமயத்தை மறுபடியும் வெளிப்படுத்துவேன். நீர் தரிசித்ததையும் செவியுற்றதையும் உமது வழித்துணைவர்களுக்கோ அல்லது வேறு எந்த ஆத்மாவுக்கோ தெரிவிக்கமால் இருப்பது உமது கடமையாகும்."3

இந்த மகிமை பொருந்திய வெளிப்பாடு முல்லா ஹ¤சேனின் ஆன்மாவில் மகிழ்ச்சியையும், களிப்பையும், பயபக்தியையும், வியப்பையும் உண்டாக்கியது. "இதற்கு முன்பாக நான் எவ்வளவு ஆற்றல் குறைந்தவனாகவும் சக்தியற்றவனாகவும் இருந்தேன், எவ்வளவு உற்சாகமற்றவனாகவும் கோழையாகவும் இருந்தேன்!" என அவர் பிறகு கூறினார்." என் கைகளும் கால்களும் வெடவெடவென்று அப்போது நடுங்கியதானது என்னால் எழுதவோ நடக்கவோ இயலவில்லை. ஆனால் இப்பொழுதோ, அவரது வெளிப்பாட்டின் அறிவு எனக்கு புத்துயிர் அளித்துவிட்டது. இந்த உலகம், அதன் மக்கள் மற்றும் அரசர்கள் யாவரும் எனக்கெதிராக எழுந்த போதிலும், தனியாகவும் அச்சமின்றியும் அவர்களது எதிர்ப்பை சமாளிக்கும் அளவிற்கு நான்

தைரியமும் ஆற்றலும் பெற்றுவிட்டதாக உணர்ந்தேன். இந்த பிரபஞ்சம் முழுமையும் வெறும் கையளவு மண்ணாக எனக்குத் தோன்றியது. பார்ப்பதற்கு நான், 'எழுந்து வாருங்கள், அவர் சமயம் வெளிப்படுத்தப்பட்டுவிட்டது,' என மானிடத்தை கூவியழைக்கும், உருதரித்த 'கேபிரியலின் குரலாக இருப்பது போல் அப்போது உணர்ந்தேன். அவரது திருவருளின் கதவுகள் அகல திறந்திருக்கின்றன; உலக மக்களே! அதனுள் பிரவேசிப்பீர்களாக. வாக்களிக்கப்பட்டவரான உங்களவர் வந்துவிட்டார்!'"5

பாப் பெருமானின் பிரகடணம் மே மாதம் 23-ஆம் தேதி 1844 மாலையில் நடைபெற்றது. அவருக்கு அப்பொழுது இருபத்தைந்து வயது. பின்னாளில், பல வருடங்களுக்குப் பிறகு, பாப் பெருமானின் அதே பிரகடண தினத்தன்று, நம்பிக்கையாளர் கூட்டம் ஒன்றில் பின்வரும் வார்த்தைகளை அப்துல் பஹா கூறினார்:

> **"இ·து மே 23, பாப் பெருமானின் திருச்செய்தி மற்றும் பிரகடணத்தின் வருடாந்திரத் திருநாள். இது புனிதமிகு நாள்; வெளிப்பாட்டின் வைகறை. ஏனெனில், பாப் பெருமானின் தோற்றமே உண்மையான வைகறையின் அதிகாலை ஒளி,... இது புனிதமிகு தினம், விண்ணுலக அருட்கொடையின் ஆரம்பம், தெய்வீகப் பிரகாசத்தின் தோற்றம். 1884-இல், இந்த நாளின் போது பாப் பெருமானார் பஹாவுல்லாவின் வருகை பற்றிய நற்செய்தியை அறிவிக்கவும், முழு பாரசீக நாடும் தொடுத்த எதிர்ப்பை சமாளித்து இறைவனின் சாம்ராஜ்யத்தை முன்னறிவிக்கவும் பிரகடணம் செய்யவும் அனுப்பிவைக்கப்பட்டார்."[5]**

1. தமது மரணத்தின்போது சையிட் காஸிம் தமது மாணவர்களிடம் என்ன கூறினார்? ________

________________________________________________________________

________________________________________________________________

2. சையிட் காஸிமின் மரணத்திற்குப் பிறகு முல்லா ஹுஸேன் என்ன செய்தார்?

________________________________________________________________

________________________________________________________________

3. முல்லா ஹுஸேன்' ஷிராஸ் வந்தடைந்துவிட்டார் என்பதை பாப் பெருமானார் எவ்வாறு தெரிந்துகொண்டார்? ________________________________________

________________________________________________________________

4. பாப் பெருமானாரும் முல்லா ஹுஸேனும் பாப் பெருமானாரின் இல்லம் வந்த பிறகு பாப் பெருமானார் முல்லா ஹுஸேனிடம் என்ன கேட்டார்? ________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

5. காய்யிம் என்னும் ஆளுமை பற்றி தமது மாணவர்களுக்கு சையிட் காஸிம் என்ன அடையாளங்களை வழங்கினார்? ____________________________________

________________________________________________________________

6. பாத்திமா யாருடைய மகள், மற்றும "அவரது வித்திலிருந்து" என்பதன் அர்த்தமென்ன? ___

7. ஹுஸேன் தேடிக்கொண்டிருந்த பண்புநலன்கள் அனைத்தையும் பாப் பெருமானார் பெற்றிருந்தாரா? ___

8. "பாப்" என்னும் சிறப்புப் பெயரின் அர்த்தமென்ன? ___

9. முல்லா ஹுஸேனுக்கு பாப் பெருமானார் என்ன சிறப்புப் பெயரை வழங்கினார்? ___

10. இந்தச் சிறப்புப் பெயரின் அர்த்தமென்ன? ___

11. தாம் பகிரங்கமாகப் பிரகடணம் செய்வதற்கு முன்பாக என்ன நடைபெற வேண்டும் என பாப் கூறினார்? ___

12. வாக்களிக்கப்பட்ட காய்யிமை கண்டுணர்ந்த அந்த நினைவில் நிற்கும் இரவைப் பற்றி முல்லா ஹுசேன் கூறியவற்றை உங்கள் சொந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தவும்? ___

________________________________________________________________

________________________________________________________________

13. பாப் பெருமானாரின் பிரகடனம் எப்போது நடைபெற்றது? ________________________

________________________________________________________________

14. தமது பிரகடனத்தின் போது பாப் பெருமானாருக்குப் பிராயம் என்ன? _________________

________________________________________________________________

## பகுதி 3

முல்லா ஹுசேனுக்குப் பிறகு, பதினேழு பேர் தங்கள் இதயத்தின் ஆவலான பாப் பெருமானைத் தன்னிச்சையான தேடலின் மூலம் கண்டுகொண்டனர். இவர்கள் ஒவ்வொருவரும், இந்தப் புதிய வெளிப்பாட்டின் உண்மையைக் கண்டுகொள்ள இறைவனால் வழிகாட்டப்பட்டனர்; சிலர் அகக்காட்சிகள் மற்றும் கனவுகள் மூலமாகவும், சிலர் பிரார்த்தனைகள் மூலமாகவும் மற்றும் சிலர் தியானத்தின் மூலமாகவும் இந்தப் புதிய வெளிப்பாட்டின் உண்மையைக் கண்டுகொண்டனர். இப்புனித ஆன்மாக்களுள் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் ஷிராஸ் நகரில் பாப் பெருமானின் முன்னிலையை அடைந்தனர். அவரைச் சந்திக்காத அந்த ஒருவர், நிகரற்ற, திறமைமிக்க கவிதாயினியான, தாஹிரி என்னும் பெயர் கொண்ட பெண்மணியாவார். அவர் பாப் பெருமானை ஒரு கனவின் வழி அறிந்து, வாக்களிக்கப்பட்ட காய்மிம் அவரே எனக் கண்டுணர்ந்து, அவரது சமய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுபவர் ஆனார். பாப் பெருமானின் நம்பிக்கையாளர் பட்டியலில் பதினெட்டாவதாகச் சேர்ந்தவர் இருபத்திரண்டு வயதுடைய 'குட்டுஸ்' எனப்படும் இளைஞராவார். இளம் வயதினாரக இருந்த போதிலும், அவர் ஓர் எடுத்துக்காட்டான நடத்தையைக் கொண்டிருந்தார்; துணிச்சலிலும் திடநம்பிக்கையிலும் வெகு சிலரே அவருக்குச் சமமானவராக இருந்தனர். முல்லா ஹுசேனுடன் சேர்த்து இந்தப் பதினெட்டு நம்பிக்கையாளர்களும், 'உயிர் அட்சரங்கள்' என பாப் பெருமானால் பிரகடணப்படுத்தப்பட்டனர்.

இந்த உயிர் அட்சரங்களின் எண்ணிக்கை பூர்த்தியானவுடன், பாப் பெருமானார் முல்லா ஹுசேனைத் தமது முன்னிலைக்கு அழைத்து பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பித்தார்: "நமது தோழமைக்கான நாட்கள் ஒரு முடிவிற்கு வரவிருக்கின்றன. உன்னுடனான எமது திருவொப்பந்தம் நிறைவு பெற்றுவிட்டது. முயற்சி என்னும் கச்சத்தை வரிந்து கட்டுக; எமது சமயத்தைப் பரவ செய்திட முன்னெழுக. இத்தலைமுறையினரின் சீர்கேட்டையும் முறைகேட்டையும் கண்டு மனந்தளர வேண்டாம். ஏனெனில், திருவொப்பந்தத்தின் தேவர் உனக்கு நிச்சயமாக உதவிகள் புரிவார். மெய்யாகவே, அவர் உன்னை தமது அன்புப் பாதுகாப்பைக்கொண்டு சூழச்செய்தும், வெற்றிக்கு மேல் வெற்றிக்கு உன்னை வழிநடத்துவார். நிலத்தின் மீது தனது அருட்கொடையெனும் மழை பொழியும் மேகத்தைப் போல், மாநிலத்தின் ஓர் எல்லையிலிருந்து மறு எல்லை வரை சென்று, எல்லாம் வல்லவர் தமது கருணையின் வாயிலாக உனக்கு உவந்தளித்திருக்கும் ஆசிகளை அதன் மக்கள் மீது பொழிக... யாம் கூடிய

விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் புனிதயாத்திரைக்கு, குட்டுஸை எமது வழித்துணையாகத் தேர்ந்தெடுத்துள்ளோம். எதிரிகளின் மூர்க்கத்தனமான மற்றும் இடைவிடா தாக்குதல்களை எதிர்கொள்ள உன்னை யாம் இங்கு விட்டுச் செல்கின்றோம். இருந்தபோதிலும், ஒரு விவரிக்க இயலா மகிமை பொருந்திய அருட்கொடை உனக்கருளப்படும், நம்பிக்கை கொண்டிரு. வடக்கு நோக்கிய உனது பிராயணத்தைத் தொடர்க, வழியில் இஸ்பஃஹான், காஷான், ஃகும், மற்றும் தெஹரான் ஆகிய நகரங்களைக் கண்டு செல்க. அத்தலைநகரில், உண்மை இராஜ்யத்தின் அரியனையை நீ அடையவும், அன்பிற்கினியவரின் மாளிகையினுள் பிரவேசிக்கவும் எல்லாம் வல்ல ஆண்டவர் கருனைகூர்ந்து அருள அவரை இறைஞ்சுக. அந்நகரில் இரகசியம் ஒன்று மறைந்துகிடக்கின்றது. வெளிப்படுத்தப்படும் போது, அது இப் பூமியைச் சுவர்க்கமாக மாற்றிடும். நீ அதன் அருளில் பங்கு பெறுவதும், அதன் விகாசத்தை கண்டுகொள்வதும் எமது ஆவலாகும்."[7]

தெஹரானுக்குச் செல்லுமாறு முல்லா ஹுஸேனுக்கு உத்தரவு பிறப்பித்த பின், பாப் பெருமானார் பிற 'அட்சரங்களை' தமது முன்னிலைக்கு விளித்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமான கடமைகளை விதித்தார். தமது பிரியாவிடையின் போது, சகல உலக ஆசைகளையும் விடுக்குமாறும், தூரமாகவும் பரவலாகவும் கலைந்து சென்று தமது சமயத்தை பிரகடணம் செய்யுமாறு அவர்களை கேட்டுக்கொண்டார்.

**எனதன்புமிக்க நண்பர்களே! நீங்கள்தான் இந் நாளில் இறைவனின் நாமத்தைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள். அவரது மர்மங்களுக்குக் களஞ்சியமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளின் பண்புகளைப் பிரதிபலித்து, உங்களின் செயலின் மூலமாகவும் சொல்லின் மூலமாகவும் அவரது நேர்மைத் தன்மைக்கும் சக்திக்கும் மேன்மைக்கும் உதாரணமாகத் திகழ்வீர்களாக. உங்கள் உடலின் ஒவ்வோர் அங்கமும் உங்கள் நோக்கத்தின் உயர்வையும் உங்கள் வாழ்வின் நேர்மையையும் உங்கள் நம்பிக்கையின் மெய்ம்மையையும் உங்கள் பக்தியின் உயரிய நிலையையும் எடுத்துக் காட்டுவதாயிருக்கவேண்டும். மெய்யாகவே யாம் உங்களுக்குக் கூறுகிறோம்: 'இதுதான் இறைவன் தமது திருநூலில் கூறியுள்ள நாள்: அந் நாளில் அவர்களின் வாய்கள் மூடித் தாளிடப்படும். இருப்பினும் அவர்களின் கரங்கள் எம்முடன் உரையாடும். அவர்கள் ஆற்றிய செயலுக்கு அவர்களின் கால்கள் ஆதாரங் கூறும்.' இயேசு நாதர் தமது சீடர்களை இறைவனின் சமயத்தைப் போதிக்க அனுப்புமுன் அவர்களிடம் மொழிந்த சொற்களை நினைவுகூறுங்கள்.' இருள்மிக்க இரவில் மலையின் உச்சியில் மூட்டப்பட்ட தீயைப் போன்றவர்கள் நீங்கள். உங்களின் ஒளி மனிதர்களின் கண்முன் பிரகாசமாய் ஒளிரட்டும் . உங்களின் தூய பண்புகளும் பற்றற்ற நிலையின் அளவும் உலக மக்களை தூய்மைக்கும் அருளுக்கும் ஊற்றாகிய தந்தையை அறிந்து கொண்டு அவர்பால் ஈர்க்கவல்லதாயிருக்க வேண்டும். விண்ணுலத் தந்தையைக் கண்டவர் எவருமில்லை. அவரது ஆன்மீகக் குழந்தைகளாகிய நீங்கள் உங்கள் செயலின் மூலமாக அவரது பண்புகளுக்கு எடுத்துக் காட்டாகி, அவரது மகிமையைக் கண்ணுற வேண்டும். உலகிற்கு உப்பே நீங்கள்தான். ஆனால் உப்பே அதன் கரிப்பை இழந்து விட்டால் எதனைக் கொண்டு (உலகிற்கு) உப்பிட முடியும்? நீங்கள் போதிக்கும் பொழுது, அதன் மக்களிடமிருந்து உணவையோ கைம்மாறையோ எதிர்பார்க்கலாகாது. அது மட்டுமன்று; அந் நகரை விட்டு அப்பால் செல்லும் பொழுது உங்கள் காலடியில் பற்றியுள்ளத் தூசை உதறி விட்டுப் போக வேண்டும். எவ்வாறு நீங்கள் அந் நகரத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது தூய்மையாகவும் தூசு படியாமலும் இருந்தீர்களோ அவ்வாறே நீங்கள் அதனை விட்டு வெளியேற வேண்டும். மெய்யாகவே யாம் உங்களுக்குக் கூறுகின்றோம்: 'விண்ணுலகத் தந்தை எப்பொழுதும் உங்களுடன் இருந்து உங்களைப் பாதுகாத்த வண்ணம் இருக்கின்றார். நீங்கள் அவர்பால்**

பற்றுறுதியுடன் இருப்பீர்களாயின் உலகப் பொக்கிஷங்கள் அனைத்தையும் உங்களுக்கு அளித்து உலக அரசர்கள், மன்னர்கள் ஆகியோர்களுக்கெல்லாம் மேலாக உங்களை உயர்த்துவார். எமது அட்சரங்களே! மெய்யாகவே யாம் கூறுகின்றோம்: ஆதித் தூதர்களின் நாள்களுக்கெல்லாம் மேலாக உயர்த்தப்பட்ட நாள் இந் நாள். இல்லை, இல்லை, அளவற்றது அவற்றிற்கிடையேவுள்ள வேறுபாடு! நீங்கள்தான் இறைவனால் வாக்களிக்கப்பட்ட நாளின் வைகறைக்குச் சாட்சி. நீங்கள் தாம் அவரின் மர்மக் கிண்ணத்திலிருந்து பருகும் பேறு பெற்றவர்கள். முயற்சியெனும் கச்சையை வரிந்து கட்டுங்கள்; அவரது திருநூலில் அருளியுள்ள திருமொழிகளின்- பால் கவனம் செலுத்துங்கள். இதோ பாருங்கள், உங்களின் பிரபுவாகிய ஆண்டவன் வந்துவிட்டார். அவருடன் தெய்வ வான்படைகள் அணிவகுத்து முன் நிற்கின்றனர்!' உலகப் பற்றுகளிலிருந்து உங்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள். தெய்வீகப் பண்புகள் உங்களின் அலங்கரிப்புகளாக விளங்கட்டும். உங்கள் செயல்களின் மூலமாக இறைவனின் இவ் வார்த்தைகளுக்குச் சாட்சியங் கூறுவீர்களாக. மேலும் கவனமாயிருங்கள், 'பின் நோக்கித் திரும்புவதன் மூலம்' அவர் உங்களை வேறு மனிதர்களுக்காக மாற்றிக் கொள்ளப் போகிறார்' . அவர்கள் உங்களைப் போன்றல்லாது, உங்களிடமிருந்து இறைவனின் இராஜ்யத்தைப் பறித்துக் கொள்ளப் போகிறார்கள். வீண் சடங்குகள் போதுமானவை என்று கருதிய காலம் முடிந்து விட்டது. கறைபடியா செயலின் ஆதரவுடன் கொண்ட தூய்மையான நோக்கமே உயர்வுமிக்கோனின் அரச பீடத்தை நோக்கி உயர்ந்து அவரால் அங்கீகரிக்கப்படும். 'நற்சொல் அவர்பால் உயர்ந்து செல்லும், நேர்மையான செயலோ அதனை அவரது முன்னிலையில் மேன்மையுறச் செய்யும்'. இறைவன் தமது திருநூலில் தாழ்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் நீங்கள்தாம். 'நாட்டில் தாழ்த்தப் பட்டுள்ளோருக்கு ஆதரவு நல்கி, அவர்களை மனிதர்களிடையே ஆன்மீகத் தலைவர்களாகச் செய்து எமது வாரிசுகளாக ஆக்க விரும்புகின்றோம்.' இந் நிலைக்கு நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள்; இவ்வுலக ஆசைகள் அனைத்தையும் உங்கள் காலடியில் வைத்து மிதிக்க எழுந்து, 'அவர் பேசும் வரை பேசாதிருக்கும் அவரது மதிப்பிற்குரிய ஊழியனாவதற்கு முயற்சி செய்து அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிவீர்களாயின்' அந் நிலையை அடைவீர்கள். இவ் வெளிப்பாடு எனும் ஊற்றிலிருந்து தோற்றமளித்துள்ள முதல் சுனையிலிருந்து உற்பத்தியாகிய புராதன நிலையாகிய-- வரிடமிருந்து வெளியாகிய முதல் எழுத்துகள் நீங்கள்தான். உலகப் பற்றுகளோ, உலக ஆசைகளோ வீண் வேலைகளோ உங்கள் மூலமாக வெளிவரும் அருளின் இனிமையைக் கசப்புறச் செய்யாதிருக்கவும் அதன் தூய்மையைக் கெடுக்காதிருக்கவும் உங்களின் பிரபுவாகிய இறைவனை மன்றாடி வேண்டிக் கொள்ளுங்கள். சக்திமிக்க ஒரு நாளின் வருகைக்காக உங்களைத் தயார் செய்து கொண்டிருக்கின்றேன். முழு முயற்சியில் ஈடுபடுங்கள். அதனால் வரவிருக்கும் உலகில் இப்பொழுது உங்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கும் யாம் இறைவனின் கருணைப் பீடத்தின் முன்பு உங்களின் செயலில் மகிழ்வுற்று, உங்களின் வெற்றிகளைக் கண்டு பெருமையடையக் கூடும். வரப் போகும் அந் நாளின் மர்மம் இப்பொழுது மறைந்திருக்கின்றது. பகிரங்கப்படுத்தவோ, மதிப்பிடவோ இயலாது. அந் நாளில் வரப்போகும் ஒரு சிசு இக் காலத்திலுள்ள ஞானிகளையும் மதிப்பிற்குரியவர்களையும் விட உயர்ந்திருக்கும். அன்றிருக்கும் மிகத் தாழ்ந்தவரும் கல்லாதவரும்கூட புரிந்துணரும் தன்மையில் இக் காலத்திலுள்ள மிகப் புலமைப் பெற்ற ஆன்மீகப் பிறவிகளுக்கெல்லாம் மேலானவராயிருப்பார். இத் தேசத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கலைந்து சென்று, பற்றுறுதி மிக்கக் கால்களுடனும் தூய்மை நிறைந்த உள்ளங்களுடனும் அவரது வருகைக்கு வழிகோலுங்கள். உங்களின் பலவீனங்களையும் குறைகளையும் பொருட்படுத்தாதீர்கள். வெல்லற்கரிய உங்களின் இறைவன்பால் பார்வையைத்

**திருப்புங்கள். கடந்த காலத்தில் எவ்வாறு ஆதரவற்றவராய்த் தோன்றிய ஆபிரஹாமை, நிம்ராடின் படைகளையும் எதிர்த்து வெற்றி கொள்ளச் செய்தார்? அவர், வெறும் கைத்தடியைத் துணையாகக் கொண்டே மோஸஸைப் பேரோவை வெற்றிகொள்ளச் செய்யவில்லையா? ஏழையாகவும் தாழ்ந்துமிருந்த இயேசு நாதரை யூத மக்களின் கூட்டுச் சக்தியையும் எதிர்த்து வெற்றி கொள்ளச் செய்யவில்லையா? காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த அராபிய மக்கள் முஹம்மது நபியின் மாற்றும் கட்டுப்பாட்டின் ஆட்சிக்குள் கொண்டுவரப்படவில்லையா? அவரது திருநாமத்தின் பெயரால் எழுவீர்களாக, உங்களின் முழு நம்பிக்கையையும் அவர்பால் வைத்து இறுதி வெற்றியில் நம்பிக்கைக் கொள்வீர்களாக."[7]**

1. தம்மை வாக்களிக்கப்பட்ட காய்யிம் என கண்டுணர்ந்த நம்பிக்கையாளர்களுக்கு பாப் பெருமானார் என்ன பெயரைச் சூட்டினார? ________________________________________

________________________________________________________________________________

2. எத்தனை உயிர் அட்சரங்கள் அங்கிருந்தனர்? ________________________________________

________________________________________________________________________________

3. பாப் பெருமானை முதன் முதலில் கண்டுணர்ந்தவர் யார்? ____________________________

________________________________________________________________________________

4 கடைசியான உயிர் அட்சரம் யார்? __________________________________________________

________________________________________________________________________________

5. பாப் பெருமானாரின் உண்மையைக் கண்டுணர உயிர் அட்சரங்கள் எவ்வாறு வழிகாட்டப்பட்டனர்? ------------------------------------------------------------------------------------------------

________________________________________________________________________________

6 எந்த உயிர் அட்சரம் பாப் பெருமானாரின் முன்னிலையை அடையவில்லை? ___________

________________________________________________________________________________

7. இந்த முதல் நம்பிக்கையாளர்களாகிய 'உயிர் அட்சரங்கள்' எனப்படுவோரின் எண்ணிக்கை பூர்த்தியானவுடன், பாப் பெருமானார் முல்லா ஹுசேனை தமது முன்னிலைக்கு அழைத்து பின்வரும் உத்தரவுகளை பிறப்பித்தார்: நாம் ______________ நாட்கள் ஒரு ___________ _____________. உன்னுடனான எனது ___________ ________ அடைந்துவிட்டது. __________ என்னும் கச்சத்தை ________, எமது ________ பரவச் செய்ய _________. _______________ ___________ _____________ கண்டு _________________, ஏனெனில் _______________ _______

உனக்கு நிச்சயமாக _______ புரிவார். மெய்யாகவே, அவர் உன்னை தமது அன்புப் ___________ கொண்டு ___________, _________ ______ ___________ உன்னை வழிநடத்தியும் செல்வார். நிலத்தின் மீது தனது தயையெனும் மழை பொழியும் ___________ போல், இம்மாநிலத்தின் ஒர் எல்லையிலிருந்து மறு எல்லை வரை ________, _________________________ தமது கருணையின் வாயிலாக உனக்குவந்தளித்திருக்கும் _________ அதன் மக்கள் மீது __________.....

8. பாப் பெருமானார் தமது உனிதப் பயணத்திற்கு யாரை உடன் அழைத்துச் செல்ல தீர்மானித்தார்?

9. அவர் முல்லா ஹுஸேனை எங்கு செல்லுமாறு பணித்தார்?

10. முல்லா ஹுஸேனுக்காக என்ன எதிர்ப்பார்ப்பை அவர் வெளிப்படுத்தினார்?

11. உயிர் அட்சரங்களுக்கான பாப் பெருமானார் உரையின் ஒரு பகுதியையாவது நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்.

## பகுதி 4

1844-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பாப் பெருமானார், ·குட்டுஸின் துனையுடன், மக்கா மற்றும் மதினா ஆகிய நகரங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டார். அரேபியாவில் வீற்றிருக்கும் இவ்விரு நகரங்களையும் இஸ்லாமிய சமயத்தவர்களால் புனிதமானவை என கருதப்படுகின்றன. பாப் பெருமானாரும் அவரது தோழரும் புஷீர் நகரிலிருந்து ஒரு கப்பலில் பயணம் மேற்கொண்டனர். அக்கப்பல் அவர்களை அரபு தீபகர்ப்பத்தைச் சுற்றி வந்து, இரண்டு மாதங்களுக்குப் பிறகு மெக்காவை வந்தடைந்னர். மக்காவில் இருந்தபோது, அந்நகரத் தலைவரும் பாதுகாப்பாளருமான ஷாரிஃபுக்கு பாப் பெருமானார் ஒரு மடல் வரைந்தனுப்பினார். அம்மடலில், தமது சமயப் பணி பற்றித் தெளிவாக விளக்கி, தமது சமயத்தை அந்த ஷாரி·ப் ஏற்றுக்கொள்ளுமாறும் விளித்தார். ஆனால், தமது சொந்தக் காரியங்களில் கவனமாயிருந்த அந்த ஷாரிஃப், அந்த தெய்வீகச் செய்தியின்பால் செவிசாய்க்கவில்லை. மக்காவிலிருந்து, பாப் பெருமானார் தமது துனைவருடன், முகமது நபியவர்களின் பூதவுடல் திருச்சமாதி இடப்பட்டுள்ள மதினா நகரைச் சென்றடைந்தார். அந்த புனித நகருக்கும் விஜயம் செய்த பிறகு, இருவரும் படகின் மூலம் பாரசீகம் சென்று சேர்ந்தனர். அவர்கள் புஷீர் அடைந்தனர், பாப் பெருமானார் குட்டுஸை ஷிராஸ் செல்லுமாறும் பணித்தார்:

> எம்முடன் நீ சேர்ந்திருக்கக் கூடிய நாள்கள் ஒரு நிறைவை எய்திக் கொண்டிருக்கின்றன. இறைவனின் இராஜ்யத்தில் அன்றி மறு இணைவு என ஒன்று தொடர முடியாத ஒரு பிரிவான, அப்பிரியும் நேரம் அணுகிவிட்டது... ஷிராஸ் நகர வீதிகளிலே அவமானங்கள் உன்மீது குவிக்கப்படும், உனது உடல் மிகக் கடுமையான காயங்களுக்கு உள்ளாகும். உனது எதிரிகளின் கீழ்த்தரமான நடத்தைகளை நீ சமாளித்திடுவாய்; நமது ஆராதனைக்கும்

அன்பிற்கும் பாத்திரமான அவரது பிரசன்னத்தை அடைவாய். அவரது முன்னிலையில் உனக்கேற்பட்ட தீங்குகள், அவமானங்கள் யாவற்றையும் மறந்து விடுவாய். கண் காணா தேவகணங்கள் உனக்கு உதவ விரைந்தோடி வந்து, உனது வீரத்தையும் மகிமையையும், உலகம் முழுமைக்கும் பிரகடணப்படுத்தும். அவர் பொருட்டு தியாகமரணம் என்னும் கிண்ணத்திலிருந்து பருகும் சொல்லற்கரிய களிப்பு உனதாகும். நானும் தியாகமெனும் பாதையில் கால்பதித்து, நித்திய இராஜ்யத்தில் உன்னுடன் சேர்ந்துகொள்வேன்."8

1. பாப் பெருமானார் எப்பொழுது புனித பயணம் மேற்கொண்டார்? ________________________

____________________________________________________________________________

2. தமது புனிதப் பயணத்தின் போது அவர் எந்தெந்த நகரங்களுக்குச் சென்றார்? __________

____________________________________________________________________________

3. மெக்காவில் அவர் யாருக்குக் கடிதம் எழுதினார்? ______________________________________

____________________________________________________________________________

4. இஸ்லாமியர்களுக்கு மெக்கா ஏன் புனித நகரமாக இருக்கின்றது? ______________________

____________________________________________________________________________

5. கீழ்காணும் காலியிடத்தில், புஷீரைச் சென்றடந்த போது பாப் பெருமானார் குட்டூஸிடம் என்ன கூறினார் என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும்.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

6. குட்டுஸ் யாரைச் சந்திப்பார் என பாப் பெருமானார் வாக்களித்தார் ? _____________________

____________________________________________________________________________

# பகுதி 5

குட்டுஸ், புதிய சமயச் செய்தியை ஷிராஸில் மிகுந்த ஊக்கத்துடன் போதிக்கலானார். ஆனால் விரைவிலேயே அப்பிராந்திய இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் ஆளுனரிடமிருந்து எதிர்ப்பை எதிர்நோக்கினர். அந்த ஆளுனர் குட்டுஸையும் அவரது சகாக்கள் இருவரையும் கைது செய்யும்படி ஆணை பிறப்பித்தார். கொடூரமும் தீமையும் நிறைந்த அந்த ஆளுனர், அவர்கள் பகிரங்கமாக தண்டிக்கப்பட வேண்டுமென ஆணையிட்டார். அவர்களது தாடிகளுக்கு தீயூட்டப்பட்டன; அவர்கள் மூக்கில் துளையிடப்பட்டு மூக்கனாங் கயிறிடப்பட்டது; இந்த இழிவான நிலையில், அவர்கள் தெருத் தெருவாக இழுத்துச் செல்லப்பட்டனர். "சமயத் துரோகத்திற்கு தண்டனை என்ன என்பதை கண்டுகொள்ள ஷிராஸ் நகர மக்களுக்கு இது ஒரு நல்ல பாடமாக அமையும்,"[9] என்பதே அவரது உத்தரவு. இக்கொடுமைகளை அனுபவித்த பிறகு, குட்டுசும் அவரது சகாக்களும், மீண்டும் அங்கு காணப்பட்டால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர் என்னும் எச்சரிக்கையுடன் அந்நகரத்தை விட்டு விரட்டப்பட்டனர். இவ்வாறாக, பாரசீக நாட்டில் இந்த வீர ஆன்மாக்கள் தங்களின் புதிய சமயத்திற்காக முதன் முதலில் சித்திரவதைக்கு ஆளானோர் என்னும் பெருமையைப் பெற்றனர். தங்கள் அன்பிற்கினியவரான பாப் பெருமானாருக்காகப் பின்னாளில் துன்பங்களை அனுபவிக்கப்போகும் ஆயிரக்கணக்கானோரைப் பற்றி அப்துல் பஹா பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிடுகின்றார்:

> **“…அவர்கள் அதி கொடூரமான இன்னல்களையும் கடுஞ் சோதனைகளையும் அனுபவித்தனர். அவர்கள் சோதனைகளை அற்புத சக்தியுடனும் உன்னத வீரத்துடனும் தாங்கிக்கொண்டனர். ஆயிரக்கணக்கில் சிறையில் தள்ளப்பட்டு, தண்டிக்கப்பட்டு, கொடுமைபடுத்தப்பட்டு மற்றும் தியாகமரணத்திற்கு ஆளாக்கப்பட்டனர். அவர்கள் குடியிருப்புகள் சூறையாடப்பட்டு, அழிக்கப்பட்டன; அவர்களின் உடைமைகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் மனமுவந்து தங்கள் உயிர்களைத் தியாகம் செய்து இறுதி வரை தங்கள் நம்பிக்கையில் வழுவாது இருந்தனர். அந்த அற்புதமான ஆன்மாக்களே இறைவனின் தீபங்கள், இறைவனின் திருவிருப்பம் என்னும் நிலையான அடிவானத்தில் பேரொளியுடன் பிரகாசிக்கும் புனிதத்தன்மை என்னும் விண்மீன்கள். "[10]**

குடுஸ் மற்றும் அவரது துணைவர் ஆகியோருக்கு அந்த அநீதியான தண்டனைகளை விதித்த ஆளுனர், தமது மனக் கொதிப்பை பாப் பெருமானாரின்பால் திருப்பினார். அவர் தமது படைவீரர்களை குதிரைகளில புஷிருக்குச் சென்று பாப் அவர்களை கைது செய்து ஷிராஸிற்கு சங்கிலிகளால் பிணைத்து இழுத்துவரும்படி உத்தரவிட்டார். இதற்கிடையே, பாப் பெருமானார் புஷிரை விடுத்து ஷிராஸிற்குப் பயணமாகியிருந்தார். இவ்விரு நகரங்களுகிடையே உள்ள வனாந்தரத்தில்தான் அந்தக் குதிரை வீரர்கள் பாப் பெருமானாரைச் சந்தித்தனர். பின்னாளில், அந்த வீரர் தலைவன் அந்தச் சந்திப்பைப் பற்றி விவரிக்கின்றான்::

> "அவரை நாங்கள் நெருங்கிய போது, அவர் எங்களுக்கு வந்தனம் தெரிவித்து நாங்கள் எங்கு செல்கின்றோம் என விசாரித்தார். அதுபற்றி அவரிடம் மறைப்பதே சாலச் சிறந்தது என எண்ணி, இப்பிரதேசத்தில் குறிப்பிட ஒரு விசாரனை மேற்கொள்ள ஆளுனரால் பணிக்கப்பட்டுள்ளதாக நான் கூறினேன். அவர் புன்னகைத்தவாறு: 'என்னை சிறைசெய்யவே ஆளுனர் உங்களை அனுப்பியுள்ளார்,' எனக் கூறினார். இதோ நான் இருக்கின்றேன்; நீர் விரும்பியதைச் செய்யவும். நானாக உங்களைச் சந்திக்க முன்வந்ததன் மூலம் உங்கள் பிராயண தூரத்தைப் பெரிதும் குறைத்து, நீங்கள் என்னை கண்டுகொள்ள

ஆவன செய்துள்ளேன். 'அவர் கூறியவற்றால் நான் திடுக்கிட்டு, அவரது வெளிப்படை மற்றும் நேரிய நடத்தையினால் அதிசயித்துப் போனேன். ஆனால், சுயமாகத் தம்மைத் தாமே அரசாங்க அதிகாரிகளின் கடுமையான அடக்குமுறைக்கு உட்படுத்திக்கொண்டு, அதன் பயனாக தமது உயிர் மற்றும் பாதுகாப்பிற்கு மிரட்டல்களை ஏன் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதை என்னால் புறிந்துகொள்ளமுடியவில்லை. நான் அவரை சட்டை செய்யாமல், அங்கிருந்து கிளம்ப ஆயத்தமானேன். அப்பொழுது அவர் என்னை நெருங்கி: 'மனிதனைப் படைத்து, அவரது பிற சிருஷ்டிகளிலிருந்து அவனை வேறுபடுத்தி, அவனது உள்ளத்தை அவரது மாட்சிமைக்கும் அறிவிற்கும் இருப்பிடமாக்கியவரின் நேர்மையின் மீது ஆணையிடுகிறேன், எனது வாழ்வு முழுவதும் உண்மையைத் தவிர வேறெதனையும் நான் கூறியதில்லை, எனது சக மனிதர்களின் நல்வாழ்வு மற்றும் முன்னேற்றத்தைத் தவிர வேறெதனையும் விரும்பியதும் இல்லை. 'நான் எனது சுகத்தை கருதாமலும், பிறர் வேதனைக்கும் துன்பத்திற்கும் காரணமாக இருப்பதையும் தவிர்த்துள்ளேன். நீர் என்னைத்தான் தேடுகின்றீர் என்பது எனக்குத் தெரியும். என் காரணமாக உம்மையும் உமது சகாக்களயும் தேவையற்ற உபத்திரவங்களுக்கு ஆளாக்குவதற்கு மாறாக, உம்மிடம் என்னை ஒப்படைப்பதையே நான் விரும்புகின்றேன். ‘இவ்வார்த்தைகள் என்னைப் பெரிதும் பாதித்தன. நான் உடனடியாக என் குதிரையை விட்டிறங்கி, அவரது அங்கவடியை முத்தமிட்டு, பின்வரும் வார்த்தைகளை அவரிடம் மொழிந்தேன்: 'இறை தீர்க்கதரிசியின் கண்களின் ஒளியே! உம்மைப் படைத்து உமக்கு இந்த மேன்மையையும் சக்தியையும் அளித்துள்ளவரின் மீது ஆணையாக, எனது வேண்டுகோளை அங்கீகரித்து எனது பிரார்த்தனைக்குப் பதிலளித்திட வேண்டுகின்றேன். இவ்விடத்தை விட்டகன்று, இரக்கமற்றவரும் இழிகுணம் கொண்டவருமான இப்பிரதேசத்தின் ஆளுனரை விட்டு மறைந்திடுமாறு கெஞ்சிக் கேட்டுக்கொள்கின்றேன். உம்பாலான அவரது சதிச் செயல்களை எண்ணி அச்சங்கொள்கின்றேன்; இறைத்தூதரின் சந்ததியைச் சார்ந்த, நிரபராதியும் மேன்மைமிக்கவருமான உமக்கெதிரான நாசவேலைகளுக்கு நானும் ஒரு கருவியாக உபயோகப்படுத்தப்படுவதை நான் வெறுக்கின்றேன்... என் ஆழ்ந்த வேண்டுதலுக்கு: 'உனது பெருந்தன்மைக்கும் மேன்மைமிகு நோக்கத்திற்காகவும் இறைவன் ஈடு செய்ய வேண்டுகிறேன்,' என பதிலளித்தார். எனது சமயத்தின் மர்மத்தை எவரும் அறியார்; அதன் இரகசியங்களை எவரும் ஆழங்காண முடியாது. இறை ஆணையின்பால் நான் ஒருபோதும் பாராமுகம் கொள்ளேன். அவர் ஒருவரே எனது உறுதியான அரண், இருப்பிடம் மற்றும் புகலிடம் ஆவார். எனது இறுதி மூச்சை நான் விடும் வரை யாரும் என்னைத் தாக்கத் துணிய மாட்டார், சர்வவல்லவரின் திட்டத்தை எவரும் தடுத்திடமுடியாது. என் காலம் வந்தவுடன், அவரது நாமத்தால் தியாகமரணம் என்னும் கிண்ணத்திலிருந்து எத்தகைய களிப்புடன் நான் பருகுவேன்! இதோ நான் இருக்கின்றேன்; என்னை உங்கள் யஜமானரிடம் ஒப்படையுங்கள். பயப்பட வேண்டாம், உன்னை யாரும் பழி கூற மாட்டார். ' நான் தலை வணங்கி அவரது விருப்பத்தை மேற்கொண்டேன்."11

பாப் பெருமான் உடனடியாக ஷிராஸ் நோக்கிய தமது பிராயணத்தை தொடர்ந்தார். சுதந்திரமாகவும் சங்கிலிகளால் பிணைக்கப்படாமலும் அவர் முன்னே செல்ல, காவலர்கள் அவரை மரியாதையுடன் பின்பற்றிச் சென்றனர். ஷிராஸ் வந்தடைந்தவுடன், பாப் பெருமானார் ஆளுனர் முன்னிலைக்கு கொண்டுவரப்பட்டு, வெட்கக் கேடான கொடுமைளுக்கு பாப் உட்படுத்தப்பட்டார். அந்த ஆளுனர் அவரை பகிரங்கமாக கண்டித்தும் குறைகூறவும் செய்தார். அதன் பிறகு பாப் பெருமானார் தமது மாமாவின் பாதுகாப்பில் விடப்பட்டார். தமது இல்லம் திரும்ப பாப் பெருமானார் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவரது சுதந்திரம் பெரிதும் குறைக்கப்பட்டது.

அவரது குடும்பத்தினர் மற்றும் வேறு சிலர் மட்டுமே அவரைக் காண அனுமதிக்கப்பட்டனர். இருந்தும், அவரது செல்வாக்கைக் குறைக்க ஆளுனராலும் மதகுருக்களாலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினூடே அவரது நம்பிக்கையாளர் எண்ணிக்கை விரைவாக உயரவே செய்தது.

பாப் பெருமானாரின் முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனம் மிகவும் பரவலாகியது அதன் காரணமாக, பாரசீக மன்னர் நிலைமையைக் ஆராய்வதற்கு தமது அறிஞர்களிலேயே மிகவும் நம்பிக்கையான மற்றும் அறிவுத்திறன் மிக்க ஓர் அறிஞரை அனுப்பினார். கவர்னரின் இல்லத்திலேயே விருந்தினராகத் தங்கியிருந்த இவ்வறிஞர், மூன்று முறை பாப் பெருமானாரைச் சந்தித்தார். பாப் பெருமானாரின் வாதங்களை முறியடித்திட அவர் தீவிரமாக இருந்தார். ஆனால், சந்திப்பின் ஒவ்வொரு முறையும் பாப் பெருமானாரின் அறிவாற்றல், பேச்சுத்திறம் ஞானம் ஆகியவற்றால் அவர் மேம்மேலும் ஈர்க்கப்பட்டார். மூன்றாவது சந்திப்பிற்கெல்லாம், வஹீட் என்னும் பெயரால் அறியப்படவிருக்கும் இந்த அறிஞர் அவ்விளைஞரின் தெய்வீக ஸ்தானம் குறித்து முற்றிலும் நம்பிக்கை அடைந்தார். பாப் பெருமானாருடனான தமது சந்திப்புகளின் போது “அவரது பாதங்களுக்குக் கீழ் கிடந்த தூசியின் நிலைக்கு தாம் தாழ்ந்துவிட்டதாக” தாம் உணர்ந்தார் என வஹீட் பின்னர் விளக்கினார். வஹீட் உடனாடியாக அரச சபைக்கு ஓர் எழுத்து மூலமான அறிக்கையை அனுப்பிவிட்டு, பாப் பெருமானாரின் ஆணையின் பேரில் ஷிராஸ் நகரை விட்டகன்றார். அந்த நாள் முதற்கொண்டு, வஹீட் பாப் பெருமானாரின் சமயத்தைப் பிரகடனப்படுத்துவதில் தமது ஆற்றல்களை அர்ப்பணித்து, இறுதியில் தமது அன்பரின் பாதையில் தமது உயிரையும் அர்ப்பணித்தார்.

பாப் பெருமானாரின் அதிகரிக்கும் சக்தி மற்றும் கீர்த்தியால் அந்த ஆளுனரின் சினம் அதிகரிக்கவே செய்து மறுபடியும் அவர் பாப் அவர்களைச் சிறை செய்ய உத்தரவிட்டார். இம்முறை அவர் பாப் பெருமானாரைக் கொல்ல முடிவெடுத்தார். ஆனால் அப்படி சிறை செய்யப்படும் இரவன்று, ஷிராஸ் முழுவதும் கொடிய கொள்ளை நோய் பரவி, அந்நகரம் முழுமையும் அல்லோல கல்லோலமானது. சில மணி நேரங்களில் சுமார் நூறு பேர்களுக்கு மேல் அந்தக் கொடிய நோயினால் இறந்து போயினர். பாப் அவர்களால் இறக்கும் தருவாயிலிருந்து அதிசயவசமாக காப்பாற்றப்பட்ட மகனையுடைய ஒரு காவல் அதிகாரி , அந்த நோயின் எழுச்சியில் இறைவனின் கரம் செயற்படுவதை அறிந்து, பாப் அவர்களை விடுவிக்கும்படி ஆளுனரிடம் மன்றாடினார். ஆளுனரும், தமது குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் அந்த நகரவாசிகளின் உயிருக்குப் பயந்து, பாப் பெருமானார் ஷிராஸ் நகரை விட்டு வெளியேற வேண்டும் என்னும் நிபந்தனையுடன் அவரை விடுவித்தார்.

1846-இன் கோடையில், பாப் பெருமான் ஷிராஸிற்கு வடக்கே உள்ள இஸ்பஃஹான் என்னும் நகரத்திற்குப் பிரயானமானார். தமது மாமாவிற்கு விடை கூறும் போது, "அஸர்பைஜான் மலைகளின் நடுவே உங்களை நான் மீண்டும் சந்திப்பேன், அங்கிருந்து உங்களை தியாகமரணம் என்னும் மகுடத்தைப் பெற அனுப்பி வைப்பேன். நானும் உங்களைப் பின்தொடர்ந்து, எனது விசுவாசமான சீடர்களில் ஒருவருடன், நித்திய இராஜ்யத்தில் உங்களுடன் சேர்ந்துகொள்வேன்."12 எனக் கூறினார்

1. ஷிராஸ் சென்றடைந்தவுடன் ·குட்டுஸ் என்ன செய்தார்? ________________________________

________________________________________________________________________________

2. ஷிராஸில் அப்புதிய சமயத்தை போதிக்கும்போது ·குடுஸை யார் எதிர்த்தது? ____________

______________________________________________________________________________

3. "மதகுரு" என்னும் வார்த்தையின் அர்த்தம் என்ன? ______________________________________

______________________________________________________________________________

4. அந்த ஆளுனரின் நடத்தையை விவரிக்கக்கூடிய வார்த்தைகள் எவை. _________________

______________________________________________________________________________

5. ஆளுனர் குட்டுஸ்சிற்கும் அவரது இரண்டு துணைவர்களுக்கும் என்ன தண்டனையை ஆணையிட்டார்?_______________________________________________________________

6. "விதர்மவாதம்" என்றால் என்ன? _____________________________________________________

______________________________________________________________________________

7. ஆளுனர், குட்டுஸையும் அவரது இரண்டு துணைவர்களையும் ஷிராஸ் நகரை விட்டு வெளியேற்றிய பிறகு, என்ன செய்யுமாறு தமது காவலர்களுக்கு ஆணையிட்டார்?_______

______________________________________________________________________________

8. காவலர்கள் பாப் பெருமானாரைச் சந்தித்தபோது அவர் என்ன செய்து கொண்டிருந்தார்?

______________________________________________________________________________

9. தம்மைக் கைது செய்யும்படி அனுப்பி வைக்கப்பட்ட காவலர் தலைவனிடம்: 'என்னை _________ _________ உங்களை _________,' எனக் கூறினார். _________; _________ நீர் விரும்பியதைச் செய்யும். நானாக உங்களை _________ முன்வந்து, உங்கள் _________ _________ _________ _________, நீங்கள் என்னை _________ _________ செய்துள்ளேன்.' தலைமைக் காவலன் அவரை சட்டை செய்யாமல், அங்கிருந்து கிளம்ப ஆயத்தமானான், அப்பொழுது பாப் பெருமான்: 'நான் எனது _________ _________, பிறர் _________ _________ _________ _________ தவிர்த்துள்ளேன். நீர் என்னைத்தான் _________ என்பது _________ எனக்குத் _________. என் காரணமாக உம்மையும் உமது _________ _________ _________ _________ பதிலாக,_________ _________ _________ நான் விரும்புகின்றேன்,' எனக் கூறினார்.

10. பாப் பெருமானார் தமது காவலர்கள் தம்மிடம் வெளிப்படுத்திய விரோத உணர்வை எவ்விதம் களைந்தார்? ____________________________________________________________

______________________________________________________________________________

11. பாப் பெருமானார் என்ன நிலையில் ஷிராஸ் நகர் வந்தடைந்தார்? ______________________

______________________________________________________________________________

12. பாப் பெருமானார் மீது ஆளுநர்? ______________________________________________________

______________________________________________________________________________

13. தொடர்ந்து வந்த மாதங்களில் அவரது செல்வாக்கை ஒரு முடிவிற்குக் கொண்டுவருவதற்காக ஆளுநரும் மதகுருக்களும் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவு என்னவாக இருந்தது? ____________________________________________________________

______________________________________________________________________________

14. வஹீட் என்பார் யார்? ______________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

15. பாப் பெருமானார் பிரபலமடந்து வருதல் குறித்து ஆளுநர் எவ்வாறு நடந்துகொண்டார்? __

______________________________________________________________________________

______________________________________________________________________________

6. இறுதியில் பாப் பெருமானாரை விடுவிக்கவும் அவர் ஷிராஸை விட்டு வெளியேறவும் எது காரணமாக இருந்தது? ____________________________________________________________

______________________________________________________________________________

17. ஷிராஸை விட்டு வெளியேறியவுடன் பாப் பெருமானார் எங்கு சென்றார்? _______________

18. இப்பயணத்தை பாப் பெருமானார் எப்போது மேற்கொண்டார்? _________________________

19. பாப் பெருமானார் தமது மாமாவிற்கு பிரியாவிடை கூறுகையில் அவரிடம் என் கூறினார்?

______________________________________________________________________________

20. உங்கள் குழுவின் மற்றொரு உறுப்பினருடன் ஜோடி சேர்ந்து, புஷீர் மற்றும் ஷிராஸுக்கு இடையே உள்ள வனாந்தரத்தில் பாப் பெருமானாருடன் ஏற்றப்பட்ட காவலருடமான சந்திப்பின் கதையை உங்கள் ஜோடியுடன் பரிமாறிக் கொள்ளுங்கள்.

# பகுதி 6

பாப் பெருமான் இஸ்ப·ஹான் நகரை நெருங்கிக் கொண்டிருந்த போது, அந்த நகரின் ஆளுனருக்கு ஒரு மடல் வரைந்து, தாம் உறைய வேண்டிய இடத்தை நியமிக்குமாறு வேண்டினார். ஷிராஸ் நகரின் ஆளுனரைப்போல் அல்லாது, இந்த நகரின் ஆளுனர் தூய உள்ளம் படைத்தவராகவும், நீதிமானாகவும் விளங்கினார். பாப் பெருமானின் மடலில்

அடங்கியிருந்த பனிவு மற்றும் கடிதம் எழுதப்பட்டிருந்த விதம் ஆகியவற்றால் மனம் மிகவும் கவரப்பட்டவராய், பாப் அவர்களை வரவேற்று தமது இல்லத்திலேயே அவருக்கு சிறத்தை மற்றும் தாராளம் கூடிய வரவேற்பு நல்குமாறு அந்தப் பிரதேசத்தின் தலைமை சமய நிர்வாகஸ்தரை பணித்தார்.

பாப் பெருமானார் இஸ்ப·ஹானில் தங்கியிருந்த காலத்தில் அவரைக் காணவும் செவிமடுக்கவும் கூட்டம் கூட்டமாக மக்கள் அன்றாடம் வந்தனர். ஆனால் அவரது அதிகரிக்கும் புகழ், எங்கே நீண்டகாலமாக அனுபவித்து வந்த தங்களது சக்தியையும் அதிகாரத்தையும் இழந்துவிடுவோமோ என பயந்த அந்நகரத்து மககுருக்களின் குரோதத்தைத் தூண்டியது. பாப் பெருமானாரைப் பற்றி சந்தேகங்களை கிளரிவிடும் நோக்கத்துடன் அவருக்கு எதிரான வதந்திகளைப் பரப்பினர். அது தோல்வியுற்ற போது, அவரை அகற்றுவதற்கே சதி செய்தனர். மதகுருக்களின் சதித் திட்டங்களை அறிந்திருந்த ஆளுனர், பாப் பெருமானாரைத் தமது இல்லத்திற்கே வந்து தங்குமாறு அழைத்தார். அங்கு, தாம் பாப் அவர்களுடன் கொண்ட கலந்துரவாடலின் மூலம், படிப்படியாக பாப் பெருமானின் வெளிப்பாட்டின் உன்னதம் பற்றிய புரிதலை அந்த ஆளுனர் பெற்றார். ஒரு நாள், பாப் அவர்களுடன் தமது இல்லத்தைச் சுற்றியுள்ள தோட்டத்தில் உட்கார்ந்திருந்த போது, அந்த ஆளுனர் அவரிடம் கீழ்க்கண்டவாறு கூறினார்:

> "எல்லாம் வல்ல அளிப்பாளர் எனக்கு அதிக செல்வத்தை அளித்துள்ளார். அவற்றை எப்படி சிறந்த முறையில் பயன் படுத்துவது என நான் அறியேன். இறைவனின் ஆதரவால், இவ்வெளிப்பாட்டை உணரும்படி இப்பொழுது நான் வழிகாட்டப்பெற்றுள்ளதால், எனது உடைமைகள் அனைத்தையும் அதன் நலன்கள் செயல்பெறவும் அதன் புகழ் பரவவும் அர்ப்பணம் செய்ய விரும்புகிறேன். உமது அனுமதியின் பேரில், தெஹரான் சென்று என்பால் உறுதியான மற்றும் அசைக்க முடியா நம்பிக்கை கொண்டுள்ள அரசரை இந்த சமயத்தின்பால் முடிந்த அளவு கவர முயல எண்ணியுள்ளேன்."13

அவர் சொறிந்த இந்த அன்பு மற்றும் பக்தியை கண்டு, பாப் பெருமானார் பதிலளித்தார்:

> இறைவன் உமது மேன்மையான நோக்கங்களுக்காகக் கைம்மாறு செய்வாராக. இவ்வளவு மேன்மையான நோக்கம், செயலைக் காட்டிலும் அதிக மதிப்புடையதாகும். எவ்வாறாயினும், உமது நாள்களும் எமது நாள்களும் கணக்கிடப்பட்டுவிட்டன; உமது நோக்கத்தின் நிறைவேற்றத்தை நான் உடன்காணவும் நீர் உமது நம்பிக்கைகளின் நனவாக்கத்தை சாதிக்கவும் உதவக்கூடிய அந்த நாள்கள் மிகவும் குறைவு. சர்வ சக்திமானாகிய இறைவன் நீர் வாஞ்சையுடன் கற்பனை செய்துள்ள வகையில் தமது சமயத்தின் வெற்றியை சாதிக்கப்போவதில்லை. இந்த மண்ணின் ஏழைகள் மற்றும் கீழ்ப்பட்டோர் மூலமும், அவர்கள் அவரது பாதையில் சிந்துகின்ற இரத்தத்தின் மூலமும், சர்வ வல்லமையுள்ள திருவரசர் தமது சமயத்தின் பாதுகாப்பையும் வலுப்படுத்தலையும் உறுதிசெய்ய போகின்றார். அதே இறைவன், வரவிருக்கும் உலகில், நித்திய மகிமை என்னும் கிரீடத்தை உமது சிரசில் சூட்டி, தமது அபரிமிதமான ஆசிகளை உம்மீது பொழிவார். உமது உலக வாழ்நாள் காலத்தில், மூன்று மாதங்களும் ஒன்பது நாட்களுமே எஞ்சியுள்ளன; அதன் பிறகு நம்பிக்கையுடனும் மெய்யுறுதியுடனும், உமது சாஸ்வதமான உரைவிடத்திற்கு நீர் விரைவீர்.14

மூன்று மாதங்களும் ஒன்பது நாட்களும் கடந்த பிறகு அந்த ஆளுனர், பாப் பெருமானார் பெருமானார் முன்கூறியவாரே, உலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்த சில நாட்களுக்குள், அந்த

ஆளுனரின் பதவியை ஏற்ற புதிய ஆளுனர் பாப் பெருமானாரை என்ன செய்வது என வினவி தெஹரானில் அரசருக்கு ஒரு செய்தியை அனுப்பினார். தாம் அவரைச் சந்திக்க நினைத்திருக்கும் இடமான தலைநகருக்கு பாப் பெருமானாரை மாறுவேடத்தில், அனுப்பிவைக்குமாறு அரசர் அவரைப் பணித்தார். ஆக, குதிரைப்படைக் காவலர்களின் துணையுடன், தெஹரான் நோக்கி தமது பயணத்தை பாப் துவங்கினார்.

1. இஸ்·பஹானை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் பாப் யாருக்கு மடல் வரைந்தார்?

______________________________________________________________________________

2. இஸ்ஃபாஹான் ஆளுனரின் பண்புகளை என்ன வார்த்தைகள் விவரிக்கின்றன? ________

______________________________________________________________________________

3. அந்த பிரதேசத்தின் தலைமை சமய நிர்வாகஸ்தருக்கு அந்த ஆளுனர் என்ன உத்தரவு பிறப்பித்தார்? ______________________________________________________________

______________________________________________________________________________

4. இஸ்பஃஹான் மதகுருக்களை எது பொறாமை கொள்ளச் செய்தது ____________________

______________________________________________________________________________

5. பாப் பெருமானார் தமது செய்தியை தொடர்ந்து பிரகடனம் செய்து வந்தால் தாங்கள் எதை இழக்க நேரிடும் என மதகுருக்கள் பயந்தனர்?_______________________________________

______________________________________________________________________________

6. மதகுருக்களின் சதிகளிலிருந்து பாப் பெருமானாரைக் காப்பாற்ற இஸ்ஃபாஹான் ஆளுனர் என்ன செய்தார்?____________________________________________________

______________________________________________________________________________

7. பாப் பெருமானாரின் சமயத்திற்காக ஆளுனர் என்ன செய்வதிட முன்வந்தார்? __________

______________________________________________________________________________

8. ஆளுனர் வழங்கிட விரும்பிய உதவிக்கு பாப் பெருமானார் எவ்விதம் பதிலிறுத்தார்?______

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

9. ஆளுனருக்கான பதிலிறுப்பில், கடவுளின் சமய முன்னேற்றம் குறித்த எந்த ஆழ்ந்த உண்மையை பாப் பெருமானார் அவரிடம் தெரிவித்தார்? ______________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

10. ஆளுனருக்குப் பின் அப்பதவியை ஏற்றவரிடம் அரசர் என்ன ஆணையை வழங்கினார்?

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

## பகுதி 7

அக்காலத்தில் பாரசீகத்தின் பிரதம மந்திரியாக இருந்தவர் சுயநலமிகுந்தவராகவும் ஆற்றல் குறைந்தவராகவும் இருந்தார். பாப் பெருமான் தெஹ்ரானுக்கு வந்து அரசரைச் சந்தித்தால் தமது சொந்த நிலையையும் பதவியையும் பறிகொடுக்க நேரிடலாம் என இவர் பயந்தார். ஆதலால், அவர் அரசரிடம் பேசி பாப் பெருமானாரை நாட்டின் வடமேற்கில் உள்ள அஸர்பைஜான் பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கும்படி அரசர் தமது உத்தரவை மாற்றிக்கொள்ள சம்மதிக்கவைத்தார்.

ஜூன் 1847-இல் காவலர்களுடன் அப்பிரதேசத்தின் தலைநகரான தப்ரீஸ் வந்தடைந்தவுடன், பாப் பெருமானாரை அடைத்துவைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நகரின் உறைவிடம் ஒன்றிற்கு கொண்டுசெல்லப்பட்டார். அவ்வீட்டின் வாசலை ஒரு சிறிய பட்டாளம் காவல் புறிந்தது. இரு நம்பிக்கையாளர்களைத் தவிர வேறு யாரும் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அந்த நகர மக்கள் யாரும் அவரை சந்திக்க முயன்றால் சிறை செய்யப்படுவதோடு அவர்கள் சொத்துகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

தப்ரீஸில் சிறிது காலம் வாசம் செய்த பின், பெரும் பட்டிணங்கள் மற்றும் நகரங்களுக்கு அப்பால் உள்ள அஸர்பைஜான் மலைப்பிரதேசங்களைச் சார்ந்த "மாஃகூ" எனப்படும் கோட்டைக்கு அவர் மாற்றப்பட்டார். நாட்டின் இந்தத் தொலைதூரமான மற்றும் வாழத்தகுதியற்ற மூலைக்கு பாப் பெருமானாரை நாடுகடத்துவதால் அவர் தமது செல்வாக்கை இழந்துவிடுவார் மற்றும் அவரது சமயமும் மறக்கப்பட்டவிடும் என அப்பிரதம மந்திரி நினைத்தார். ஆனால் இறைவனின் சமயதீபம் ஒருமுறை ஏற்றப்பட்டுவிட்டால் அதன் ஒளியை மனிதக் கரங்கள் எதுவும் அனைக்கமுடியாது என அவர் அறியவில்லை. பாப் பெருமானார் , தமது மாட்சிமையினாலும் அன்புக் கருணையாலும், விரைவிலேயே அக் கோட்டையின் அதிகாரிகள் மற்றும் அப்பிராந்திய மக்கள் ஆகியோரை வசீகரித்து அவர்களது மதிப்பையும் மரியாதையையும் வென்றார்.

பாப் அவர்களை கடுங்காவலுக்கு இலக்காக்கி இருந்தவர்கள் அதை சிறிது சிறிதாக தளர்த்தினர், அதிகரிக்கும் எண்ணிக்கையில் பாரசீகத்தின் பல பாகங்களிலிருந்து அவரைக் காண வந்த அவரது நம்பிக்கையாளர் கூட்டத்திற்கு கோட்டை கதவுகளும் திறக்கப்பட்டன. மாஃகூவில் அவர் சிறைபட்டிருந்த காலகட்டத்தில், அவர் வெளிப்படுத்திய புனித வாசகங்களிலேயே முக்கியமானதாக விளங்கும் பாயானை வெளிப்படுத்தினார். அந்நூலில் தமது சமயத்தின் விதிமுறைகளை தெளிவாகவும் நேரடியாகவும் ஸ்தாபித்து, தம்முடையதைவிட

உயர்ந்த ஒரு வெளிப்பாட்டின் வரவினை வெளிப்படையாகவும் நேரடியாகவும் அதில் அறிவித்து, "கடவுள் வெளிப்படுத்தவிருக்கு அவரை" தேடி கண்டுகொள்ளுமாறு தமது நம்பிக்கையாளர்களை வலியுறுத்தினார். அக்காலகட்டத்தில் மா-கூவில் வசித்த ஒரு நம்பிக்கையாளர் பாரசீக பயானின் வெளிப்பாட்டை பின்வருமாறு விவரிக்கின்றார்:

> தமது சமயத்தின் போதனைகள் மற்றும் கோட்பாடுகளை எழுதப்படுவதற்காக உச்சரித்துக்கொண்டிருந்த பாப் பெருமானாரின் குரல், மலையடிவாரத்தில் வசித்தோருக்குத் தெளிவாகக் கேட்டது. அவரது ஓதுதலின் இசை, அவரது உதடுகள் வழி பிரவாகித்த செய்யுட்களின் லயம் எங்களின் செவிகளைத் தீண்டி ஆன்மாவை ஊடுருவியது. அவரது குரலின் கம்பீரத்தை மலைகளும் பள்ளத்தாக்குகளும் எதிரொலித்தன. அவரது உச்சரிப்பின் ஈர்ப்பினால் எங்கள் இதயங்களின் ஆழத்தில் அதிர்வலைகளை எழும்பின.15

பாப் பெருமானார் மாஃகூ மக்களின் நேசத்தை பெற்று அவரது சமயம் தொடர்ந்தாற் போன்று நாடு முழுவதும் பரவுகின்றது என அறிந்த பிரதம மந்திரி பாப் அவரை "ஷிரீக்" கோட்டைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டார். ஆனால் அங்கும் ஷிரீக் அருகிருள்ள ஊர் மக்களும் ஷிரீக் கோட்டை அதிகாரிகளும் பாப் பெருமானாரின் காந்தம் போன்ற ஆளுமையினால் கவரப்பட்டனர். அப்பிரதேசத்தின் தனிசிறந்த சமயத் தலைவர்களாக விளங்கியோர் சிலர் புதிய சமயத்தை ஏற்று தங்களின் பிரத்தியேக உயர்நிலைகளைத் துறந்து அவரது நம்பிக்கையாளர்களோடு தாமும் சேர்ந்து கொண்டனர்.

ஷிரீக்கிலும் என்ன நடக்கின்றது என அறிந்த பிரதம மந்திரி பாப் பெருமானாரை உடனடியாகத் தப்ரீஸ¤க்குக் கொண்டு செல்லும்படி உத்தரவிட்டார். அங்கு பாப் அவர்களை விசாரிக்கவும் அவரது வளரும் செல்வாக்கை தக்க வகையில் முடிவுக்கு கொண்டு வரவும் அரசாங்கம் சமய அதிகாரிகளின் கூட்டம் ஒன்றை கூட்டியது. இப்போது ஜூலை 1848 ஆகியிருந்தது. அக்கூட்டத்தில் சமயத் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் பாப் அவர்களை அவமானப்படுத்த முயன்றனர், ஆனால் அவரது மகிமையின் முன் அவர்கள் சக்தியிழந்து நின்றனர். "நீர் யாரென்று உம்மை அறிவித்துக்கொள்கின்றீர், மற்றும் நீர் கொண்டுவந்துள்ள செய்தி யாது?, எனும் வினாவிற்கு, அவர் பின்வருமாறு பிரகடனம் செய்தார்.

> **நானே, நானே, நானே, வாக்களிக்கப்பட்டவர்! எவரது நாமத்தை ஆயிரம் வருடங்களாக நீங்கள் வேண்டியழைத்தீர்களோ, எவரது பெயர் குறிப்பிடப்பட்டபோது நீங்கள் எழுந்து நின்றீர்களோ, எவரது திருவரவைக் காண நீங்கள் ஆவல் கொண்டிருந்தீர்களோ, எவரது திருவெளிப்பாடு குறித்த நேரத்தை விரைவாக்க நீங்கள் ஆண்டவனை பிரார்த்தித்தீர்களோ, அது நானே. மெய்யாகவே நான் கூறுகின்றேன், கிழுக்கிலும் மேற்கிலும் உள்ள மக்கள் அனைவரும் எனது திருவாக்கைக் கடைப்பிடித்தும் எனது நிலைக்கு விசுவாசம் செலுத்த வேண்டியதும் கடமையாகின்றது."16**

> அந்த சந்திப்பிற்குச் சில நாட்களுக்குப் பின். பாப் பெருமானார் மீண்டும் ஷிரீக் கொண்டுசெல்லப்பட்டார். அவரது எதிரிகள் அவரை தப்ரீஸ் கொண்டுவந்து கட்டாயப்படுத்தி தமது நோக்கத்தை அவர் கைவிட செய்துவிடலாம் என எண்ணினர். ஆனால், பாப் பெருமான் உயிருடன் இருக்கும் வரை பாரசீக மக்களிடையே அவரது அதிகரிக்கும் செல்வாக்கின் வளர்ச்சியை தடுக்கவே முடியாது என அவர்கள் முடிவு செய்தனர்.

1. அந்த நேரத்திய பாரசீக பிரதம மந்திரியின் நடத்தையை விவரிக்கும் வார்த்தைகள் எவை?

____________________________________________________________

____________________________________________________________

2. பாப் பெருமானார் அரசரைச் சந்திப்பது குறித்து பிரதம மந்திரி ஏன் பயந்தார்? ____________

____________________________________________________________

3. பாப் பெருமான் அரசரை சந்திப்பதை தடுப்பதற்கு பிரதம மந்திரி என்ன செய்தார்.? ________

____________________________________________________________

4. தப்ரீஸில் பாப் பெருமான் தங்கியிருந்த வீட்டு வாசலை காவலர்கள் ஏன் காவல் புறிந்தனர்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

5. நகரத்து மக்களுக்கு எவ்விதமான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன? ______________________

____________________________________________________________

____________________________________________________________

6. தப்ரீஸில் குறுகிய காலம் தங்கிய பிறகு பாப் பெருமானார் வேறு எங்கு மாற்றப்பட்டார்? ___

____________________________________________________________

7. பாப் பெருமானார் மாஃகூவில் சிறைப்படுத்தப்பட்ட பிறகு அவரது சமயத்திற்கு என்ன நடக்கும் என பிரதம மந்திரி எண்ணினார்? ____________________________________________

____________________________________________________________

8. அவருடைய எண்ணம் எவ்வாறு பலிக்காமல் போயிற்று? ________________________________

____________________________________________________________

____________________________________________________________

9. மா-கூ சிறையின் வாயில்கள் பாப் பெருமானின் நம்பிக்கையாளர்களுக்குத் திறக்கப்பட எவ்வாறு வாய்த்தது? ______________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

10. மாஃகூ கோட்டையில் அடைபட்டிருந்த காலகட்டத்தில் பாப் பெருமான் வெளிப்படுத்திய முக்கிய நூல் எது?____________________________________________________

____________________________________________________________

11. பாரசீக பாயானில் அடங்கியுள்ள கருப்பொருள்கள் சிலவற்றை குறிப்பிடவும்? ___________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

12. பாயான் திருநூலில் யாரைத் தேடி கண்டுகொள்ளும்படி பாப் பெருமானார் தமது நம்பிக்கையாளர்களுக்குப் பணித்தார்? ______________________________________________

13. பாப் பெருமானாரின் சமயம் தொடர்ந்து பரவி வருகின்றது என அறிந்த பிரதம மந்திரி என்ன செய்தார்? ____________________________________________________________________

________________________________________________________________________________

14. பாப் பெருமானார் ஷிரீக்கிற்கு மாற்றப்பட்டதனால் அவரது சமயத்திற்கு என்ன நேர்ந்தது?_

________________________________________________________________________________

15. பாப் பெருமானாரை ஷிரீக்கிலிருந்து தப்ரீசுக்குக் கொண்டுவருவதனால் என்ன சாதிக்கப்பட முடியுமென அவரது எதிரிகள் எண்ணினர்? _______________________________

________________________________________________________________________________

16. அவரது விசாரனையின் போது பாப் பெருமானாரிடம் என்ன கேள்விகள் கேட்கப்பட்டன?

________________________________________________________________________________

________________________________________________________________________________

17. அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பாக அவர் எதைப் பிரகடனம் செய்தார்? _________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

# பகுதி 8

பாப் பெருமானாரைக் குறிப்பிட்டு அப்துல்-பஹா பின்வறுமாறு குறிப்பிடுகின்றார்:

**பாப் அவர்களை பொறுத்தமட்டில் -- எனது ஆன்மா அவரது அர்ப்பணமாக ஆகட்டும்! -- வாலிப வயதிலேயே, அதாவது, தமது அருள்மிகு வாழ்வின் இருபத்தைந்தாவது**

**வருடத்தை அவர் எட்டியபோது, தமது சமயத்தைப் பிரகடணம் செய்ய முன்னெழுந்தார்... தன்னந்தனியராக, கற்பனைக்கு எட்டாத ஒரு பணியை, உலகம் முழுவதும் மதவெறிக்குப் பெயர் போன பாரசீகர் மத்தியில் ஒரு பணியை மேற்கொண்டார். சமய சட்டங்கள், பாரம்பரியங்கள், நடத்தைகள், தார்மீக நெறிகள், மற்றும் பாரசீக பழக்கங்களின் அடித்தலங்களை அதிரச் செய்யக்கூடிய அத்தகைய சக்தியுடன் இந்த மகிமை பொருந்திய திருவுரு முன்னெழுந்தார். நாட்டின் பிரமுகர்கள், ஏறக்குறைய அனைத்து சமயத் தலைவர்கள், பொது மக்கள் அனைவரும் எழுந்து அவரை அழித்து நாசம் செய்ய முயன்ற போதிலும், தனியே அவர்கள் அனைவரையும் அவர் சமாளித்து, பாரசீகத்தையே கலங்கச் செய்தார். "எவ்வளவு எண்ணற்ற மதகுருக்கள், தலைவர்கள் மற்றும் அந்நாட்டின் குடிமக்கள், களிப்புடன் அவரது சமயத்திற்காகத் தமது உயிர்களைத் தியாகம் செய்து, தியாகமரண மைதானத்திற்கு விரைந்தனர்.**

**"அரசாங்கம், தேசம், மதகுருமார்கள் மற்றும் பிரபலமான தலைவர்களாக இருந்தோர் அவரது ஒளியை அனைக்க முயன்றனர், ஆனால் முடியவில்லை. இறுதியில் அவரது சந்திரன் உதயமானது, நட்சத்திரம் மின்னியது, அவரது அஸ்திவாரங்கள் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டன, மற்றும் அவரது தொடுவானம் ஒளி வெள்ளமாகியது. பெரும் ஜனக்கூட்டத்தினருக்குத் தெய்வீகக் கல்வியினால் பயிற்றுவித்து, பாரசீகரின் எண்ணங்கள், நெறிமுறைகள், பழக்கங்கள் மற்றும் நிலைகளில் அதிசயிக்கத் தக்கத் தாக்கங்களை ஏற்படுத்தினார். பஹா கதிரவனின் வெளிப்பாடு என்னும் நற்செய்தியைத் தமது நம்பிக்கையாளர் அனைவருக்கும் பிரகடனம் செய்து, (சமய)நம்பிக்கை மற்றும் மெய்யுறுதிக்காக அவர்களைத் தயார்செய்தார்.**

**"ஓர் இளம் வனிகரால் இவ்வித அற்புத அறிகுறிகள் மற்றும் முடிவுகளின் வெளிப்பாடு; மக்கள் சிந்தனையிலும் மனதிலும் ஏற்படுத்தப்பட்டத் தாக்கம், மேம்பாட்டிற்கான அஸ்திவாரம் ஸ்தாபிக்கப்படுதல்; மற்றும் வெற்றிக்கும் செழுமைக்குமான முன்தேவைகள் ஓர் இளம் வணிகரால் ஸ்தாபிக்கப்பட்டதானது, அவர் ஒரு சர்வலோக கல்விமான் என்பதற்கான மிகச் சிறந்த ஆதாரங்களைக் கொண்டுள்ளது -- ஒரு நியாய மனதுடைய மனிதர் இதை ஏற்பதற்குத் தயங்கமாட்டார். என்பதே பொருண்மை"17**

அப்துல் பஹாவின் மேற்கண்ட வாசகங்கள் மற்றும் சமய சரித்திரம் பற்றி நீங்கள் இதுவரை கற்றுள்ளவற்றின் அடிப்படையில் பாப் பெருமானாரின் வாழ்க்கை குறித்த ஒரு சிறிய சொற்பொழிவைத் தயாரித்தளிக்க நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

## பகுதி 9

1850-ஆம் ஆண்டில், முன்னிருந்த பிரதமரைப் போன்றே இரத்தவெறி பிடித்த ஒரு புதிய பிரதமர், பாப் பெருமானின் மரண தண்டனைக்கு உத்தரவிட்டார். பாப் பெருமான் மீண்டும் ஷிரீக்கிலிருந்து தப்ரீஸிற்குக் கொண்டுவரப்பட்டார். அவரது தியாகமரணம் நடந்தேறவிருந்த முற்றத்திற்கு அடுத்ததாக அமைந்திருந்த ஓர் அறையில் அவர் அடைக்கப்பட்டார்.

தமது அறைக்குக் கொண்டுசெல்லப்படும் வேளையில், ஓர் இளைஞன் குழமியிருந்த கூட்டத்திலிருந்து முண்டிக்கொண்டு வந்து பாப் பெருமானாரின் கால்களில் வீழ்ந்தான். அந்த

இளைஞன், "உம்மைவிட்டு என்னை அனுப்பிவிடாதீர் பிரபு," என கெஞ்சினான். அவர் செல்லக்கூடிய இடத்திற்கெல்லாம் தானும் பின்வர அனுமதிக்குமாறு வேண்டினான். "எழு," என பாப் அவர்கள் பதிலளித்தார், " என்னுடன் நீ நிச்சயமாக இருப்பாய் என நம்புவாயாக. இறைவன் விதித்துள்ளவற்றை நீ நாளை சந்திக்கப்போகின்றாய்."18 அந்த இளைஞனும் அவனுடன் இருந்த அவனது இரு தோழர்களும் உட்பட உடனடியாக கைது செய்யப்பட்டு, பாப் பெருமானாரும் அவரது செயலளாரும் வீற்றிருந்த அதே அறையில் அடைக்கப்பட்டனர். இந்த இளைஞன் பின்னாளில் 'அனிஸ்' என வழங்கப்பட்டான்.

அனிஸ் பாப் பெருமானாரின் செய்தியினை அவர் தப்ரீஸில் இருந்த குறுகிய காலத்தின் போது அவர் மூலமாகவே அறிந்திருந்து, ஷிரீக்கிற்கு அவரைப் பின்தொடரவும் முடிவு செய்திருந்தான். அவனது உள்ளத்தில் இறைவனின் அன்பு என்னும் நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்ததானது, தான் புதிதாக ஏற்றுக்கொண்டுள்ள தனது சமயத்திற்காக உயிரை விட வேண்டும் என்னும் ஆவலே யாவற்றையும் விட மேலோங்கி நின்றது. ஆனால் அவனது, மாற்றான்தந்தை, தனது மகனின் விநோதப் போக்கைக் கண்டு பயந்து, அவனை அவனது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி தீவிர காவலும் வைத்தார். அங்கு, அனிஸ் வாரக்கணக்கில் பிரார்த்தனையும் தியானமுமாக இருந்து, தனது இதய ஆவலின் முன்னிலையை அடைய இறைவனை இறைஞ்சியவாறு இருந்தான். ஒரு நாள், பிரார்த்தனையில் மூழ்கியிருந்த வேளையில், விநோதமான அகக்காட்சி ஒன்று கண்டான். பாப் பெருமானார் அவன் முன் நின்ற வண்ணம் அவனை கூப்பிட்டுக் கொண்டிருந்தார். அனிஸ் உடனடியாக அவரது கால்களில் வீழ்ந்தான். "களிப்புறு," என பாப் அவர்கள் கூறி, "இதே நகரத்தில், பெரும் மக்கள் கூட்டத்தின் கண் முன் நான் கட்டித் தொங்கவிடப்பட்டு, எதிரிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இரையாவேன். எனது தியாகமரணத்திற்கு உன்னையல்லாது வேறு யாரையும் நான் தேர்ந்தெடுக்கப்போவதில்லை. நான் உனக்கருளும் இந்த வாக்குறுதி நிச்சயமாக நிறைவேற்றப்படும்."19 ஆக, தனது அன்பருடன் ஒன்றினையப் போகும் நாள் விரைவில் கூடவிருக்கின்றது என்னும் ஞானத்துடன் அனிஸ் பொறுமையுடன் காத்திருந்தான். இறுதியில், இப்போது, அவனது இதய ஆவலை அடைந்துவிட்டான்.

அன்று சாயங்காலம் பாப் பெருமானார் களிப்பால் பிரகாசித்துக்கொண்டிருந்தார். அனீஸுடனும் தம்மோடு அடைபட்டிருந்த மற்ற மூன்று விசுவாசமான நம்பிக்கையாளர்களுடனும் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தார். "நாளை, எனது தியாகமரணம் சம்பவிக்கும் நாள்," என ஆரம்பித்தார். ஆனால் இப்பொழுதே உங்களில் ஒருவர் எழுந்து, தன் கையாலேயே எனது வாழ்வை முடிக்கக் கூடுமானால்," என்றார். "என் எதிரியின் கையால் மடிவதைவிட ஒரு நண்பனின் கையால் மடிவதையே நான் விரும்புகிறேன். " விலைமதிப்பற்ற அவரது வாழ்வை முடிப்பதைப் பற்றி மனதால் நினைக்கக்கூட முடியாமல், கண்களில் நீர் வழிய, அவர்கள் அனைவரும் அமைதியாக இருந்தனர். அப்போது, அனீஸ் திடீரென குதித்தெழுந்து, தனது தலைவர் இடும் எந்த ஆணையையும் நிறைவேற்றத் தயார் என அறிவித்தார். "எனது விருப்பத்தை பூர்த்தி செய்ய முன்னெழுந்துள்ள இந்த இளைஞனே என்னுடன் சேர்ந்து தியாகமரணம் அனுபவிப்பான். அதன் கிரீடத்தில் பங்குகொள்ள அவனையே நான் தேர்ந்தெடுப்பேன்,"20 என பாப் பெருமானார் பிரகடணம் செய்தார்.

அடுத்த நாள், 1850 ஜூலை 9ம் தேதி காலை, தமது செயலாளருடன் பாப் அவர்கள் காரியம் ஒன்றில் ஈடுபட்டிருந்த வேளை, அதிகாரி ஒருவர் அவர்களின் சம்பாஷனையில் குறுக்கிட்டார். அப்போது பாப் பெருமானார், "நான் இவரிடம் கூற நினைக்கும் அனைத்து விஷயங்களையும் கூறுவதற்கு முன் எந்த உலக சக்தியாலும் நான் சொல்ல விரும்புவதை நிறுத்த முடியாது," என

அந்த அதிகாரியிடம் தெரிவித்தார். "உலகமே எனக்கெதிராக ஆயுதம் எந்தினாலும், என் நோக்கத்தின் இறுதி வார்த்தை வரை பூர்த்தியாவதைத் தடுக்க அவர்களால் முடியாது. "22 ஆனால் அந்த அதிகாரிக்கு பாப் அவர்களின் வார்த்தைகளின் விசேஷம் புரியவில்லை. அவர் பதில் ஏதும் கூறாமல் தம்மைப் பின்தொடருமாறு செயலாளருக்கு உத்தரவிட்டார். அதன் பின் பாப் பெருமானார் தமது அறையிலிருந்து, தப்ரீஸ் நகரத்தின் மிகப் பிரபலமான மூன்று சமயத் தலைவர்களின் இல்லங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அவர்களும் எந்தத் தயக்கமும் இல்லாமல் மரண சாசனத்தில் கையோப்பமிட்டனர்.

பிற்காலை வேளையில் பாப் பெருமானார், அவரது தண்டனையின் நிறைவேற்றத்தைக் காண வந்திருந்த சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் குழுமியிருந்த, முற்றத்திற்குக், கொண்டுசெல்லப்பட்டார். அங்கு பாப் பெருமானாரின் மரண தண்டனையை நிறைவேற்றும்படி ஆணையிடப்பட்டிருந்த பட்டாளத்தின் தலைவரான 'சேம் காஃனிடம் ஒப்படைக்கப்பட்டார். ஆனால் சேம் கான், மிகவும் குழம்பியிருந்தார். பாப் பெருமானைக் கொல்வதன் மூலம் எங்கே இறைவனின் சாபத்திற்குத் தாம் ஆளாக நேரிடுமோ என பயந்தார். "நான் கிருஸ்த்தவ சமயத்தைச் சார்ந்தவன், உமக்குக் கேடு விளைவிக்கும் எண்ணம் எதுவும் எனக்குக் கிடையாது," எனக் கூறினார். "உமது சமயம் உண்மைச் சமயமானால் உமது இரத்தத்தைச் சிந்தும் கடமையிலிருந்து விடுபட எனக்கு சக்தியளிப்பீர்," என்றார். "உமக்கிடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுக," என பாப் பெருமானார் கூறினார். "உமது எண்ணம் தூய்மையானதென்றால், இந்த இக்கட்டிலிருந்து உம்மை விடுவிக்க இறைவன் நிச்சயமாக சக்தியுடையவர்."22

சேம் காஃன் தன் வீரர்களை சுவற்றின் மீது ஒரு ஆணியை அடித்து அதில் இரு கயிறுகளை கட்டும்படி ஆணையிட்டார். இந்த கயிறுகள் மூலமாக பாப் அவர்களும் அனிஸும் தொங்கவிடப்பட்டனர். பிறகு தலா இருநூற்றைம்பது வீரர் கூடிய மூன்று பிரிவுகளாக அந்தப் பட்டாளம் பிரிந்து வரிசையாக நின்றது. பிறகு ஒன்றன் பின் ஒன்றாக அந்த மூன்று பிரிவுகளும் சுட்டனர். அந்த எழுநூற்றைம்பது துப்பாக்கிகளிலிருந்து கிளம்பிய புகை மறைந்ததும், ஸ்தம்பித்துப் போன கூட்டத்தினர், நம்பவே முடியாத காட்சி ஒன்றை அங்குக் கண்டனர். அனிஸ் அவர்கள் முன் எந்தக் காயமும் இல்லாமல் உயிருடன் நின்றுகொண்டிருந்தார், பாப் பெருமான் அவர்களுக்கு முன் காணப்படவில்லை. துப்பாக்கி ரவைகள் அவர்கள் இருவரையும் கட்டித் தொங்கவிட பயன்பட்ட கயிறுகளை மட்டுமே அறுத்துவிட்டிருந்தன. உடனே, பாப் அவர்களைத் தேடும் படலம் மும்முரத்துடன் ஆரம்பித்தது. பாப் பெருமானார் தமது அறையில் அமர்ந்தவண்ணம், தடைபட்டத் தமது செயலாளருடனான சம்பாஷனையை முடித்துக்கொண்டிருந்தார். "எனது சம்பாஷனை முடிந்துவிட்டது, இப்போது நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்றலாம்,"23 என பாப் பெருமானார் கூறினார்.

நடந்தவற்றால் ஸ்தம்பித்துவிட்டிருந்த சேம் காஃன், பாப் பெருமானாரக்குத் தொடர்ந்து காயம் விளைவிப்பதிலிருந்துத் தமது வீரர்களுக்கு அனுமதியை மறுத்து அவர்களை அங்கிருந்து அகன்றுபோகும்படி ஆணையிட்டார். தண்டனையை நிறைவேற்ற வேறொரு பட்டாளம் கொண்டுவரப்பட்டது. மறுபடியும் பாப் அவர்களும் அனீஸும் அதே முற்றத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டனர், வீரர்களும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இம்முறை ரவைகளின் குறி தவறவில்லை. பாப் மற்றும் அனீஸின் உடல்கள் முற்றாகச் சிதைந்துவிட்டிருந்தன; இருப்பினும் அவர்களின் முகங்கள் கிட்டத்தட்ட பழுதுபடாமலேயே இருந்தன. அந்த பட்டாளம் சுட ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில், பாப் பெருமானார், அங்கு வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்தை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:

**வழிதவறிய வர்க்கத்தினரே, நீங்கள் என்னை ஏற்றுக்கொண்டிருந்தீர்களானால், உங்களில் பெரும்பான்மையோரைவிட நிலையில் உயர்ந்திருந்த இந்த இளைஞனின் உதாரணத்தை பின்பற்றி, ஒவ்வொருவரும் உங்கள் உயிரை என் வழியில் மனமுவந்து தியாகம் செய்திருப்பீர்கள். என்னை நீங்கள் அறிந்துவிட்டிருக்கக்கூடிய நாள் நிச்சயமாக வரும்; ஆனால் அப்போது உங்களிடையே நான் இல்லாது போய்விடுவேன்."25**

1. பாப் பெருமானார் எந்த நகரத்தில் கொல்லப்பட்டார்? ______________________________

2. பாப் பெருமானாரின் மரண தண்டனைக்கு உத்தரவிட்டது யார்? ____________________

3. அனீஸ் பாப் பெருமானாருடன் தியாகமரணத்திற்கு ஆளான கதையை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

4. பாப் பெருமானார் தியாகமரணம் என்னும் கிரீடத்தைத் தம்முடன் பகிர்ந்துகொள்ள அனீஸை ஏன் தேர்ந்தெடுத்தார்? ______________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

5. பாப் பெருமானாரின் தியாகமரண நாளன்று அவர் தமது செயலாளருடன் பேசிக்கொண்டிருந்த போது குறுக்கீடு செய்த அதிகாரியிடம் பாப் பெருமானார் பின்வருமாறு கூறினார்: "நான் இவரிடம் கூற __________ அனைத்து __________ கூறுவதற்கு முன் எந்த __________ சக்தியாலும் நான் சொல்ல __________ __________ முடியாது,"

6. பாப் அவர்களின் மரணதண்டனையை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட பட்டாளத் தலைவரின் பெயர் என்ன? ____________________________________________

7. சேம் காஃன் பாப் பெருமானாரிடம் என்ன கேட்டார்? ____________________________

____________________________________________________________

8. பாப் பெருமானார் சேம் காஃனிடம் என்ன செய்யுமாறு கூறினார்? __________________

____________________________________________________________

____________________________________________________________

9. பாப் மற்றும் அனிஸ் மீது எத்தனை வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்? ________

____________________________________________________________

10. துப்பாக்கிகளிலிருந்து கிளம்பிய புகை மறைந்தவுடன் ஆச்சர்யத்திற்குள்ளான மக்கள் கூட்டத்தினர் என்ன கண்டனர்? ____________________________________________

____________________________________________________________

____________________________________________________________

11. பாப் அவர்களை கண்டுபிடித்த போது அவர் என்ன செய்துகொண்டிருந்தார்? __________

____________________________________________________________

12. இறுதியில் அவர் கண்டுபிடிக்கப்பட்ட போது பாப் பெருமானார் என்ன கூறினார்? ________

____________________________________________________________

____________________________________________________________

13. பாப் பெருமானாரின் தியாக மரணம் எந்தத் தேதியில் நடைபெற்றது? ______________

____________________________________________________________

14. அவரது தியாகமரணத்தின் போது பாப் பெருமானாருக்கு என்ன வயது? ______________

____________________________________________________________

15. தமது தண்டனை நிறைவேற்றத்தைக் காண குழுமியிருந்த மக்கள் கூட்டத்தினரைப் பார்த்து பாப் பெருமானார் கூறிய இறுதி வார்த்தைகளை கீழே எழுதவும்: ____________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 10

பாப் பெருமானாரின் பயணங்கள் மற்றும் நாடுகடத்தல்களின் பாதையை கீழே உள்ள வரைபடத்தில் வரையுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. நீங்கள் அவ்வாறு செய்யும்போது, ஒவ்வொரு இடத்திலும் என்ன நடந்தது என்பதை நினைவில் வைத்து, அதன் முக்கியத்துவத்தைப் பற்றி தியானியுங்கள்.



# பகுதி 11

இந்தப் பாடப்பிரிவில் இந்நாளுக்கான இரண்டு இறைத்தூதர்களுள் ஒருவரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைப் பற்றி கற்றுள்ளீர்கள். தமது குறுகிய கால அருட்பணியில் பாப் பெருமானார் பாரசீகத்தில் ஓர் ஆன்மீகப் புரட்சியை உருவாக்கினார். ஆயிரமாயிரம் தூய உள்ளங்கள் அவரது செய்தியை ஏற்றுக்கொண்டு "கடவுள் வெளிப்படுத்தவிருக்கின்ற அவர்" என பாப் பெருமானாரினால் குறிப்பிடப்பட்ட கடவுள் அவதாரத்தின் வருகைக்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொண்டனர். எப்பொழுதெல்லாம் இவ்வுலகில் ஓர் இறைத் தூதர் தோன்றுகின்றாரோ அப்பொழுதெல்லாம் அதிகார வெறியும் தலைமைத்துவ வெறியும் கொண்டோர் அவருக்கு எதிராக எழுந்து அவரது திருவெளிப்பாடு என்னும் ஒளியை அணைத்தில முயல்கின்றனர். அதே போன்று இங்கும் பாரசீகத்தின் அறிவிலிகளான தலைவர்களால் பாப் பெருமானின் உயிர் பறிக்கப்பட்டது மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கில் அவரது நம்பிக்கையாளர்களும் கொல்லப்பட்டனர். புதிதாகப் பிறந்த திருவெளிப்பாட்டிற்குத் தங்கள் குருதியால் நீரிரறைத்த இந்த ஆரம்பகால பாப்-யிக்களின் வீரமிக்க வாழ்வு, பின் வரும் காலங்களில் உங்களுக்கு படிப்பாய்வுக்கான கருப்பொருள்களாக விளங்கும். இந்த பஹாய் சகாப்தத்தின் தனிச்சிறப்புமிக்க ஆரம்பகால சரித்திரத்தைத் தொடர்ந்து கற்பதனால் முல்லா ஹுஸேன், குட்டுஸ், தாஹிரி மற்றும் வஹீட் ஆகியோர் உங்களுக்கு உற்சாகம் மற்றும் மனோபலம் அளிக்கும் ஊற்றுகளாக வாழ்நாள் முழுவதும் விளங்குவார்கள். தற்போதைக்கு, பின்வரும் அடிப்படைக் கேள்வியைப் பற்றி சிந்திப்பதன் வழி இப்பாடத்தை முடிக்கலாம்: ஒரு குறுகிய காலத்திற்குள் ஆயிரக்கணக்கிலான மக்களின் வாழ்க்கை இப்படி முற்றிலும் ஒரு தன்மைமாற்றம் பெற்றது எப்படி, மற்றும் மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்தும், நேர்மையற்ற தலைவர்களின் அடிமைகளாகவும் விளங்கியவர்களில் வீரதீர செயல்கள் புரியத்தக்க புனித ஆன்மாக்கள் எழுந்தது எப்படி? இக் கேள்விக்கான பதில் அலி-முகமது ஆகிய பாப் பெருமான் என்னும் ஆளுமையிலேயே காணப்படும். ஆகவே, அந்தப் புனிதத் திருவுரு பற்றிய பஹாவுல்லா, அப்துல் பஹா மற்றும் ஷோகி எஃபெண்டியின் வாசகங்கள் சிலவற்றை நீங்கள் படிப்பாய்வு செய்தும் தியானிக்கும்படியும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

தமது உயிலும் சாசனத்தில் அப்துல்-பஹா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

**"இதுவே பஹாவின் மக்களின் நம்பிக்கையின் அஸ்த்திவாரம் (அவர்களுக்காக எனது வாழ்க்கை அர்ப்பணிக்கப்படுமாக): 'புனிதம் பொருந்திய மேன்மைமிக்கவர் (பாப் பெருமானார்) இறைவனின் ஒறுமை மற்றும் ஐக்கியத்தின் வெளிப்பாட்டாளரும், புராதன அழகரின் முன்னோடியும் ஆவார். புனிதம் பொருந்திய அப்ஹா திருவழகர் (அவரது பற்றுறுதிமிக்க நம்பிக்கையாளர்களுக்கு எனது வாழ்க்கை தியாகம் செய்யப்படுமாக) இறைவனின் அதிவிழுமிய அவதாரபுருஷரும், அவரது அதி தெய்வீகமான சாராம்சத்தின் பகலூற்றும் ஆவார். மற்றவர்கள் அனைவரும் அவரது ஊழியர்களும் அவரது ஆணைக்கு அடிபணிபவரும் ஆவர்.'"25**

*கடவுள் கடந்து செய்கின்றார்* நூலில் பாதுகாவலரால் எழுதப்பட்ட பின்வரும் உரைப்பகுதியை படிக்கலாம்:

**"பஹாவுல்லாவால், 'சாரத்திற்கெல்லாம் சாரம்,' 'கடல்களுக்கெல்லாம் கடல்,' 'அவதாரபுருஷர்கள் மற்றும் திருத்தூதர்களின் மெய்மைகள் வலம்வரும் சிகரம்,' 'முடிந்தவை மற்றும் வரப்போகின்றவை பற்றிய அறிவை வெளிப்படுத்த இறைவனால்**

**தூண்டப்பெற்றவர்,' 'எல்லா அவதாரபுருஷர்களின் நிலைகளை பார்க்கிலும் உயர்ந்த நிலையுடையவர்,' மற்றும், 'அவர்களின் தேர்வு பெற்றவர்கள் அனைவருடைய விளக்கத்திற்கும் புறிந்துணர்வுக்கும் அப்பாற்பட்ட திருவெளிப்பாட்டைக் கொண்டவர்,' என பிரகடணப்படுத்தப்பட்ட பாப் பெருமானார், தமது திருச்செய்தியை அறிவித்ததுடன் திருப்பணியையும் நிறைவேற்றினார். அப்துல் பஹாவினால் 'மெய்மையின் வைகரை' மற்றும் 'அதி உயரிய ஒளியின் முன்னறிவிப்பாளர்,' எவர் திருவரவு சம நேரத்தில் 'தீர்க்கதரிசன காலவட்டத்தின் முடிவு,' மற்றும் 'நிறேவேற்ற காலவட்டத்தின் அமலாக்கம்,' ஆகியவற்றின் அறிகுறியாகிற்றோ, அவர், இனைச்செயல்களாக தமது திருவெளிப்பாட்டின் மூலம், தமது நாட்டைச் சூழ்ந்திருந்த இருள்திட்டுகளை ஒழித்தார், மற்றும், மானிடம் முழுவதையும் தமது பிரகாசத்தால் சூழச்செய்யவிருக்கின்ற இனையற்ற திருக்கோளின் உடனடி உதயத்தை பிரகடணமும் செய்தார். "26**

பஹாவுல்லா தாமே விளக்குகின்றார்:

**ஒரு குறுகிய கால அளவே இந்த அதி ஆற்றல்மிகு மற்றும் அற்புத வெளிப்பாட்டையும், எமக்குச் சமீபமாக முன் தோன்றிய அவதாரபுருஷரையும் பிரித்திருக்கின்றது என்பது எந்த மனிதனாலும் கண்டறியப்படக் கூடாத ரகசியமாகவும், எந்த அறிவாற்றலும் ஆழம் காணமுடியாத மர்மமாகவும் உள்ளது."27**

அப்துல்-பஹா குறிப்பிடுகின்றார்:

**பாப் பெருமானாரின் தோற்றம் வைகரையை ஒத்திருக்கின்றது, ஏனெனில், வைகரை கதிரவனின் உதயம் குறித்த உறுதியைத் தன்னுள் அடக்கியுள்ளது. பாப் பெருமானாரின் உதயம் உலகம் முழுவதையும் சூழவிருக்கின்ற உண்மைக் கதிரவன் உதிக்கப்போவதை வாக்களித்தது."28**

## பகுதி 12

உலகில் இறைவனின் அவதாரபுருஷராக வீற்றிருந்த தமது குறுகிய கால வாழ்க்கையில், பாப் பெருமானார் எண்ணற்ற நூல்களையும் நிருபங்களையும் வெளிப்படுத்தினார். அவரது வாழ்வு பற்றி நீங்கள் இப்போது கற்று முடித்துள்ளபடியால், பாப் பெருமானாரின் இரு பிரார்த்தனைகளை மனனம் செய்யும்படி உங்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

**இன்னல் தீர்ப்போன் இறைவனன்றி யாருளர்; சொல்: இறைவனே போற்றி, அவரே கடவுள், யாவரும் அவர் ஊழியர்; யாவரும் அவர் சொற்பணிபவர்!"[29]**


**"கூறுவீராக: அனைத்திற்கும் மேலாக அனைத்திற்கும் நிறைவளிப்பவர் கடவுளே ஆவார். கடவுளைத் தவிர நிறைவளிப்பவர் மண்ணிலுமில்லை, விண்ணிலுமில்லை. அறிந்தவரும், ஆதரிப்பவரும், சர்வ வல்லமை பொருந்தியவரும் அவரே ஆவார்." 30**

# பகுதி 13

நூல் 2-இன் இரண்டாவது அலகில், உங்கள் சமூகத்தில் உள்ள இல்லங்களுக்குத் தொடர்ச்சியான வருகைகளின் போது, பல கருப்பொருள்களைப் பற்றி, குறிப்பாக சமயத்திற்கு புதியவர்களுடன் எவ்வாறு உரையாடுவது என்பதைக் கற்றுக்கொள்வது குறித்த உங்கள் முயற்சிகளில் கவனம் செலுத்தினீர்கள். இப்போது நீங்கள் இந்த அலகை முடித்துள்ளதனால், பாப் பெருமானாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி நீங்கள் கலந்துரையாட விரும்பும் கருப்பொருள்களின் பட்டியலில் சேர்க்கலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் எவ்வளவு விவரங்களை உள்ளடக்கத் தேர்வு செய்கிறீர்கள் என்பது நிச்சயமாக, பல காரணிகளைப் பொறுத்துள்ளது. ஆனால், சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், பஹாவுல்லாவின் முன்னோடியாகவும், ஒரு புதிய யுகத்தின் தேவதூதராகவும் அவரது வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளின் ஒரு பரந்த விவரத்தை நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். சில நேரங்களில் பின்வரும் பக்கங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

# பாப் பெருமானார்

## ஒரு புதிய யுகத்தின் முன்னோடி




பாப் பெருமான் 20 அக்டோபர் 1819 அன்று ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள ஷிராஸ் என்னும் நகரத்தில் பிறந்தார். அவரது தந்தை இறந்தபோது அவர் இன்னும் குழந்தையாக இருந்தார். அவரது மாமாவால் வளர்க்கப்பட்டு, சிறுவயதிலேயே அவரை அவர் பள்ளியில் சேர்த்தார்.




பாப் பெருமானின் ஆசிரியர் அவரது பெரும் திறனை விரைவாக அடையாளம் கண்டுகொண்டு, அத்தகைய அசாதாரண குழந்தைக்குக் கற்பிக்க தம்மால் இயலாது என்பதை உணர்ந்தார். பாப் பெருமானார் கடவுளால் உள்ளார்ந்த அறிவு வழங்க பெற்றார்.



அந்த நேரத்தில் ஈரான் மக்கள் ஒரு புதிய இறைத்தூதரின் வருகைக்காக காத்திருந்தனர். அவர் விரைவில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும், பூமியில் சமாதானமும் நீதியும் நிறைந்த ஒரு காலகட்டத்தை அவரோடு கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் பிரார்த்தனை செய்தனர். வாக்குறுதியளிக்கப்பட்டவரைத் தேடி பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.




மே 23, 1844 அன்று, வாக்குறுதியளிக்கப்பட்டவரைத் தேடி ஓர் இளைஞன் ஷிராஸுக்கு வந்தான். பாப் பெருமானார் நகரத்தின் நுழைவாயிலுக்கு வெளியே அவரைச் சந்தித்து, அவரது நீண்ட பயணத்திற்குப் பிறகு சிரம பரிகாரம் செய்துகொள்ள தமது வீட்டிற்கு அழைத்தார். அங்கு பாப் பெருமானார் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாக்களிக்கப்பட்டவர் தாமே என அறிவித்தார் .



"பாப்" என்ற சொல்லுக்கு "வாயில்" அல்லது "கதவு" என்று பொருள். விரைவில் உலகின் அனைத்து மக்களையும் ஒரே குடும்பத்தில் ஒன்றிணைக்கும் மற்றொரு இறைத்தூதர் தோன்றுவார் என பாப் பெருமானார் அறிவித்தார். பாப் பெருமானார் மனிதகுலத்தை ஒரு புதிய மற்றும் மகிமையான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு கதவு போன்றவர்.



பாப் பெருமானாரைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது. ஈரான் முழுவதிலும், அவர் வெளிப்படுத்திய தெய்வீக போதனைகளை அவர்கள் பரப்பத் தொடங்கினர்.



விரைவிலேயே மக்கள் மீதான தங்கள் அதிகாரத்தை இழந்துவிடுவோம் என்று அஞ்சிய அரசாங்க அதிகாரிகளும் மதகுருமார்களும் புதிய இறைநம்பிக்கைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் அவரது நம்பிக்கையாளர்களிடமிருந்து வெகு தொலைவில், நாட்டின் தொலைதூரப் பகுதியில் ஒரு கோட்டையில் பாப் பெருமானாரைச் சிறையில் அடைத்தனர்.



பாப் பெருமானாரின் சீடர்கள் மிகக் கொடூரமான துன்புறுத்தலுக்கு ஆளானார்கள். அவர்கள் வதைக்கப்பட்டு, தாக்கப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்ட போதிலும், கடவுளின் சமயம் தொடர்ந்து பரவியது.



1850 ஆம் ஆண்டில் பாப் தியாகமரணம் அடைந்தார். அரசின் உத்தரவின் பேரில் ,அவரது சீடர்களில் ஒருவருடன் ஒரு முற்றத்தில் தொங்கவிடப்பட்டு, சிப்பாய்களின் படையணியால் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது பாப் பெருமானாருக்கு 31 வயதே ஆகியிருந்தது.



“கடவுளின் ஜோதி”, என்னும் பஹாவுல்லாவின் வருகைக்கு வழி வகுக்க பாப் பெருமானார் தமது உயிரைக் அர்ப்பணித்தார்." அவரது சமயத்தின் பதாகை பூமியின் ஒவ்வொரு மூலையிலும் உயர்த்தப்படும்

## REFERENCES


1. The Dawn-Breakers: Nabíl's Narrative of the Early Days of the Bahá'í Revelation (Wilmette: Bahá'í Publishing Trust, 1932, 2018 printing), pp. 75–76.
2. Ibid., p. 57.
3. Ibid., p. 63.
4. Ibid., p. 65.
5. From a talk given on 23 May 1912, published in The Promulgation of Universal Peace: Talks Delivered by 'Abdu'l-Bahá during His Visit to the United States and Canada in 1912 (Wilmette: Bahá'í Publishing, 2012), par. 2, p. 196.
6. The Dawn-Breakers, pp. 85–86.
7. The Báb, cited in The Dawn-Breakers, pp. 92–94.
8. The Dawn-Breakers, pp. 142–43.
9. Ibid., p. 146.
10. From a talk given by 'Abdu'l-Bahá on 23 May 1912, published in The Promulgation of Universal Peace, par. 2, p. 196.
11. The Dawn-Breakers, pp. 148–50.
12. Ibid., p. 198.
13. Ibid., p. 212.
14. Ibid., p. 213.
15. Ibid., p. 249.
16. The Báb, cited by Shoghi Effendi, God Passes By (Wilmette: Bahá'í Publishing Trust, 1974, 2019 printing), p. 34; also in The Dawn-Breakers, pp. 315–16.
17. 'Abdu'l-Bahá, in Some Answered Questions (Wilmette: Bahá'í Publishing, 2014, 2016 printing), no. 8.1–3, pp. 38–39.
18. The Dawn-Breakers, p. 507.
19. Ibid., pp. 307–8.
20. Ibid., p. 508.
21. Ibid., p. 509.
22. Ibid., p. 512.
23. Ibid., p. 513.
24. The Báb, cited in God Passes By, p. 84; also in The Dawn-Breakers, p. 514.
25. Will and Testament of 'Abdu'l-Bahá (Wilmette: Bahá'í Publishing Trust, 1944, 2013 printing), p. 39.
26. God Passes By, pp. 90–91.
27. Bahá'u'lláh, cited by Shoghi Effendi, The World Order of Bahá'u'lláh: Selected Letters (Wilmette: Bahá'í Publishing Trust, 1991, 2012 printing), p. 124.
28. Abdul Baha on Divine Philosophy (Boston: The Tudor Press, 1918), pp. 51–52.
29. The Báb, in Bahá'í Prayers: ASelection of Prayers Revealed by Bahá'u'lláh, the Báb, and 'Abdu'l-Bahá (Wilmette: Bahá'í Publishing Trust, 2002, 2017 printing), p. 221.
30. Ibid., p. 55.



# பஹாவுல்லாவின் வாழ்க்கை

## நோக்கம்

பஹாவுல்லாவினால் வெளியிடப்பட்ட ஆன்மிக சக்திகளின் அளவைப் பற்றி அறிந்துகொள்தல், அவரது வாழ்க்கைக் கதையைச் சொல்லக் கற்றுக்கொள்தல்

# பகுதி 1

'மிர்ஸா ஹுசேன் அலி' என இயற்பெயர் கொண்ட பஹாவுல்லா, நவம்பர் 12-ஆம் தேதி 1817-இல், பாரசீகத்தின் தலைநகரான தெஹ்ரானில் பிறந்தார். பாரசீக மன்னரின் அரசவையில் ஒரு உயர் பதவி வகித்து வந்த அவரது தந்தையான 'மிர்ஸா புஸுர்க்,' ஒரு புகழ்பெற்ற பிரபு. சிறு வயது முதற்கொண்டே, மேன்மைக்கான அறிகுறிகளை பஹாவுல்லா பெற்றிருந்து, அசாதாரண அறிவையும் விவேகத்தையும் வெளிப்பாடுத்தினார். அவர் நடைமுறைப்படி பள்ளி செல்லவில்லை, வீட்டிலும் சிறிதளவே பாடப் பயிற்சி பெற்றார். அவரது பாலபருவத்தைப் பற்றி அப்துல் பஹா பின்வருமாறு கூறுகிறார்:

> **"திவ்ய பேரழகர், பஹாவுல்லா, பாரசீகத்தின் பிரபுக்கள் வம்சத்தைச் சார்ந்தவர். அவரது உறவினர் மற்றும் நண்பர்களிடையே சிறுவயது முதற்கொண்டே அவர் பிரபலமானவராக இருந்தார். 'இச்சிறுவனுக்கு அசாதாரண ஆற்றல் உண்டு,' என அவர்கள் கூறுவர். விவேகத்திலும், புத்தி நுட்பத்திலும், புதிய அறிவின் ஊற்றாக விளங்குவதிலும் அவர் தமது வயதிற்கு மீரியும், சுற்றுச்சூழலுல்களினும் உயர்ந்தே விளங்கினார். அவரைத் தெரிந்தவர்கள் அவரது பழுத்த சுபாவத்தால் வியப்பையே அடைந்தனர். "இத்தகைய ஒரு குழந்தை நெடுநாள் வாழாது," என அவர்கள் கூறுவதுண்டு, ஏனென்றால் வயதிற்கு மீரிய சுபாவம் கொண்ட குழந்தைகள் பருவம் தாண்டாது என்பது அவர்களது நம்பிக்கை."1**

குழந்தைப்பருவத்தில் தெஹ்ரானில் தமது தமையனார் ஒருவரின் திருமண வைபவத்தின் போது நடந்த ஒரு சம்பவத்தை, பஹாவுல்லாவே ஒரு நிருபத்தில் குறிப்பிடுகின்றார். அந்நாளில் தெஹ்ரானில் வழக்கத்தில் இருந்த சம்பிரதாயப்படி, ஏழு நாட்களும் இரவுகளும் ஒரு பெரும் விருந்து தொடர்ந்தாற்போல் நடந்தது. இறுதி இரவன்று, ஒரு பிரபலமான அரசனைப் பற்றிய பொம்மை நாடகம் ஒன்று விருந்தினர்களுக்காக படைக்கப்பட்டது. நாடகத்திற்கான கூடாரம் அமைக்கப்பட்டிருந்த முற்றத்தை காணக்கூடிய வகையில் முதல் மாடியில் பஹாவுல்லா உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அரசரின் வருகையை அறிவிக்கும் மனித வடிவம் கொண்ட சில உருவங்களின் வருகையுடன் பொம்மலாட்டம் துவங்கியது என அவர் கூறுகிறார். பிறகு மேலும் பல உருவங்கள் தோன்றின. அரசரின் வருகையை முன்னிட்டு சிலர் சுத்தம் செய்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் நீர் தெளித்துக் கொண்டிருந்தனர். அதற்குப் பிறகு நகர முரசறைவோர் காட்சியில் தோன்றி அரசரைச் சந்திப்பதற்காக ஒன்றுகூடும்படி மக்களைக் கேட்டுடக் கொண்டார். பிறகு பல உருவங்கள் குழுக்களாகத் தோன்றி, சரியான இடங்களில் அமர்ந்தனர். இறுதியாக, அரசர் கம்பீரமாக வருகை தந்தார். தமது சிரசின் மீது கிரீடம் அணிந்து, அவர் மெதுவாகவும் கம்பீரமாகவும் நடந்து ஒரு சிம்மாசனத்தின் மீது அமர்ந்தார். துப்பாக்கிகள் சுடப்பட்டன; எக்காளங்கள் ஒலித்தன. கூடாரம் புகையால் நிரம்பியது.

புகை கலைந்த பின், அரசர் தமது சிம்மாசனத்தின் மீதே அமர்ந்துக் கொண்டு, அவரது முன்னிலையில் கவனத்துடன் நிமிர்ந்து நின்று கொண்டிருந்த மந்திரிகள், இளவரசர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோரால் சூழ்ந்திருந்தார். அந்த வேளையில், ஒரு திருடன் அரசனின் முன் கொண்டு வரப்பட்டான். அரசர் திருடனுடைய தலை சிரச்சேதம் செய்யப்பட ஆணையிட்டார். எவ்வித தாமதமுமின்றி, தலைமை சிரச்சேதம் செய்பவர் அரசரின் ஆணையை நிறைவேற்றினார். சிரச்சேதத்திற்குப் பிறகு அரசர் தம்முடைய மந்திரிகளுடனும், அதிகாரிகளுடனும் உரையாடலில் ஈடுபட்டார். திடீரென்று எல்லைப்புறங்களில் ஒன்றில்

எதிரெழுச்சி ஏற்பட்டதாகச் செய்தி வந்தது. இந்த எழுச்சியை முறியடிப்பதற்காகப் படைகள் அனுப்பப்பட்டன. சில நிமிடங்களுக்குப் பிறகு, பின்னணியில் பீரங்கியின் ஒலி கேட்டது. அரசரின் படைகள் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக போரில் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறாக அந்தப் பொம்மலாட்டம் தொடர்ந்தது. பஹாவுல்லா இந்தக் காட்சியின் தன்மையால் மிகவும் குழப்பமடைந்தார். அது முடிந்தவுடன் திரைச்சீலை மூடப்பட்டப் பிறகு, கூடாரத்தின் பின்புறத்திலிருந்து, ஒரு மனிதன் தனது தோளின் கீழ் ஒரு பெட்டியை ஏந்திக் கொண்டு வருவதை அவர் பார்த்தார். "இந்தப் பெட்டி என்ன?" "இந்தக் காட்சியின் தன்மை என்னவாக இருந்தது?" என பஹாவுல்லா வினவினார். "நீங்கள் கண்ட அனைத்தும், அரசர், இளவரசர்கள் மற்றும் மந்திரிகள், அவர்களுடைய ஆடம்பரம் மற்றும் புகழ், அவர்களுடைய வலிமை மற்றும் சக்தி ஆகிய இந்த ஆடம்பர காட்சிகள், விரிவான சாதனங்கள் அனைத்துமே இப்போது இந்தப் பெட்டியில் அடங்கியுள்ளன" என அம்மனிதன் பதில் அளித்தான். இந்தக் கூற்று பஹாவுல்லாவின் மனதில் ஒரு பெரிய எண்ணப்பதிவினை ஏற்படுத்தியது, பின்னர் அவர் இவ்வாறு கூறியுள்ளார் :

> **"அந்த நாளிலிருந்து, உலகின் லௌகீக கவர்ச்சிகள் அனைத்தும் இந்த இளைஞரின் பார்வையில், அதே (பொம்மலாட்டக்) காட்சியைப் போல் இருந்துள்ளன. அது ஓர் கடுகளவிற்கே என்றாலும், அவை எந்த முக்கியத்துவத்தையோ விளைவையோ கொண்டிருந்ததில்லை, கொண்டிருக்கவும் முடியாது . . . ."**
>
> **"விரைவிலேயே இந்த வெளிப்புற கவர்ச்சிகள், கண்ணுக்குப் புலப்படும் பொக்கிஷங்கள், லௌகீக ஆடம்பரங்கள், அணிவகுத்து நிற்கும் இந்தப் போர் அணிகள், இந்தப் பகட்டாரவாரம், இந்த பெருமைமிக்க மற்றும் ஆணவம் நிறைந்த ஆன்மாக்கள் அனைத்துமே, அந்த பெட்டிக்குள்ளே செல்வது போல், புதைகுழியின் எல்லைக்குள் சென்றுவிடும். நுண்ணறிவு பெற்றோர்களின் பார்வையில், இந்த முரண்பாடுகள், கருத்து வேறுபாடு மற்றும் வீண் தற்பெருமை அனைத்துமே, குழந்தைகளின் விளையாட்டு போலவே இருந்துள்ளது, என்றென்றும் அவ்வாறே இருந்தும் வரும்."**

பஹாவுல்லாவின் குழந்தைப் பருவத்துடன் சம்பந்தப்பட்ட மற்றொரு கதையானது, அவரது தந்தையார் கண்ட ஒரு கனவுடன் தொடர்புடையது. அந்தக் கனவில் பஹாவுல்லா,

> "ஒரு பரந்த எல்லையற்ற சமுத்திரத்தில் நீந்திக் கொண்டிருந்தார். சமுத்திரத்தை ஒளிபெறச் செய்த ஒரு பிரகாசத்துடன் அவரது உடலானது தண்ணீர் மீது ஒளி வீசியது. தண்ணீருக்கு மேல் தெளிவாகக் காணப்பட்ட அவருடைய சிரசினைச் சுற்றி, அவருடைய நீண்ட கருங்கூந்தல், அலைகளின் மீது தாராளத்துடன் மிதந்துக் கொண்டு எல்லாத் திசைகளிலும் விரிந்து பரவிய வண்ணமாக இருந்தது. திரளான மீன்கள் அவரைச் சுற்றிக் குழுமியிருந்தன, ஒவ்வொன்றும் ஒரு முடியின் நுனியை இறுகப் பற்றிக் கொண்டிருந்தது. அவருடைய திருமுகத்தின் ஒளிர்வினால் கவரப்பட்ட அவை, அவர் நீந்திய எத்திசையிலும் அவரைப் பின்தொடர்ந்து சென்றன. அவற்றின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும், அவருடைய தலைமுடியினை அவை எவ்வளவு உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தபோதும், ஒரு முடிகூட அவருடைய தலையிலிருந்து பிரிக்கப்படாதது போல் இருந்தது. எந்த ஒரு சிறிய காயமும் அவர் மீது ஏற்படவில்லை. சுதந்திரமாகவும், கட்டுப்படுத்தப்படாமலும், அவர் தண்ணீரின் மேல் நகர்ந்துக் கொண்டிருந்தார், அம்மீன்கலெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து சென்றன."

பஹாவுல்லாவின் தந்தையாருடைய மனதில் பதிந்து விட்ட இந்தக் கனவினால், நுண்ணறிவில் புகழ்பெற்ற ஒரு மனிதனை அவர் வரவழைத்து, அந்த கனவிற்கு விளக்கமளிக்குமாறு கேட்டுக் கொண்டார். பஹாவுல்லாவின் எதிர்கால மகிமையின் ஒரு கணநேரத் தோற்றத்தினால் உத்வேகம் பெற்றவர்போல், இந்த மனிதன் பின்வருமாறு கூறினார்:

"நீங்கள் உங்கள் கனவில் கண்ட எல்லையற்ற சமுத்திரமானது உயிர்வாழ் உலகமேயன்றி வேறெதுவும் இல்லை. பிறர் உதவியில்லாமல், தனித்து நின்றே, உங்கள் மகன் அதன் மீது அதிவிழுமிய முதன்மையை அடைவார். அவர் விரும்பும் இடங்களுக்கெல்லாம், அவர் தடங்கலின்றிச் செல்வார். எவரும் அவரது போக்கினை எதிர்க்க மாட்டார்கள். எவரும் அவருடைய முன்னேற்றத்தைத் தடுக்க மாட்டார்கள். திரளான மீன்கள், அவர் உலகின் மக்கள் மற்றும் இனத்தினர் மத்தியில் எழுப்பவிருக்கும் கிளர்ச்சியினைக் குறிக்கின்றன. அவரைச் சுற்றி அவர்கள் ஒன்று கூடுவர். அவரையே அவர்கள் பற்றிக் கொள்வார்கள். சர்வ வல்லமை வாய்ந்தவரின் தவறா பாதுகாப்பின் உறுதியளிப்பினால் இந்த அமளி அவரைப் பாதிக்காது. வாழ்க்கையெனும் சமுத்திரத்தின் மீது அவரது தனிமையானது அவரது பாதுகாப்பிற்கு அபாயமும் விளைவிக்காது."5

1. பஹாவுல்லாவின் பெயர் என்ன? ____________________________

2. அவர் எந்தத் தேதியில் பிறந்தார்? ____________________________

3. அவர் எங்கு பிறந்தார்? ____________________________

4. இன்று பாரசீகம் வேறு என்ன பெயரால் வழங்கப்படுகின்றது? ____________________________

5. பஹாவுல்லாவின் தந்தையார் பெயர் என்ன? ____________________________

6. அவர் தந்தையார் என்ன பதவி வகித்தார்? ____________________________

7. பால பருவத்தில் பஹாவுல்லா என்ன அறிகுறிகளை வெளிப்படுத்தினார்? ______________

____________________________________________________________

8. பஹாவுல்லா எவ்விதமான கல்வியைப் பெற்றார்? ____________________________

____________________________________________________________

9. பஹாவுல்லா தமது பால பருவத்தில் கண்ட பொம்மலாட்டத்தை வர்ணிக்கவும்:__________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

10. பொம்மலாட்டக் காட்சியில் இடம் பெற்ற அரசர், மந்திரிகள், வீரர்கள் மற்றும் சிம்மாசனம் ஆகியவை அனைத்தும் ஒரு பெட்டியினுள் போடப்பட்டன என்பதை அறிந்த பஹாவுல்லா என்ன நினைத்தார்? ____________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

11. "அந்த நாளிலிருந்து, ________________ ________________ ________________அனைத்தும் இந்த ________________ ________________, அதே (________________) ________________ போல் இருந்துள்ளன. அது ஓர் ________________ என்றாலும், அவை எந்த ________________________________ ________________, கொண்டிருக்கவும் முடியாது. விரைவிலேயே __________ ________________ ________________, ________________ ________________________________, ________________ ________________, ________________நிற்கும் இந்தப் _________ ____________, இந்தப் ________________, இந்த ________________மற்றும் ________________ ________________ ________________அனைத்துமே, அந்த ________________செல்வது போல், ________________ ______________சென்றுவிடும்". என பஹாவுல்லா பிரகடனம் செய்துள்ளார்.

12. மிர்ஸா புஸுர்க்கின் கனவை உங்கள் சொந்த வார்த்தைகளில் வர்ணிக்கவும்:____________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

13 கனவில் தோன்றிய சமுத்திரத்தின் அர்த்தமென்ன? ________________________________

________________________________________________________________________________

14. கனவில் பஹாவுல்லாவைச் சுற்றித் திரண்டிருந்த பன்மடங்கான மீன்களின் அர்த்தம் என்ன? ____________________________________________________________________

________________________________________________________________________________

15. பஹாவுல்லா, தண்ணீரின் மீது, சுதந்திரமாகவும் கட்டுப்படுத்தப்படாமலும் சென்றுக் கொண்டிருந்தார் என்பதன் பொருள் என்ன?________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 2

தெய்வீக அவதாரங்கள் யாவரும் இயல்பார்ந்த அறிவினைப் பெற்றுள்ளனர். பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர்கள் கல்வி பெற வேண்டிய அவசியமில்லை. அவர்களே கல்வி அளிப்பவர்கள், கல்வி பெற்றவர்கள் அல்ல. பஹாவுல்லா கூறுவதாவது:

> **"இத்தீங்கிழைக்கப்பட்டோன், எந்தப் பள்ளிக்கும் வழக்கமாகச் செல்லவில்லை, கற்றோர்களின் வாத எதிர்வாதங்களில் கலந்துகொள்ளவில்லை. எமது உயிரின் மீது ஆணை! எம்முடைய சொந்த விருப்பத் துணிவாற்றலினால், யாம் எம்மை வெளிப்படுத்தவில்லை, மாறாக இறைவனே தமது சொந்த விருப்பத்தினால், எம்மை அவதரிக்கச் செய்துள்ளார்."6**

பஹாவுல்லாவுடைய இயல்பார்ந்த அறிவைப் பற்றி குறிப்பிடுகையில், அப்துல்-பஹா பின்வருமாறு கூறுகிறார் :

> “அவருடைய வலிமையினால் வியப்படையாமல் அவரது முன்னிலையில் எவரும் பிரவேசித்ததில்லை. அவரை அணுகிய கற்றோர்கள், அவருடைய அறிவினைக் கண்டு பிரமிப்படைந்தனர். இருப்பினும் அவர் பள்ளிக்குச் சென்றதில்லை, மனிதர்களில் கற்றறிந்தவர்களால் பயிற்றுவிக்கப்படவும் இல்லை. அவரது நண்பர்கள், அவரது குடும்பம் அனைவரும் இதற்கு சாட்சியமளிக்கின்றனர். இருப்பினும் அவருடைய போதனைகளே இந்த யுகத்தின் உயிர்நிலையாகும்."7

> **"கதிரவன் தன்னிடமிருந்தே தன்னை வெளிப்படுத்தி கொள்கிறது, மற்ற மூலாதாரங்களிலிருந்து தனது ஒளியினைப் பெறுவதில்லை. தெய்வீக ஆசிரியர்கள் இயல்பார்ந்த ஒளியினைப் பெற்றுள்ளனர். அவர்கள் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து விஷயங்களைப் பற்றிய அறிவையும் புரிதலையும் கொண்டுள்ளனர்; அவர்களிடமிருந்தே, உலகின் ஏனைய பகுதியும், அதன் ஒளியினைப் பெறுகிறது; அவர்கள் மூலமாகவே, ஒவ்வொரு யுகத்திலும் கலைகளும் விஞ்ஞானங்களும் புத்தெழுச்சி பெறுகின்றன."**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:
    - அ. கதிரவன் _____________ வெளிப்படுத்துக்ன்றது; அது _____________லிருந்து தனது _____________ பெறுவதில்லை.
    - ஆ. தெய்வீக ஆசிரியர்கள் _____________ பெற்றுள்ளனர்.
    - இ. தெய்வீக ஆசிரியர்கள் பிரபசிசத்திலுள்ள அனைத்து விஷயங்களைப் பற்றிய _____________ மற்றும் _____________ கொண்டுள்ளனர்.
    - ஈ. தெய்வீக ஆசிரியர்களிடமிருந்து, உலகின் ஏனைய பகுதியும் ________________
    - உ. தெய்வீக ஆசிரியர்களின் மூலம் கலைகளும், விஞ்ஞானங்களும் _____________

2. இயல்பார்ந்த அறிவு, முயன்று பெற்ற அறிவு ஆகியவற்றின் பொருளைப் பற்றி உங்கள் குழுவில் ஆய்வுரை நிகழ்த்தவும்.
3. பஹாவுல்லாவின் திருவாக்குகளில் வரும் மேற்கண்ட மேற்கோளை மனனம் செய்யவும்.

## பகுதி 3

பஹாவுல்லா வளர வளர அவருடைய மகத்துவத்தின் அடையாளங்கள் அதிகரிப்புடன் வெளிப்பட்டன. அவர் இளைஞராவதற்கு முன்னதாகவே அவர் தமது கூர்மையான அறிவுத்திறம், தமது நேர்த்தி வாய்ந்த குணம், தமது தாராள மனப்பான்மை மற்றும் பரிவு ஆகியவற்றிற்காகப் புகழ் பெற்றிருந்தார். மிகக் கடினமான பிரச்சனைகளைத் தீர்க்கும் திறமையும், மிகச் சிக்கலான மற்றும் ஆழமிக்க கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் திறமையும் அவர் கொண்டிருந்தார். தாம் அசாதாரணமான சக்திகளை கொண்டிருந்தார் என்றாலும் அவர் பதவிகளையோ, பிரபலத்துவத்தையோ நாடவே இல்லை. தமது தந்தையார் மறைந்தபோது, பஹாவுல்லா, அவருடைய வழியிலேயே சென்று மன்னரின் அரசவையில் அவரது பதவியை வகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் அவர் மறுத்துவிட்டார். அவர், இவ்வுலக பட்டங்களிலும், புகழிலும் ஆர்வம் காட்டவில்லை. ஏழைகளுக்கு ஆதரவளிப்பதிலும், வறுமையிலுள்ளவர்களைப் பாதுகாப்பதிலுமே அவர் அக்கறைக் கொண்டிருந்தார். பஹாவுல்லா தமது பதினெட்டாவது வயதில், அஸிய்யா காஃனுமை மணந்தார். அவர்களுடைய இல்லம், எல்லோருக்கும் ஒரு புகலிடமாக இருந்தது. அவர்களுடைய விருந்தோம்பல் எவருக்கும் மறுக்கப்படவில்லை.

1844ம் வருடம் மே 23ம் தேதியன்று ஷிராஸில் பாப் பெருமானார் முல்லா ஹுசேய்னிடம் தமது திருப்பணியைப் பிரகடனம் செய்தபோது, பஹாவுல்லாவிற்கு வயது 27 ஆகியிருந்தது. அந்த வரலாற்று சிறப்புமிக்க சம்பவம் நிகழ்ந்த மூன்று மாதங்களிலேயே, பஹாவுல்லா, பாப் பெருமானாரிடமிருந்து அவருடைய திருவாசகங்கள் அடங்கிய சுருள் ஓலை ஒன்றைப் பெற்றுக் கொண்டார். அவர் உடனடியாக, பாப் பெருமானுடைய திருவெளிப்பாட்டின் உண்மைக்குச் சாட்சியம் அளித்து, அவருடைய போதனைகளைப் பரப்புவதற்காக முன்னெழுந்தார். பஹாவுல்லா அந்தச் சுருள் ஓலையை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பது குறித்த கதை பின்வருமாறு:

பாப் பெருமானார் தமது தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்களான, பதினெட்டு உயிர் அட்சரங்களை நியமித்தவுடன், அவர்களைத் தமது முன்னிலைக்கு அழைத்து, அவர்கள் பரவலாகச் சென்று தம்முடைய சமயத்தைப் போதிக்குமாறு கட்டளையிட்டார். அவர் ஒவ்வொருவருக்கும் ஒரு விசேஷ பணியைக் கொடுத்தார். அவர் சிலருக்கு அவர்களுடைய சொந்த மாகாணங்களையே தங்கள் பெருமுயற்சிகளின் செயற்களங்களாக நியமித்தார். இந்த பதினெட்டு ஆன்மாக்களில், பாப் அவர்கள் தமது திருப்பணியினை அறிவிக்கவிருந்த மெக்கா நகரத்திற்குத் தம்முடன் புனித யாத்திரை மேற்கொள்வதற்காக குட்டூஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். தம்மில் முதன்முதலாக நம்பிடீகைக் கொண்ட முல்லா ஹுசேய்னிடம் பாப் பெருமானார் இவ்வாறு கூறினார். "ஹிஜாஸிற்கு எம்முடன் புனித யாத்திரை மேற்கொள்வதற்காக நீங்கள் தேர்ந்தெடுக்கப் படாததற்கு வருந்தாதீர்கள். அதற்குப் பதிலாக யாம் உங்களை ஹிஜாஸ் மற்றும் ஷிராஸ் இரண்டும், அதனுடன் ஒப்பிடவே முடியாத அளவிற்கு அத்தகைய எல்லை கடந்த புனிதத் தன்மைமிக்க ஒரு புதிரினை உட்படுத்தியுள்ள அந்த நகரத்தினை நோக்கி உங்கள் காலடிகளை வழிநடத்துவோம்." அவர் முல்லா ஹுசேய்னிடம் ஒரு சுருள் சுவடியை வழங்கி, தெஹ்ரானிற்கு புறப்பட்டுச் செல்லும்படி கட்டளையிட்டார். அந்நகரில் மறைந்துள்ள இரகசியத்தின் பேரொளியினை அறிந்துக் கொண்டு அன்பிற்குரியவரின் முன்னிலையில் பிரவேசிப்பதை சாத்தியமாக்கும்படி இறைவனை மன்றாடிக் கேட்கும்படி கூறினார்.

முல்லா ஹுசேய்ன் தமது பணியை மேற்கொள்வதற்காகப் புறப்பட்டுச் சென்று, பல நகரங்களைக் கடந்த பிறகு தெஹ்ரான் சென்றடைந்தார். அங்கு அவர் சமய கல்விக்கான ஒரு பள்ளியில் ஓர் அறையினை எடுத்துக் கொண்டார். அவர் அங்கு முதன்முதலாக மேற்கொண்ட செயல்களில், பாப் பெருமானாருடைய புனித செய்தியை அந்த பள்ளியின் முதல்வருக்கு வழங்கியதாகும். பள்ளியின் முதல்வர் அந்த புனித செய்தியை அகங்காரத்துடன் மறுத்தார். எனினும், அப்பள்ளியின் ஓர் இளைய மாணவன், அவர்களுடைய உரையாடலை தற்செயலாகக் செவிமடுத்து, முல்லா ஹுசேய்னுடைய சொற்களால் மிகவும் கவரப்பட்டார். நடுஇரவில் அவரிடம் சென்று, அவர் இவ்வளவு ஆர்வத்துடன் அறிவித்த செய்தியைப் பற்றி மேலும் அறிந்துக் கொள்ள முடிவெடுத்தார். முல்லா ஹுசேய்ன் அந்த இளைஞரை வரவேற்று மிகுந்த மரியாதையுடனும், அன்புக் கனிவுடனும் பேசினார். தாம் ஏன் இவ்விடத்திற்கு வந்தார் என்பதை இப்போது புரிந்துக் கொண்டதாக முல்லா ஹுசேய்ன் அந்த இளைஞரிடம் கூறினார்.தாம் கொண்டு வந்த புனித செய்தியினை பள்ளியின் முதல்வர் அலட்சியத்துடன் மறுத்து விட்டார். "அவருடைய மாணவர், தம்முடைய குருவைப்போல் இன்றி, அதன் உண்மையைக் கண்டுகொள்வார் என்பது எனது நம்பிக்கை என்றார் முல்லா ஹுசேய்ன்."9

தங்களுக்கிடையிலான உரையாடலின்போது, அந்த மாணவர் எந்த ஊரைச் சார்ந்தவர் என முல்லா ஹுசேய்ன் கேட்டார். மசிந்தரான் மாகாணத்திலுள்ள நூர் என்னும் மாவட்டத்திலிருந்து தாம் வருவதாக அவர் பதிலளித்தார். "காலஞ்சென்ற மிர்ஸா புஸூர்க் அவர்களின் குடும்பத்திலிருந்து, அவரது குணாதிசயங்கள், வசீகரம் மற்றும் கலை மற்றும் அறிவார்ந்த சாதனைகளுக்காக புகழ்பெற்ற, இல்லத்தின் உயர்ந்த மரபுகளை காப்பாற்றக்கூடிய சக்தியுடையவராகத் தம்மை நிரூபித்துள்ள எவராவது ஒருவர் இன்று இருக்கிறாரா? என்னிடம் கூறுங்கள்" என்று விசாரித்தார் முல்லா ஹுசேய்ன்.10"

ஆம்" என அவர் விடையளித்தார். "இப்போது வாழும் அவருடைய பிள்ளைகளில் ஒருவர் தமது தந்தையின் தனிச்சிறப்பாக அமைந்த அதே பண்புகளைக் கொண்டு, தனிச்சிறப்புடையவரா இருக்கின்றார்.அவரது நற்பண்புகள், உயர்ந்த சாதனைகள், அன்புக் கருணை மற்றும் தாராள மனப்பான்மை ஆகியவற்றால், அவர் தம்மை ஓர் உன்னதத் தந்தையின் உன்னத சந்ததியாக நிரூபித்துக் கொண்டுள்ளார். "அவருடைய தொழில் என்ன?" என கேட்டார் முல்லா ஹுசேய்ன். "அவர் துன்புற்றவர்களுக்கு ஆறுதல் அளித்து, பசித்தவர்களுக்கு உணவு அளிக்கிறார்.""அவருடைய அந்தஸ்து மற்றும் பதவி என்ன?" "ஏழைகளுடனும், அந்நியருடனும் நட்புக் கொள்வதை தவிர வேறெதுவுமில்லை." "அவருடைய பெயர் என்ன?" "ஹுசேய்ன் அலி"11.

ஒவ்வொரு பதிலினாலும், முல்லா ஹுசேய்ன் மேலும் அதிகமாக மகிழ்ச்சியடைந்தார். "அவர் தமது நேரத்தை எவ்வாறு போக்குகிறார்?" என அவர் மேலும் வினவினார். "அவர் வனங்களில் சுற்றித் திரிந்து, நாட்டுப்புறச் சூழிடத்தின் அழகினைக் கண்டு மகிழ்கிறார்." "அவருடைய வயது என்ன?" "இருபதுடன் எட்டு".முல்லா ஹுசேய்னின் முகம் திருப்தியுடனும், மகிழ்வுடனும் பிரகாசித்த வண்ணமாக அவர் அந்த இளைஞரிடம்: "நீங்கள் அவரை அடிக்கடி சந்திக்கிறீர்கள் என நினைக்கிறேன்?" என்று கேட்டார். "நான் அவருடைய இல்லத்திற்கு அடிக்கடி விஜயம் செய்கிறேன்" என அவர் பதிலளித்தார்.நீர் அவரிடம் என்னிடமிருந்து ஒரு பொறுப்பைச் சேர்ப்பிக்க முடியுமா?""நிச்சயமாக," என அவர் பதிலளித்தார்.பிறகு முல்லா ஹுசேய்ன், அந்த இளைஞரிடம், துணியால் சுருட்டப்பட்டிருந்த, ஒரு செய்தியடங்கிய சுருள்சுவடியைக் கொடுத்து, அதை பஹாவுல்லாவிடம் மறுநாள் சூரியோதயத்தில் வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் முல்லா ஹுசேய்ன: "அவர் எனக்கு பதிலளிக்க விரும்புவாராயின் அவருடைய பதிலை எனக்கு நீங்கள் அருள்கூர்ந்து தெரிவிப்பீர்களா?"12 என்றார். மாணவர் அந்தச் செய்தியடங்கிய

சுவடியை எடுத்து, விடியற்காலையில், முல்லா ஹுசேய்னின் கோரிக்கையை நிறைவேற்ற எழுந்துச் சென்றார்.

பஹாவுல்லாவின் இல்லத்தை அவர் நெருங்கிய போது, பஹாவுல்லாவின் இளைய சகோதரரான மிர்ஸா மூஸா வாயிற்கதவின் அருகில் நிற்பதைக் கண்டு, தமது விஜயத்திற்கான காரணத்தை அவரிடம் விளக்கினார். மிர்ஸா மூஸா, அந்த இளைஞரை, பஹாவுல்லாவின் முன்னிலைக்கு வழிநடத்திச் சென்றார்; அந்தச் செய்தியடங்கிய சுவடி அவர் முன் வைக்கப்பட்டது. பஹாவுல்லா, அவர்கள் இருவரையும் அமருமாறு கேட்டுக் கொண்டார். பிறகு அந்தச் செய்தி அடங்கிய சுருள் சுவடியைப் பிரித்து, சில பத்திகளை உரக்கமாக படிக்கத் துவங்கினார்.சுருள் சுவடியின் ஒரு பக்கத்தை படித்து முடித்ததும் அவர் தம் தம்பியின் பக்கம் திரும்பி, "மூஸா, நீர் கூறவிருப்பது என்ன?" என்றார்."மெய்யாகவே யாம் கூறுவது யாதெனில் எவரொருவர் திருக்குரானில் நம்பிக்கை வைத்தும், அதன் தெய்வீக மூலத்தை உணர்ந்துக் கொண்ட பின்னரும், இந்த உள்ளத்தை நெகிழ வைக்கும் சொற்கள் அதே புத்துயிரளிக்கும் சக்தியினைக் கொண்டுள்ளன என்பதை ஏற்றுக் கொள்ள ஒரு கணம் தயங்கினாலும், அவர் மிகவும் உறுதியாக தன்னுடைய முடிவில் பிழை செய்வது மட்டுமின்றி, நீதியெனும் பாதையிலிருந்து வெகு தூரம் விலகிச் சென்றுள்ளார்." அந்த இளைஞரை, பஹாவுல்லா தம்முடைய முன்னிலையிலிருந்து விடுவிக்கையில், வெல்லப் பாறை ஒன்றையும், தேயிலைத் தூள் பொட்டலம் ஒன்றையும் கொடுத்து, அவற்றைத் தமது அன்பளிப்பாக முல்லா ஹுசேய்னிடம் கொடுக்குமாறும், அவருக்குத் தமது அன்பையும் மதிப்புணர்வையும் தெரிவிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொண்டார்.

மகிழ்ச்சியால் நிரப்பப்பட்ட அந்த இளைஞர் எழுந்து, முல்லா ஹுசேய்னிடம் விரைந்து சென்றார். பஹாவுல்லாவின் அன்பளிப்பையும், செய்தியினையும், அவரிடம் வழங்கினார். அவற்றைப் பெற்றுக் கொண்ட முல்லா ஹுசேய்னின் மக்ழ்ச்சியை வார்த்தைகளால் வருணிக்க முடியாது. அவர் சிரம் தாழ்த்தி அந்த அன்பளிப்பினை ஏற்றுக் கொண்டு அதற்கு முத்தமிட்டார். பிறகு அவர் அந்த இளைஞரைக் கட்டித் தழுவி அவரது கண்களுக்கு முத்தமிட்டு இவ்வாறு கூறினார் : "எனது அன்பிற்கீரிய நண்பரே, எனது உள்ளத்தை நீங்கள் மகிழ வைத்தது போலவே, இறைவன் உங்களுக்கு நித்திய பேரின்பத்தை வழங்கி, உமது உள்ளத்தை அழியா மகிழ்ச்சியால் நிரப்புவாராக."14முல்லா ஹுசேய்ன் நடந்துக் கொண்ட முறையைக் கண்ட அந்த இளைஞர் மிகவும் திகைப்படைந்தார். இந்த இரண்டு ஆன்மாக்களை இணைக்கும் பந்தத்தின் தன்மை என்னவாகத்தான் இருக்கும் என அவர் ஆச்சரியப்பட்டார். அவர்களுக்கிடையேயுள்ள தோழமைக்கு காரணம் என்னவாக இருக்கும்? பஹாவுல்லாவிடமிருந்து இவ்வளவு சிறியதோர் அன்பளிப்பினைப் பெற்றதும் முல்லா ஹுசேய்ன் ஏன் இவ்வளவு மகிழ்வினை வெளிப்படுத்தினார்? தம்மால் தெளிவுபடுத்த முடியாத ஒரு புதிர் அந்த இளைஞரை எதிர்நோக்கியது.

சில நாட்களுக்குப் பிறகு முல்லா ஹுசேய்ன், ஈரானின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஓர் மாகாணமான குராஸானிற்குச் சென்றார். நூரைச் சார்ந்த அந்த இளம் மாணவரிடம் விடைபெறும் போது அவரிடம் இவ்வாறு கூறினார் : "நீங்கள் பார்த்ததைப் பற்றியும், கேட்டதைப் பற்றியும் யாரிடமும் கூறாதீர்கள். இந்த விஷயம் உங்கள் இதயத்திலேயே இருந்து விடட்டும். அவருடைய பெயரை நீங்கள் வெளியிடக்கூடாது. ஏனெனில் அவருடைய எதிரிகள் அவருக்குக் கேடு விளைவிக்க நினைப்பார்கள்.நீங்கள் பிரார்த்திக்கும் போது, அவரின் மூலமாக எல்லாம் வல்லவர் ஏழைகளுக்கு உதவி செய்து, தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்தி, வீழ்ந்தவர்களைக் கரை சேர்த்திட, அவருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமாறு இறைவனைப்

பிரார்த்தியுங்கள்..விஷயங்களின் இரகசியங்கள் நம் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளன.இப்புதிய நாளின் அழைப்பினை கூக்குரலிட்டு, இப்புனித செய்தியை எல்லா மக்களுக்கும் பிரகடனப்படுத்துவதே . நம்முடைய கடமையாகும் இந்நகரில் பல ஆன்மாக்கள் இப்பாதையில் தங்களின் இரத்தத்தைச் சிந்துவர். அந்த இரத்தம் இறைவனுடைய விருட்சத்திற்கு நீர் ஊற்றி அதைத் தழைக்கச் செய்து, மனுக்குலம் முழுவதற்கும் நிழல் தரும்!"[15]

1. பதினெட்டு உயிர் அட்சரங்களை நியமித்த பின் பாப் பெருமானார் என்ன செய்தார்? ______

   ______________________________________________________________________________

   ______________________________________________________________________________

2 பாப் பெருமானார் மெக்காவுக்கான தமது புனித யாத்திரைக்கு யாரை உடன்வர யாரைத் தேர்வு செய்தார்? ______________________________________________________________

3. ஹிஜாஸ் என்பது எந்த நாட்டைக் குறிப்பிடுகின்றது? ______________________________

4. தம்மை முதன் முதலில் நம்பிய முல்லா ஹுசேய்னிடம் பாப் பெருமானார் பின்வருமாறு கூறினார்: "_______________. எம்முடன் _______________ மேற்கொள்வதற்காக நீங்கள் தேர்ந்தெடுக்கப் படாததற்கு _______________. அதற்குப் பதிலாக யாம் உங்களை _______________ மற்றும் _______________ இரண்டும், அதனுடன் ஒப்பிடவே முடியாத அளவிற்கு அத்தகைய _______________ _______________ ஒரு _______________ உட்படுத்தியுள்ள அந்த நகரத்தினை நோக்கி உங்கள் காலடிகளை வழிநடத்துவோம்."

5. பாப் பெருமானார் முல்லா ஹுசேய்னிடம் என்ன கொடுத்தார்?_______________________

   ______________________________________________________________________________

6. தெஹ்ரான் வந்தடைந்ததும் மூல்லா ஹுசேய்ன் சமயக் கல்விக்கான ஒரு பள்ளியில் ஓர் அறை எடுத்துக் கொண்டார். பாப் பெருமானாரின் புனிதச் செய்திக்கு அந்த பள்ளியின் முதல்வர் எவ்வகையில் செவி சாய்த்தார்? ______________________________________

   ______________________________________________________________________________

7. கடவுள் முல்லா ஹுசேய்னை அந்தப் பள்ளியின்பால் ஏன் வழநடத்தினார்? ____________

   ______________________________________________________________________________

8. பாப் பெருமானாரின் செய்திக்குச் செவிசாய்த்த அந்த மாணவர் எங்கிருந்து வருபவர்? ___

   ______________________________________________________________________________

9. பஹாவுல்லாவின் மூதாதையர் இல்லம் எங்கிருந்தது?___________________________________

10. முல்லா ஹுசேய்னின் கேள்விகளுக்கான பதிலளிப்பில் அந்த மாணவர் விளக்கியபடி:

- பஹாவுல்லாவின் தந்தை எவ்வித குணங்களுக்குப் பெயர்பெற்றிருந்தார்? _________
  ______________________________________________________________________________

- பஹாவுல்லாவின் கவனத்தை எது ஈர்த்திருந்தது?__________________________________
  ______________________________________________________________________________

- அவருடைய அந்தஸ்தும் பதவியும் என்னவாக இருந்தது? _________________________
  ______________________________________________________________________________

- அவர் தமது நேரத்தை எவ்வாறு போக்கினார்? ___________________________________
  ______________________________________________________________________________

11. முல்லா ஹுசேய்ன் நூரைச் சேர்ந்த மாணவரிடம் என்ன செய்யுமாறு கூறினார் __________
    ______________________________________________________________________________

12. பாப் பெருமானார் அனுப்பிய சுருள் சுவடியின் ஒரு பக்கத்தைப் படித்த பின் பஹாவுல்லா பின்வருமாறு கூறினார்: "மெய்யாகவே யாம் கூறுவது யாதெனில் எவரொருவர் ________________ நம்பிக்கை வைத்தும், அதன் ______________ ____________ உணர்ந்துக் கொண்ட பின்னரும், இந்த உள்ளத்தை நெகிழ வைக்கும் சொற்கள் அதே ______________ ______________ கொண்டுள்ளன என்பதை ஏற்றுக் கொள்ள ஒரு ______________ ______________, அவர் மிகவும் உறுதியாக தன்னுடைய ______________ ______________ செய்வது மட்டுமின்றி, நீதியெனும் பாதையிலிருந்து வெகு தூரம் ______________ ______________." அ

13. பஹாவுல்லாவின் அன்பளிப்பை முல்லா ஹுசேய்ன் எவ்வாறு பெற்றுக்கொண்டார்?______
    ______________________________________________________________________________

14. முல்லா ஹுசேய்ன் அந்த இளம் மாணவரிடமிருந்த அன்பளிப்பைப் பெற்றபின் அவர் நடந்துகொண்ட விதம் குறித்து மாணவரை எது குழப்பமடைய செய்தது? _______________
    ______________________________________________________________________________
    ______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

15. முல்லா ஹுசேய்ன் நூர் மாணவரிடம் பிரியாவிடை கூறிய போது அம்மாணவரிடம் என்ன சொன்னார் என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 4

பாப் பெருமானார் பஹாவுல்லாவை "இறைவன் வெளிப்படுத்தவிருக்கும் அவர்" என குறிப்பிட்டார். பாப் பெருமானாரின் அதிப் புனித நூலான பயான் உட்பட, அவருடைய திருவாசகங்கள், 'இறைவன் வெளிப்படுத்தவிருக்கும் அவரைப்' பற்றிய பல குறிப்புகளைக் கொண்டுள்ளன. பஹாவுல்லாவுடைய ஸ்தானத்தைப் பற்றியும், இந்த இரட்டை திரு அவதாரங்களுக்கிடையேயுள்ள உறவுமுறை பற்றியும் ஒரு கணநேரத் தோற்றத்தினை நீங்கள் பெற்றிடும் பொருட்டு, பாப் அவர்களுடைய திருவாசகங்களிலிருந்து சில மேற்கோள்கள் மட்டும் கிழே கொடுக்கப்பட்டுள்ளன.

**"கடவுள் வெளிப்படுத்தவிருப்பவரைக் கண்டுணர்ந்து அவருக்குக் கீழ்படிதலே சுவர்க்கம் என்று பொருள்படும். அவருக்குக் கீழ்படிய அல்லது அவரது நல்விருப்பத்தைச் சார்ந்திடத் தவறியோரின் சகவாசமே (நரகத்) தீ என்பதை நீர் உறுதியாக அறிவீராக.."**

**. . .கடவுளைத் தவிர வேறெதனையும் நீர் செவிமடுக்காமல் இருக்க உந்தன் செவிகளைச் சுத்தப்படுத்திடுங்கள், கடவுளைத் தவிர வேறெதனையும் கண்ணுறாதிருக்க உந்தன் கண்களைத் தூய்மைப்படுத்திடுங்கள், இறைவனைத் தவிர வேறெதனையும் அறிந்திராதிருக்க உந்தன் மனசாட்சியையும் கடவுளைத் தவிர வேறெதனையும் பிரகடனம் செய்திடாதிருக்க உந்தன் நாவையும் கடவுளின் சொற்களைத் தவிர வேறெதனையும் உந்தன் கை எழுதாமலிருக்கவும் கடவுளைத் தவிர வேறெந்த விருப்பத்தையும் உந்தன் இதயம் நாடாமலிருக்கவும் அது போன்றே, தூய அன்பெனும் சுவர்க்கத்தில் பேணப்பட**

**உந்தன் எல்லா செயல்களையும் முயற்சிகளையும் தூய்மைப்படுத்திடுங்கள். அதனால், ஒருகால் அவர் உயர்வாகப் போற்றிடும் தூய்மையை அணிகலனாகக்கொண்டு கடவுள் எவரை அவதரிக்கச் செய்யவிருக்கின்றாரோ அவரின் முன்னிலையை எய்திடுவதுடன் அவரிடமிருந்து அப்பால் விலகி, அவரை ஆதரிக்காமல் இருப்போரிடமிருந்து புனிதப்படுத்தப்படுவீராக.**

**கூறுவீராக, கடவுள் அவதரிக்கச் செய்யவிருக்கும் அவரின் நல்விருப்பம் கடவுளின் நல்விருப்பமாகும். கடவுள் அவதரிக்கச் செய்யவிருக்கும் அவரின் அதிருப்தி கடவுளின் அதிருப்தியே அன்றி வேறெதுவுமில்லை.**[18]

1. “கடவுள் வெளிப்படுத்தவிருக்கும் அவர்” யாரைக் குறிப்பிடுகின்றது? ____________________

   ________________________________________________________________________________

2. பாப் பெருமானார் தம்மைப் பின்பற்றியவர்கள் இறைவன் வெளிப்படுத்தவிருக்கும் அவரது முன்னிலையில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காகத் தங்களை தயார்படுத்திக் கொள்ளுமாறு அவர்களை வலியுறுத்தினார். அவர்கள் என்ன செய்ய வேண்டுமென அவர் கூறினார்?

3. மேலே உள்ள மேற்கோள்களில் ஒன்றை தேர்ந்தெடுத்து மனனம் செய்யவும்.

## பகுதி 5

பஹாவுல்லா, பாப் அவர்களுடைய திருவெளிப்பாட்டின் உண்மைக்கு சாட்சியம் அளித்த நேரத்திலிருந்து, அதனை மக்களுக்கு அறிவிப்பதற்காக முன்னெழுந்தார். இந்தப் புதிய சமயத்தைப் போதிப்பதற்காக அவர் மேற்கொண்ட முதல் பயணம் மஸிந்தரான் மாகாணத்தின் நூர் என்னும் இடத்திலுள்ள அவரது மூதாதையர்களுக்குச் சொந்தமான இல்லமாகும். அங்கு தாக்கூர் கிராமத்திலுள்ள அவருடைய குடும்ப இல்லத்திற்குச் சென்றார்.

தாக்கூரில் பஹாவுல்லாவினுடைய வருகையின் செய்தி அவ்வட்டாரத்தில் வேகமாக பரவியது. அவரை வாழ்த்துவதற்காகவும், அதே வேளையில் அவரிடமிருந்து மன்னரைப் பற்றியும், அவருடைய அரசவையைப் பற்றியும், நாட்டின் விவகாரங்கள் பற்றியும் தெரிந்துக் கொள்வதற்காக பல உள்ளூர் அலுவலர்களும், பிரமுகர்களும் வந்தனர். ஆனால் அவர்களுடைய கேள்விகளுக்கு பஹாவுல்லா குறைந்த ஆர்வத்துடனேயே பதிலளித்தார். அவர் அவ்விஷயத்தை விரைவில் மாற்றி, பாப் பெருமானார் பிரகடனப்படுத்திய புனித செய்தியை சொல்வன்மை மிகுந்த முறையில் எடுத்துரைப்பார். அனைவரும் ஆச்சரியப்படும் அளவிற்கு அவருடைய சொற்கள் நம்பத்தக்கதாகவும் அவருடைய வாதங்கள் உறுதியானவையாகவும் இருந்த அத்தகைய உயரிய அந்தஸ்தினை கொண்ட அவர், வழக்கமாக குருமார்களும், சமயத் தலைவர்களும் ஈடுபடும் விஷயங்களில், அவர் இவ்வளவு கூர்மையான ஆர்வம் காட்டுவதை கேட்டோர் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். அவருடைய ஆர்வமும், ஆழ்ந்த அறிவும், விரைவில் பல பிரபலமானவர்கள் மற்றும் தம்முடைய சொந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள் உட்பட, அதிக எண்ணிக்கையிலான மக்களை புதிய சமயத்தின்பால் கவர்ந்தது. அவருடைய சொந்த

மாமனைத் தவிர, அவருடைய முன்னிலையில் பிரவேசித்த எவருமே அவருடைய இனிய சொற்களின் தாக்கத்திலிருந்து தப்பிக்கவோ அவரது கூற்றுகளை எதிர்க்கவோ முடியவில்லை.

பஹாவுல்லாவையும், அவர் கொண்டு வந்த புனித செய்தியினையும் குறைகூற இந்த மாமன் முடிந்ததையெல்லாம் செய்தார். ஆனால் தாம் அவ்வாறு செய்ய முடியாது. என்பதை உணர்ந்தவுடன், அவர் ஒரு புகழ் பெற்ற முஸ்லிம் குருமாரிடம் சென்று அவருடைய உதவியைக் கோரினார். பஹாவுல்லா 'நூர்' நகருக்கு வந்திருப்பதாகவும், அவர் குருமார்களைச் சார்ந்தவராக இல்லாதபோதும், சமய விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதாகவும் அவர் புகார் செய்தார். பஹாவல்லாவின் முன்னிலையில் பிரவேசித்த ஒவ்வொருவரும், அவருடைய வசியத்திற்கு ஆளாகி, அவருடைய சொற்களின் சக்தியினால், அவர்கள் ஆற்றல் இழந்து போகின்றனர் என அவர் குருமாரை எச்சரித்தார். “அவர் ஒரு மந்திரவாதியா அல்லது அவருடைய தேனீரில் ஏதோ ஒரு மர்மமான பொருளைத் தேநீரில் கலந்து அந்தத் தேனீரை அருந்தும் ஒவ்வொரு மனிதனும் அவருடைய மயங்கச் செய்யும் ஆற்றலுக்குப் பலியாகின்றனரா என்பது எனக்கு தெரியாது"என்றார் அவர்.”19

பஹாவுல்லாவை எதிர்த்துக் கேட்பதில் தாம் வெற்றியடையவே முடியாது என்பதை அறிந்த குருமார், அந்த மாமனின் வேண்டுதலை பொருட்படுத்தவில்லை. ஆனால் பாப் அவர்களுடைய புனித செய்தியானது, காட்டுத் தீ போல் மாவட்டமெங்கும் பரவிக் கொண்டிருந்தது. இதைக் கண்டு திகிலடைந்த அந்த குருமாரின் சீடர்கள், அவர் ஏதாவது நடவடிக்கை எடுக்கும்படி அவரை வற்புறுத்தினர். இறுதியாக அவர் தம்முடையமுதன்மையான மாணவர்கள் இருவரை பஹாவுல்லாவை சந்தித்து அவர் பரப்பும் புனித செய்தியின் தன்மையை விசாரிக்க முடிவெடுத்தார். பஹாவுல்லாவின் முன்னிலையில்பிரவேசித்த அந்த இரண்டு பிரதிநிதிகளுக்கு என்ன நேர்ந்தது என்பது பின்வரும் கதையில்அறிந்துக் கொள்ளலாம்.

அவர்கள் தாக்கூர் வந்தடைந்தபோது, பஹாவுல்லா தம்முடைய குளிர்கால இல்லத்திற்குச் சென்றுவிட்டதை அறிந்த, அந்த குருமாரின் பிரதிநிதிகள், அவரை அங்கு பின்தொடர முடிவு செய்தனர். அங்கு சென்றதும், அவர்கள், பஹாவுல்லா திருக்குரானின் ஓர் அத்தியாயத்திற்கு விளக்கம் ஒன்றை வெளிப்படுத்துவதில் ஈடுபட்டிருப்பதைக் கண்டனர். அவர்கள் அங்கு அமர்ந்து, அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவருடைய உரையாடலின் சொல்வன்மையும், அவர் பேசிய அசாதாரண முறையும் அவர்களுடைய மனதில் ஆழமாக பதிந்து விட்டது. அந்த பிரதிநிதிகளில் ஒருவர் தம்மைக்கட்டுப்படுத்த முடியாமல், தமது இருக்கையிலிருந்து எழுந்து, அறையின் பின்புறத்திற்கு நடந்து சென்று மரியாதையும் பணிவும் கலந்த மனப்பாங்குடன் கதவின் அருகே அமைதியாக நின்றார். நடுக்கத்துடனும், நீர் மல்கிய கண்களுடனும், அவர் தமது தோழரிடம், "பஹாவுல்லாவை எதிர்த்து கேள்வி கேட்பதற்கு எனக்குச் சக்தியில்லை, என்றார். நான் அவரிடம் கேட்க திட்டமிட்டிருந்த கேள்விகள் என் ஞாபகத்திலிருந்து திடீரென மறைந்து விட்டுள்ளன. நீங்கள் உங்களது விசாரணையைத் தொடரலாம் அல்லது தனியாக நம்முடைய குருவிடம் திரும்பிச் சென்று, நான் இருக்கும் நிலையை அவருக்கு தெரியப்படுத்தவும். நான் அவரிடம் மீண்டும் ஒருபோதும் திரும்பவே முடியாது என நான் கூறியதாக அவரிடம் தெரிவிக்கவும். நான் இனிமேலும் இந்த வாயிற்படியை விட்டகல முடியாது.” ஆனால் பஹாவுல்லாவின் திருச்சொற்கள் மற்ற பிரதிநிதியின் மனதிலும் அதே அளவிற்கு பதிந்து விட்டன. அவரும் தமது நண்பரின் உதாரணத்தையே பின்பற்றினார். "நான் என் குருவை அங்கீகரிப்பதை நிறுத்தியுள்ளேன்" என்பது அவருடைய பதிலாக இருந்தது. "இந்த வேளையிலேயே, நான் என்னுடையவாழ்வின் எஞ்சியுள்ள நாட்களை, எனது ஒரே

உண்மையான யஜமானரான பஹாவுல்லாவிற்குச் சேவைப் புரிய அர்ப்பணிக்க இறைவனிடம் சபதம் செய்துள்ளேன்."[20]

அந்த குருமாருடைய மாணவர்களின் மாற்றம் பற்றிய செய்தி நூர் மக்களுக்கிடையே விரைவாகப் பரவியது. உயர் பதவியாளர்கள், நாட்டாட்சிக்குரிய அலுவலர்கள், சமயத் தலைவர்கள், வணிகர்கள், விவசாயிகள் ஆகியோர் பஹாவுல்லாவின் முன்னிலைக்குக் கூட்டமாக வந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் 'புதிய சமயத்தின் பதாகையின் கீழ் கொண்டு வரப்பட்டனர். எனினும், புதிதாகப் பிறந்த இந்த இளையசெடிகளை தங்கள் வேருடன் பறித்தெடுக்கும் ஒரு கடுமையான துன்புறுத்தல் விரைவில் தொடரவிருப்பதை பஹாவுல்லாவைத் தவிர வேறெவருக்கும் தெரியவில்லை.

1. பாப் பெருமானாரின் திருவெளிப்பாட்டின் உண்மைக்கு சாட்சியம் அளித்த பிறகு பஹாவுல்லா என்ன செய்தார்?________________________________________________

________________________________________________________________________

2. நூர் நகரில் வசித்தவர்கள் பஹாவுல்லாவை எவ்வாறு வரவேற்றனர்?________________

________________________________________________________________________

3. தங்கள் கேள்விகளுக்கு பஹாவுல்லா பதில் அளித்த விதத்தைக் கண்ட சில மக்கள் ஏன் ஆச்சரியப்பட்டனர்? ______________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

4. பாப் பெருமானாரின் சமயத்தை, பஹாவுல்லா பிரகடனப்படுத்தத் துவங்கியபோது, அவருடைய மாமன் என்ன செய்தார்? ____________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

5. குருமார் ஏன் அந்த மாமனின் வேண்டுகோளைப் பொருட்படுத்தவில்லை? ____________

________________________________________________________________________

6. தமது சீடர்களின் வற்புறுத்தலுக்கு எதிரில் அந்த மதகுரு இறுதியாக என்ன செய்ய முடிவெடுத்தார்? ____________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

7. அந்த மதகுருவின் இரண்டு பிரதிநிதிகளும் பஹாவுல்லாவின் முன்னிலையில் பிரவேசித்த கதையை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும்.

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

8. இந்த இரண்டு பிரதிநிதிகளின் மாற்றம், மசிந்தரானில் பாப் பெருமானாரின் சமயத்தின் முன்னேற்றத்தின் மீது என்ன விளைவினை ஏற்படுத்தியது?

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

## பகுதி 6

பஹாவுல்லா, நாம் என்ன செய்ய வேண்டும் என்று நம்மைக் கேட்டுக்கொண்டுள்ளாரோ, அதை அவர் நூர் மாவட்டத்திலும் செய்தார். அதாவது முன்னெழுந்து இறைவனின் சமயத்தை போதித்தல். ஆகவே, பஹாவுல்லாவின் பின்வரும் திருவாசகங்களைப் படித்து தியானிப்போமாக. இவ்வாறு செய்கையில் பாப் பெருமானாரின் திருவெளிப்பாட்டினை பஹாவுல்லா ஏற்றுக் கொண்டவுடன், அவர் முன்னெழுந்து நூற்றுக்கணக்கான ஆன்மாக்களுக்கு போதித்ததே அவரது முதல் செயலாக இருந்தது என்பதை நினைவில் வைப்போமாக.

> **“இறைவன் பாதையில் பயணம் செய்வோரே! அவரது அருள் என்னும் மாக்கடலிலிருந்து உங்களின் பங்கை எடுத்துக் கொள்ளுங்கள்; அதன் ஆழத்தில் மறைந்து கிடக்கும் பொருள்களை நீங்கள், உங்களையே இழக்கச் செய்து கொள்ளாதீர். அதன் பொக்கிஷங்களில் பங்குபெற்றோரைச் சார்ந்திருங்கள். இச் சமுத்திரத்தில் இருந்து ஒரே**

**ஒரு பனித்துளியளவு விண்ணுலகங்கள், மண்ணுலகம் ஆகியவையின் மீது விழச்செய்யப்படுமாயின், அதுவே எல்லாம் வல்ல, சகலமும் அறிந்த, சர்வ விவேகியான இறைவனின் வள்ளன்மையைக் கொண்டு அவற்றை மேம்பாடுறச் செய்வதற்குப் போதுமானதாகும். துறவு என்னும் கைகளினால் அதன் உயிரளிக்கும் நீரினை எடுத்துப் படைப்புப் பொருள்கள் அனைத்தின் மீதும் தெளித்திட்டால், அவை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அனைத்துக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, இறைவனின் இப்புனிதமானதும் பிரகாசமானதுமான வலுமிக்க அரியாசனத்தை அணுகிடக் கூடும்"9**

**"நீங்கள் தனி ஒருவராகவே அதனைச் செய்ய வேண்டியிருந்தால் வருந்தாதீர். இறைவனே உங்களுக்கு முற்றிலும் போதுமானவராய் இருக்கட்டும். அவரது ஆவியுடன் நெருங்கியத் தொடர்புக் கொண்டு, நீங்கள் நன்றியுடையோராவீராக உங்கள் பிரபுவின் சமயத்தை விண்ணுலகங்களிலும் மண்ணுலகிலும் பிரகடனஞ் செய்திடுங்கள். உங்களின் அழைப்புக்கு யாராவது செவிசாய்ப்பாராயின், உங்கள் பிரபுவான இறைவன் உங்களுக்கு அனுப்பி வைத்துள்ள விவேகமிக்க முத்துக்களை அவர்முன் வைத்திடுங்கள்; உண்மையாக நம்புவோருள் சேர்ந்திடுவீராக. நீங்கள் கொடுக்க முன்வருவதை யாராவது ஏற்க மறுத்தால், அவரிடமிருந்து அப்பால் திரும்பி, உங்கள் நம்பிக்கையையும் மனவுறுதியையும் உங்கள் இறைவனான, உலகங்கள் அனைத்திற்கும் பிரபுவாகிய அவரிலேயே வைத்திடுங்கள்."21**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. பஹாவுல்லா ______________________________ நமது பங்கினை ____________________

ஆ. அதன் ____________________ கிடக்கும் ____________ நாம் நம்மையே இழக்கச் செய்து கொள்ளக்கூடாது.

இ. அவரது கிருபையெனும் சமுத்திரத்திலிருந்து ஒரு பனித்துளி, விண்ணுலகிலும் மண்ணுலக்லும் உள்ள அனைவரின் மீது பொழியப்படுமாயின் ____________________

______________________________________________________________________________

போதுமானதாயிருக்கும்

ஈ. அதன் ______________________________________________________________________________

துறவு என்னும் கைகளினால் எடுத்துப் படைப்புப் பொருள்கள் அனைத்தின் மீதும் தெளிக்க வேண்டும்

எ. நாம் ______________________________________________________________________________

நேர்ந்தாலும் வருத்தமடையக்கூடாது.

ஏ. நாம் ____________________________________________________________________ தொடர்பு கொண்டு ____________________________ இருக்க வேண்டும்.

ஐ. நாம் ______________________________________________________________________________

பிரகடனப் படுத்த வேண்டும்.

ஒ. நமது அழைப்பிற்கு எந்த மனிதராவது செவிசாய்ப்பாராயின் நாம் ______________________________________________________________________________ ______________________________________________________________________ வேண்டும் என பஹாவுல்லா கூறுகின்றார்.

ஓ. நமது __________________________________________________ எந்த மனிதராவது மறுப்பாராயின், நாம் ____________________________________________________________

## பகுதி 7

தெய்வீக வெளிப்பாடு முன்னேற்றகரமான ஒன்றாகும். மனித குலம் ஒருநிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு முன்னேறிக் கொண்டிருக்கும் போது, இறைவன் காலத்திற்கு காலம் தோன்றும் தமது அவதாரங்களின் மூலமாக தமது திருவிருப்பத்தினை படிப்படியாக வெளிப்படுத்துகிறார். சில இன்றியமையா உண்மைகளை உறுதிப்படுத்திடும் அதே வேளை, மானிடத்தின் திறனாற்றலுக்கு ஏற்ப ஒவ்வொரு அவதாரமும் ஒரு புதிய சட்ட மற்றும் விதிமுறைகளின் தொகுப்பைக் கொண்டுவருகிறார் அத்துடன் அவருக்கு முன் வந்தவரால் கொண்டுவரப்பட்ட, இனி தேவைப்படாத வேறு சிலவற்றை இரத்து செய்கின்றார். மக்களுக்கு கடந்தகாலத்தைக் கைவிடுவது சிரமமாக இருப்பதுடன் பல வேளைகளில், அவருடைய நெருங்கிய சீடர்கள்கூட, அவரது திருவெளிப்பாட்டின் முழு முக்கியத்துவத்தை ஆரம்பத்தில் புரிந்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றனர். அவர்கள், பல தலைமுறைகளாக பின்பற்றி வந்த முந்தைய சமயத்தின் சட்டங்களையும், போதனைகளையும் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றனர். புதிய அவதாரமானவர், மானிடத்தின் அடுத்த கட்ட பரிணாம வளர்ச்சிக்கான புதிய சட்டங்களை வழங்குகிறார் என்பதைக் காலப்போக்கில்தான் புரிந்துகொள்கின்றனர்.

பாப் அவர்களுடைய திருவெளிப்பாட்டின் போதும் இந்நிலை காணப்பட்டது. எந்த முஸ்லிம்களுக்கிடையே பாப் பெருமானார் தோன்றினாரோ அந்த முஸ்லிம்கள் உலகின் முடிவு வரை முகமது நபியுடைய போதனைகளின் ஓர் 'அட்சரம்' கூட மாற்றப்பட முடியாது. என நம்பினர். ஆதலால், பாப் பெருமானார் பெருமானார் தமது முழு செய்தியையும் படிப்படியாகவே தெரியப்படுத்த அனுமதித்தார் அவரது அருட்பணிகாலத்தின் முதல் சில வருடங்களின் போது, இஸ்லாமிய சட்டங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. ஆனால் நீங்கள் அறிந்துள்ளபடி, பாப் அவர்கள் மாஹ்-கு என்னும் கோட்டையில் சிறைப்பட்டிருந்த போது, பாரசீக பயான் நூலில் ஒரு புதிய சட்டத் தொகுப்பை வெளிப்படுத்தினார். கடந்த காலத்துடன், ஓர் உறுதியான முறிவை ஏற்படுத்திக் கொண்டு கடவுளின் ஓர் அவதாரம் என்னும் அவரது உண்மையான ஸ்தானத்தை பிரகடனப்படுத்துவதற்கான நேரம் அதுவாக இருந்தது. இது பாதாஷ் மாநாட்டின் போது செய்யப்பட்டது.

பாதாஷ் என்பது, நாட்டின் வடகிழக்கு பகுதியில் தெஹ்ரான் நகரத்திலிருந்து சற்று தொலைவிலுள்ள ஒரு கிராமமாகும். பாதாஷ் மாநாடு 1848-ஆம் வருடம் ஜூலை மாதத்தில் நடைபெற்றது. பாப் பெருமானின் மிகச் சிறப்புமிக்க சீடர்களில், எண்பத்தோரு பேர் இம்மாநாட்டில் ஒன்றுகூடினர். பஹாவுல்லா, குட்டூஸ், தஹிரி ஆகியோர் பிரதான பங்கேற்பாளர்களாக இருந்தனர்.

பஹாவுல்லா ஏற்கனவே அவரது சக பாப்'யிகளால் உயர்வாக மதிக்கப்பட்டிருந்தாலும், அவரது அறிவையும் ஞானத்தையும் அங்கீகரித்து, வழிகாட்டுதலுக்காக அவரைப் பார்த்தார், மாநாட்டில் அவரது மகத்துவமும் மகிமையும் மேலும் வெளிப்பட்டன. உண்மயையில் அங்கு அவரது பங்கு தீர்க்கமானதாக இருந்தது. மாநாடு நடத்தப்பட்ட பூங்காவனங்களை அவரே வாடகைக்கு அமர்த்தி, அங்கு குழுமியிருந்த அனைவரையும், 22 நாட்களுக்கு, தமது தாராளமான உபசரனையில் திலைத்திருக்கச் செய்தார். ஒவ்வொரு நாளும் அங்கு கூடியிருந்த நம்பிக்கையாளர்களுக்கு வாசிக்கப்படவென பஹாவுல்லா ஒரு புது நிருபத்தை வெளிப்படுத்தினார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய நாமத்தைச் சூட்டினார். குட்டுஸ், தாஹிரி இருவருக்கும், சரித்திரத்தில் நிலைத்திருக்கக் கூடிய பெயர்களை அளித்தார். தாஹிரி என்னும் பெயர் "தூய்மை" எனவும், குட்டுஸ் என்பது "புனிதம்" எனவும் பொருள்படும். அவரும் அந்நாள் முதற்கொண்டு "பஹா" என்னும் நாமம் பூண்டார், அதுநாள் முதல் அவ்வாறே விளங்கவும் பெற்றார். பாப் அவர்கள் பின்னாளில் அந்த மாநாட்டில் பங்கு கொண்ட அனைவருக்கும், அந்த நிகழ்ச்சியில் அவர்கள் பெற்ற நாமங்களின் பெயர்களாலேயே விசேஷ நிருபங்கள் வரைந்தார்.

ஒரு நாள் பஹாவுல்லா உடல்நல குறைவால் படுக்கையில் வீற்றிருக்க நேரிட்டது; அன்பர்கள் அனைவரும் அவரது முன்னிலையில் கூடியிருந்தனர். அப்போது திடீரென்று, தூய்மைக்கும் கற்புக்கும் இலக்கனமாக விளங்கிய தாஹிரி, பாரசீக முல்லிம்களின் நம்பிக்கைப்படி எல்லா பெண்மணிகளும் அனிய வேண்டிய தமது முகத்திரையின்றி அங்கு கூடியிருந்தோர் முன்னிலையில் தோன்றினார். ஒரு சில பாப்-யிகள், தாஹிரி, தமக்கும் தாம் சார்ந்துள்ள சமயத்திற்கும் இழிவை தேடித் தந்துவிட்டதாக நினைத்தனர். கு·டுஸ் வெளிப்படையாகவே சினங் கொண்டு காணப்பட்டார். ஆனால் தாஹிரி, அசராமலும் களிப்பின் ஒளி முகத்தில் தவழவும், தமது சகாக்களை நோக்கி சரளத்துடன் பேசத் துவங்கினார். கடந்த காலத்துடனான — அதன் சமயக் கொள்கைகள், சம்பிரதாயங்கள் மற்றும் கிரியைகள் ஆகியவற்றுடனான -- தங்களின் தொடர்புகளை துண்டித்துக் கொள்ளும்படி அழைத்தார். தாஹிரி மற்றும் குட்டுஸ் இருவருக்கும் இடையில் தோன்றிய கருத்து வேற்றுமை பஹாவுல்லாவின் தலையீட்டால் குறைந்தது. இந்தப் பிரகடணத்தால் பாப் அவர்களின் நம்பிக்கையாளர் பலர் அவரது சமயத்தை விட்டே விலகிப்போன அதே நேரத்தில் பெரும்பான்மையினர் உறுதியுடன் நின்று ஒரு புதிய உற்சாகமும் பெற்றனர். பஹாவுல்லா அந்த நிகழ்வை திறமையாகப் பயன்படுத்தி, புதிய நாள் ஒன்றின் உதயத்தைக் கொண்டாட வைத்தார். தாஹிரி, தமது துணிகரமான செயலின் மூலமாக, பழையன கலைதலும் ஒரு புதிய சமயம் புகுதலும் பற்றிய அறிவிப்பைச் சங்க நாதம் செய்தார்.

பாப்-யி சமயத்தின் வளர்ச்சியில் மிகவும் கொந்தளிப்பான ஒரு காலகட்டத்தின் ஆரம்பத்தை படாஷ்ட் மாநாடு அன்று குறித்தது. அதன் நம்பிக்கையாளர்கள் அனுபவித்த கொடுமைகள், விரைவில் ஒரு சிகரத்தை எட்டி, அவர்களுள் பலர் தியாக மரணத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். அங்கிருந்து சென்று பெரும் வீரம் வாய்ந்த செயல்கள் புரிந்து, அப்ஹா இராஜ்யத்தில் மட்டுமே மறுபடியும் ஒன்றுசேர, அந்த மாநாடு ஒரு பிரியாவிடைக்கான ஒன்றுகூடுதல் போன்று தோன்றியது.

மாநாட்டில் கூடியிருந்தோர் ஒன்றாகவே மாஸிந்தரான் நோக்கிப் புறப்பட்டனர், ஆனால் அவர்கள் ஓய்வெடுப்பதற்காக ஒரு கிராமத்தருகே ஒதுங்கியபோது அதன் மக்கள் அவர்களின் உண்மையான நோக்கம் அறியாமல் அவர்களைத் தாக்கினர். அதன் விளைவாக அந்த

நம்பிக்கையாளர்கள் அனைவரும் அவ்விடத்தை விட்டு பல திசைகளில் தப்பியோட வேண்டியதாயிற்று. பஹாவுல்லா மாஸிந்தரானில் உள்ள நூர் நோக்கிய தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

படாஷ்ட் மாநாடு குறித்த செய்தி விரைவில் தெஹரான் சென்றடைந்து, அங்கு நடைபெற்ற நிகழ்வுகள் பற்றியும் அந்த மாநாட்டில் பஹாவுல்லா ஆற்றிய பங்கும் அரசருக்கும் அவரது மந்திரிகளுக்கும் தெரியவந்தது. விரைவில் தமது உயிரை பறிக்கவிருக்கும் ஒரு நோயின் பாதிப்பால் பலவீனப்பட்ட நிலையில் இருந்த அரசரிடம், பஹாவுல்லாவை உடனடியாக கைது செய்திட ஆணை பிறப்பிக்கும்படி பிரதம மந்திரி ஆலோசனை கூறினார். அதன்படி, மாஸிந்தரானில் உள்ள அதிகாரி ஒருவருக்கு, பஹாவுல்லாவை கைது செய்து தெஹரானுக்கு அழைத்து வரும்படி உத்தரவு ஒன்று அனுப்பப்பட்டது. ஆனால், அந்த அதிகாரி பஹாவுல்லாவிடம் பெரும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். அவருக்காக அவர் ஒரு விருந்து நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்திருந்தார். இந்த விருந்து நிகழ்ச்சிக்கு ஒரு நாள் முன்பதாகத்தான் அவர் அந்த உத்தரவைப் பெற்றார். பெரும் மனக்கிலேசமுற்றவராய், அது பற்றி அவர் எவரிடமும் தெரிவிக்க விரும்பவில்லை. அடுத்த நாள் அரசர் இறந்துவிட்டதாக மாஸிந்தரானுக்குச் செய்தி வந்தது; கைது ஆணையும் செல்லாமல் போனது.

1. படாஷ்ட் மாநாட்டின் நோக்கம் என்ன? ____________________________________________

   ________________________________________________________________________________

2. படாஷ்ட் மாநாடு எப்போது நடைபெற்றது? ________________________________________

3. அது எத்தனை நாள்கள் நடைபெற்றது? ___________________________________________

4. பாப் பெருமானாரின் நம்பிக்கையாளர் எத்தனை பேர் அதில் கலந்துகொண்டனர்?_______

   ________________________________________________________________________________

5. அதன் பிரதான பங்கேற்பாளர்கள் யார்? ___________________________________________

   ________________________________________________________________________________

6. அங்கு கூடியிருந்தோரில் மிகவும் முக்கிய நபராக விளங்கியவர் யார்?__________________

7. தாஹிரி என்னும் பெயரின் அர்த்தம் என்ன? _____________________________________

8. குட்டுஸ் என்னும் பெயரின் அர்த்தம் என்ன? _____________________________________

9. தாஹிரி முகத்திரையின்றி தோன்றி நாளன்று மாநாட்டில் நடந்த சம்பவங்களை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்.

   ________________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

10. மாநாட்டில் தாஹிரியின் அந்தத் துணிகர செயல் எதைக் குறித்துக் காட்டியது? ____________

______________________________________________________________________________

11. படாஷ்டில் நடைபெற்ற ஒன்றுகூடல் குறித்து அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்த போது அது என்ன செய்தது? ____________________________________________________________

12. அரசாங்கம் பஹாவுல்லாவைக் கைது செய்யும்படி ஆணை பிறப்பித்த பிறகு என்ன நடந்தது என்பதை விளக்கவும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 8

படாஷ்ட் மாநாடு, பழையன கலைதல் மற்றும் புதியன புகுதலைத் குறித்தது. அப்துல் பஹாவின் பின்வரும் வாசகம், காலத்திற்குக் காலம் மற்றும் யுகந்தோறும் கடவுளின் சமயம் எப்படி

புதுப்பிக்கப்படுகின்றது என்பதனை விளக்குகின்றது. பதாஷ்ட் மாநாடு குறித்து நீங்கள் படித்தவற்றின் அடிப்படையில் இவ்வாசகத்தின் அர்த்தங்களைப் பற்றி சிந்திக்கவும்.

> **"மெய்நிலையெனும் வித்தின் வழி, இலைகளும் கிளைகளும், மற்றும் பூக்களும் பழங்களும் நிறைந்த ஒரு மரமாக சமயம் வளர்ந்துவிட்டிருக்கின்றது. காலப் போக்கில் இம் மரம் பட்டுப் போன ஒரு நிலையில் உள்ளது. இலைகளும் பூங்கொத்துகளும் உதிர்ந்து அழிந்துவிட்டுள்ளன; இந்த மரம் பீடிக்கப்பட்டு பழனற்ற நிலையில் உள்ளது. அதன் உயிரோட்டம் இன்னும் நசித்துப் போகவில்லை, அதன் பழங்கள் இனையற்றவை, அம் மரம் நித்தியமானது என இந்தப் பழைய மரத்தையே மனிதன் பற்றிக் கொண்டிருப்பது முறையாகாது. மனித உள்ளங்களில் ஒரு புதிய மரம் வளரவும், புதிய தெய்வீகக் கனிகள் உலகிற்கு புத்துயிரூட்டவும், மெய்நிலை என்னும் வித்து மறுபடியும் அதில் நடவு செய்யப்பட வேண்டும். இதன் வழியாக, சமயத்தால் வேறுபட்டு நிற்கும் தேசங்களும் மக்களும் ஒன்றினையவும், அசல் அல்லாதவற்றைத் துறக்கவும், ஓர் உண்மையான சர்வலோக சகோதரத்துவம் ல்தாபிக்கப்படவும் கூடும். மனிதரிடையே யுத்தங்களும் சச்சரவுகளும் நீங்கும்; இறைவனின் ஊழியர்களாக எல்லோருமே இணக்கம் காணுவர். அவரது திருவருள் மற்றும் தயை என்னும் மரத்தின் கீழ் அனைவரும் அடைக்கலம் பெற்றுள்ளனர். இறைவன் அனைவரிடத்திலும் அன்பாக இருக்கின்றார்; அவர் 'நீதியுடன் வாழ்பவர்களுக்கும் அநீதி செய்பவர்களுக்கும் ஒன்றாகவே மழை பொழியச் செய்விக்கின்றார்' -- அதாவது, இறைவனின் கருணை சர்வ வியாபகமானது, என ஏசு கிருஸ்து அறிவித்தது போல், அனைவருக்கும் அவரே அருட்கொடையாளி. மானிடம் முவதும் அவரது அன்பு மற்றும் தயவின் பாதுகாப்பில் உள்ளது; அனைவருக்கும் அவர் வழிகாட்டுதல் மற்றும் மேம்பாடு என்னும் திசையினைக் காண்பித்துள்ளார். "22**

## பகுதி 9

1848-இல் அரியணை ஏறிய அரசனான நாசிருத்தீன் ஷா, முன்னாள் அரசனான தனது தந்தையைவிட மிகவும் கொடூரமானவன். அவனது அரசாட்சியின் ஆரம்பத்திலிருந்தே பாப்-யிகளின் துன்புறுத்துதல்கள் படுவேகமாக அதிகரித்தன. பாப் பெருமானாரே ஜூலை 1950-இல் தப்ரீஸில் தியாக மரணத்திற்கு உள்ளானார். ஆயிரக்கணக்கான தங்களின் சக நம்பிக்கையாளர்களின் கொடூர மரணத்தைத் தங்கள் கண்களால் கண்ட, கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்ட அவரது நம்பிக்கையாளர்கள், தங்கள் இதயத்தின் அதி அன்பிற்குறியவரையும் இப்போது இழந்தனர். பலர், தங்கள் மனதில், வருடக் கணக்காகத் தாங்கள் உட்படுத்தப்பட்ட கொடுமைகளுக்கெல்லாம் அரசனையே குற்றம் சாற்றினர். ஆனால், இவ்வித சிந்தனைகள் மனதில் உதித்த போதிலும், அரசாங்கம் மற்றும் சக மக்களின் நன்மை விரும்பிகளாகவே அவர்கள் இருந்தனர். நற்செயல்களின் சக்திகள் மற்றும் திருப்தியூட்டும் வாதங்கள் மூலமாகத் தங்கள் சமயத்தைப் பரப்பவதில் அவர்கள் தங்களின் சக்திகளை ஈடுபடுத்தினர். அதே வேளை கடுங்கோப வயப்பட்டிருந்த சிறிய கும்பல் ஒன்று ஆபத்தான சில யோசனைகளை மனதில் கொண்டிந்தது. என்ன செய்வதென்று அறியாத மற்றும் குழப்பமான நிலையில், அதன் கொடுமையின் மூலாதாரத்தையே தாக்குவதன் மூலமாக, பாப்-யி சமூகத்தின் விதியை, மாற்ற இயலுமென நம்பினர். அரசனை கொலை செய்யத் திட்டமிட்டனர்.

அந்தக் கும்பலின் நோக்கம் அதன் தலைவன் ஒருவன் மூலமாக பஹாவுல்லாவிற்குத் தெரிய வந்தது. அவர்கள் தங்கள் திட்டத்தை கண்டிப்பாகக் கைவிட வேண்டும் என தெள்ளத் தெளிவாக பஹாவுல்லா அத்தலைவனுக்குப் புத்திமதிகள் கூறினார். ஏற்கனவே பெரும் துன்பங்களால் சூழப்பட்டிருக்கும் பாப் பெருமானாரின் நம்பிக்கையாளர்களை மேலும் பல பேரிடர்கள் தாக்கக்கூடும் என எச்சரித்தார். ஆனால் சதியில் ஈடுபட்டிருந்தோர் அடைந்திருந்த கசப்புணர்வு மற்றும் அவர்களது மனதில் கொழுந்து விட்டெரிந்த வஞ்சம் தீர்க்கும் உணர்வு ஆகியவை மிகுந்திருந்த நிலையில் பஹாவுல்லாவின் ஆலோசனைகள்கூட அவர்களைத் தடுத்திட முடியவில்லை. தூய்மையான, தன்னலமற்ற, மற்றும் வீரச் செயல்களால் மட்டுமே அலங்கரிக்கப்பட்டிருந்த பாப்-யி சரித்திரத்தில், என்றுமே ஒரு கரும்புள்ளியாக விங்கப்போகும் அந்தச் செயலைப் புறிய ஆயத்தமானார்கள்.

1852-ஆம் வருடம் ஆகஸ்ட் 15-ஆம் தேதி, தெஹரானுக்கு அருகே உள்ள தனது வஸந்த மாளிகையை விட்டு காலை வேளை குதிரைச் சவாரி செய்ய அரசன் கிளம்பினான். அவனுடைய அரச காவலர்கள் அவனுக்கு முன் சில அடிகள் தூரத்தில் சென்று கொண்டிருந்தனர். எங்கும் ஒரே அமைதி; எல்லாமே திருப்திகரமாக இருந்தது. அப்போது திடீரென்று, எல்லோரும் திடுக்கிடும் வகையில், அரசனிடம் விண்ணப்பம் ஒன்றைத் தரும் சாக்கில் சாலை ஒரத்தில் குதிரையில் காத்திருந்த ஓர் இளைஞன், அரசைனைக் கொல்ல முயன்றான். ஆனால் கொலை செய்யும் நோக்கில் இருந்த அந்த அறிவிலியான இளைஞன் பயன்படுத்திய கைத்துப்பாக்கி சிறு இரவைகளையே சுடக்கூடியதாக, அரசனைக் கொல்வதற்குப் போதுமானதாக இல்லை. அரசன் சிறிதளவே காயப்பட்டான், ஆனால் அரசனைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட அந்த முயற்சியின் விளைவாக ஏற்பட்ட பெரும் கொந்தளிப்பு, பாப்-யிகள் மீது கற்பனை செய்ய முடியாத கொடூரங்களைப் புறிவதற்காக மக்களை ஏவிவிட சமய எதிரிகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியது.

அந்த துரதிர்ஷ்டசாலியான இளைஞன் உடனடியாகக் கொல்லப்பட்டான்; அவனுடைய உடல் ஒரு கோவேறு கழுதையின் வாலில் கட்டப்பட்டு தெஹரான் வரை இழுத்துச் செல்லப்பட்டது. அங்கு அது இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு பொதுமக்கள் பார்வைக்குத் தொங்கவிடப்பட்டது. இவனோடிருந்த மற்றுமொரு இளைஞன், அக்குற்றத்திற்கு உடந்தையாக இருந்த மற்றவர்களை காட்டிக் கொடுக்கும்படி எவ்வளவோ துன்புறுத்தப்பட்டும் இறுதிவரை மசியாமல் இருந்து தொண்டையில் உருக்கிய துத்தநாகம் ஊற்றப்பட்டான். இதில் ஈடுபட்டிருந்த முன்றாவது இளைஞனின் மேலங்கிகள் அகற்றப்பட்டு அவன் உடலில் துளைகளிடப்பட்டு அவற்றில் மெழுகுவர்த்திகள் செருகப்பட்டு ஓலமிட்டும், வசைமாரிகள் பொழிந்து கொண்டும் இருந்த ஜனங்கள் நடுவே ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டான்.

பின்தொடர்ந்த நிகழ்ச்சிகளை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. அரசாங்கம், மதகுருக்கள், அவர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றும் ஆதரவாளர்கள் ஆகியோர் பாப்-யிகளை முற்றாக அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். நகர வாசல்கள் அனைத்தும் மூடப்பட்டன; யாரும் விசாரிக்கப்படாமல் வெளியேற அனுமதிக்கப்படவில்லை. பாப்-யிகள் வீடு வீடாகத் தேடப்பட்டு, கைது செய்யப்பட்டு, இங்கு விவரிக்க முடியாத சித்திரவதைக்குப் பிறகு மிகவும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

ஷா மன்னன் மீது அந்தக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்ட நாளன்று, தெஹரான் அருகே ஒரு கிராமத்தில் பிரதம மந்திரியின் சகோதரர் ஒருவரின் விருந்தினராக பஹாவுல்லா இருந்தார். அந்த அசம்பாவிதம் பற்றிய செய்தி விரைவில் அவரை எட்டியது. அந்தக் குழப்பங்கள்

அடங்கும் வரை எங்காவது மறைந்திருக்கும்படி அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அரசரின் தாயார் தமது மகன் மீது மேற்கொள்ளப்பட்ட அந்த கொலை முயற்சிக்கு பஹாவுல்லாவையே குற்றம் சாட்டி, அவரை உடனடியாகக் கைது செய்யும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார். ஆனால் பஹாவுல்லா, தாம் மறைந்துகொள்ள முடியது என மறுத்துவிட்டார்; அது மட்டுமின்றி, அடுத்த நாளே பரியேறி அரசரின் தலைமையகத்தை நோக்கிப் பயணமும் மேற்கொண்டார். பஹாவுல்லா தங்களை நோக்கி வருவதை அறிந்த அரசரும் அவரது பரிவாரங்களும் மிகுந்த ஆச்சரியம் அடைந்தனர். பயங்கர கொலை குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவர் ஓடி ஒளிந்து கொள்ளாமல், இவ்வளவு மனோதைரியத்துடன் ஆபத்தை நோக்கிச் செல்வாரா? ஷா மன்னன் உடனடியாக பஹாவுல்லாவைக் கைது செய்ய உத்தரவிட்டான். பிரதம மந்திரியின் இல்லத்தில் பஹாவுல்லாவிற்குப் புகலிடம் பெற முயன்ற அவருடைய சில நண்பர்களின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. தெஹரானில் இருந்து சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஷிமீரான் எனப்படும் கிராமத்தில் அவர் கைது செய்யப்பட்டு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டார்.

நடுவசந்தகாலத்தின் சிரசைப் பிளக்கும் வெய்யிலில் ஷிமீரானிலிரிந்து தெஹரானுக்கு பஹாவுல்லா கொண்டுவரப்பட்டார். பஹாவுல்லா தங்கள் அரசரின் எதிரி என அறிவிக்கப்பட்டிருந்த மக்கள் கூட்டம், வழி நெடுகிலும் அவரை நோக்கி வசைமாரி பொழிந்து கொண்டிருந்தது. தம்மீது கல் எறிய விரும்பிய வயது முதிர்ந்த, பலவீனமான பெண்மனி ஒருவரின் கதை, அன்று, அங்குக் கூடியிருந்த மக்கள் கூட்டம் எவ்வளவு கண்மூடித்தனமாக இருந்தது என்பதை விளக்குவதுடன், தம்மைச் சூழ்திருந்த பெரும் ஆபத்திலும் பஹாவுல்லாவின் உள்ளத்தில் எவ்வளவு அன்பு நிறைந்திருந்தது என்பதையும் விளக்குகிறது.

தம்மைச் சிறைவைக்கும் நிலவரையை அவர் நெருங்கிக் கொண்டிருந்த போது, வயதான பலவீனமான ஒரு மூதாட்டி கையில் ஒரு கல்லோடு, முண்டியடித்துக் கொண்டு கூட்டத்திற்கு முன்னால் வர முயன்றாள் அப் பெண்மணியின் வயதுடையோர் சிலர் மட்டுமே பெற்றிருக்கக் கூடிய மனவுறுதி மற்றும் மதவெறியை அவளது முகம் பிரதிபலித்தது. அவளது தேகமே கோபத்தால் நடுங்கிக்கொண்டிருந்தது. அவள் சற்று முன்னால் வந்து கல்லை வீசுவதற்கு ஆயத்தமானாள். பஹாவுல்லாவை நிலவரைக்குக் கொண்டு செல்வோரைப் பின்தொடர்ந்து ஓடி, "இந்தக் கல்லை அவரது முகத்தில் எறிய எனக்கு ஒரு வாய்ப்பளிக்கும்படி உங்களை வேண்டுகிறேன்," என மன்றாடினாள். தம்மை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்த அம்மூதாட்டியைப் பார்த்து, "இப்பெண்மனியை ஏமாற்றமுறச் செய்திடாதீர், இறைவனின் பார்வையில் மேன்மையுடையச் செயலென அவள் கருவதுதை அவள் பெறுவதிலிருந்து தடுத்துவிடாதீர்,"23 என தமது காவலர்களை நோக்கி பஹாவுல்லா கூறினார்.

1. பாரசீகத்தில் 1848’ல் அரியனை ஏறிய அரசனின் பெயர் என்ன? ____________________________

2. நாஸிரித்தீன் ஷா அரியனை ஏறிய பிறகு பாப்-யிக்கள் நடத்தப்பட்ட விதத்தில் அது என்ன தாக்கத்தை உண்டுபன்னியது?______________________________________________________________

______________________________________________________________________________

3. பாப் பெருமானாரின் உயிர்த்தியாகத்திற்குப் பிறகு பாப்-யிக்கள் பொதுவாக என்ன உணர்ந்தனர்? ______________________________________________________________________________

_______________________________________________________________________________

4. அரசனைக் கொல்ல தீர்மானித்த கும்பலின் மனநிலை என்னவாக இருந்தது? ____________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

5. அக்கும்பலின் நோக்கத்தை அறிந்த பஹாவுல்லா அதன் தலைவனிடம் என்ன கூறினார்?_

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

6. அரசன் மீதான கொலை முயற்சி என்ன தேதியில் நடைபெற்றது? _______________________

7. கொலை முயற்சியில் ஈடுபட்டோரின் நிலை என்னவாகியது?___________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

8. கொலை முயற்சியினால் பாப்-யி சமூகத்திற்கு என்ன விளைவை ஏற்படுத்தியது? ________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

9. அரசன் மீதான கொலை முயற்சியைக் கேள்விப்பட்ட போது பஹாவுல்லா எங்கே இருந்தார்?_______________________________________________________________

10. அந்தக் கொலை முயற்சியைப் பற்றி கேள்விப்பட்டவுடன் பஹாவுல்லா என்ன செய்தார்? __

_______________________________________________________________________________

11. பஹாவுல்லா எந்த கிராமத்தில் கைது செய்யப்பட்டார்? ______________________

12. தமது எதிரிகளின் முன்னிலையில் எந்த விதத்திலும் சக்தியற்றவராக இல்லாத போதும், தாம் கைது செய்யப்பட்டப் பின் நேரவிருக்கும் ஆபத்தை அறிந்தும், கைது செய்யப்பட பஹாவுல்லா ஏன் சம்மதித்தார் என்பது பற்றி உங்கள் எண்ணங்களைக் கீழே எழுதவும் ___

______________________________________________________________

______________________________________________________________

13. பஹாவுல்லா ஷிமீரானிலிருந்து தெஹரானுக்கு என்ன நிலையில் கொண்டுவரப்பட்டார்?

______________________________________________________________

______________________________________________________________

14. நிலைவரையை நோக்கி கொண்டுசெல்லப்பட்ட பஹாவுல்லாவின் மேல் கல் எறிந்தால் இறைவனின் தயவைப் பெறலாம் என்னும் எண்ணத்துடன் அவர் மேல் கல்லை எறிய முயற்சித்த அம் மூதாட்டியின் கதையை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும். இக்கதை எதைக் குறிக்கின்றது?

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

## பகுதி 10

தமது வாழ்நாள் முழுவதும், தமது உயிருக்கு ஊறு விளைவிக்க எண்ணியிருந்த எதிரிகளாலேயே பஹாவுல்லா சூழப்பட்டிருந்தார். ஆனால் தம்மை மறைத்துக்கொள்ள அவர்

என்றுமே எண்ணியதில்லை; தம்மை அவர் பாதுகாத்துக் கொள்ளவும் இல்லை. அதற்கு மாறாக, அவர் எக்காலமும் மனிதர்களின் கண்ணெதிரிலேயே வீற்றிருந்து, அவரை எதிர்த்தவர்களின் தாக்குதல்களை அமைதியுடனும் சாந்தத்துடனும் தாங்கிக் கொண்டார். அவர்கள் அவரது ஒளியை அனைக்க தீர்மானத்துடன் இருந்த போதும், அவர்களால் அதைச் சாதித்திட இயலவில்லை, அவரது மகிமையும் நாளுக்கு நாள் மேன்மேலும் அதிகமாகப் பிரகாசித்தது.

> **இத்தவறிழைக்கப்பட்டோன் ஒரு கண நேரங்கூடத் தன்னை மறைத்துக் கொண்டதே கிடையாது. மாறாக, எல்லா வேளைகளிலும் அவர் பற்றுறுதியுடனும் எல்லோரது கண்களுக்கு முன்பாகவும் தெளிவாய்த் தெரியக்கூடிய வகையிலேயே இருந்துவந்திருக்கின்றார். யாம் பின்வாங்கியதே கிடையாது; ஓடவும் வழிதேட மாட்டோம். உண்மையிலேயே, அறிவிலிகள்தாம் எமது முன்னிலையிலிருந்து ஓட்டமெடுக்கின்றனர். . . இறைவன் போற்றப்படுவாராக! இத்தவறிழைக்கப்-பட்டோனால் கொண்டுவரப்பட்ட சமயமானது விண்ணுலகத்தைப் போல் உயர்ந்தும் சூரியனைப் போல் பிரகாசமாக ஒளிர்ந்தும் நிற்கின்றது. இந்த ஸ்தானத்தினில் மறைந்திருத்தலுக்கு வாய்ப்பே கிடையாது; அதுவுமன்றி, அச்சம் கொள்வதற்கோ மௌனமாய் இருப்பதற்கோ சந்தர்ப்பம் எதுவுமே கிடையாது.”24**

> **"இத்தவறிழைக்கப்பட்டோன், விஞ்ஞானங்கள், கலைகள், நல்வாழ்வு, செழுமை மற்றும் செல்வம் ஆகியவற்றின் கதவுகளைத் திறக்கக்கூடிய திறவுகோளாக விளங்கக் கூடியதை வெளிப்படையாகவும், சகலரும் பார்க்கும்படியாகவும், எல்லாக் காலங்களிலும், உலக மக்களின் முன்பாகவே பிரகடணப்படுத்தியுள்ளான். கொடுமைக்காரர்கள் இழைத்த அநீதிகள் அதி உயர்ந்த எழுதுகோளின் கிறீச்சுக் குரலை நிசப்தப்படுத்துவதில் வெற்றியடைவதிலோ, அதமர்கள் அல்லது துரோகிகளின் சந்தேகங்கள் அதி மேன்மையுடைய வாசகத்தை அவர் வெளிப்படுத்துவதை தடுக்கவோ இயலவில்லை."25**

பஹாவுல்லாவின் சமயத்திற்காகப் பாடுபடும் நாம், சிரமங்களின் எதிரில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

# பகுதி 11

அந்தப் படுமோசமான தினத்தன்று பஹாவுல்லா கொண்டுசெல்லப்பட்ட அந்த சிறையின் பெயரான 'சீயாச்-சால்,' என்பதின் அர்த்தம் "கருங்குழி" என்பதாகும். தெஹரானின் ஒரு பொதுக் குளியல் அறையின் நீர் தேக்கத்திற்கு ஆரம்பக் காலங்களில் பயன்பட்டு வந்த அந்தக் குழி நிகழ்காலத்தில் பயங்கர குற்றவாளிகளை அடைத்து வைக்கப் பயன்பட்ட ஒரு பாதாள நிலவறையாக இருந்தது.

jஅந்தச் சிறையை அடைய, காரிருள் கவிந்த நடைபாதை ஒன்றின் வழியாக நடத்திச் செல்லப்பட்டு, மூன்றுத் தளங்களாக உள்ள படிக்கட்டுகளின் கீழ் இறங்க வேண்டும். கும்மிருட்டாக இருந்த அவ்விடம், கடுங்குளிராக இருந்தது. தரை கழிவும், புழுப்பூச்சிகளால் நிறைந்தும் இருந்தது. தாம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பயங்கரமான நிலைமைகளை பஹாவுல்லா தாமே விவரிக்கின்றார்:

> **"யாம் வந்தடைந்தவுடன் ஒரு காரிருள் நிறைந்த தாழ்வாரம் வழியாக நடத்திச் செல்லப்பட்டோம், அங்கிருந்து மூன்று தளங்கள் கொண்ட படிக்கட்டுகள் வழியாக கீழிறங்கி தடுத்து வைக்கப்பட எமக்காக ஒதுக்கப்படிருந்த இடத்தை அடைந்தோம். அந்த நிலவரை கும்மிருட்டாக இருந்தது; எமது சக கைதிகளாக கிட்டத்தட்ட நூற்றைம்பது ஆன்மாக்கள் இருந்தனர்: திருடர்கள், கொலைகாரர்கள் மற்றும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள். அங்கு நெரிசலாக இருந்தபோதிலும், வெளியேற, நாங்கள் நுழையப்பயன்படுத்திய வழியைத் தவிர வேறு வழி இல்லை. அவ்விடத்தை எந்த எழுதுகோலும் வர்ணிக்க முடியாது, அல்லது அங்கு வீசிய துர்நாற்றத்தை எந்த நாவும் விவரிக்க முடியாது. அங்கு இருந்த பெரும்பாலான மனிதர்கள் உடுக்க உடையோ படுக்க படுக்கையோ இன்றி கிடந்தனர். அந்த அதி துர்நாற்றம் மிகுந்த, இருள் சூழ்ந்த இடத்தில் எமக்கு நேர்ந்தவற்றை இறைவன் ஒருவரே அறிவார்!"26**

இவ்வித கொடுமையான சூழ்நிலையிலேயே பஹாவுல்லாவும் பல பாப்-யிக்களும் ஷா மன்னனால் சிறை வைக்கப்பட்டனர். பஹாவுல்லாவின் பாதங்கள் கால்சட்டங்களில் வைத்துப் பூட்டப்பட்டன, அவரது கழுத்தைச் சுற்றி சுமார் 50 கிலோகிராம் எடையுள்ள சங்கிலி ஒன்று வைக்கப்பட்டது. முதல் மூன்று நாட்களுக்கு பஹாவுல்லாவுக்கும் அவருடன் இருந்த ஏனைய பாப்-யிக்களுக்கும் உண்பதற்கும் குடிப்பதற்கும் எதுவுமே வழங்கப்படவில்லை. பஹாவுல்லாவின் குடும்பத்தினர் அவருக்காக உணவு தயார் செய்து அதை அவரிடம் சேர்ப்பிக்குமாறு காவலர்களைக் கேட்டுக்கொள்வர். ஆரம்பத்தில் அவர்கள் மறுத்தாலும், காலப்போக்கில் அந்தக் குடும்பத்தினரின் வேண்டுகோளுக்கு காவலர்கள் செவிசாய்த்தனர். ஆனாலும் அந்த உணவு பஹாவுல்லாவை அடைகின்றதா, அல்லது ஏனைய கைதிகள் பசியோடிருக்கும் போது பஹாவுல்லா மட்டும் அந்த உணவை உண்பாரா என யாருக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை.

பஹாவுல்லாவும், கால்சட்டங்கள் பூட்டப்பட்டும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டும் கிடந்த ஏனைய சக கைதிகளும் ஒரே அறையில் குழுமிக் கிடந்தனர். ஒருவர் மற்றவரைப் பார்த்தபடி அவர்கள் இரு வரிசைகளாக அமர்த்தப்பட்டிருந்தனர். பஹாவுல்லா அக்கைதிகள் பாடுவதற்கு சில வரிகளை சொல்லிக் கொடுத்திருந்தார். அவர்களும் அவற்றை மிகுந்த ஊக்கத்துடன் ஒவ்வொரு நாள் இரவும் பாடுவர். " இறைவன் எனக்குப் போதுமானவர், மெய்யாகவே அவரே எல்லாம் நிறைந்தவர்! என ஒரு வரிசையினர் பாடுவர், மற்ற வரிசையினர், நம்புவோர் அவரை நம்பட்டும்", என மறுமொழி கூறுவர். அவர்களின் களிப்புடனான குரல் ஓசை அதிகாலை வரை

செவிமடுக்கப்படும். அவர்களின் பாடலானது அத்தகைய சக்திமிக்கதாக இருந்து, சீயாச்-சால் அருகிலேயே இருந்த அரண்மனை வரை ஒலித்து ஷா மன்னனின் காதுகளை எட்டியது. "இது என்ன ஒலி," என மன்னன் வினவியதாகவும், "இது பாப்-யிக்கள் அவர்களின் சிறையில் பாடும் கீதம்,"27 என அவர்கள் பதிலளித்தனர் எனவும் கூறப்படுகிறது. அது கேட்டு மன்னன் மௌனமுற்றான்.

ஒவ்வொரு நாளும் காவலர்கள் சிறையினுள் நுழைந்து, குறிப்பிட்ட ஒரு பாப்-யியின் பெயரைக் கூவி அழைத்து, எழுந்து கழுமரத்தடிக்குத் தங்களைப் பின்தொடர்ந்து வருமாறு அவருக்கு கட்டளையிடுவர். அப்பெயருக்குறியவர் உற்சாகத்துடன் அக்கட்டளைக்கு பதிலிறுப்பார். சங்கிலிகள் அகற்றப்பட்டவுடன், குதித்தெழுந்து, கட்டுக்கடங்காத களிப்புடன், அவர் பஹாவுல்லாவை அனுகி அவரை ஆலிங்கனம் செய்வார். பிறகு அவர் தமது சக கைதிகள் ஒவ்வொருவரையும் கட்டித்தழுவி, எதிர்பார்ப்பும் களிப்பும் நிறைந்த உள்ளத்துடன், தமக்காகக் காத்திருக்கும் மரணத்தை நோக்கிச் செல்வார். இந்த வீர ஆன்மாக்கள் ஒவ்வொருவருடைய தியாமரணத்திற்குப் பிறகு, பஹாவுல்லாவை நேசிக்க ஆரம்பித்திருந்த தண்டனை நிறைவேற்றுனர், பஹாவுல்லாவிடம் வந்து, தியாகமரணத்திற்குரியவரின் மரணம் பற்றிய சூழ்நிலை, கடைசி அவர் எத்தகைய களிப்புடன் அதைச் சகித்துக்கொண்டார், மற்றும் அவர்மீது தொடுக்கப்பட்ட வலி ஆகியவற்றைத் தெரிவிப்பார்.

1. பஹாவுல்லா சிறைவக்கப்பட்ட இடத்தின் பெயர் என்ன? ________________________________

2. சீயாச்-சால் என்பதன் அர்த்தமென்ன? ________________________________________________

3. ஆரம்பத்தில் சீயாச்-சால் எதற்குப் பயன்பட்டு வந்தது? __________________________________

________________________________________________________________________________

4. சீயாச்-சாலின் சூழ்நிலையை வர்ணிக்கவும்____________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

5. சியாச்'சாலுக்கு வந்தவுடன் பஹாவுல்லாவின் கழுத்தைச் சுற்றி என்ன வைக்கப்பட்டது? ___

_______________________________________________________________________________

6. அவரது கால்களில் என்ன பொருத்தப்பட்டது? ________________________________________

7. பஹாவுல்லாவும் அவரது சகாக்களும் அவர்களின் சிறையில் எவ்வாறு அமர்த்தப்பட்டிருந்தனர்? ____________________________________________________________

_______________________________________________________________________________

8. பஹாவுல்லா அவர்களுக்கு என்ன கற்றுக் கொடுத்திருந்தார்? __________________________

_______________________________________________________________________________

9. இரவு முழுவதும் ஒரு வரிசையில் உள்ள பாப்-யிக்கள் என்ன பாடுவர்? __________________

_______________________________________________________________________________

10. அதற்கு எதிர் வரிசையில் உள்ளோர் எவ்வாறு பதிலிறுப்பர்?____________________________

_______________________________________________________________________________

11. அரசன்பால் இந்த பாடலொலி என்ன விளைவை ஏற்படுத்தியது? _______________________

_______________________________________________________________________________

12. ஒவ்வொரு நாளும் சிறைக்காவலர்கள் பஹாவுல்லாவும் அவரது சகாக்களும் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறைக்கு வந்து பாப்-யிக்களில் ஒருவரின் பெயரைக் கூவியழைப்பார்கள். அதன் பின்னர் என்ன நடக்கும் என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்.

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

13. அவர்கள் சிறைவாச சூழ்நிலை மோசமாக இருந்தபோதிலும் பாப்-யிக்கள் ஏன் அத்தகைய மகிழ்ச்சியுடன் இருந்தனர் என்பது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?___________

__________________________________________________________________________

__________________________________________________________________________

## பகுதி 12

நமது சமயம் அடுத்தடுத்த நெருக்கடிகள் மற்றும் வெற்றிகள் ஆகியவற்றினால் மேம்பாடு காண்கிறது என்னும் ஆழமான கருத்தாக்கத்தை பஹாய் சமய சரித்திரம் சம்பந்தப்பட்ட மாணவர்கள் புறிந்துகொள்ளவேண்டும். எப்போதெல்லாம் அறியாமை, அநீதி, கொடுமை, மற்றும் வெறித்தன்மை எனும் ஆற்றல்கள் தொடர்ந்தாற்போல் சமயத்தைத் தாக்கி நெருக்கடிகளை உருவாக்குகின்றனவோ அப்போதெல்லாம் அதற்கு இணைவான அளவு உள்ளார்ந்த சக்தி விடுவிக்கப்பட்டு, அவ்வாற்றல்கள் எதிர்கொள்ளப்பட்டு, அது சமயத்தைப் புதிய வெற்றிகளுக்கு உந்தித்தள்ளி, அவ்வெற்றிகள் விரைவிலோ பின்னரோ முன்பு கற்பனை செய்யப்படாத மேலும் புதிய எதிர்ப்புகளைத் தூண்டிவிட்டு அது சமயத்தின் தெய்வீக சக்தியின் மேலும் ஓர் அளவை வெளிப்படுத்திட உதவுகிறது. சமயம், நெருக்கடிக்குப பின்னர் வெற்றி, நெருக்கடிக்குப் பின்னர் வெற்றி என நகர்ந்துகொண்டே இருப்பதுடன், அது முன் நோக்கிச் செல்வதை எந்த உலக சக்தியாலும் தடுத்திட முடியாது.

பாப் பெருமானாரின் குறுகிய சமயப்பணிக்காலமும் ஏற்கனவே இதே முறையைத்தான் பின்பற்றியது. ஆனால், நிகழ்கால நெருக்கடி எதிர்கொள்ளப்படமுடியாத ஒன்றென சாதாரண பார்வையாளர்கள் முடிவெடுத்திடலாம்: பாப் அவர்கள் தியாகமரணத்திற்கு ஆளானார். ஆயிரக்கணக்கிலான அவரது நம்பிக்கையாளர்கள், சொல்லொனா கொடுமையில் படுகொலைக்கு ஆளானார்கள். அவரது சிறந்த சீடர்கள் தியாகமரணமுற்றும், அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய அந்த ஒருவரும் படு இருள் சூழ்ந்த நிலவரையில் சங்கிலிகளால் பினைக்கப்பட்டிருந்தார். இது உண்மையில் அளவிடற்கரிய நெருக்கடியே, ஆனால், தொடர்ந்து வந்த வெற்றியோ மகிமைமிக்காக இருந்தது.

சீயாச்-சாலில், இறைவன் பஹாவுல்லாவுக்கு அவரது ஸ்தானத்தின் அதிமேன்மையை அறிவித்தார். இருள் சூழ்ந்தும், பேரசுத்தமான காற்றை சுவாசித்தும், கால்களில் விலங்கிடப்பட்டும், கனமான சங்கிலி அவரது கழுத்தை அழுத்திக்கொண்டும் இருந்த நிலையில், தமது ஆன்மாவில் இறைவெளிப்பாட்டின் ஆரம்ப அறிகுறிகளை பஹாவுல்லா பெற்றார். இவ்வித மோசமான சூழ்நிலையில்தான், "அதிபெரும் ஆவி" அவருக்குத் தன்னை வெளிப்படுத்தி, முன்னெழுந்து இறைவனின் வார்த்தையை எடுத்தியம்பிட அவருக்குக் கட்டளையிட்டது.

அப்போது, சில வேளைகளில் தமது சிரசிலிருந்து மார்பின் மீது, உயர்ந்த மலை உச்சியிலிருந்து கீழே மண்ணின் மீது விழும் மாபெரும் நீர்வீழ்ச்சியைப் போல் ஏதோ ஒன்று வழிந்தோடுவதைப் போல் அவர் உணர்வார். விண்ணுலகக் கண்ணி தமது முன்னே தோன்றி, தம்மை உலகங்களின் அதிநேசத்திற்குறியவர், இறைவனின் பேரழகு, மற்றும் இறை மாட்சிமையின் ஆற்றல் என அவரது அகத்திற்கும் புறத்திற்கும் உரைத்தது. அவர் தம்மாலும் தமது எழுகோலாலும், மற்றும் இறைவன் தோற்றுவிக்கக்கூடியோர்களின் உதவியாலும், வெற்றிபெறுவார் என்னும் வாக்குறுதியும் அளிக்கப் பெற்றார்.

இவ்வாறாக, கருங்குழியின் இருளிலிருந்து உண்மை என்னும் சூரியன் உதித்தது. பாப் பெருமானாரின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது. பஹாய் திரேவெளிப்பாடு பிறந்தது. இருப்பினும் அங்கு என்ன நடந்தது என்பதை பஹாவுல்லா யாருக்கும் தெரியப்படுத்தவில்லை. தமது அருட்பணியை அறிவிக்க, இறைவன் நிர்ணயித்துள்ள காலத்திற்காக அவர் காத்திருப்பார்.

1. பஹாவுல்லா சிறையிலிடப்பட்டபோது பாப்'யி சமூகம் அது இருந்த நெருக்கடி நிலை எவ்வளவு கடுமையாக இருந்தது என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளால் விவரிக்கவும்.

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

2. இந்தத் தீவிர நெருக்கடியைத் தொடர்ந்து வந்த வெற்றி எது?______________________________

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

## பகுதி 13

மானிடமானது, பஹாவுல்லாவின் சொந்த வார்த்தைகளில் பதிவு செய்யப்பட்ட, சமய வரலாற்றில் நிகழ்ந்திட்ட இந்தப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைப் பெறுதற்கு மானிடம் பாக்கியம் செய்திருக்கவேண்டும்.

கடவுளின் திருவெளிப்பாடு அவரது ஆன்மாவை முதலில் நிரப்பிய முறையை பஹாவுல்லா நினைவுகூர்கையில் அவர் கூறுகின்றார்:

> **"ஒரு நாள் இரவு, கனவொன்றில், இம்மேன்மைமிகு வார்த்தைகள் நாற்புறங்களிலும் செவிமடுக்கப்பட்டன: `மெய்யாகவே, உம்மை உம்மூலமாகவும் உமது எழுதுகோல் மூலமாகவும் வெற்றிபெறச் செய்திடுவோம். உமக்கு நேர்ந்தவற்றைக் கண்டு நீர் மனங் கலங்க வேண்டாம், பயமுறவும் வேண்டாம் ஏனென்றால், நீர் பாதுகாப்புடன் இருக்கின்றீர். கூடிய விரைவில் இறைவன் -- உம்மூலமாகவும், தம்மை அறிந்துகொண்டோரின் இதயங்களை உயிர்பெறச் செய்ய பயன்படுத்திட்ட, அந்த உமது நாமத்தின் மூலமாகவும், உமக்கு உதவக்கூடிய உலகின் பொக்கிஷங்களை வெளிப்படுத்துவார்.'" 30**

இந்தப் பத்தியில், ஒரு நாள் இரவு, ஒரு கனவில், இவ்வார்த்தைகள் நாலாபுறமும் செவிமடுக்கப்பட்டதாக பஹாவுல்லா கூறுகின்றார்: `மெய்யாகவே, உம்மை ________________ உமது ________________ மூலமாகவும் ________________ செய்திடுவோம். _________ ________________ கண்டு நீர் மனங் கலங்க வேண்டாம், ________________ வேண்டாம் ஏனென்றால், நீர் ________________ இருக்கின்றீர். கூடிய விரைவில் இறைவன் -- ________________, தம்மை ________________ இதயங்களை ________________ செய்ய பயன்படுத்திட்ட, அந்த உமது ________________ மூலமாகவும், உமக்கு உதவக்கூடிய உலகின் ________________ ________________.'"

வேறொரு பத்தியில், இறைவனின் வெளிப்பாடு அவர்மேல் உண்டாக்கிய விளைவைப் பற்றி விவரிக்கின்றார்:

> **"தெஹரான் சிறையில் நான் வீற்றிருந்த அந்த நாள்களில், சங்கிலிகளின் இரணப்படுத்தும் பாரத்தினாலும் நாற்றம் மிகுந்த காற்றினாலும் யான் சிறிதளவே துயில்கொள்ள முடிந்த போதிலும், அவ்வப்போது துயில்கொள்ள முடிந்த அத்தருணங்களில், மலை உச்சியிலிருந்து கீழே பூமியின் மீது வீழ்ந்திடும் ஒரு மாபெரும் நீர்வீழ்ச்சியைப் போன்ற ஏதோ ஒன்று, எமது சிரசிலிருந்து மார்பின் மீது வழிந்தோடுவதைப் போன்று யான் உணர்ந்தேன். அதன் விளைவாக, எமது உடல் உறுப்புகள் ஒவ்வொன்றிலும் தீ மூட்டப்படும். அவ்வேளைகளில் எந்த மனிதனுமே செவிமடுக்க முடியாதவற்றை எமது நா உச்சரித்தது."29**

"தெஹரான் _____________ பஹாவுல்லா வீற்றிருந்த அந்த நாள்களில், _____________ _____________ பாரத்தினாலும் _____________ மிகுந்த _____________ அவர் சிறிதளவே _____________ முடிந்தது. அவர் அவ்வப்போது சிறிதளவே _____________ முடிந்த தருணங்களில், மலை உச்சியிலிருந்து கீழே பூமியின் மீது _____________ ஒரு மாபெரும் நீர்வீழ்ச்சியைப் போன்ற

_____________ _____________, எமது _____________ _____________ மீது வழிந்தோடுவதைப் போன்று அவர் உணர்ந்தார். அதன் விளைவாக, எமது உடல் உறுப்புகள் ஒவ்வொன்றிலும் ______ _____________. அவ்வேளைகளில் எந்த மனிதனுமே _____________ _____________ அவரது நா உச்சரித்தது." என அவர் கூறுகின்றார்.

இருந்தும், மற்றொரு பத்தியில் "அதிபெரும் ஆவியை" அடையாளப்படுத்தும் எவ்வாறு தமக்கும் முன் தோன்றியது என்பதை வர்ணிக்கின்றார்:

**"இடுக்கண்களால் நான் சூழப்பட்டிருந்த வேளை அதி அற்புதமானதும், இனிமையானதுமான ஒரு குரல், எனது சிரசிற்கு மேல், என்னை விளித்திடக் கேட்டேன். எனது முகத்தை திருப்ப, -- எனது பிரபுவின் நாமத்தின் ஞாபகத்தின் உருவாக -- ஒரு கண்ணிகை என் முன்னே வானவெளியில் தோன்றிடக் கண்டேன். அவளது ஆன்மாவில் அவள் அடைந்திட்ட ஆனந்தத்தால் அவளது வதனம் இறைவனின் நல்விருப்பம் எனும் ஆபரணம் பூண்டு பிரகாசித்தும், அவளது கண்ணங்கள் சர்வ-தயை மிகுந்தவரின் பிரகாசத்தினால் ஒளிர்ந்தும் கொண்டிருந்தன. மனிதர்களின் இதயம் மற்றும் மனம் ஆகியவற்றை ஈர்ப்புறச் செய்யும் கூக்குரல் ஒன்றை பூமிக்கும் சுவர்க்கத்திற்கும் இடையே அவள் எழுப்பிக்கொண்டிருந்தாள். எனது ஆன்மா மற்றும் இறைவனின் நற்பெயர் பெற்ற ஊழியர்களின் ஆன்மாக்களை களிப்புறச் செய்யங்கூடிய செய்திகளை எனது அகம் புறம் ஆகியவற்றின்பால் அவள் வெளியிட்டுக் கொண்டிருந்தாள். அவள் எனது சிரசை தனது விரலால் சுட்டி, விண்ணுலகில் உள்ள அனைவரையும் மற்றும் மண்ணுலகில் உள்ள அனைவரையும் விளித்து: `இறைவன் மீது ஆணையாக, உலகங்களின் அதிநேசத்திற்குறியது இதுவே, இருந்தும் நீங்கள் அதை உணரவில்லை,' எனக் கூறினாள். நீங்கள் புறிந்தகொள்ள முடிந்தவர்களாக இருந்தால், இதுவே உங்களிடையே உள்ள இறைவனின் அழகு, மற்றும் உங்கள் உள் வீற்றிருக்கும் அவரது ஆதிபத்யத்தின் ஆற்றல். நீங்கள் உனரமுடிந்தவர்களாக இருந்தால், இதுவே இறைவன் மற்றும் அவரது போக்கிஷத்தின் மர்மம், வெளிப்பாடு மற்றும் சிருஷ்டி ஆகிய இராஜ்யங்களில் உள்ள அனைவருக்கும் இறைவனின் சமயம் மற்றும் அவரது மகிமையும் ஆகும்."'30**

துயரங்களால் சூழ்ந்துள்ள வேளையில், _______ _______________, ______ _______________ குரல், தமது தலைக்கு மேல் குரல் எழுப்புவதைத் தாம் செவிமடுத்ததாக பஹாவுல்லா கூறுகின்றார்: எனது முகத்தை திருப்ப, ஒரு கண்ணிகை என் முன்னே ________________ ________________ கண்டேன். அவளது ஆன்மாவில் அவள் அடைந்திட்ட ஆனந்தத்தால் அவளது வதனம் ________________ ________________ என்னும் ________________ பூண்டு பிரகாசித்தும், அவளது ________________ ________________ மிகுந்தவரின் ________________ ________________ கொண்டிருந்தன. எனது ________________ மற்றும் இறைவனின் ________________ பெற்ற ________________ ஆன்மாக்களை களிப்புறச் செய்யக்கூடிய செய்திகளை எனது ________________ ________________ ஆகியவற்றின்பால் அவள் வெளியிட்டுக் கொண்டிருந்தாள். அவள் எனது சிரசை தனது விரலால் சுட்டி, ________________ உள்ள அனைவரையும் மற்றும் ________________ உள்ள அனைவரையும் விளித்து: `இறைவன் மீது ஆணையாக, ________________ ________________ இதுவே, இருந்தும் நீங்கள் அதை உணரவில்லை. நீங்கள் புறிந்தகொள்ள முடிந்தவர்களாக இருந்தால், இதுவே உங்களிடையே உள்ள ________________ ________________, மற்றும் உங்கள் ___ ________________ அவரது ________________ ஆற்றல். நீங்கள் உனரமுடிந்தவர்களாக இருந்தால், இதுவே இறைவன் மற்றும்

அவரது _______________ _______________, _______________ மற்றும் _______________ ஆகிய இராஜ்யங்களில் உள்ள அனைவருக்கும் இறைவனின் _______________ மற்றும் அவரது _______________ ஆகும்.

## பகுதி 14

நெருக்கடி மற்றும் வெற்றி என்னும் கருத்தாக்கம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருப்பதனால், தனது பாதையில் தோன்றிடும் அனைத்து இடையூறுகளையும் களைந்திடும் சமயத்தின் சக்தி குறித்து, சற்று நிறுத்தி இவ்வேளை சிந்திப்பது பயனுள்ளதாக இருக்கும். அதற்கு உதவிட, பஹாவுல்லாவின் வாசகங்களிருந்தும் பாதுகாப்பாளர் ஷோகி எஃபெண்டியின் கடிதம் ஒன்றிலிருந்தும் எடுக்கப்பட்ட பின்வரும் மேற்கோள்களைப் படித்திட ஆலோசனை கூறப்படுகின்றீர்கள். அதன் பின்னர் பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.

> **“இவ்வருளாட்சிக்காலத்தில், பயனற்றவர்களும், அறிவிலிகளும், எவ்வாறு, படுகொலை, சூறையாடுதல், நாடுகடத்தல் ஆகிய சாதனங்களைக் கொண்டு, தெய்வீகச்சக்தி என்னும் கரம் ஏற்றியுள்ள தீபத்தினை அணைத்திடவும், அதன் நித்தியப் புகழொளியினை மங்கச் செய்திடவும் தங்களால் முடியும் என்று ஆவலாகக் கற்பனைச்செய்கின்றனர் என்பதைப் பாருங்கள். அத்தகைய இன்னல்கள் இத்தீபத்தின் சுடருக்கு உணவாகும் எண்ணெய் என்பதை அவர்கள், எந்தளவு உணராதிருக்கின்றனர்! அவ்வாறானதுதான், இறைவனின் தன்மை மாற்றும் ஆற்றல். அவர் எதனை விரும்புகின்றாரோ, அதனை மாற்றுவார்; அவர், மெய்யாகவே, சகலத்தின் மீதும் சக்தி கொண்டுள்ளவர்.”[31]**

> **“இச்சமயம், பிற சமயங்களைப் போல், அதனை தாக்கிடும் எதிர்ப்புச் சக்திகளை வெற்றியுடன் எதிர்கொண்டாலன்றி அது விளைவுத்திறத்துடன் ஸ்தாபிக்கப்பட முடியாது. இச்சமயத்தின் சரித்திரமே அதற்கு நல்லதொரு நிரூபணமாகும். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டோர்களின் பங்காக சோதனைகளும் துன்புறுத்தல்களும் எப்போதும் இருந்து வந்துள்ளன, இனி என்றும் அவ்வாறே இருந்தும் வரும். ஆனால், மாறுவேடம் தாங்கி வந்துள்ள ஆசீர்வாதங்களே இவை என அவர்கள் கொள்ளவேண்டும், ஏனென்றால் இவற்றின் மூலமாக அவர்களது நம்பிக்கை உயிர்ப்பிக்கப்பட்டும், தூய்மைபடுத்தப்பட்டும், பலப்படுத்தப்படும். பஹாவுல்லா, இத்தகைய கடும் சோதனைகளை சமயம் என்னும் தீபத்தின் ஒளியை அதிகரிக்கச் செய்யும் எண்ணெயுடன் ஒப்பிடுகின்றார்."32**

தொடர்ச்சியான நெருக்கடிகள் மற்றும் வெற்றிகள் மூலம் சமயம் மேம்பாடு காண்கிறது என்னும் அறிவு, சமயத்திற்கும் மனிதகுலத்திற்கும் ஒரு சேவை பாதையில் பயணிப்பதற்கான உங்கள் தீர்மானத்திற்கு எவ்வாறு உதவுகிறது?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 15

பஹாவுல்லா சீயா-ச்சால் சிறையில் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு வீற்றிருந்த போது, அவரது எதிரிகள், அரசனிடமிருந்து அவரது மரண தண்டனைக்கான அனுமதியை பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், உயர்நிலையிலும் கீழ்நிலையிலும் இருந்த அனைவராலும் பஹாவுல்லா நேசிக்கப்பட்டார். அதன் காரணமாக அவரைக் கொல்வது அவ்வளவு சுலபமாக இல்லை. அரசரைக் கொல்ல முயன்றார் என்பதுடன் பஹாவுல்லாவைத் தொடர்புப்படுத்துவதற்கு ஆதாரம் தேவைப்பட்டது. எந்த அளவுக்கு அவர்கள் அத்தகைய ஆதாரத்தைத் திரட்ட முயன்றார்களோ, அந்த அளவுக்கு அவர் முற்றிலும் நிரபராதி என்பது தெளிவாயிற்று. அவரைக் கொல்ல முடியாத நிலையில், இரக்கமற்ற அவரது எதிரிகள் அவரது உணவில் விஷம் கலந்திடத் தீர்மானித்தனர். உணவில் கலக்கப்பட்ட விஷம் மிகவும் கடுமையானதாக இருந்ததால், அதன் ஆரம்ப விளைவுகள் விரைவில் கண்டுகொள்ளப்பட்டு, பஹாவுல்லா அதற்கு மேல் அவ்வுணவை உண்ணவில்லை. இறுதியில், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு பஹாவுல்லாவை விடுதலை செய்வது தவிர வேறு வழியில்லாமல் போயிற்று. இருந்த போதும் அவர் பாரசீகத்தை விட்டு வெளியேறி நாடு கடந்து வாழ வேண்டும் என்னும் நிபந்தனையின் பேரிலேயே அவரை விடுவித்தனர்.

பஹாவுல்லா நான்கு மாதங்கள் சிறை வாசம் அனுபவித்திருந்தார். அவர் இப்போது உடல்நலம் குன்றி சோர்வுற்றும் இருந்தார். சிறைவாசத்தின் மனிதாபிமானமற்ற நிலைமையும் கழுத்தைச் சுற்றியிருந்து ஐம்பது கிலோ எடை கொண்ட சங்கிலியும் விஷம் கலந்த உணவும் அவரை மிகவும் பலவீனப்படுத்தி, அருகிலிருந்து அவரை கவனித்துக்கொள்ளும் அளவுக்கு அவரைப் படுக்கையிலும் வீழ்த்தியது. சங்கிலி வளையங்கள் அவரது கழுத்தில் ஆழ்ந்தப் புண்களை உருவாக்கி விட்டிருந்தன. அவை காலப்போக்கில் ஆறியபோதும், அவற்றின் வடுக்கள் அவரது வாழ்வின் இறுதி வரை நீடித்திருந்தன. இதற்கிடையில் அவரது குடும்பத்தினர் ஒரு மாத கால அவகாசத்திற்குள் கடுமையான பிரயாணத்திற்குத் தயாராக வேண்டிய நிலையில் இருந்தனர். தாம் செல்லக் கூடிய நாட்டை தாமே சுதந்திரமாகத் தீர்மானிக்க பஹாவுல்லாவிற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர், அன்று ஒட்டமான் சாம்ராஜ்யத்தின் நகரங்களில் ஒன்றாகவும் இன்று இராக் நாட்டின் தலைநகராவும் உள்ள பாக்தாத்தைத் தேர்ந்தெடுத்தார்.

அந்தப் பிரயாணம் ஜனவரி 12-லிருந்து, அதே வருடம், அதாவது 1853 ஏப்ரல் 8-ஆம் தேதி வரை நீடித்தது. அது குளிர்காலத்தின் நடுமத்தியாக இருந்து, கடுங்குளிர் நிறைந்த இரானின் வடக்குப் பிரதேசத்தின் வழியே பஹாவுல்லாவும் அவரது குடும்பத்தினரும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. பிரயானத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் மிகவும் குறைவாக இருந்தபடியால் அவர்கள் வழிநெடுக சிறிதளவு உணவுடன் திருப்திகொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் இந்தச் சிறிய பிரயாணிகள் கூட்டம் எல்லாம் வல்ல இறைவனால் காக்கப்பட்டு, அவரது தவறா உதவியின் வழி அனைவரும் பாதுகாப்புடன் பாக்தாத் வந்து சேர்ந்தனர்.

இரான் நாடு, பஹாவுல்லா இனி என்றுமே தமது தாயகம் திரும்ப முடியாத நிலையில் அவரை வெளியேறக் கட்டாயப்படுத்தி, அவரது பிரசன்னம் என்னும் கிருபையைத் தனக்குத் தானே இழந்துவிட்டிருந்தது. உலகின் விலைமதிப்பற்ற பொக்கிஷமான பஹாவுல்லாவிற்கு இராக் நாடு இப்போது தாயகமாகப் போகின்றது. பஹாவுல்லாவின் தேசப் பிரஷ்டம் பற்றி ஒரு பிரபல பஹாய் சரித்திர ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்:

> “பஹாவுல்லா நாட்டின் எல்லையை நெருங்கிய போது, ஒரு காலக்கட்டம் அதன் முடிவுக்கு வந்தது இரான் நாட்டு மக்கள் தாங்கள் அடைந்த பேரிழப்பைப் பற்றி அறிந்திருந்தனரா? அறியாமையில் வாழ்ந்தும், மதவெறியில் மூழ்கியும், தப்பெண்ணங்களால் குருடாகியும் சுயநலம் மிக்கவர்களால் வழிநடத்தப் பெற்றும், கபடங்களால் ஏமாற்றப்பட்டுமிருந்த அவர்கள் பார்க்கவோ அறியவோ முடியாத நிலையில் இருந்தனர். இவ்வாறாக, உலகின் மீட்பாளர் அவர்கள் மத்தியிலிருந்து வெளியேறினார். ஒரு காலத்தில், ஏழைகள் மற்றும் பணக்காரர்களாலும் உயர்ந்தோர் மற்றும் தாழ்ந்தோர்களாலும், அரசர் முதல் ஆண்டி வரையிலும், நேசிக்கப்பட்டும் மதிக்கப்பட்டும் இருந்தவர், இப்போது, எந்த மக்கள் மீது சதா தமது தயை, அன்பு, நியாயம், பரோபகாரம் ஆகியவற்றைப் பொழிந்தாரோ, அதே மக்களால் கைவிடப்பட்டிருந்தார். இரான் நாடு பஹாவுல்லாவின் பிரசன்னத்தை இழந்திருந்தாலும், அந்த நாட்டிலும் சரி அல்லது வேறு எந்த நாடானாலும், அங்கு அவரது திருஆவி இல்லாமல் இருந்திடுமா?"33

1. பஹாவுல்லாவின் எதிரிகளால் பஹாவுல்லாவின் மரண தண்டனையை ஏன் பெற முடியவில்லை ______________________________
______________________________
______________________________
______________________________

2. அரசன் மீதான கொலை முயற்சியில் பஹாவுல்லாவை சம்பந்தப்படுத்துவதில் தோல்வியுற்ற எதிரிகள் மேற்கொண்டு என்ன செய்தனர்? ______________________________
______________________________
______________________________

3. சீயா' ச்சால் சிறையில் பஹாவுல்லா எவ்வளவு காலம் இருந்தார்? ______________________________

4. என்ன நிபந்தனையின் அடிப்படையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்? ______________________________
______________________________

5. பஹாவுல்லா, நாடுகடந்து வாழ எவ்விடத்தைத் தேர்வு செய்தார்? ______________________________

6. அந்த நேரத்தில், பாக்தாத் நகரம் எந்தப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது? இன்று அது எந்த நாட்டின் தலைநகரமாக இருக்கின்றது? ___________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

7. பஹாவுல்லாவும் அவரது குடும்பத்தினரும் பாக்தாத்திற்கான தங்கள் பயணத்தை எந்தத் தேதியில் ஆரம்பித்தனர்? மூன்று மாதங்கள் கழித்து அவர்களின் பயணம் எந்தத் தேதியில் முடிவுற்றது? ___________________________________________________________________

___________________________________________________________________________

8. அவர்கள் பிரயாணம் பற்றிய சூழ்நிலைகளை விவரிக்கவும்

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

# பகுதி 16

பஹாவுல்லா வெளிப்படுத்திய பின்வரும் பிரார்த்தனை, சீயாச்சால் சிறைவாசத்திலும், அதைத் தொடர்ந்து வந்த மாதங்களினூடும் அவர் அனுபவித்தத் துன்பங்கள் பற்றி நமக்கு ஒரு கண்ணோட்டத்தைத் தருகின்றது.

> **"எனதாண்டவரே, என் பிரபுவே, எனதாவலே!... உமது நிறைவான ஆற்றலின் சக்தியால், இந்த அணுவளவு தூசியைப் படைத்து, எவருமே விலங்கிட முடியாத உமதுக் கரங்களைக் கொண்டு அவனைப் பேணி வளர்த்துள்ளீர்... எந்த நாவுமே வர்ணிக்கவியலாத, அல்லது எந்த நிருபமும் போதுமான அளவு விவரிக்கவியலாத சோதனைகளையும் துன்பங்களையும் அவனுக்கு விதித்துள்ளீர். இறுதியில், பட்டின் ஸ்பரிசமே பட்டுப் பழகிப்போன அந்தக் கழுத்தில் தாங்கள் பலமான சங்கிலிகள் கொண்டுப் பிணைத்தீர், ஜரிகைகளும், மிருதுவான பட்டும் கொண்டு சுகித்திருக்கச் செய்த உடலைப் பாதாள நிலவரை என்னும் இழிவுக்கு ஆளாக்கியுள்ளீர். உமது ஆணை என்னை எண்ணற்ற தளைகள் கொண்டு பிணைத்தும், எனது கழுத்தை சுற்றி எவருமே அறுக்க முடியாத சங்கிலிகள் மாட்டப்படவும் செய்துள்ளது. கடந்து சென்றுள்ள பல வருடங்களில், இன்னல்கள், தயை என்னும் மழையோவென என் மீது பெய்துள்ளன. . . சங்கிலிகள்**

**மற்றும் தளைகளின் சுமை என்னைத் துயில் கொள்ள முடியாமற் செய்த இரவுகள்தான் எத்தனை, மனிதர்களின் கரங்களும் நாவுகளும் எனக்கு இழைத்தவற்றின் காரணமாக நான் கண்ட அமைதியும் மனசாந்தியுமற்ற எண்ணிறந்த நாட்கள்தான் எத்தனை! யாவற்றையும் அரவணக்கும் உமது தயையின் வழி வனத்தில் உள்ள மிருகங்களுக்கும் தாங்கள் வழங்கியுள்ள அன்னம், நீர் இரண்டும் கூட சில காலம் அவர்கள் இச் சேவகனுக்கு வழங்கவில்லை; உமது சமயத்தை நீத்தவர்களுக்குக் கூட வழங்க மறுக்கப்பட்டவற்றை அவர்கள் என்மீது சுமத்தினர்; இறுதியில், உமது ஆணை மாற்றமுடியாதபடி நிச்சயிக்கப்பட்டும் மெலிந்த தேகம் கொண்ட ஆண்கள் மற்றும் மழலைப் பருவ குழந்தைள் பலருடன், பேசக் கூட இயலாத அளவு குளிர் மிகுந்தும், நகரக்கூட முடியாத அளவு பனிக்கட்டியும் பனியும் நிறைந்த இந்தக் காலத்தில் இச் சேவகனைப் பாரசீகத்தை விடுத்து வெளியேறும்படி உமது ஆணை கட்டளையிட்டது.”34**

மேற்கண்ட பிரார்த்தனையை நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம். ஆனால் நீங்கள் அதை பல முறை படித்தாலும், பஹாவுல்லாவின் துன்பம் குறித்த சில கூற்றுகள் உங்கள் மனதில் பதிந்து விடும்.

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

_________________________________________________________________________________

## பகுதி 17

பாக்தாத் நகரின் பழம்பகுதியில், பஹாவுல்லா ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தினார். அவர் வருகைக்குப் பிந்திய காலங்களில் அதிகரித்த அளவிலான பாப்'யிகள் பாக்தாத்திற்கு வர ஆரம்பித்தனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்களுள் பலர் பரிதாபமான நிலைக்கு ஆளகியிருந்தனர்; அவர்கள் குழம்பிய நிலையிலும், பரிதாபத்துடனும் காணப்பட்டனர்; பலர் பாப் பெருமானாரின் நம்பிக்கையாளர் எவரும் செய்யத்தகாத காரியங்களையெல்லாம் செய்தனர். அங்கு வருகைதந்த அவனைவரையும் கட்டற்ற அன்புடன் பஹாவுல்லா வரவேற்று அவர்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தவும், அவர்களின் புத்துணர்வு மீழவும் உதவி புறிந்தார். அவரது செல்வாக்கில் பாப்'யி சமூகத்தின் நிலை மாற்றங்கண்டு நம்பிக்கையும் உருவெடுத்தது. ஆனால்,

அந்தோ, ஒரு புதிய நெருக்கடி உருவாகத் தொடங்கியது. இம்முறை அதன் மூலாதாரம் சமூகத்திற்கு உள்ளேயே இருந்தது. இந்தத் துரதிர்ஷ்டத்தின் மூலகர்த்தா, பாப் பெருமானாரின் வாரிசு எனத் கோரிக்கொண்ட பஹாவுல்லாவின் ஒன்றுவிட்ட தம்பி மிர்ஸா யாஹ்யா அன்றி வேறு யாரும் இலர்.

உண்மையில், பாப் பெருமானார் தமக்குப் பின் தமது வாரிசாக எவரையும் நியமிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக நினைக்கவில்லை, ஏனெனில் வெகு விரைவில் வாக்களிக்கப்பட்டவர் தோன்றுவார் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் செய்தது யாதெனில், பஹாவுல்லா மற்றும் நம்பகமான சீடர் ஒருவரின் ஆலோசனைக்கேற்ப மிர்ஸா யஹ்யாவை அதிகாரங்கள் ஏதும் அற்ற தலைவராக நியமித்தார். இது பஹாவுல்லா சமயத்தைப் பத்திரமாக மேம்படுத்த உதவிடும். தனது சிறுவயது முதற்கொண்டு மிர்ஸா யஹ்யா பஹாவுல்லாவின் அன்பையும் அரவணைப்பையும் அதிகம் பெற்றிருந்தார். இருந்தும், அவர் தன்னை பேராசை மிக்கவர், ஒரு கோழை என்பதை நிரூபித்தார். பாப் பெருமானாரின் உயிர்த்தியாகம் மிர்ஸா யாஹ்யாவை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி, அவர் தமது நம்பிக்கையை அடியோடு கைவிடும் நிலைக்குச் சென்றிருந்தார். அவர் மாஸிந்தரான் மலைப்பிரதேசத்தில் 'தர்வீஷ்' எனப்படும் ஒருவித யாசககோலம் பூண்டு பல காலம் சுற்றித் திரிந்தார். அவரது வெட்கக்கேடான நடத்தையின் விளைவாக அவர் பல பாப்'யிக்களை சமயத்தை விட்டு விலகிடச் செய்தார். ஒவ்வொன்றாகப் பல வேடங்கள் பூண்டு அவர் இறுதியாக பாக்தாத் வந்தடைந்து, வாணிபத்தில் ஈடுபடும் பொருட்டு பஹாவுல்லாவிடம் இருந்து ஒரு தொகையைப் பெற்று அந்நகரத்தின் ஒரு பகுதியில் ஒரு பினாமியாக வாழ்ந்திருந்தார்.

பாப் பெருமானாரின் நம்பிக்கையாளர்கள் பஹாவுல்லாவின்பால் காட்டிய அதிகரித்த அளவிலான மரியாதையும் அன்பும், அத்துடன் நகர அதிகாரிகளிடையே அவர் பெறத் தொடங்கியிருந்த செல்வாக்கும் மிர்ஸா யஹ்யாவின் மீது ஒரு மோசமான விளைவை ஏற்படுத்தியது. அவரது பொறாமை உணர்ச்சி கிளரப்பட்டு, அது அத்தகைய தீவிரத்துடன் எரிந்ததானது, அது தகைமையின் ஒவ்வொரு அறிகுறியையும் அழித்துவிட்டிருந்தது. தன்னைவிட அதி வெட்கக்கேடான நடத்தையுடைய வேறொரு சகாவின் துனையுடன், பாப்'யிகளிடையே பஹாவுல்லாவின் நோக்கங்கள்பால் சந்தேக வித்துகளை விதைக்கவும் முற்பட்டார். மீண்டும் சந்தேகம், பீதி மற்றும் வீண் கற்பனைகள் என்னும் மேகங்கள் பாப்'இ சமூகத்தைச் சூழ்ந்தது. அமைதி மற்றும் சாந்தம் நிலவிய அந்தக் குறுகிய காலம் ஒரு முடிவிற்கு வந்து பஹாவுல்லாவின் துன்பங்களும் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்தன.

1854-ஆம் வருடம் ஏப்ரல் 10-ஆம் தேதி காலையன்று துயில் கலைந்த பஹாவுல்லாவின் குடும்பத்தினர், அவர் எங்கோ சென்றுவிட்டிருப்பதைக் கண்டனர். தமது நோக்கத்தையோ செல்லும் இடத்தையோ அவர் யாரிடமும் தெரிவிக்காமல் நகரத்தை விட்டகன்றுவிட்டார். மிர்ஸா யஹ்யாவின் நடத்தை எதை நோக்கிச் செல்கின்றது என்பதை அறிந்து, பஹாவுல்லா பாக்தாத் நகருக்கு வடகிழக்கே உள்ள குர்திஸ்தான் மலைப் பிராந்தியத்திற்குச் சென்றுவிட்டார். “யாம் தனியிடம் சென்றதின் ஒரே நோக்கம், நம்பிக்கையாளர்களின் மத்தியில் இணக்கமின்மைக்குக் காரணமாக ஆவதைத் தவிர்த்தலும், எமது தோழர்களின் குழப்பத்திற்குக் காரணமாக அமையாதிருப்பதும், எந்த ஆன்மாவுக்கும் தீங்கு விளைவிப்பதற்கு மூலகாரணமாக இல்லாமலிருப்பதும், எந்த உள்ளமும் புண்படுவதற்கு காரணமாக அமையாதிருப்பதுமேயாகும்.”[35]

சுலைமானிய்யா நகரத்திலிருந்து சிறிது தூரத்திலிருந்த வனப் பிரதேசத்தில், தனிமையில் இறைவனுடன் தொடர்பு கொண்டு பஹாவுல்லா வாழ்ந்தார். சிறிதளவு உணவுடன் அவர்

திருப்தியடைந்தார். சில நேரங்களில் சுற்று வட்டாரத்தில் வாழும் இடையர்களிடமிருந்து பால் கிட்டியது, மற்றபடி குறைந்த பட்ச வாழ்க்கைத் தேவைகளைப் பெற்றிட சில வேளைகளில் நகரத்திற்கு செல்வதுண்டு. இவ்வாறு, குறைந்த அளவிலானத் தொடர்பாகவே இது இருந்தபோதிலும், அப்பிராந்திய மக்களின் கண்களிலிருந்து பஹாவுல்லாவின் மகத்துவம் மறைத்து வைக்கப்பட முடியவில்லை. அவரது அன்பும் விவேகமும் சுலைமானிய்யா மக்களைக் கவர்ந்தது; அவரது புகழ் சுற்றுவட்டாரங்களுக்கும் பரவிட ஆரம்பித்தது. அசாதாரண விவேகமும், சொல்வன்மையும் மிக்க ஒருவர் குர்திஸ்தான் பிரதேசத்தில் வாழ்கிறார் என்னும் செய்தி இறுதியாக பாக்தாத்தையும் எட்டியது. அவரது குடும்பம், அத்தகையவர் பஹாவுல்லாவன்றி வேறு யாராகவும் இருக்க முடியாது என உணர்ந்து, பஹாவுல்லாவைத் திரும்பி வருமாறு இறைஞ்சிட நம்பிக்கைக்குப் பாத்திரமான நம்பிக்கையாளரை அனுப்பினர். பஹாவுல்லாவும் மனமிறங்கி அவர்களின் வேண்டுதலை ஏற்று, தமது இரண்டு வருடகால விலகலை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார்.

1. பாக்தாத்திற்கு பஹாவுல்லா வந்தபோது, அங்கு வருகைத் தந்த பாப்'இகளின் என்ன நிலைமையில் இருந்தனர்? ______________________________________________

   ______________________________________________________________

2. அவர்கள் இவ்விதச் சூழ்நிலைக்கு ஆளானது ஏன்? ____________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

3. பஹாவுல்லாவின் செல்வாக்கின் கீழ் பாப்'யி சமூகத்திற்கு என்ன நேர ஆரம்பித்தது?______

   ______________________________________________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

4. பாப் பெருமானார் தமக்கு வாரிசாக யாரையாவது நியமித்திருந்தாரா? ______________

5. அதிகாரமற்ற தலைவராக பாப் யாரைப் பெயரிட்டிருந்தார்? ______________________

6. பஹாவுல்லாவுடனான மிர்ஸா யஹ்யாவின் உறவு யாது? ________________________

7. மிர்ஸா யஹ்யாவின் நடத்தையை வர்ணிக்கவும்? ____________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

8. பாப் அவர்களின் மரணத்திற்குப் பின் மிர்ஸா யஹ்யா என்ன செய்தார்? ____________

   ______________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

9. பாப்'யி சமூகத்தின்பால் பஹாவுல்லாவின் அதிகரித்த செல்வாக்கானது மிர்ஸா யஹ்யா மீது என்ன விளைவை ஏற்படுத்தியது? ______________________________________________

______________________________________________________________________________

10. மிர்ஸா யஹ்யாவின் நடத்தையின் விளைவைக் கண்ட பஹாவுல்லா என்ன செய்தார்? __

______________________________________________________________________________

______________________________________________________________________________

11. பஹாவுல்லா எப்பிரதேசத்திற்கு வனவாசம் சென்றார்? __________________________________

12. தாம் ஒதுங்கிக் கொண்டதின் ஒரே குறிக்கோள், _____________ _____________ ______________, ______ ___________________ ______________ தோற்றுவாயாவதை, _____________ _____________தை, அல்லது __________________ ______________ ___________________மே என பஹாவுல்லா கூறுகின்றார்.

13. குர்தில்தான் வனப் பிரதேசத்தில் பஹாவுல்லா என்ன செய்தார்? ________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

14. பஹாவுல்லா பாக்தாத்தை எவ்வளவு காலம் நீத்திருந்தார்? ______________________________

15. எவ்விதச் சூழ்நிலையில் பஹாவுல்லா பாக்தாத் திரும்பினார்? ___________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

# பகுதி 18

இறைவனின் ஒவ்வொரு அவதாரபுருஷரும் தமது நம்பிக்கையாளர்களுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்கின்றார். பாப் பெருமானாரின் நம்பிக்கையாளர்கள் இறைவன் வெளிப்படுத்தவிருப்பவரைத் தேடி, ஏற்றுக் கொண்டு அவரது கட்டளைகளுக்குக் கீழ்படிந்தும் நடப்போம் என அவருடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். பாப் அவர்களால் வாக்களிக்கப்பட்ட அந்த அவதாரபுருஷர் தாமே என பஹாவுல்லா அதுவரை எவரிடமும் கூறாதிருந்த போதும், அவரது மகிமையாகப்பட்டது நாளுக்கு நாள் வெளிப்படையாகி, சிலர் அவரை அவதாரபுருஷர் எனக் கண்டுகொள்ளவும் செய்தனர். பஹாவுல்லாவின் மாட்சிமை மற்றும் மகிமையை மிர்ஸா யஹ்யா கண்டுகொள்ளாமலில்லை. ஆனால் அவர் தொடர்ந்து பாப்'யிகளிடையே விஷமங்களைக் கிளறியே வந்தார். வரவிருக்கும் ஆண்டுகளில், பஹாவுல்லாவுக்கு எதிரான அவரது சூழ்ச்சிகள் மேன்மேலும் அதிக விகிதங்களில் வெளிப்பட்டு, இறுதியில் அவர் பாப் பெருமானாரின் திருவொப்பந்தத்தைப் பகிரங்கமாக முறித்திடுவார். தமது விசுவாசமிக்க அன்பர்களுக்காகக் காத்திருந்த குழப்பங்கள் மற்றும் பேரிடர்கள் குறித்து பஹாவுல்லா பின்வறுமாறு எச்சரித்தார்:

> **"சோதனை மிகு நாட்கள் இதோ வந்துவிட்டன. வேற்றுமை மற்றும் பேரிடர் எனும் சமுத்திரங்கள் கொந்தளிக்கின்றன; மூலை முடுக்குகளில் நம்பிக்கையின்மை என்னும் பதாகைகள் விஷமங்களைத் தூண்டிவிடுவதிலும் மனிதர்களை நாசகதிக்கு இட்டுச் செல்வதிலும் மும்முரமாக உள்ளன. . . ஒவ்வொரு சமயவெளிப்பாட்டுக் காலந்தோறும் ஓங்கி நிற்கும் வாதங்களான, எதிர்மறைப் போராளிகள் ஒரு சிலரின் வாதங்கள், உங்களிடையே அவநம்பிக்கையை உண்டாக்கிவிட அனுமதியாதீர், அல்லது உண்மையானவராகிய அவர்பால் கவனமற்றவர்களாக இருந்திடவும் உங்களை அனுமதியாதீர். துரோகத்தைத் தூண்டுவோர் வெறுப்புக் காட்டியபோதிலும், இறைவன் தமது சமயத்தை ல்தாபிக்கவும், தமது ஒளியை வெளிப்படுத்தவும் செய்வார். . . .அனுதினமும் இறைவனின் சமயத்திற்காக விழிப்புடனிருங்கள். . . .அனைவரும் அவரது பிடியில் சிக்கிக் கொண்டுள்ளவர்கள். ஓடிச்சென்றிட எவருக்கும் இடமேதும் கிடையாது. கடவுளின் சமயத்தை, எவரும் தனது இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய, அசட்டையாக எடுத்துக்கொள்ளப்படும் ஒரு விஷயமென நினைத்துக்கொள்ளாதீர். பல பகுதிகளிலிலிருந்து பல ஆன்மாக்கள், தற்போது, இதே விஷயத்தில் உரிமை கொண்டாடியுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் அழிந்து காணாமற் போயிருக்கக்கூடிய, அல்ல, தூசியைப்போன்று, ஒன்றிமில்லாத நிலையை அடைந்து மனதைவிட்டு மறைந்த ஒரு விஷயமாக ஆகியிருக்கக் கூடிய அந்தக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது."36**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

அ. பஹாவுல்லா, ____________________ _________________ சிலரின் ____________ ___________ உண்டாக்கிட அனுமதிக்கலாகாது என தமது சகாக்களிடம் கூறினார்.

ஆ. _________________ _________________ _________________ இருக்கக்கூடாது என அவர்களை எச்சரித்தார்.

இ. சமயத் துரோகிகள் ஏற்க மறுத்தபோதிலும், இறைவன் தமது ________________ ________________, தமது _________ _____________ செய்வார்.

ஈ. கடவுளின் சமயம் எவர் வேண்டுமாயினும் தனது _______________ ________________ _____________ என _____________________ ________________ ___________________ என அன்பர்கள் எண்ணக்கூடாது.

உ. சமயத்திற்கு எதிராகச் சென்றவர்கள் ஒவ்வொருவரும் ________ _________ போயிருக்கக்கூடிய மற்றும் தூசியைப்போன்று __________________ _________________ __________________ அடைந்து ___________________ மறைந்து போவர்.2.____________________________________________________________________

2. சந்தேகத்தை விளைவிப்போர் “எதிர்மறை போராளிகள்” என பஹாவுல்லா குறிப்பிடுகின்றார். அவர்கள் எதை எதிர்க்கின்றனர்?

## பகுதி 19

பஹாவுல்லா இல்லாத அந்த இரண்டு வருட காலத்தில், சமயத்தின் வளங்கள் அதன் சரித்திரத்தில் மிகத் தாழ்வான நிலையை அடைந்துவிட்டிருந்தது. எதிர்பார்த்தது போலவே, பாக்தாத்தின் சிறிய பாப்'யி சமூகத்தினரைக்கூட வழிநடத்தத் தாம் ஆற்றலற்றவர் என்பதை மிர்ஸா யஹ்யா நிரூபித்துவிட்டிருந்தார். பல இடங்களில் பாப் பெருமானாரின் பெருமதிப்புமிகு சமயத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் பல பாப்'யிக்கள் ஈடுபட்டிருந்தனர். ஆதலால், மறுபடியும், பஹாவுல்லா பாப்'யி சமூகத்தை மறுவுயிர்ப்பிக்கும் காரியத்தில் ஈடுபட்டார். மார்ச் 1856-இல் அவரது வருகை குறித்த செய்தி நம்பிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு, உண்மையை நாடுவோர் எவருக்கும் அவரது வாசல் கதவு திறந்துவிடப்பட்டது. தமது குடும்பத்துடன் வாழ்ந்து வந்த அவரது மிகவும் அடக்கமான இல்லம், தேடுவோரும் வருகையாளரும் ஒன்றுகூடும் மையமாகியது. அவரது பிரசன்னத்தை அடைந்த அனைவரும் அவரது இனிய மற்றும் அன்பான வார்த்தைகளின் சக்தியால் தன்மைமாற்றம் பெற்றனர். அவருடன் நெருக்கத்தில் வாழும் வரம் பெற்றவர்கள் சுவர்க்கத்தில் வாழ்வது போன்று உணர்ந்தனர். அவர்கள், லௌகீக விஷயங்களை முற்றிலும் துறந்த புதிய சிருஷ்டிகளாக மாறினர். அவ்வித ஆன்மாக்கள் அடைந்த நிலையை, பஹாய் சமயத்தின் ஆரம்பகால சரித்திர ஆசிரியரான நபில் பின்வருமாறு வர்ணிக்கின்றார்:

"பல இரவுகளில், பத்து ஆன்மாக்களுக்கும் குறையாது, ஒரு பைசா பெறுமானமுள்ள பேரீச்சம் பழங்களில் வாழ்ந்தனர். அவர்களின் இல்லங்களில் காணப்பட்ட காலனிகள், மேலாடைகள், அல்லது மேலங்கிகள் யாருக்குச் சொந்தமானவை என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. சந்தைக்குச் சென்றவர் தமது காலில் அனிந்திருந்த காலனிகள் தமது

என்று சொந்தம் கொண்டாடலாம், மற்றும் பஹாவுல்லாவின் முன்னிலையை அடைந்த எவரும் தாம் அனிந்திருந்த மேலாடையும் அங்கியும் தமதென்று அறுதியிடலாம். தங்களுடைய சொந்தப் பெயர்களே அவர்களுக்கு மறந்துபோய்விட்டிருந்தது; அவர்களின் இதயங்கள் அன்பிற்கினியவர்பாலான பக்தியைத் தவிர மற்றெல்லாவற்றிலிருந்தும் விடுபட்டிருந்தது. . . ஆகா, அந்த நாட்களின் களிப்பையும், அந்த நேரத்தின் மகிழ்ச்சியையும் அற்புதங்களையும் என்னவென்பது!"37

சுலைமானிய்யா மலைகளிலிருந்து திரும்பிய காலத்திலிருந்து சுமார் ஏழு வருடங்கள் பஹாவுல்லா பாக்தாத்தில் வாழ்ந்தார். அக்காலம் முலவதும் தாம் இறைவனின் இந்நாளுக்கான அவதாரபுருஷர் என்னும் ஸ்தானத்தை அவர் தொடர்ந்து மறைத்தே வந்தார். இருந்தும் தெய்வீக அன்பு, ஏற்பிசைவுடைய இதயங்கள் அனைத்தும் அதன் வயப்படும் வகையில், அவரிடமிருந்து பெரும் அளவில் வெளிப்பட்டே வந்தது. சம்பாஷனைகளில், எழுத்து வடிவ வாசகங்களில், மற்றும் நிருபங்கள் மூலமாக அவர் வெளிப்படுத்திய வழிகாட்டுதல்கள், பல காலமாக நாயகர் அற்ற நிலையில் இருந்த பாப்'யிக்களின் நடத்தையை தன்மைமாற்றம் செய்தன. இவ்வருடங்களின் போதுதான், கடந்தகாலங்களில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள் அனைத்தின் அஸ்திவாரமும் நசித்துப் போகும் வகையில் இறை வெளிப்பாட்டின் இயல்புகள் பற்றித் தெளிவான வகையில் விளக்கங்கள் அடங்கிய "கித்தாப்-இ-இகான்" நூலை அவர் வெளிப்படுத்தினார். இதே காலகட்டத்தில்தான், தியானத்தில் ஆழ்ந்த வண்ணம் டைகிரிஸ் நதிக் கரையில் நடந்த போது, நம் ஒவ்வொருவரின் ஆன்மீக வளர்ச்சிக்கான வழிகாட்டியான, நாமெல்லாம் போற்றும் "மறைமொழிகள்" நூலை வெளிப்படுத்தினார். அவரது எழுதுகோல் வழி புனித வாசகங்கள் வழிந்துவந்த வேகமானது பிரமிக்கத்தக்கதாக இருந்தது. அசாதாரண உள்ளாற்றல் நிறைந்து விளங்கிய அக்காலத்தைப் பற்றி அவரே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:". . .

> **இறைவனின் உதவியுடனும் அவரது தெய்வீக அருள் மற்றும் தயையுடனும், அடைமழை போன்று எமது செய்யுள்களை யாம் வெளிப்படுத்தியும், உலகின் பல்வேறு பாகங்களுக்கு அவற்றை அனுப்பியும் வைத்தோம். யாம் அனைத்து மனிதர்களையும், குறிப்பாக இம்மக்களையும் எமது விவேகம் கலந்த ஆலோசனைகள் மற்றும் அன்பு கலந்த எச்சரிக்கைகள் மூலமாக உபதேசித்து, சச்சரவுகள், சன்டைகள், வாக்குவாதங்கள் மற்றும் முரண்பாடுகளில் ஈடுபடுவதினின்று தடைசெய்தோம். அதன் பயனாகவும், இறைவனின் அருள் வாயிலாகவும், தான்தோன்றிப் போக்கும் அறிவீனமும் பயபக்தி மற்றும் புறிதலுக்கும், ஆயுதங்கள் அமைதியை உருவாக்கும் கருவிகளாகவும், மாற்றப்பட்டன."38**

பாக்தாத்தில் பஹாவுல்லா வாழ்ந்த அந்த ஏழு வருடங்கள், மகத்தான வெற்றிகளின் ஒரு காலகட்டத்தைப் பிரதிநிதிக்கின்றன. ஆதாலால், இதைத் தொடர்ந்தாற்போல் நெருக்கடி தோன்றி, அதைத் தொடர்ந்து மேலும் மகத்தான வெற்றி பின்தொடர்வதும் எதிர்பார்க்கக்கூடியதே. பஹாவுல்லாவின் அதிகரிக்கும் செல்வாக்கு சமய எதிரிகளின் பார்வையில் படாமல் இல்லை. அவர்களுள், மும்முரமாக இருந்தவர் ஒரு குறிப்பிட்ட 'ஷேய்க்' ஆவார். அவர், பஹாவுல்லாவுக்கு எதிராக முன்னெழுந்திட, பாரசீக மற்றும் ஒட்டமான் அரசாங்க அதிகாரிகளுடன் மதகுருக்களையும் நம்பவைக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார்.

ஆனால் பஹாவுல்லாவின் விவேகம் மற்றும் அவரது மேன்மை மிக்க வார்த்தைகள், செயல்கள் ஆகியவை இந்த 'ஷேய்க்கின்' முயற்சிகளை பல வருடங்களாகத் தோல்வியுறச் செய்தன. உதாரணமாக, ஒரு முறை, பஹாவுல்லாவை ஒருமனதாகக் கண்டனம் செய்யும்

நோக்கத்துடன், அப்பிரதேசத்தைச் சார்ந்த பிரசித்தி பெற்ற மதகுருக்களை இந்த ஷேய்க் ஒன்று திரட்டினார். பாக்தாத்தில் உள்ள இந்தச் சிறிய தேசப்பிரஷ்டிகள் கூட்டத்தைத் தாக்கி சமயத்தை அதன் மையத்திலேயே அழித்துவிடும் பொருட்டு அவர்கள் அனைவரும் ஆயத்தமானார்கள். ஆனால் அவர்களுக்கு அதிர்ச்சியூட்டும் வகையில், அவர்களில் மிகவும் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவரும், தனது நீதி மற்றும் பக்திமனப்பான்மைக்கு பெயர் போனவருமாகிய ஒருவர், பாப்'யிகளுக்கு எதிராகத் தமது தீர்ப்பை வழங்க மறுத்துவிட்டார். அவர், தனக்குத் தெரிந்த வரையில் இத்தகைய ஒரு நடவடிக்கையை நியாயப்படுத்தும் வகையில், பாப்'யி சமூகம் எந்த ஒரு காரியத்தையும் செய்ததில்லை எனக் கூறிவிட்டு அக்கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

அவர்களின் முதல் முயற்சி தோல்வியுற்றதால், அந்தக் குழு ஓர் அறிஞரை பஹாவுல்லாவிடம் அனுப்பி, அவரது அறிவைச் சோதிக்கும் வகையில் குறிப்பிட்ட சில கேள்விகளை அவரிடம் சமர்ப்பிக்க முடிவெடுத்தது. பஹாவுல்லா அக்கேள்விகள் அனைத்திற்கும் பதில் அளித்ததைக் கண்டு, மதகுருக்கள் சார்பாக, பஹாவுல்லாவின் பரந்த அறிவை அந்த அறிஞர் ஆமோதித்தார். ஆனாலும் பஹாவுல்லா, தமது அருட்பணியின் உண்மையை அனைவரும் திருப்தியுறும் வகையில் மெய்ப்பிக்க அவர்களுக்கு அவர் ஏதாவது ஒரு அதிசயத்தைச் செய்து காட்ட வேண்டும் எனக் கூறினார். அதற்கு பஹாவுல்லா, "இறைவனே தமது சிருஷ்டிகளைச் சோதிக்க வேண்டும், சிருஷ்டிகள் இறைவனைச் சோதிக்கக் கூடாது என்னும் வகையில், இவ்வித வேண்டுகோளை விடுக்க உமக்கு உரிமை இல்லை என்றாலும், நான் அதை அனுமதித்து ஏற்றுக்கொள்கிறேன்,"39 என பஹாவுல்லா பதிலளித்தார். இருப்பினும், தூது வந்த அவ்வறிஞரிடம் பஹாவுல்லா ஒரு நிபந்தனையை விதித்தார். அந்த சமயகுருக்கள் கூட்டம் ஓர் அதிசயத்தைத் தேர்வு செய்து, அப்படி அதிசயத்தை அவர் செய்து முடிக்கும் பட்சத்தில் அவர்கள் அனைவரும் அதுமுதற் கொண்டு அவர்பால் எந்த சந்தேகமும் உறாமல் அவர்கள் அனைவரும் ஒருசேர அவரை ஏற்று அவரது சமயத்தின் உண்மைக்கும் ஒப்புதல் அளிப்பதாக எழுத்தில் வடித்துத் தர வேண்டும் என்றார். எழுதப்பட்ட அப்பத்திரத்தை அவர்கள் முத்திரையிட்டுத் தம்மிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்றார்

அந்தத் தெளிவான மற்றும் சவாலிடும் பதிலினால் அந்தத் தூதர் ஆழமாகப் பாதிப்புற்றார். அவர் உடனடியாக எழுந்து, பஹாவுல்லாவின் முழங்கால்களை முத்தமிட்டு, அவ்விடத்தை விட்டகன்றார். அவர் பஹாவுல்லாவின் பதிலை அந்த மதகுருக்களிடம் சமர்ப்பித்தார். அவர்கள் அப் பதில் குறித்து மூன்று தினங்கள் விவாதித்தனர், ஆனால் அவர்களால் எந்த ஒரு முடிவிற்கும் வர முடியவில்லை. இறுதியாக, வேறு வழியின்றி அவ்விஷயத்தை அத்துடன் கைவிட்டனர்.

ஆனால், சமயத்தின் இந்த தாட்சன்யமற்ற எதிரிகள் பஹாவுல்லாவிற்கு எதிரானத் தமது சதி வேலைகளைக் கைவிடவில்லை. தொடர்ந்து அவர்கள் தீய காரியங்களைத் தூண்டிவிட்டனர், அதிகாரிகளிடம் பஹாவுல்லாவின் நோக்கங்களைப் பற்றி பொல்லாங்குகள் கற்பித்தனர், இறுதியில், 1863-ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில், அவர்களின் முயற்சிகள் பலனளித்தன; அடுத்த நெருக்கடியும் தோன்றியது.

1. பஹாவுல்லா பாக்தாத் திரும்பியவுடன் பாப்'யி சமூகம் எவ்வித நிலையில் இருந்தது?______

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. நம்பிக்கையாளர்களை வழிநடத்தத் தாம் தகுதியானவர் என மிர்ஸா யஹ்யா நிரூபித்தாரா?

_______________________________________________________________________________

3. பாக்தாத்திற்கு மறுபடியும் பஹாவுல்லா திரும்பியது பாப்'இ சமூகத்தின் மீது என்ன விளைவை ஏற்படுத்தியது? ____________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

4. பஹாவுல்லாவின் அருகாமையில் வாழும் பேறு பெற்றவர்களின் நிலை எப்படி இருந்தது என்பது குறித்த நபிலின் வர்ணனையை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும்.

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

5. சுலைமானிய்யா மலைகளிலிருந்து திரும்பிய பின் பாக்தாத் நகரில் பஹாவுல்லா எத்தனை வருடங்கள் வாழ்ந்தார்? _______________________________________________

6. அந்த ஏழு வருடங்களில் பஹாவுல்லா இயற்றிய இரு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடவும்: _____________________________________________________________

_______________________________________________________________________________

7. கித்தாப்-இ-இகான் நூலின் மையக் கருப்பொருள் எது? ______________________________

_______________________________________________________________________________

8. மறைமொழிகள் நூலில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் யாவை?_______________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

9. பின்வரும் வாக்கிய்களைப் பூர்த்தி செய்யவும்:

இறைவனின் உதவியுடனும் அவரது தெய்வீக அருள் மற்றும் தயையுடனும், அடைமழை போன்று எமது செய்யுள்களை யாம் வெளிப்படுத்தியும், உலகின் பல்வேறு பாகங்களுக்கு அவற்றை அனுப்பியும் வைத்தோம். யாம் அனைத்து மனிதர்களையும், குறிப்பாக இம்மக்களையும் எமது விவேகம் கலந்த ஆலோசனைகள் மற்றும் அன்பு கலந்த எச்சரிக்கைகள் மூலமாக உபதேசித்து, சச்சரவுகள், சன்டைகள், வாக்குவாதங்கள் மற்றும் முரண்பாடுகளில் ஈடுபடுவதினின்று தடைசெய்தோம். அதன் பயனாகவும், இறைவனின் அருள் வாயிலாகவும், தான்தோன்றிப் போக்கும் அறிவீனமும் பயபக்தி மற்றும் புறிதலுக்கும், ஆயுதங்கள் அமைதியை உருவாக்கும் கருவிகளாகவும், மாற்றப்பட்டன."38

அ. இறைவனின் ______________ அவரது ______________ _______ மற்றும் ______________, தாம் செய்யுள்களை வெளிப்படுத்தியதாக பஹாவுல்லா நமக்குத் தெரிவிக்கின்றார்.

ஆ. அவர் அச்செய்யுள்களை ______________ ______________ ______________ அனுப்பினார்.

இ. இச்செய்யுள்களில அவர் தமது ____________ கலந்த ____________ மற்றும் ____________ கலந்த ____________ மூலமாக ____________.

ஈ. அதில், ____________, ____________, ____________ மற்றும் ____________ ஈடுபடுவதினின்று தடைசெய்தார்.

உ. அதன் பயனாகவும், இறைவனின் அருள் வாயிலாகவும், __________ __________ __________ __________ மற்றும் __________, __________ __________ உருவாக்கும் __________, மாற்றப்பட்டன.

10. பஹாவுல்லாவின் அதிகரித்த செல்வாக்கு அவரது எதிரிகளை எவ்விதம் பாதித்தது? _____

______________________________________________________________________________

______________________________________________________________________________

11. "ஒருமித்த கண்டனத்தைப் பெறுவது" என்பதன் பொருள் என்ன?”?______________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

12. மதகுருமார்கள் குழுவின் கதையையும் அவர்கள் பஹாவுல்லாவுக்கு அனுப்பிய தூதரின் கதையையும் உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறுங்கள்.

## பகுதி 20

சமயத்தைப் பற்றி நீங்கள் கற்கும் வேளையில், நீங்கள் கித்தாப்-இ-இகான் நூலைப் படித்தும் அதன் பல கருத்துகளின் ஆழமான அர்த்தம் பற்றி பிரதிபலிப்பீர்கள். நீங்கள் ஏற்கனவே மறைமொழிகள் நூலைப் பற்றி பரிச்சயமாகி இருப்பீர்கள் இந்நூல் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு ஒரு உற்ற துணையாக விளங்கும், மற்றும் அதனுள் அடங்கியுள்ள தெய்வீக வழிகாட்டல்கள் உங்கள் ஆன்மீக வளர்ச்சியில் பெரும் செல்வாக்குச் செலுத்திடும். இவ்விரு முக்கிய நூல்களும் வெளிப்படுத்தப்பட்ட பாக்தாத் காலகட்டத்தில் பஹாவுல்லாவின் வாழ்வு பற்றி நீங்கள் பிரதிபலிக்கும் இவ்வேளையில், அவ்விரு நூல்களின் ஆரம்பப் பத்திகளை மனனம் செய்ய விரும்புவீர்கள். கித்தாப்-இ-இகான் நூல் பின்வருமாறு துவங்குகிறது:

> **“விண்ணுலகிலும், மண்ணுலகிலும் உள்ள அனைத்தினின்றும் பற்றறுத்தாலன்றி எந்தவொரு மனிதனும் மெய்யான புரிந்துணர்வு என்னும் சமுத்திரத்தின் கரைகளை அடைந்திட இயலாது. உலக மக்களே, உங்களது ஆன்மாக்களை புனிதப்படுத்துவீராக. அதனால், ஒருவேளை உங்களுக்கென இறைவன் விதித்துள்ள ஸ்தானத்தை நீங்கள் அடைந்திடக் கூடும். அதன்வழி நீங்கள் இறைவனின் திவ்விய அருளாட்சிகளுக்கேற்ப பாயான் என்னும் வானில் எழுப்பப்பட்டுள்ள திருக்கூடாரத்தினுள் பிரவேசித்திடக்கூடும்.”[40]**

மறைமொழி நூலின் ஆரம்பப் பத்தி பின்வருமாறு துவங்குகிறது:

**“இதுவே, ஒளி என்னும் இராஜ்யத்தில் இருந்துஇறங்கி, சக்தியும் வலிமையும் மிக்க நாவினால் மொழியப்பட்டு, கடந்த கால தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டு ள்ளதாகும். நேர்மையாளர்களுக்கு,எமது அருளின் அடையாளமாக, யாம், அதன் உட்சாரத்தினை எடுத்து, அதற்குச் சுருக்கம் என்னும்ஆடையை அணிவித்துள்ளோம். அதனால் அவர்கள், கடவுளின் ஒப்பந்தத்தின்பால் விசுவாசத்துடன் இருந்து, தங்களின் வாழ்க்கையில் அவரது பொறுப்பை நிறைவேற்றி, ஆவி உலகினில் தெய்வீகப் பண்பெனும் இரத்தினத்தைப் பெற்றிடக் கூடும்.”[41]**

## பகுதி 21

பாக்தாத் வாசத்தின் இறுதியில், பஹாவுல்லா, எதிர்காலத்தில் தோன்றக்கூடிய சோதனைகள் மற்றும் இடுக்கண்கள் பற்றி அவ்வப்போது குறிப்பிட ஆரம்பித்தார். ஒருமுறை, அவர் கண்ட கனவொன்றைப் பற்றி அவர் கூறக் கேட்டு தோழர்கள் மிகவும் சஞ்சலமுற்றனர். "தீர்க்கதரிசிகளும் இறைத்தூதர்களும் ஒன்றுகூடி, என்னைச் சுற்றி அமர்ந்து, ஓலமிட்டும், தேம்பியும், உரக்கப் புலம்பவும், கண்டேன். பிரமித்து, அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவிய போது, அவர்களின் புலம்பலும் தேம்பலும் மேலும் அதிகரித்து: 'அதி பெரும் மர்மமே, அமரத்துவத்தின் தெய்வீகக் கூடாரமே! நாங்கள் உங்களுக்காகவே அழுகின்றோம்,' என என்னிடம் கூறினர். அவர்கள் அழுத அந்த அழுகையின் விளைவாக நானும் அவர்களுடன் சேர்ந்து அழுதேன். தொடர்ந்து, விண்ணுலகக் திருக்கூட்டத்தினர் என்னை விளித்து: எந்த தீர்க்கதரிசியும் காண நேரிடாதவற்றை வெகு விரைவில் நீர் உமது கண்களைக் கொண்டே காண நேரிடும். வைகரை தோன்றும் வரை இரவு முழுவதும் அவர்கள் என்னிடம் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். பொறுமையுறுக, பொறுமையுறுக.”42 என ஒரு நிருபத்தில் எழுதியுள்ளார்.

மறைபொருள்கள் அடங்கிய மொழியின் வாயிலாக வருங்கால நிகழ்வுகள் மற்றும் நம்பிக்கைத் துரோகம், பிரிவு ஆகியவைப் பற்றி முன்கூட்டியே தெரிவிக்கும் ‘தெய்வீக மாலுமி’யின் நிருபத்தை 1863-ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில், வெளியிட்டார். இந்நிருபம் அவரது முன்னிலையில் கூடியிருந்த நம்பிக்கையாளர்களுக்கு வாசிக்கப்பட்டது. பஹாவுல்லா தங்களிடமிருந்து பிரிக்கப்படப் போகின்றார் என்பதை உணர்ந்த அவர்களின் உள்ளங்களில் துன்பக் கடல் கொந்தளித்தது. அன்றைய தினமே, பாக்தாத்தின் ஆளுனர், ஒரு தூதன் மூலமாகத் தமக்கும் பஹாவுல்லாவுக்கும் இடையே நேர்முகச் சந்திப்பு ஒன்றுக்கான அழைப்பு ஒன்றை பஹாவுல்லாவிடம் சமர்ப்பித்தார். அடுத்த நாள், ஒட்டமான் அரசின் பிரதம மந்திரி ஆளுனருக்கு அனுப்பிய கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது; அதன்வழி மிகுந்த மரியாதையுடன், ஒட்டமான் தலைநகரமான கான்ஸ்டான்டினோப்பிள் வரும்படி பஹாவுல்லாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவரது பாதுகாப்பிற்காக உடன் செல்ல ஒரு குதிரைப் படைக்கும் ஆணையிடப்பட்டது. பஹாவுல்லா அந்த அழைப்பிற்கு உடனடியாக இனங்கினார், ஆனால் அவரது பிராயாணத்திற்காக அரசாங்கம் வழங்கிய பணத்தை ஏற்க மறுத்தார். அப்பணத்தை அவர் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென ஆளுனரின் பிரதிநிதி வற்புறுத்தினார்;

இல்லையெனில் அதிகாரத்தில் உள்ளவர்கள் பஹாவுல்லா தங்களை அவமதிப்பதாக நினைக்கக்கூடும் எனவும் கூறினார். இறுதியில் பஹாவுல்லா அப்பணத்தை ஏற்றார், ஆனால், நகரத்தின் ஏழை மக்களுக்கு அதைப் பகிர்ந்தளித்துவிட்டார்.

பாக்தாத்திலிருந்து பஹாவுல்லா வெளியேற்றப்படுகிறார் என்னும் செய்தி பாப்'யி சமூகத்தையே உலுக்கியது. அவரது பிரகாசமான பிரசன்னத்தின்பால் பெரிதும் பற்றுக் கொண்டிருந்த அந்த பக்திமிக்க ஆன்மாக்கள், சோகத்தில் மூழ்கினர். முதலில் உண்ணவோ உறங்கவோ முடியாது போயினர். சிறுகச் சிறுக, பஹாவுல்லாவின் அன்பும் கனிவும் மிக்க மொழிகளால் அவர்கள் தேற்றப்பட்டு, அவரது அடுத்த கட்ட தேசப்பிரஷ்டத்தில் அவருடன் சேர்ந்து செல்லும் பாக்கியம் தங்களில் பெரும்பாலானவர்களுக்கு கிடையாது என்னும் நிலையையும் ஏற்றுக்கொண்டனர். தமது அன்பின் அடையாளமாக, அந்நகரில் வதியும் ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் -- ஆண், பெண் மற்றும் குழந்தை அனைவருக்கும், தமது கைகளால் பஹாவுல்லா நிருபம் வரைந்தருளினார்.

பாக்தாத்தின் அருகில், ரோஜா மலர்கள் நிறைந்த அழகிய பூங்கா ஒன்று இருந்தது; ரோஜா மலர்கள் பஹாவுல்லாவுக்கு மிகவும் பிரியமானவை. ஏப்ரல் 22-ஆம் திகதி காலை வேளையில், அவர் நகரத்தைத் துறந்து அப்பூங்காவினுள் பிரவேசித்தார். நம்பிக்கையாளர்களும், உண்மையில் பெரும் எண்ணிக்கையிலான பாக்தாத் நகரவாசிகளும் துன்பத்தில் ஆழ்ந்தனர். அவ்வேளையில் பஹாவுல்லாவின் கனிவான கவனிப்பில் முற்றாக மறுமலர்ச்சி கண்டிருந்த பாப்'யி சமூகம், மேலும் ஒரு நெருக்கடிக்குள் பிரவேசித்தது. அதன் பிரதான பாதுகாப்பாக விளங்கியவர் அதன் பெரும்பாலான நம்பிக்கையாளர்களை விட்டுத் தொலை தூரம் நாடுகடத்தப்படும் சூழ்நிலையில் அப்பிஞ்சு சமயத்தின் எதிர்காலம் என்னவாகுமோ? அவருக்கு பிரியாவிடை அளிக்கக் காத்திருந்த மனமுடைந்த பாப்'யிகளுக்குக் கிடைத்த பதில் பிரமிக்கத்தக்கதாக இருந்தது. தமது உண்மையான நிலையை மனிதர்களின் கண்களுக்கு அதுகாறும் மறைத்துவந்தத் திரைகளை பஹாவுல்லா கிழித்தெறிந்து, தாமே எல்லாக் காலங்கள்தோறும் வாக்களிக்கப்பட்டவர் என்பதை வெளிப்படையாக பிரகடணம் செய்யவிருந்தார்.

கான்ஸ்டான்டினோப்பிள் நோக்கிப் புறப்படுமுன், இன்றைய நாட்களில் ரித்வான் பூங்கா என வழங்கப்படும் அத்தோட்டத்தில் பஹாவுல்லா பன்னிரண்டு நாள்கள் தங்கியிருந்தார். அவரை அவரது பெரும்பான்மை நம்பிக்கையாளர்களிடமிருந்து பிரித்து அவரது சமயத்தை அழித்துவிட அவரது எதிரிகள் முயன்றனர். ஆனால் இறைவனோ, பிரியாவிடை நிகழ்ச்சியை பெரும் களிப்பிற்கு உரியதாக்கிவிட்டார். அவரது அருட்பணியின் பிரகடனம் அவரது சகாக்களின் ஆன்மாக்களில் புத்துயிர் ஊட்டியது. இந்த "நாள்களுக்கெல்லாம் நாள்களுக்காகவே" பாப் பெருமானார் தமது நம்பிக்கையாளர்களை ஆயத்தம் செய்திருந்தார். அந்நாளில் "எல்லா படைக்கப்பட்ட பொருள்களும் தூய்மைப்படுத்துதல் என்னும் கடலில் ஆழ்த்தப்பட்டன,"43 என பஹாவுல்லா தாமே குறிப்பிடுகின்றார்.

இருந்தபோதிலும், ரித்வான் பூங்காவில் தம்மைச் சாரி சாரியாகக் காண வந்த அன்பர்கடளுடன் நடத்திய சம்பாஷனையின் விவரங்கள் மிகச் சொற்பமே அறியப்பட்டுள்ளன. சரித்திர உரையாளரான நபிலின் பின்வரும் வார்த்தைகளும் அந்நாட்களின் மகிமையைப் பற்றி சிறிதளவே விவரிக்கின்றன.

"ஒவ்வொரு நாளும், வைகறைக்கு முன்பாக, தோட்டக்காரர்கள் தோட்டத்தின் நான்கு சாலைகளின் ஓரங்களிலும் பூத்திருந்த ரோஜா மலர்களைப் பறித்து, அவரது புனிதப்படுத்தப்பட்டக் கூடாரத்தின் தரையின் நடுவில் அவற்றை குவிப்பர். அக்குவியலின் அளவு, காலை வேளைகளில் அவரது முன்னிலையில் தேநீர் பருக ஒன்றுகூடும் அன்பர்கள், அதைத் தாண்டி ஒருவரை ஒருவர் பார்க்கமுடியாத அளவிற்கு இருக்கும். நாடோறும் காலை வேளைகளில் தமது முன்னிலையிலிருந்து விடைபெறுவோர்களிடம், இம்மலர்கள் அனைத்தையும், தமது சார்பாக நகரில் உள்ள தமது அரபு மற்றும் பாரசீக நண்பர்களிடம் கொடுக்கப்பட, தமது கைகளாலேயே பஹாவுல்லா ஒப்படைப்பார். .ஒரு நாள் இரவு, தேய்பிறை ஒன்பதாம் நாளன்று, அவரது புனிதக் கூடாரத்தைக் காவல்புரிவோரில் நானும் ஒருவனாக இருந்தேன். நள்ளிரவு நேரம் நெருங்கியபோது, பஹாவுல்லா தமது கூடாரத்தை விட்டு வெளியே வந்து, அவரது சகாக்கள் சிலர் உறங்கிக்கொண்டிருந்த இடங்களைக் கடந்து சென்று, நிலவொளி வீசிய தோட்டத்தில், ஓரங்களில் மலர் வரிசைகள் நிறைந்த அதன் சாலைகளில், மேலும் கீழுமாக நடக்க ஆரம்பித்தார். எல்லாப் பக்கங்களிலும் இராப்பாடிப் பறவைகள் சப்தமாக் கூவிக்கொண்டிருந்ததானது அவரது அருகில் இருந்தவர்கள் மட்டுமே அவரது குரலைக் குறிப்பாகக் செவிமடுக்க முடிந்தது. அவர் தொடர்ந்து நடந்து, பின்னர் தோட்டத்தின் பாதை ஒன்றின் நடுவில் நின்று, 'இந்த இராப்பாடிப் பறவைகளைப் பாருங்கள். இந்த ரோஜ மலர்களின் மீது அவற்றிற்கு உள்ள அளவு கடந்த நேசத்தினால், சாயத்திலிருந்து வைகறை வரை, தங்கள் கீதங்களைப் பாடிக்கொண்டும் தங்கள் ஆராதனைக்குறிய அவற்றுடன் பெரும் உணர்வெழுச்சியுடன் தொடர்புகொண்டும் இருக்கின்றன. ஆனால், தங்கள் அன்பரின் ரோஜா நிகர் அழகினால் பெரும் தகிப்படைந்துள்ளோம் எனக் கூறிக்கொள்வோர் மட்டும் எவ்வாறு தூங்க முடிகின்றது? தொடர்ந்தாற் போன்று மூன்று இரவுகள் நான் அவரது புனிதக் கூடாரத்தை காவல் காத்தும் வலம் வந்து கொண்டும் இருந்தேன். அவர் சயனித்துக்கொண்டிருந்த அந்த மஞ்சத்தைத் தாண்டும் போதெல்லாம், அவர் விழிப்புடன் இருப்பதையும், மற்றும், தினசரி, காலை முதல் மாலை வரை, பாக்தாத்திலிருந்து சாரி சாரியாக வரும் விருந்தினர்களுடன் இடைவெளியில்லாமல் உரையாடிக்கொண்டிருப்பதையும் நான் கண்ணுற்றேன். அவ்வாறு தொடர்ந்தாற்போல் பேசப்பட்ட அவரது வார்த்தைகளில் போலிச் சம்பிரதாயமான வார்த்தைகளை நான் காணவில்லை."44

இன்று, உலகம் முழுவதும் பஹாவுல்லாவின் அருட்பணியின் பிரகடனத்தை நினைவுகூர்ந்திட ஒவ்வொரு வருடமும் ரித்வான் திருவிழா கொண்டாடப்படுகின்றது பண்ணிரன்டு நாட்கள் கொண்ட இவ்விழா, பஹாய் விழாக்களிலேயே மிகப் புனிதம் மிக்கதும், அதி விசேஷமானதுமானதும் ஆகும்.

1. பாக்தாத் வாசத்தின் இறுதியில் பஹாவுல்லா கண்ட கனவை உங்கள் சொந்த வார்த்தைகளில் கூறவும்?

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

____________________________________________________________________________

2. அக்கனவின் விசேஷம் என்ன? _________________________________________________

____________________________________________________________________________

3. புனித மாலுமியின் நிருபத்தை பஹாவுல்லா எப்போது வெளிப்படுத்தினார்? ____________

4. புனித மாலுமியின் நிருபம் எதை தீர்க்கதரிசனமாக கூறுகின்றது?_____________________

____________________________________________________________________________

5. அவரது முன்னிலையில் அன்பர்களுக்கு அந்நிருபம் வாசிக்கப்பட்ட அன்று அரசாங்கத் தூதுவன் பஹாவுல்லாவுக்கு என்ன கொண்டு வந்தான்? _____________________________

____________________________________________________________________________

6. அதற்கு அடுத்த நாள் பஹாவுல்லாவிடம் என்ன சமர்ப்பிக்கப்பட்டது? __________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

7. அரசாங்கம் பஹாவுல்லாவை எங்கு அனுப்பத் தீர்மானித்திருந்தது? ___________________

____________________________________________________________________________

8. தமது வழிச் செலவுகளுக்காக அரசாங்கம் கொடுத்த பணத்தை பஹாவுல்லா என்ன செய்தார்?_________________________________________________________________

____________________________________________________________________________

9. வரப்போகும் பஹாவுல்லாவின் புறப்பாடு பற்றிய செய்தி கேட்டு சமூகத்தின் நம்பிக்கையாளர்கள் தங்கள் மனோநிலை எவ்விதம் வெளிப்படுத்தினர்? _______________

____________________________________________________________________________

____________________________________________________________________________

10. பாக்தாத்திலுள்ள நம்பிக்கையாளர்களின்பாலான தமது அன்பின் அடையாளமாக பஹாவுல்லா என்ன செய்தார்? _____________________________________________________

____________________________________________________________________________

11. பஹாவுல்லா பிரகடணம் செய்த அந்தத் தோட்டம் இன்று என்ன பெயரில் வழங்கப்படுகிறது? ______________________________

12. இப்பூங்காவில் பஹாவுல்லா எத்தனை நாட்கள் தங்கியிருந்தார்? ______________

13. ரித்வான் தோட்டத்தில் பஹாவுல்லா தங்கியிருந்த அந்த ஒளி மிகுந்த நாட்களைப் பற்றி நபில் கூறுவது:

அ. அனுதினமும், வைகறைக்கு முன்பாக, தோட்டக்காரர்கள் ______________________________
______________________________
அவற்றை ______________.

ஆ. அப்பூக் குவியலின் அளவு, ______________ அவரது முன்னிலையில் ________
______________________________
இருக்கும்.

இ. நாள்தோறும் காலை வேளைகளில் தமது முன்னிலையிலிருந்து விடைபெருவோர்களிடம், இம்மலர்கள் அனைத்தையும், ______________ ______________ ______________ ______________, தமது கைகளாலேயே பஹாவுல்லா ஒப்படைப்பார்....

ஈ. ஒரு நாள் இரவு, தேய்பிறை ஒன்பதாம் நாளன்று, ______________________________
______________________________ இருந்தேன்.

உ. நள்ளிரவு வேளை நெருங்கியபோது, பஹாவுல்லா ______________
______________________________கடந்து சென்று,
______________________________
______________________________

ஊ. ______________________________ குறிப்பாகக் கேட்கக் கூடிய வகையில்,______________________________
சப்தமாக் கூவிக்கொண்டிருந்தன.

எ. அவர் தொடர்ந்து நடந்து, ____________________________________________________________,
'____________________________________________ பாருங்கள். _____________ _____________
மீது அவற்றிற்கு உள்ள அளவு கடந்த _________________, _____________________
_________________ வரை, தங்களது ________________ _________ ____________
_________________ _______________ கொண்டும், ____________ _________________
இருக்கின்றன. ஆனால், தங்களது ___________ _______________________ போன்ற
________________ பெரும் ________________________ எனக் ____________________ மட்டும்
எவ்வாறு ________________ ____________________?

ஏ. நபில், தொடர்ந்தாற் போன்று மூன்று இரவுகள் _________________
_________________________________________________________________________________

ஐ. பஹாவுல்லா சயனித்துக்கொண்டிருந்த அந்த மஞ்சத்தைத் தாண்டும் போதெல்லாம்,
__________________________, மற்றும், தினசரி, காலை முதல் மாலை வரை, அவர்
_________________________________________________________________________________
________________________________________________________________________________.

ஒ. ஒருமுறையாவது, பஹாவுல்லா பேசிய வார்த்தைகளில், _______________
______________________________________________________________ நபில் காணவில்லை.

14. பெரும்பான்மை நம்பிக்கையாளர்களிடமிருந்து பஹாவுல்லாவைப் பிரிப்பதன் மூலம் சமய எதிரிகள் என்ன சாதிக்க நினைத்தார்கள் மற்றும் அதற்குப் புறம்பாக இறைவனின் சித்தம் எவ்வாறு இருந்தது?____________________________________________________________
_________________________________________________________________________________
_________________________________________________________________________________
_________________________________________________________________________________
_________________________________________________________________________________

15. பஹாவுல்லாவின் பிரகடனத்தை வருடந்தோரும் என்ன பண்டிகையாக நாம் கொண்டாடுகின்றோம்? _________________________________________________________________

16. ரித்வான் பண்டிகை எத்தனை நாட்களுக்குக் கொண்டாடப்படுகின்றது, மற்றும் எந்தத் திகதிகளில் அது கொண்டாடப்படுகின்றது? ____________________________________________
_________________________________________________________________________________

17. இரானிலிருந்து இராக் வரையிலான பஹாவுல்லாவின் நாட்டுக் கடப்பைப் பற்றி இப்பொழுது அறிந்துள்ள நீங்கள், அவரது அக்காலகட்ட வாழ்வு பற்றி ஒரு சிறிய உரையைத் தயாரிக்கவும்.

# பகுதி 22

கீழே பஹாவுல்லா வெளியிட்ட நிருபம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட சில உரைப்பகுதிகள் உள்ளன. அவற்றை உங்கள் குழுவில் உரக்கப் படிக்கவும். அவ்வாறு செய்யும் போது, அவரது வார்த்தைகள் உங்கள் உள்ளத்தில் பெரும் உவகையை உண்டாக்க ரித்வான் பூங்காவில் பஹாவுல்லா செய்த பிரகடணத்தை நினைவுகூரவும்.

**அதி மேன்மைப் படுத்தப்பட்ட எழுதுகோலே, தெய்வீக வசந்தகாலம் வந்துவிட்டது. கருணைமயமானவரின் பண்டிகை விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கின்றது. படைப்புப்பொருள்கள் அனைத்தும் மறுபிறப்பெய்தி புதிதாக்கப்படுமளவு உன்னை எழுச்சியுறச் செய்து கொண்டு, படைப்பு முழுமைக்கும் முன்பாக இறைவனது நாமத்தை மிகைப்படுத்தி, அவரது புகழைப் பாடுவாயாக. பேசு, அமைதியாய் இருந்திடாதே. இறைவனின் நாமம் எனும் இராஜ்யம் விண்ணுலகங்களின் படைப்பாளராகிய உனது பிரபுவின் நாமம் எனும் ஆபரணத்தினால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினால் பேரானந்தம் எனும் பகல் நட்சத்திரம் எமது நாமத்தின் தொடுவானத்திற்கு மேல் பிரகாசிக்கின்றது. மண்ணுலகின் நாடுகளுக்கு முன்னே எழுந்து, இவ்வதி உயரிய நாமத்தின் சக்தியை ஆயுதமாகக் கொண்டிடுவாயாக. தாமதிப்போர் கூட்டத்தில் சேர்ந்திடாதே. . .**

**. எழுதுகோலே, இந் நாளில், நீர், என்னைத் தவிர வேறு எவரையுமே காண முடியவில்லையா? படைப்பும் அதன் வெளிப்படுத்துதல்களும் என்னவாயின? அவற்றின் பெயர்களும் அவற்றின் இராஜ்யமும் என்னவாயின? கண்களுக்குப் புலனாகும், புலனாகா, படைப்புப் பொருள்கள் அனைத்தும் எங்குப் போயின? பிரபஞ்சத்தின் மறைவான இரகசியங்களும் அவற்றின் வெளிப்பாடுகளும் என்னவாயின? ஐயகோ, படைப்பு முழுமையும் மறைந்து போயினவே! என்றும் நிலையான, பிரகாசமிக்க, ஒளிமயமான எமது வதனத்தைத் தவிர எஞ்சியிருப்பது வேறெதுவுமே கிடையாது.**

**இதுவே, அருள்மிக்கவரும், அதிவள்ளன்மைமிக்கவருமான உனது பிரபுவின் வதனத்தினின்று பிரகாசித்திடும் ஒளியின் சுடர்களைத் தவிர வேறெதுவுமே காணப்படவியலாத நாள். மெய்யாகவே, யாம், தடுக்கவியலாததும் யாவற்றையும் அடக்கி ஆட்கொண்டிடக் கூடியதுமான எமது இறைமையினால் ஒவ்வோர் ஆன்மாவையும் மாய்ந்திடச் செய்துள்ளோம். பிறகு, மனிதர்பால் எமக்குள்ள கருணையின் ஓர் அடையாளமாக ஒரு புதிய படைப்பினை உருவாக்கியுள்ளோம். மெய்யாகவே, வள்ளன்மையே உருவானவரும், நாள்களில் தொன்மை வாய்ந்தவரும் யாமே. . .**

**கூறுவீராக: எதன் பசுந்தழையின் மீது மொழி என்னும் மதுரசம் இவ்வாக்குமூலத்தைப் பதித்துள்ளதோ அச்சுவர்க்கம் இதுதான்: “மனிதர்களின் கண்களிலிருந்து**

**மறைக்கப்பட்டிருந்தவர், இறைமையும் சக்தியும் அளிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுவிட்டார்!" எந்த இலைகளின் சலசலப்பு இவ்வாறு பிரகடனஞ் செய்கின்றதோ, அந்த சுவர்க்கம் இதுதான்: "விண்ணுலகங்களிலும் மண்ணுலகிலும் வாசஞ் செய்வோரே! ஏற்கனவே தோன்றிடாத ஒன்று இப்பொழுது தோன்றியுள்ளது. எப்பொழுதும் தனது வதனத்தினைப் படைப்பின் பார்வையிலிருந்து மறைத்து வைத்திருந்தவர் இப்போது வந்துவிட்டார்." அதன் கிளைகளிடையே மிதந்து வரும் இளங்காற்றின் சலசலப்பொலியின் இக் கூக்குரல் எழுகின்றது: "சகலத்திற்கும் மாட்சிமைமிகு பிரபுவானவர் வெளிப்படுத்தப் பட்டுவிட்டார். இராஜ்யம் இறைவனுடையதே." அதே வேளையில், அதன் வழிந்தோடிவரும் நீரிலிருந்து பின்வரும் மெல்லொலியினைக் கேட்க முடிகின்றது: "கண்கள் அனைத்தும் மகிழ்வுறுகின்றன; ஏனெனில், இதுவரை எவரை யாருமே கண்ணுற்றதில்லையோ, எவரது இரகசியத்தை இதுவரை எவருமே கண்டுபிடிக்கவில்லையோ, அவர் பேரொளி என்னும் திரையை அகற்றிப், பேரழகுமிக்க வதனத்தை வெளிப்படுத்தியுள்ளார்."**

**இச் சுவர்க்கத்திற்குள்ளும், அதன் அதி உயர்வான அறைகளிலிருந்தும் விண்ணுலகக் கன்னிகள் உரத்தக் குரலெழுப்பி இவ்வாறு கூச்சலிட்டனர் : "மேலுலகவாசிகளே, மகிழ்வுறுவீராக; ஏனெனில், நாள்களில் தொன்மையான அவரின் விரல்கள், பேரொளிமயமானவரது நாமத்தினால், வானுலகத்தின் மையத்திலுள்ள அதி உயர்வான மணியை அடிக்கின்றன. வள்ளன்மையின் கரங்கள், நித்திய வாழ்வெனும் கிண்ணத்தை ஏந்தி வந்துள்ளன. அதனை அணுகி உங்களுக்குத் தேவையான அளவு பருகிடுங்கள். ஆவலின் உண்மையான மறு அவதாரங்களே, மனவெழுச்சியின் உருவங்களே, உடல்நலத்திற்கு ஏற்றவாறு அதனைத் துய்த்துப் பருகுவீராக!"45**

# பகுதி 23

பஹாவுல்லா, அவரது குடும்பத்தினர், மற்றும் அவர்களுக்குத் துணையாக இருந்த சில நம்பிக்கையாளர்களும் கான்ஸ்டாண்டினோப்பிலில் நான்கே மாதங்கள்தான் இருந்தனர். பஹாவுல்லாவின் அதிகரிக்கும் செல்வாக்கை ஓர் அச்சுறுத்தலாகக் கருதிய பாரசீக அரசாங்கம், தூரத்திலிருந்தே அவர்பால் தனது கொடுமைகளைத் தொடந்தது. ஒட்டமான் இராஜ்யத்தை ஆளும் சுல்தானின் அரசவையில் இருந்த பாரசீகத் தூதர், பஹாவுல்லாவுக்கு எதிராக திட்டமிட்ட சதி வேளைகளைத் தொடங்கினார். சுல்தான், அவரது மந்திரிகள், மற்றும் அவர்களது சகாக்களும் வாழ்ந்தச் சூழ்நிலை, நம்பிக்கை துரோகம், சதி மற்றும் கபடம் நிறைந்ததாகும் பஹாவுல்லா, அரசாங்க உறுப்பினர்களுடனும், அவர்தம் மதிப்பற்ற நோக்கங்களுடன் எவ்வித தொடர்பும் கொள்ள மறுத்துவிட்டார். அவர் இவ்விதம் விலகியிருந்தது அதிகாரத்தில் உள்ளவர்கள் மனதில் அவரைப் பற்றி அவதூரும் பொய்களும் கூறுவதற்கு பாரசீகத் தூதருக்கு மிகவும் வசதியாக இருந்தது. இந்தத் தூதரின் தொடர்ச்சியான சதி வேளைகள் இறுதியில் பலனைத் தந்து, பாரசீக எல்லையிலிருந்து மேலும் தூரமாகவுள்ள ஆட்ரியாநோப்பிளுக்கு, பஹாவுல்லா செல்லவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அந்த ஆணையின்பாலான பஹாவுல்லாவின் பதிலிறுப்பு, அதிசயிக்கத்தக்க துணிச்சல் மிக்க செயலாக இருந்தது. அவர் உடனடியாக, ஒரு நீண்ட நிருபத்தை வெளிப்படுத்தி, அதில் சுல்தானை நேரடியாகக் குறிப்பிட்டு, அவரையும் அவரது மந்திரிகளையும் கண்டித்து, அவர்களது

மனப்பக்குவமின்மையையும், தகுதியின்மையையும் எடுத்துக்காட்டினார். அந்த நிருபம் முத்திரையிடப்பட்ட ஓர் உறை வழி பிரதம மந்திரியிடம் சேர்ப்பிக்கப்பட்டது. அவர் அந்த நிருபத்தைத் திறந்து வாசிக்க ஆரம்பித்தவுடன், முகம் வெழுத்து: "இ·து அரசர்க்கரசர் தனக்குக் கட்டுப்பட்ட சிற்றரசனுக்கு ஆணையிட்டு அவனது நடத்தையைக் கண்டிப்பது போலலல்வா உள்ளது,"48 எனக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக நாடு கடந்த யாத்திரையில் ஈடுபட்டிருந்த பஹாவுல்லா மற்றும் அவரது குடும்பத்தினர் கான்ஸ்டாண்டிநோப்பிளிலிருந்து ஆட்ரியாநோப்பிள் பயணத்தின் அந்த பன்னிரண்டு நாட்களிலும் பெரும் சிறமத்திற்குள்ளாயினர். அது டிசம்பர் மாதம், சீதோஷ்ன நிலைமை கடுங்குளிராக இருந்தது. நீர் தேவைப்பட்டபோது வழியில் கண்ட ஓடைகளில் நெருப்பிட்டு, பனிக்கட்டியை இளக்கி ஊற்றுகளிலிலிருந்து நீர் பெற வேண்டியதாயிற்று. அவர்களில் பெரும்பாலானோர் அவ்வித கடுங்குளிரிலிருந்துத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தேவையான உடைகள் பெற்றிருக்கவில்லை.

பஹாவுல்லா, ஆட்ரியாநோப்பிள் நகரை டிசம்பர் 12-ஆம் நாளன்று சென்று சேர்ந்து, அந்நகரில் சுமார் நான்கரை வருடங்கள் வாழ்ந்தார். இந்தக் காலகட்டமும் வேதனைகள் நிறைந்த நெருக்கடிகளும், அற்புதமான வெற்றிகளும் நிறைந்த காலகட்டமாகும். பஹாவுல்லாவின் செல்வாக்கு வளர வளர மிர்சா யஹ்யாவின் மனதில் பொறாமைத் தீ மேலும் தீவிரமாகக் கனல்விட ஆரம்பித்தது. அவர், தமது எதிர்ப்பை அதிகரித்த தைரியத்துடன் செயல் படுத்தி, பாப்'யிக்கள் இந்நாளுக்கான இறை அவதாரபுருஷரை ஏற்பதைத் தடுக்க தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார். இவர் ஏற்படுத்திய பிரச்சினைகள், பஹாய் சமூகத்தை மட்டும் பாதிப்பதோடு நிற்காமல், பஹாவுல்லா மற்றும் அவரது நம்பிக்கையாளர்களைச் சமயத்தின் புற எதிரிகள் மேலும் தாக்குதல்களைத் தொடுப்பதற்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தன. மிர்சா யஹ்யாவின் துரோகங்களுக்கு எல்லையே இல்லாமற் போனது. இவர் பஹாவுல்லாவுக்கு விஷம் வைத்துக்கொல்லத் தீர்மானித்து, பின்னர் திட்டம் தீட்டி, முயன்று இறுதியில் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார். பஹாவுல்லாவின்பால் அந்த விஷம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. விஷத்திலிருந்து அவரது உயிர் தப்பிய போதிலும், அவரது வாழ்நாள் இறுதி வரையிலும் அவரது கைகள் நடுங்கிய வண்ணமாக இருந்தன.

ஆனாலும், ஆட்ரியாநோப்பிள் நகரம் பஹாவுல்லா அங்கு சாதித்த மாபெரும் வெற்றிகளுக்காக அன்றி மிர்ஸா யஹ்யாவின் கீழ்தரமான செயல்களுக்காக நினைவில் நிற்கப் போவதில்லை. பஹாவுல்லா இங்கிருந்துதான், உலக அரசர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் தமது நிருபங்கள் பலவற்றை அனுப்பினார், தமது சமயத்தை தூர தேசங்களிலெல்லாம் பிரகடணம் செய்தார்.

இந்தப் பொதுப் பிரகடணமானது, மானிடத்திற்கு பஹாவுல்லாவின் சமயத்தை அறிவிக்க உதவிய படிப்படியான செயல்முறை ஒன்றின் மூன்றாவது கட்டமாகும். முதற் கட்டம், பஹாவுல்லா தெஹரானின் சீயாச்-சால் சிறையில் அடைப்பட்டிருந்த வேளை, தெய்வீக ஆவி பஹாவுல்லாவுக்குத் தன்னை வெளிப்படுத்தி, அவரே இந்நாளுக்கான இறைவனின் தூதர் என அவருக்கு அறிவித்ததுடன் ஆரம்பித்தது. அவரது வெளிப்பாட்டின் உதயம் பத்தாண்டு காலத்திற்கு அறியப்படாமல் இருந்த போதிலும், வைகறையைப் போன்று, நித்திரையிலிருந்த ஆன்மாக்கள் பலருக்கு அது விழிப்பூட்டி, ஏற்கும் நிலையில் இருந்தோரை படிப்படியாகக் கண்டுணரச் செய்து, பஹாவுல்லாவை அவர்கள் அறிந்துகொள்ள தயார் படுத்தியதது. இரண்டாவது கட்டம், தம்மை வழியனுப்பி வைக்கக் கூடியிருந்த ஒரு சில

நம்பிக்கையாளர்களுக்கு ரித்வான் பூங்காவில் தம்மைப் பிரகடணம் செய்தபோது தொடங்கியது, இப்போது ஒரு சிறிய எண்ணிக்கையிலான ஆன்மாக்கள் அவரது ஸ்தானத்தை உணர்ந்திருந்தனர். சர்வலோக ரீதியிலான அவரது பிரகடனமே மூன்றாவது கட்டமாகும். அது கான்ஸ்டான்டிநோப்பிளில் ஆரம்பித்து, ஆட்ரியாநோப்பிளில் உந்தம் பெற்று, பஹாவுல்லாவின் அடுத்த மற்றும் இறுதியியான தேசப் பிரஷ்ட பிரதேசமான ஆக்கா நகரில் தனது சக்தியின் அதிவுயர்ந்த நிலையை அது அடைந்தது.

1. பஹாவுல்லா கான்ஸ்டான்டிநோப்பிள் நகரில் எவ்வளவு காலம் இருந்தார்? ________________

2. அங்கு அவரது இருப்பு ஏன் சிறிது காலம் மட்டுமே நீடித்தது?______________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

3. நலைநகரில் இருந்தபோது சுல்தானின் அரசவையினரிடமிருந்து பஹாவுல்லா ஏன் விலகியிருந்தார்? ______________________________________________________________

______________________________________________________________________________

4. அரசவையினர் மற்றும் அவர்தம் மதிப்பற்ற நோக்கங்களின்பால் பஹாவுல்லா எவ்வித தொடர்பும் கொள்ள மறுத்ததை பாரசீகத் தூதல் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டார்? _____

______________________________________________________________________________

______________________________________________________________________________

5. அவர் அடுத்து எங்கு தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டார்? ____________________________________

6. பாரசீக அரசு தனது எல்லைக்கப்பால் வெகு தூரத்தில் பஹாவுல்லாவை தள்ளி வைக்க விரும்பியது ஏன்? ______________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

7. தமது தேசப் பிரஷ்டம் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்ட பஹாவுல்லா என்ன செய்தார்?__

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

8. பஹாவுல்லாவின் நிருபத்தைப் படித்த பிரதம மந்திரி என்ன விமர்சித்தார்? ________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

9. பஹாவுல்லா ஆட்ரியாநோப்பிள் நகரம் எப்போது சென்று சேர்ந்தார்? __________________

10. அந்நகரத்தில் எவ்வளவு காலம் வசித்தார்?__________________________________________

11. ஆட்ரியாநோப்பிள் நகரத்தில் நடந்த மிகவும் குறிப்பிடத் தக்க விஷயம் யாது? ___________

______________________________________________________________________________

______________________________________________________________________________

12. மனிதகுலத்திற்கான பஹாவுல்லாவின் பிரகடணம் எத்தனை கட்டத்தை கடந்து சென்றது?

______________________________________________________________________________

13. முதற் கட்டம் எது?____________________________________________________________

______________________________________________________________________________

14. இரண்டாவது கட்டம் எது? ______________________________________________________

______________________________________________________________________________

15. மூன்றாவது கட்டம் எது? ______________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 24

ஆட்ரியாநோப்பிள் நகரில் பஹாவுல்லவுக்கு எதிரான மிர்ஸா யஹ்யாவின் வெளிப்படையான எதிர்ப்பு அப்போதுதான் பஹாவுல்லாவின் ஸ்தானத்தைப் பற்றி சிறிதளவு அறிய வந்திருந்த, அங்கிருந்த சிறு தேசப்பிரஷ்ட குழுவினரிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. இது, இரு பெரும் அரசாங்கங்களின் -- பாரசீக மற்றும் ஒட்டமான் -- தொடர்பைப் பெற்றிருந்த சமய எதிரிகளுக்குப் புதிதாக உதயமாகியிருந்த இறைவனின் சமயத்தை தாக்குவதற்குத் தேவையான வாய்ப்பை வழங்கியது. திடீரென்று ஒரு நாள் காலை வேளை, பஹாவுல்லாவின் வீடு இராணுவ வீரர்களால் சூழப்பட்டு, அனைவரும் உடனடி வெளியேற்றத்திற்கு தயாராகும்படி உத்தரவிடப்பட்டனர். சிறிது நேரம், தங்கள் கதி என்னவாகப் போகிறதென்று ஒருவருக்கும் தெரியவில்லை. அவர்கள் அனைவருடைய பயமும், தங்கள் அன்பிற்கினியவரை விட்டு பிரிக்கப்பட்டு விடுவோமோ என்னும் பயமே, ஏனென்றால், பஹாவுல்லாவும் அவரது குடும்பத்தினர்கள் ஓரிடமும், நம்பிக்கையாளர்கள் அவ்விடத்தைவிட்டு கலைந்து செல்லும்படியும் வற்புறுத்தப்படுவார்கள் என்னும் வதந்தி உலவியதே இதற்கான

காரணம். இறுதியில், பஹாவுல்லா சிறை நகரான ஆக்காவுக்கும், மிர்ஸா யஹ்யா சைப்ரஸ் தீவுக்குமாக அனுப்பப்படுவார்கள் என்பது தெளிவாயிற்று. மிர்ஸா யஹ்யாவின் தீவிர ஆதரவாளர்கள் இருவர் உட்படட கிட்டத்தட்ட எழுபது பேர் அடைங்கிய அனைத்து தேசப்பிரஷ்டர்களும் ஆக்கா நகருக்கு அனுப்பப்பட்டனர். மறுபறம், பஹாவுல்லாவின் நான்கு சகாக்கள் மிர்ஸா யஹ்யாவுடன் சைப்ரஸ் தீவுக்கும் நாடுகடத்தப்பட்டனர்.

1868 ஆகஸ்ட் 12-ஆம் தேதி பஹாவுல்லாவும் அவரது குடும்பத்தினரும் ஆட்ரியாநோப்பிள் நகரைவிட்டு வெளியாகி, நிலம் மற்றும் கடல் வழியாக, மிகவும் சிரமமான பிரயாணத்தின் முடிவில், 12 ஆகஸ்ட் 1868-இல் அக்காநகரைச் சென்றடைந்தனர். ஒட்டமான அரசாங்கம் குற்றவாளிகளையும் கிளர்ச்சிக்காரர்களையும் நாடுகடத்துவதற்கு ஆக்கா நகரைப் பயன்படுத்தியதால், அந்நகருக்கு குற்றவாளிகள் வருவது அக்காநகரவாசிகளுக்கு பழக்கமான ஒன்றாகிவிட்டது. இம்முறை, அங்கு வரக்கூடிய குற்றவாளிகள், தேசத்திற்கும், கடவுளுக்கும் மற்றும் சமயத்திற்கும் விரோதிகள் என அறிவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரையும் கடுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்படி சுல்தான் உத்தரவிட்டும், அக்காநகரத்தின் மிகக் கடுமையான நிலை காலப்போக்கில் அவர்கள் அனைவரும் அழிந்து போக ஏதுவாக இருக்கும் என சுல்தானும் அவரது மந்திரிகளும் நம்பிக்கை கொண்டனர். சுல்தானின் கட்டளை பள்ளிவாசலில் பகிரங்கமாக வாசிக்கப்பட்டது, மற்றும் வரக்கூடிய அந்தப் பாரசீக குற்றவாளிகள் நிரந்தர சிறைவாசத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுடன் கலந்துறவாடுவது கண்டிப்பாக அனுமதிக்கப்படவில்லை எனவும் நகரவாசிகள் அனைவராலும் புறிந்துகொள்ளப்பட்டிருந்தது.

அக்காநகரம் வந்தடைந்தவுடன், கைதிகள் அனைவரும் இராணுவ முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டு, அதற்கென ஒதுக்கப்பட்டிருந்த பிரத்தியேகமான ஒரு பகுதியில் சிறைவைக்கப்பட்டனர். முதல் நாளிரவு, அவர்களுக்கு உண்ண உணவோ குடிக்க நீரோ வழங்கப்படவில்லை. அதன் பிறகு அவர்களுக்கு கீழ்த்தரமான ரொட்டி வகைகள் மூன்று தினசரி வழங்கப்பட்டது. விரைவில் மூவரைத் தவிர, அனைவரும் நோயுற்றனர். விரைவில், அவர்களுள் மூவர் இறந்தும் போனார்கள். புதைக்க ஆகும் செலவுத் தொகைகளை தந்தால் அன்றி இறந்தவர்களைப் புதைக்க முடியாது என காவலர்கள் கூறிவிட்டனர். பஹாவுல்லா பயன்படுத்திய பிரார்த்தனை கம்பளம் ஒன்று விற்கப்பட்டு, அந்தத் தொகை காவலர்களிடம் வழங்கப்பட்டது. ஆனால், அக்காவலர்கள் கொடுத்த வாக்கை மீறி இறந்தவர்களை சுத்தம் செய்யாமலும், போர்த்தாமலும், சவப்பெட்டிக்கூட இல்லாமலும் புதைத்துவிட்டனர் என்பது பிறகு தெரிய வந்தது. பார்க்கப் போனால் அடக்கம் செய்வதற்குத் தேவைப்படும் செலவைக்காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

சிறைவாசச் சூழ்நிலைகள் காலப்போக்கில் மேம்பாடு கண்ட போதிலும், சிறைவாசத்தின் முதல் ஆண்டு பஹாவுல்லாவுக்கு அதிக சோதனையாகவே அமைந்திருந்தது. சீயாச்-சாலில் அவர் அனுபவித்த கொடுமைகள் புற எதிரிகளால் மட்டுமே ஏற்படுத்தப்பட்டவை. ஆட்ரியாநோப்பிள் கொந்தளிப்புகள் உள்ளெதிரிகளால் உருவானவை. ஆனால் ஆக்கா நகர வாசத்தின் ஆரம்ப காலங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளோ, உள் மற்றும் புற எதிரிகள் இருவராலும் ஏற்படுத்தப்பட்டவை. இக்காலகட்டத்தை பற்றி பின்வரும் வார்த்தைகளில் அவரே கூறுகின்றார்:

> **"இவ்விடத்தை யாம் வந்தடைந்தபோது, அதை 'அதிபெரும் சிறை' என யாம் பெயரிடத் தீர்மாணித்தோம் என்பதை அறிவாயாக. முன்பொரு காலத்தில் வேறொரு இடத்தில் (தெஹரான்) சங்கிலிகளுக்கும் கால்கட்டைகளுக்கும் உட்படுத்தப்பட்ட போதும், அதை**

**அப்பெயரால் அழைக்க யாம் மறுத்தோம். கூறுவீராக: புரிதல் பெற்றவர்களே, இதைப்பற்றி சிந்தியுங்கள்!"47**

பஹாவுல்லா மற்றும் அவரது குடும்பத்தினருடன் எவருமே தொடர்பு கொள்ளக்கூடாது என்னும் சுல்தானின் கட்டளையையும் பாராமல், பாரசீக நம்பிக்கையாளர்கள் பலர், அவரது முன்னிலைக்கு அனுமதிக்கப்படக்கூடும் என்னும் நம்பிக்கையில், அக்காநகர் நோக்கிய அந்தத் தூரமான பயணத்தை, அதுவும் பெரும்பாலும் கால்நடையாகவே, மேற்கொண்டனர். இந்த பக்திமிக்க ஆன்மாக்கள் அக்காநகர் வந்தடைந்தவுடன், அவரது முன்னிலையை அடையமுடியாமல், அவரது சிறையைப் பார்த்தவண்ணம் தூரத்தில் நின்றவாறு, சன்னல் கம்பிகளினூடே சிறிதளவேனும் தெரிந்த அவரது உருவத்தின் காட்சியைக் காண்பதில் மனநிறைவு பெறுவர். அவர்களை நோக்கிய அவரது புனிதக் கரங்களின் அசைவு, பல மாதக் கணக்கில் செய்த பிரயாணத்திற்குக் கிடைத்த பூரணப் பரிசாகி, பெரும்பாலோர் அவர்களுக்குக் கிடைத்த அந்தத் திருவருளின் மனநிறைவுடன் இல்லம் நோக்கி நன்றியுடன் திரும்புவர்.

இக்காலகட்டத்தில் நடந்த அதிதுக்ககரமான சம்பவம், "மிகத் தூய்மையான கிளை," எனப்படும் பஹாவுல்லாவின் குமாரர் மிர்ஸா மிஹ்டியின் திடீர் மறணமாகும். ஒரு நாள் சாயங்காலம், மிர்ஸா மிஹ்டி, அந்த முகாமின் கூறை மீது பிரார்த்தனை மற்றும் தியானவயப்பட்டு முன்னும் பின்னும் நடந்த வண்ணமாக இருந்தபோது, கூறை வழி வெழிச்சம் புகவென அமைக்கப்பட்டிருந்த ஒரு துவாரத்தின் வழியாகக் கீழே தரையில் கிடந்த ஒரு மரப்பெட்டியின் மீது விழுந்துவிட்டார். ஒரு மருத்துவர் வரவழைக்கப்பட்ட போதும், கீழே விழுந்ததில் அவரது விலா எழும்புகள் நொருங்கிவிட்டிருந்தன; சிகிட்சைக்கு வழியில்லாமலும் போயிற்று. இருப்பத்திரண்டு மணி நேரத்திற்குள் அவர் மரணமுற்றார். அவர் இறக்கும் தருவாயில், பஹாவுல்லா அவருடைய இறுதி வேண்டுதல் என்னவென வினவினார். அதற்கு மிர்ஸா மிஹ்டி: “பஹாவின் மக்கள் உமது பிரசன்னத்தைப் பெறுவதே எனது வேண்டுதலாகும்," என பதிலளித்தார். அதற்கு பஹாவுல்லாவும் "அவ்வாறே ஆகட்டும்," "இறைவன் உனது ஆசையை நிறைவேற்றுவார்," என பதிலளித்தார்.”48 அதி பெரும் சிறையில் பஹாவுல்லாவின் துன்பங்கள் கடுமையானவையாக இருந்த போதிலும், அக்காவிற்கு அவர் நாடு கடத்தப்பட்டது கடந்த கால தீர்க்க தரிசனங்களின் நிறைவேற்றம் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். உண்மைச் சூரியன் அக்காநகர்தனில்தான் இருபத்து நான்கு ஆண்டுகள் முழுப் பேரொளியுடன் பிரகாசித்தது. இக்காலகட்டத்தில்தான், பஹாவுல்லா, அருகில் உள்ள ஹைஃபாவின் கார்மல் மலைக்கு தாமே புரியவிருக்கும் ஒரு விஜயத்தின் போது, பாப் பெருமானாரின் சன்னதி அமைய வேண்டிய இடத்தை அப்துல் பஹாவுக்குச் சுட்டி காட்டுவார். ஆக்கா நகர் அருகே அமையப்போகும் அவரது புனித இளைப்பாறல் தலமே உலகத்திலேயே அதிப்புனிதமான இடமாக இருந்திடும்; அது இருக்கும் திசையை நோக்கியே உலகம் முழுவதுமுள்ள அவரது நம்பிக்கையாளர்கள் அனுதினமும் பிரார்த்தனைக்காகத் திரும்புவர். பாப்பெருமானாரின் புனிதக்கல்லரைக்கு அருகில்தான் உலக நீதிமன்றத்தின் இருக்கை ஸ்தாபிக்கப்படப் போகின்றது. இரட்டை நகர்களான ஹைஃபா மற்றும் அக்காநகர் இரண்டும் பஹா’யி சமயத்தின் ஆன்மீக மற்றும் நிர்வாக உலக மையங்களாகப் போகின்றன. அவர் ஏற்கனவே, ஏட்ரியாநோப்பிள் நகரில் இருந்த முதல் சில வருடங்களின் போது வெளிப்படுத்திய ஒரு நிருபத்தில் அக்காநகர் நோக்கிய தமது தேசப்பிரஷ்டம் பற்றி பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிட்டுள்ளார், அதில்:

**"எமது வருகையின் போது ஒளியென்னும் பதாகைகள் கொண்டு யாம் வரவேற்கப்பட்டோம்; அதைக்கண்டு திருஆவியின் குரல்: 'விரைவில் உலகில் வாழும் அனைத்தும் இப்பதாகைகளின் கீழ் சேர்க்கப்படவிருக்கின்றனர்,' என கூக்குரலிட்டது."49**

1. ஏட்ரியாநோப்பிளில் மிர்ஸா யஹ்யா அளித்த தொல்லைகளை சமயத்தின் புற எதிரிகள் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டனர்? ____________________________________________

____________________________________________

____________________________________________

2. பஹாவுல்லா எங்கு நாடுகடத்தப்பட்டார்? ____________________________________________

3. மிர்ஸா யஹ்யா எங்கு அனுப்பப்பட்டார்? ____________________________________________

4. பஹாவுல்லாவுடன் எத்தனை பேர் அக்காநகர் சென்றனர்? ______________________________

5. பஹாவுல்லாவின் நம்பிக்கையாளர்கள் சிலர் சைப்ரஸ் தீவிற்கும் மிர்ஸா யஹ்யாவின் ஆட்கள் சிலர் அக்காநகருக்குமாக ஏன் அனுப்பப்பட்டிருக்கக்கூடும் என நினைக்கின்றீர்கள்? ____________________________________________

____________________________________________

____________________________________________

6. ஆட்ரியாநோப்பிள் விட்டு பஹாவுல்லா எந்தத் தேதியில் புறப்பட்டார்? __________________

7. அவர் எந்தத் தேதியில் அக்காநகர் வந்தடைந்தார்? ____________________________________

8. பஹாவுல்லா மற்றும் அவருடன் வந்த நம்பிக்கையாளர்களின் சிறைவாசம் பற்றி சுல்தான் என்ன கட்டளை இட்டிருந்தார்? ____________________________________________

____________________________________________

____________________________________________

9. அக்கட்டளைகள் பற்றி ஆக்கா நகர மக்கள் எவ்வாறு அறிய வந்தனர்? __________________

____________________________________________

10. அக்காநகர் வந்தடைந்தவுடன் பஹாவுல்லாவும் அவருடன் வந்தோரும் எங்குக் கொண்டுசெல்லப்பட்டனர்? ____________________________________________

11. சிறையில் அவர்கள் முதல் சில நாள்களில் அனுபவித்த சூழ்நிலைகளை சில வார்த்தைகளில் வர்ணிக்கவும்: ____________________________________________

________________________________________________________________________________

12. பஹாவுல்லா அக்காநகருக்கு என்ன பெயர் சூட்டினார்? ______________________________

13. ஆக்கா நகர வாசத்தின் முதற் சில ஆண்டுகளில் நடந்த மிகத் துயரமான சம்பவம் என்ன?_

14. சில புனிதயாத்ரீகர்கள் அக்காநகருக்கு என்ன சூழ்நிலையின் கீழ் வந்தனர்?____________

15. மிகத் தூய கிளையின் விண்ணேற்றம் குறித்த சூழ்நிலைகளை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்.

16. ஆக்கா மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் பஹாவுல்லா எத்தனை வருடங்கள் வாழ்ந்தார்?_

17. கார்மல் மலை விஜயத்தின்போது பஹாவுல்லா, அப்துல் பஹாவுக்கு எதை சுட்டிக் காட்டினார்? ____________________________________________________

18 உலகிலேயே அதிப்புனித இடம் எது, அது எங்கே இருக்கின்றது?______________________

19 உலக நீதி மன்றத்தின் இருக்கை எங்கு உள்ளது? ________________________________________

______________________________________________________________________________

20 பஹாய் சமயத்தின் ஆன்மீக மற்றும் நிர்வாக உலக மையம் எங்கே உள்ளது? _____________

______________________________________________________________________________

21. இன்று ஹைஃபா மற்றும் அக்காநகர் செல்லும் யாத்ரீகர்கள் அங்கு என்ன செய்வார்கள் என்பது தெரியுமா? உங்களுக்கு தெரிந்த அன்பர் யாராவது புனித நிலத்திற்கு சென்றிந்தால், அது பற்றி விவரிக்கும்படி நீங்கள் அவரை கேட்டுக்கொள்ளலாம்.

## பகுதி 25

பஹாவுல்லா அக்காநகரிலிருந்து தொடர்ந்து சர்வலோகமாகப் பிரகடணம் செய்தார். ஆட்ரியாநோப்பிள் மற்றும் அக்காநகரிலிருந்து அவர் உலக அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு அனுப்பிய நிருபங்கலிலிருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பிரெஞ்சுப் பேரரசனான 3-வது நெப்போலியனுக்கு:

**“பாரிஸ் மன்னரே! கோயில் மணியைத் தொடர்ந்து அடிக்க வேண்டாமென உங்கள் பாதிரிமாரிடம் கூறுங்கள். ஒரே உண்மை கடவுளின் பெயரால்! அதி பெரும் நாமமான அவரது உருவில் அதி வல்லமைமிக்க மணி தோன்றிவிட்டது. . .”[50]**

ரஷ்யப் பேரரசனான 2-வது நிக்கோலாவிட்ச் அலெக்ஸான்டருக்கு:

**“சகலத்தையும் வலிந்து ஈர்த்திடும் இந்த இறைசமயத்தின் பெயரால், மனிதர் மத்தியில் நீங்கள் எழுந்திடுவீராக; பின்னர், மேலானவரும், சிறந்தவருமாகிய கடவுளின்பால் நாடுகளுக்கு அழைப்பாணை அனுப்பிடுங்கள்.”[51]**

இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணிக்கு:

**“தங்கள் ஆசையை ஒதுக்கிவிட்டு, நாள்களில் தொன்மையானவராகிய, தங்கள் பிரபுவின்பால் தங்கள் இதயத்தைத் திருப்புங்கள். கடவுளின் நிமித்தமாக யாம் தங்களைக் குறிப்பிடுகின்றோம்; விண்ணையும் மண்ணையும் படைத்தவராகிய, கடவுளைத் தாங்கள் நினைப்பதன் வாயிலாகத் தங்கள் நாமம் மேன்மைப்படுத்தப்படுமென யாம் விரும்புகிறோம்.”[52]**

பிரஷ்ய அரசன் 1-வது வில்லியத்திற்கு:

**“தெய்வீக வெளிப்பாடெனும் பகலூற்றைக் கண்டுகொள்வதை, உன்னை பெருமை தடுப்பதினின்றும், விண்ணுலகம், பூவுலகம் ஆகியவற்றின் அரியனையின் வேந்தரிடமிருந்து, உலக ஆசைகள். உன்னை ஒரு திரையைப்போல் முற்றாக விலக்கிடப் போவதினின்றும் கவனமாயிரு.”[53]**

ஆஸ்திரியப் பேரரசன் பிரான்சிஸ்-ஜோசஃப்:

**“உனது கண்களைத் திற, அதனால் இவ்வொளிமயமான காட்சியினைக் கண்ணுற்று, பகல் வேளையிலும், இரவுக் காலத்திலும் நீ வழிபடும் அவரை அறிந்து கொண்டு இப்பிரகாசமான அடிவானத்திற்கு மேல் பிரகாசித்திடும் அருள் ஒளியினை கூர்ந்து நோக்கிடக் கூடும்."[54]**

ஒட்டமான் சாம்ராஜ்யத்தின் சுல்தான் அப்துல்-அஜிஸ்:

**“இறையச்சத்தை அப்பால் வைத்துவிடாதீர்; நேர்மையாக நடப்போரில் சேர்ந்திடுவீராக. யாரிடம் விசுவாசம், நீதி ஆகியவற்றின் சுகந்தத்தை உணர்கின்றீரோ அத்தகைய அமைச்சர்களை உம்மைச்சுற்றி வைத்துக்கொள்வீராக; அவர்களுடன் கலந்தாலோசித்து, உமது பார்வையில் எவை நன்மையாகப் படுகின்றனவோ அவற்றையே தேர்ந்தெடுப்பீராக; தாராளமாய் நடப்போரில் சேர்ந்திடுவீராக.”[55]**

பாரசீகத்தின் நாசிருத்தீன் ஷாவுக்கு::

**“அவரது அருட்கொடையினின்று – அவர் போற்றப்படுவாராக – இந்தச் சிறைவாசத்தின் மூலமாக சங்கிலிகள் மற்றும் விலங்குகளிலிருந்து அவர் மனிதர்களின் கழுத்துகளை விடுவித்து, நேர்மையான முகங்களோடு அவர்களை, வல்லமை மிக்கவரும், கொடையாளருமாகிய அவரது வதனத்தின்பால் திரும்பச் செய்திடக் கூடுமாக. யாரெல்லாம் அவரை அழைக்கின்றாரோ, அவர்களுக்குப் பதிலளிக்க அவர் தயாராக இருக்கின்றார்; அவருடன் வழிபடுவோரிடம் அவர் நெருங்கி இருக்கின்றார்.”[56]**

அமெரிக்க ஆட்சியாளர்களுக்கும் அதன் குடியரசுகளின் அதிபர்களுக்கும்:

**“நியாயம் எனும் கரங்களைக் கொண்டு உடைந்தனவற்றை ஒன்று சேர்ப்பீர், விதிப்பவரும், சர்வ-ஞானியுமான உங்களது பிரபுவின் கட்டளைகளெனும் பிரம்பினைக் கொண்டு, செழித்திருக்கும் கொடுமையாளர்களை நசுக்கிடுவீர்.”[57]**

போப்பாண்டவர் 9-வது பியுஸ்:

**“இறைமைந்தன் மறைத்து வைத்திருந்த திருவாக்கு வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. இந்நாளில் அது மனித மேனியெனும் வடிவில் கீழனுப்பப்பட்டுள்ளது. இறைபிதாவாகிய பிரபு ஆசிபெறுவாராக. அவர், மெய்யாகவே, தமது அதி பெரும் மாட்சிமையில் நாடுகளிடையே வந்துள்ளார்.”[58]**

கிருஸ்துவ சபையின் துறவிகள் குழு முழுமைக்கும்:

**"துறவிகள் கூட்டத்தினரே! உங்கள் தேவாலயங்களிலும் துறவிமடங்களிலும் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளாதீர். எமது ஆணையின்படி அவற்றிலிருந்து வெளியேறுங்கள், பின்னர், உங்கள் ஆன்மாக்களுக்கும் மற்றவர் ஆன்மாக்களுக்கும் நன்மை பயக்கவல்லவற்றில் உங்களை சுறுசுறுப்பாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்."[59]**

## பகுதி 26

அக்காநகர் மற்றும் பாஹ்ஜி வாழ் காலங்களில் பஹாவுல்லாவின் எழுதுகோல், ஓர் ஒளிமிகுந்த உலக நாகரீகத்தை மனிதகுலம் நிர்மாணிக்க உதவக்கூடிய, வழிகாட்டல்களைப் பல தொகுதிகளாக வெளிப்படுத்தியது. அவரது எழுதுகோலின் வழி தீட்டப்பெற்ற வெளிப்பாடுகளிலேயே மகத்தானதாக, அவரது வெளிப்பாட்டின் அதிப்புனித நூலாக, அப்புட் இல்லத்தில் 1873 வாக்கில் வெளிப்படுத்தப்பட்ட கித்தாப்-இ-அக்தாஸ் விளங்கியது. புனித நிலத்தில் பஹாவுல்லாவின் திருவாக்கு வெளிப்பாடுகள் பற்றி ஷோகி எபெஃண்டி கூறுவது:

> "இக்காலகட்டத்தில் பஹாவுல்லாவின் எழுத்துகள், அவற்றின் உள்ளடக்கமாகவுள்ள பலதரப்பட்ட விஷயங்களைக் கண்ணுறும் போது, அவை மூன்று வெவ்வேறு வகைகளைச் சார்ந்தவைகளாக காணப்படுகின்றன. முதல் வகையாக, ஆட்ரியாநோப்பிளில் அவரது சமய நோக்கம் சம்பந்தமாக செய்யப்பட்ட பிரகடணத்தின் தொடர்வெளிப்பாடுகள் உள்ளன. இரண்டாவதாக, அவரது அதிப்புனித நூலில் பெரும்பாலும் பதிவுசெய்யப்பட்டுள்ள அவரது சமயவெளிப்பாட்டின் விதிகளும் சட்டங்களும் அடங்கும். மூன்றாவது வகைக்கு, அவ்வெளிப்பாட்டின் அடிக்கோள்களான அடிப்படை கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை பகுதி குறிப்பிட்டும் பகுதி மறு உறுதிபடுத்தவும் செய்யும் நிருபங்களை சேர்க்கலாம்."60

மேற்கத்திய உலகு சார்ந்த பஹாவுல்லாவின் சமயத்தின் பரந்த விஸ்தரிப்பு அவரது வாள்நாள் காலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை, அது அப்துல் பஹாவின் தலைமைத்துவ காலம் வரை காத்திருக்க வேண்டும். இருப்பினும், அவரது போதனைகள், பல மேற்கத்திய நாடுகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டிருந்தன மற்றும், தம்மை ஆனுகுவோர் மீது அவர் செலுத்திய ஆழ்ந்த செல்வாக்கினால், மேற்கு நாடுகளில் இருந்த சிலர் அவரை உணர்ந்திருந்னர். 1890-ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில், பஹாவுல்லாவின் இவ்வுலக வாழ்வின் கடைக் கட்டத்தில், எட்வர்ட் க்ரான்வில் ப்ரௌன் எனப்படும் இங்கிலாந்தின் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த அறிஞர் ஒருவர் பஹாவுல்லாவைச் சந்திக்க வந்தார். பின்வரும் பகுதிகள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அவரது நேர்முகக் காணலின் குறிப்புகளிருந்து எடுக்கப்பட்டவை:

> "…எனக்கு வழிகாட்டியவர் நான் எனது காலனிகளை கலற்றிக்கொண்டிருந்த வேளை சிறிது நேரம் நிதானித்தார். பிறகு, கையால் விரைவாக விலக்கி, நான் கடந்து சென்ற பிறகு திரையை மீண்டும் மூடினார்; மேல் முனையில் நீண்டிருந்த தாழ்வான மஞ்சம் ஒன்றும், அதே வேளை கதவிற்கு எதிர்பக்கத்தில் இரண்டு அல்லது மூன்று ஆசனங்கள் போடப்பட்டும் இருந்த பெரிய அறையில் நான் இருப்பதை கண்டேன். எங்கு செல்கிறேன் மற்றும் யாரை தரிசிக்கவிருக்கிறேன் (யாதொரு குறிப்பும் எனக்களிக்கப்படவில்லை) என்பது பற்றி சிறிதளவு நான் சந்தேகமுற்றாலும், ஓரிரு வினாடிகள் கழிந்த பிறகு, வியப்பு, பிரமிப்பு ஆகியன சேர்ந்த படபடப்புடன், அது மனித சஞ்சாரமற்ற அறையல்ல என்னும்

உறுதியான உணர்வடைந்தேன். சுவறும் மஞ்சமும் சந்திக்கும் மூலையில், தர்வீஷ்கள் அனியும், அடியில் வெள்ளை நிறத்தில் சிறிய தலைப்பாகை சுற்றப்பட்ட, தாஜ் (ஆனால் ஆசாதாரண உயரமும் வேலைப்பாடும் கொண்டது) எனப்படும் கம்பளி வகையிலான தலைப்பாகையை சிரசிற் கொண்ட, அற்புதமும் வணக்கத்திற்குறியதுமான உருவம் ஒன்று அமர்ந்திருக்கக் கண்டேன். நான் கண்ணுற்ற அவரது முகத்தை என்னால் மறக்க முடியாவிட்டாலும் அதை என்னால் வர்ணிக்க இயலவில்லை. கூர்மையான அக்கண்கள் ஒருவர் ஆன்மாவையே ஊடுருவிப் பார்ப்பது போன்று இருந்தது; அடர்த்தியான புறுவங்களின் மீது சக்தியும் அதிகாரமும் வீற்றிருந்தன: இனைந்து இடுப்பு வரை கருகருவென செழிப்புடன் வளர்ந்திருந்த அவரது முடியும் தாடியும் நெற்றியிலும் முகத்திலும் இழையோடிய சுருக்கங்கள் சுட்டிய அவரது வயதை, மறைத்தே காட்டின. அரசர்கள் பொறைமையுறவும் பேரரசர்கள் வீன் பெருமூச்சிடவும் செய்யும் பக்தி மற்றும் அன்பிற்கு பாத்திரமான அவரது முன்னிலையில் நான் சிரம் தாழ்த்தியபோது, எவரது முன்னிலையின் நான் நிற்கின்றேன் என வினவ அவசியமே இல்லை! "மெல்லிய கம்பீரமான குரல் ஒன்று என்ன அமருமாறு கூறி, பிறகு: - '**தாங்கள் அடைந்துள்ளதற்கு இறைவன் போற்றப்படுவாராக!... நீர் ஒரு கைதியும் தேசப் பிரஷ்டியுமானவரை காண வந்துள்ளீர்... யாம் இவ்வுலகின நன்மையையும் அதன் நாடுகளின் மகிழ்ச்சியையுமே விரும்புகிறோம்; இருந்தும் சிறையிலிடவும் தேசப் பிரஷ்டம் செய்யவும் தக்க கலவரம் மற்றும் தேசத்துரோகம் ஆகியவற்றை தூண்டுபவன் என எம்மைக் கருதுகின்றனர்... தேசங்கள் யாவும் ஒரே நம்பிக்கையில் ஐக்கியப்பட்டும், மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் எனவும்; மனிதர்களின் குழந்தைகளிடையே நேசம் மற்றும் ஒற்றுமையின் பந்தங்கள் உறுதிப்படுத்தப்படவும்; சமய பேதங்கள் நீங்கவும், இன வேறுபாடுகள் அழியவும் வேண்டும் -- இதில் தீமை என்ன உள்ளது?... இருந்தும் இது நிறைவேறும்; இப்பலனற்ற சச்சரவுகள், நாசமுண்டாக்கும் போர்கள் மறைந்து, 'அதி பெரும் அமைதி' நிச்சயமாக வரும்... ஐரோப்பாவில் உள்ள உங்களுக்கும் இது தேவைதானே? இயேசு கிறிஸ்து முன்கூறியதும் இதுதானே?... உங்கள் அரசர்களும் ஆட்சியாளர்களும் மனிதகுலத்தின் மகிழ்ச்சிக்கு அன்றி மானிடத்தின் அழிவிற்காக அல்லவோ தங்கள் பொக்கிஷங்களை எளிதாக விரயம் செய்துகொண்டிருப்பதை யாம் கண்ணுறுகின்றோம்... இச்சன்டைகளும், இந்த இரத்தக் களரியும், முரண்பாடுகளும் கண்டிப்பாக முடிவிற்கு வரவேண்டும், அனைத்து மணிதர்களும் உறவினர்களாகவும் ஒரே குடும்பமாகவும் ஆகவேண்டும்... தனது தேசத்தை நேசிக்கின்றான் என்பதில் ஒரு மனிதன் பெருமை கொள்ளவேண்டாம்; மாறாக தனது இனத்தையே நேசிக்கின்றான் என்பதில் அவன் பெருமை கொள்ளட்டும்...'"** 63 எனக் கூறிற்று.

1. இராணுவ முகாமிலிருந்து எந்தச் சூழ்நிலையில் பஹாவுல்லாவும் அவரது சகாக்களும் வெளியேற்றப்பட்டனர்? ________________________________________

2. பஹாவுல்லாவும் அவரது குடும்பத்தினரும் இறுதியாக குடியேறிய வீட்டின் பெயர் என்ன? _

   ____________________________________________________

3. ஆக்காவில் அவர்களது வாழ்க்கை சூழ்நிலை என்ன மாற்றம் கண்டது?____________________

   ____________________________________________________

4. இந்த மாற்றம் எதனால் ஏற்பட்டது? ____________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

5. பஹாவுல்லா தமது வாழ்நாளின் இறுதி வருடங்களை கழித்த மாளிகையின் பெயர் என்ன?
______________________________________________________________________

6. பாஹ்ஜி மாளிகையை அப்துல் பஹா எந்தச் சூழ்நிலையில் வாங்கினார்? _______________
______________________________________________________________________

7. ஆக்கா வாழ் காலத்தில் பஹாவுல்லாவின் அதி முக்கிய வெளியீடாக எது விளங்குகிறது? _
______________________________________________________________________

8. அது எங்கு, எப்போது வெளிப்படுத்தப்பட்டது? ____________________________________
______________________________________________________________________

9. பஹாவுல்லாவின் இக்காலகட்ட வெளிப்பாடுகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம் என பாதுகாவலர் ஷாகி எ·பெண்டி கூறுகிறார். அவை யாவை?

அ. ________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

ஆ. ________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

இ. ________________________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

10. பஹாவுல்லாவின் வெளிப்பாட்டின் சில சட்டங்கள் யாவை? ___________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

11. அவரது வெளிபாட்டின் கோட்பாடுகள் மற்றும் நம்பிக்கைகள் சிலவற்றை குறிப்பிடவும் ___

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

12. எட்வர்ட் க்ரான்வில் ப்ரெளன் என்பவர் யார்? ________________________________________

________________________________________________________________________________

13. எட்வர்ட் க்ரான்வில் ப்ரெளன் பஹாவுல்லாவின் முன் தலைவணங்கிய போது அவரது முன்னிலையில் இருந்ததை வர்ணிக்க அவர் பயன்படுத்திய வார்த்தைகள் என்ன?_______

________________________________________________________________________________

________________________________________________________________________________

14. எட்வர்ட் க்ரான்வில் ப்ரெளன் பதிவு செய்த வார்த்தைகளின்படி:

– தமது ஆவல் என்னவென பஹாவுல்லா கூறுகின்றார்___________________________

________________________________________________________________________

– எல்லா நாடுகளும் என்னவாக வேண்டுமென அவர் கூறுகின்றார் _________________

________________________________________________________________________

– எது வலுப்படுத்தப்பட வேண்டுமென அவர் ஆவலுறுகின்றார்____________________

________________________________________________________________________

– எது நிறுத்தப்பட வேண்டுமென அவர் அழைக்கின்றார்?__________________________

________________________________________________________________________

– எதை இரத்து செய்ய வேண்டுமென அவர் அழைக்கின்றார்_______________________

________________________________________________________________________

– என்ன நடக்கப்போகின்றதென அவர் முன்கூறுகின்றார் _________________________

________________________________________________________________________

– நாம் எதில் பெருமை கொள்ள வேண்டுமென பஹாவுல்லா கூறுகின்றார்__________

________________________________________________________________________

# பகுதி 27

கித்தாப்-இ-அக்தாஸ் ஒரு பெரிய நூல் அல்ல; அது 190 பத்திகள் மட்டுமே கொண்டது. ஆனால் வருங்கால உலக நாகரீகத்திற்கான அடிப்படை சட்டங்களும், விதிகளும் அதில் உள்ளடங்கியுள்ளன. பாதுகாலவர் ஷோகி எ·பெண்டி, இதை பஹாவுல்லாவின் வெளிப்பாட்டின தாய் நூல் எனவும் அவரது புதிய உலக ஒழுங்கமைப்புக்கான சாஸனம் எனவும் குறிப்பிடுகிறார். இறைவனின் கட்டளைக்களுக்கினங்க உங்களின் எண்ணங்கள் மற்றும் செயல்களை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் நீங்கள் கித்தாப்-இ-அக்டாஸின் பல பகுதிகளை அடிக்கடி படிப்பாய்வு செய்ய போகின்றீர்கள். இப்போதைக்கு, அதன் ஐந்து ஆரம்ப பாராக்களை மனனம் செய்யும்படி ஆலோசனை கூறப்படுகிறீர்கள்.


> **இறைவனால் தமது ஊழியர்களுக்கு விதிக்கப் பட்ட முதல் கடரைம யாதெனில் தமது வெளிப்பாட்டின் பகலூற்றானவரும் தமது சட்டங்களுக்குத் தோற்றுவாய் ஆனவரும் தமது சமயம் என்னும் இராஜ்யம், படைப்புலகம் ஆகிய இரண்டிலும் இறைமையைப் பிரதிதிப்பவருமாகிய அவரை அறிந்து, ஏற்றுக் கொள்வதுதான். இக் கடமையை எய்திடும் ஒருவன் நல்லன அனைத்தையும் அடைந்தவன் ஆவான்; அதன் இழப்பிற்கு ஆளாகிடும் ஒருவன் நேர்மைச் செயல் ஒவ்வொன்றிற்கும் தோற்றுவாயாக இருந்த போதிலும் வழி தவறிப் போனவனே. அதி விழுமிய இந் லையை, உயர்வு மிகு இவ்வொளியினை உச்சத்தை அடையும் ஒவ்வொருவனும் உலகின் ஆவலாகிய அவரது ஒவ்வொரு கட்டளை யையும் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும். இவ்விரட்டைக் கடமைகள் பிரிக்கப்பட இயலாதவை. ஒன்றின்றி மற்றது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வாறுதான் தெய்வீக அருட்தூண்டலின் ஊற்றாகிய அவரால் ஆணை இடப் பட்டுள்ளது.**
>
> **இறைவனால் வழங்கப்பட்டுள்ள கட்டளைகள்தாம் உலகில் ஒழுங்கை நிலைநாட்டுதற்கும் அதன் மக்களின் பாதுகாப்பிற்கும் உகந்த அதி உயரிய வழியென இறைவனால் அக நோக்கு அருளப் பெற்றவர்கள் தடையின்றி அறிந்து கொள்வர். அவற்றிலிருந்து அப்பால் செல்பவன் இழிவானவர்கள், அறிவிலிகள் ஆகியோரின் பட்டியலில் சேர்க்கப்படுவான். தீய உணர்ச்சிகள், ஒழுங்கற்ற ஆசைகள் ஆகியவற்றின் உந்துதல்களை மறுக்கும்படியும் அதி உயரிய எழுதுகோல் நிர்ணயித்துள்ள வரம்புகளை மீறாது இருக்கும்படியும் மெய்யாகவே, யாம் கட்டளை பிறப்பித்துள்ளோம், ஏனெனில் இவைதாம் படைப்பினங்கள் அனைத்திற்கும் உயிர் மூச்சாகும். தெய்வீக விவேகம் என்னும் கடல்களும் தெய்வீக வெளியிடு கையும் கருணைமயமானவரின் மூச்சினின்று வெளித் தோன்றிய தென்றலிலிருந்து உருவானவையாகும். புரிந்திடும் ஆற்றல் உடைய மனிதர்களே, இயன்ற அளவு பருகிட விரைந்திடுவீராக! இறைவனின் கட்டளைகளை மீறி, அவற்றிலிருந்து பின்வாங்கு வதன் மூலமாக அவரது ஒப்பந்தத்தின் வரம்பு மீறிய இவர்கள், சகலத்தையும் கொண்டுள்ள, அதி உயர்வான ஆண்டவனின் பார்வையில், கடுந் தவறிழைத்தோர் ஆவர்.**
>
> **வையத்தின் மக்களே! எமது ஊழியர்களின் மத்தியில் எமது கட்டளைகளே எமது அன்புமிகு அருள்பாலிப்புகள் என்னும் ஒளி விளக்குகள் என்பதையும் படைப்புலகின்பால் எமது கருணைக்குத் திறவுகோல் என்பதையும் நிச்சயமாக அறிந்திடுவீராக. இவ்வாறுதான் அது வெளிப்பாட்டின் தேவரான, உங்களது தேவரின் விருப்பம் என்னும் சுவர்க்த்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கருணைமயமானவரின் உதடுகள் விரும்பி உதிர்த்திட்ட சொற்களின் இனிமையினைச் சுவைத் திடும் எந்தவொரு மனிதனும், தான் உலகப் பொக்கிஷங்கள் அனைத்தையுமே கொண்டிருந்த போதிலும், அவரது வள்ளன்மை மிகு**

**ஆதரவு, அன்புக் கருணை என்னும் பகலூற்றின் மேல் பிரகாசிக்கும் அவரது கட்டளைகளில் ஒன்றையாவது மெய்ப்பிக்கும் பொருட்டு அவை அனைத்தையும் துறப்பான்.**

**கூறுங்கள்! எமது சட்டங்களிலிருந்து எமது அங்கியின் இனிய நறுமணம் நுகரப்படும்; அவற்றின் உதவியைக் கொண்டு அதி உயரிய சிகரங்களின் மீது வெற்றிக் கொடிகள் நாட்டப்படும். எமது சக்தி என்னும் நா சர்வ வல்லமை பெற்றுள்ள எமது ஒளி என்னும் சுவர்க்கத்திலிருந்து எமது படைப்பை நோக்கி இச் சொற்களை இயம்புகின்றது : ஓஎமது அழகின் மீதுள்ள அன்பின் பொருட்டு எமது கட்டளைகளைக் கடைப்பிடிப்பாயாக.ஔ எந்தவொரு நாவுமே வருணிக்க இயலா தெய்வீக நறுமணமிக்க இச் சொற்களிலிருந்து தனது அதி அன்புக்குரியவரின் நறுமணத்தினை நுகர்ந்திட்ட அன்பன் மகிழ்வெய்துவான். எமது உயிரின் மீது ஆணை! எமது அருள்மிகு கடாட்சம் என்னும் தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்மை என்னும் திராட்சை ரசத்தினைப் பருகிட்ட ஒருவன் எமது படைப்பு என்னும் பகலூற்றின் மேல் பிரகாசிக்கும் எமது கட்டளைகளை வலம் வருவான்.**
**யாம் உங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளது ஒரு வெறும் சட்டத் தொகுப்பு என்று எண்ணிடாதீர். மாறாக சக்தி, வலு என்னும் விரல்களைக் கொண்டு நனிசிறந்த திராட்சை ரசத்தினை வெளிக் கொணர்ந்துள்ளோம். வெளிப்படுத்துதல் என்னும் எழுதுகோல் இதனை வெளிப்படுத்தியுள்ளதே இதற்குச் சாட்சியம் பகர்கின்றது. அக நோக்குடைய மனிதர்களே, இதனைத் தியானிப்பீராக!!”[62]**

## பகுதி 28

பஹாவுல்லாவின் அடுத்தடுத்த நாடுகடத்தல்கள், இரண்டு சர்வாதிகாரிகளின் உத்தரவின் பேரில், ஊழல் நிறைந்த மதவாதிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டாலும், மெய்ம்மையில், அவை சர்வவல்லமையுள்ள கடவுளின் கரத்தாலேயே இயக்கப்பட்டன. கடவுள் அவதாரத்தினால், அவர் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்ந்தபோது -- அவரது சொந்த தாயகத்திலிருந்து அவரது சமயத்தின் ஆன்மீக மற்றும் நிர்வாக மையம் நிறுவப்படவிருக்கும் அக்காநகர் கரைக்கு -- அவர் வெளிப்படுத்திய ஆற்றல்கள் கணக்கிடப்பட முடியாதவை. அவரது நாடுகடத்தல்களின் பாதையைக் காட்டும் கீழே உள்ள வரைபடம், நூல் 2-ஐப் படித்ததிலிருந்து உங்களுக்குப் பரிச்சயமானது. இந்தப் பாடப்பிரிவில் நீங்கள் பெற்ற நுண்ணறிவுகளின் அடிப்படையில், மிகவும் குறிப்பிடத்தக்க இடங்கள் ஒவ்வொன்றிலும் நடந்தவற்றின் ஆன்மீக முக்கியத்துவத்தைப் பற்றி தியானிக்க சிறிது நேரம் ஒதுக்குங்கள். அவரது வாழ்க்கையுடன் தொடர்புடைய எண்ணற்ற நிகழ்வுகளைப் பற்றி நீங்கள் சிந்தித்து, அவருடைய மகத்துவத்தையும் மகிமையையும், அவருடைய வல்லமையையும் மாட்சிமையையும் மேலும் காணும்போது, அவருடைய வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள்: “எக்காலத்தும் மனிதர்களின் கண்களிலிருந்து மறைக்கப்பட்டுள்ள அவர் தனது அவதாரத்தின் மூலமல்லாது வேறெந்த வழியிலுமே அறியப்பட மாட்டார்; மேலும், அவரது அவதாரமானவர், தனது தூதுப்பணியின் மெய்ம்மைக்கு ஆதாரமாகத் தன்னையே சான்றாக அளிப்பதற்கு மேலாக வேறெதனையுமே நிரூபணமாக அளித்திடவியலாது.”




# பகுதி 29

இறைவனின் அவதாரபுருஷர் மனிதர்களிடையே வாழும் காலத்தில், அவரது அசாதாரண சக்திகள் உலக முழுமையும் ஊடுருவி, படைக்கப்பட்ட அனைத்துப் பொருட்களின் மெய்மையிலும் ஓர் ஆழ்ந்த மாற்றத்தை உண்டாக்குகின்றன. இம்மகிமை மிகு நாளில், ஏறக்குறைய நாற்பது ஆண்டுக் காலம், பஹாவுல்லா, இருப்புலகிற்கு, கற்பனை செய்ய முடியாத அளவு அழகுடைய நாகரீகம் ஒன்றை உருவாக்க உதவக்கூடிய எல்லையற்ற சாத்தியங்களை அருளும் இறைவனின் வார்த்தைகளை மானிடத்திற்கு வெளிப்படுத்தினார். இந்த தொடர்சியான தெய்வீக வெளிப்பாடு 1892 மே மாதம் 29-ஆம் திகதி ஒரு முடிவிற்கு வந்தது.

தமது மறைவிற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே இவ்வுலகை விட்டு நீங்கும் விருப்பத்தை பஹாவுல்லா வெளிப்படுத்தினார். அது முதற் கொண்டு, அவரது வார்த்தைகளின் தொனிகளிலிருந்து இவ்வுலக ரீதியிலான அவரது வாழ்வு ஒரு முடிவிறகு வருகிறதென்பது சிறிது சிறிதாக தெளிவாயிற்று. 1892-ஆம் ஆண்டு மே மாதம் 8-திகதி, அவருக்கு இலேசான காய்ச்சல் கண்டது. அது அடுத்த நாள் அதிகரித்தது, ஆனால் பிறகு மறைந்துவிட்டது. தம்மைத் தரிசிக்க அன்பர்கள் மற்றும் யாத்ரீகர்கள் சிலரை அவர் தொடர்ந்து அனுமதித்தே வந்தார், ஆனால் விரைவில் அவர் நலம் குன்றியுள்ளார் என்பது தெளிவாயிற்று. மறுபடியும் அவருக்கு காய்ச்சல் கண்டது, ஆனால் இம்முறை முன்பு கண்டதைவிட மிகவும் அதிகமாவே காய்ச்சல் இருந்து, அவரது உடல் நிலையும் சிறிது சிறிதாக மோசமடைந்தது. தமது 75-வது வயதில், 1892-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் தேதி அதிகாலையில், அவரது ஆவி இவ்வுலகை நீத்து விண்ணேற்றம் அடைந்தது.

அவர் மறைவதற்கு ஆறு நாட்களுக்கு முன்பாக, பாஹ்ஜி மாளிகையில் கூடியிருந்து அனைத்து நம்பிக்கையாளர்களையும், தமது முன்னிலைக்கு இறுதி முறையாக, வரவழைத்தார்.

தமது மகன் ஒருவரால் தாங்கிப் பிடித்தபடி, படுக்கையில் சாய்ந்தவாறு அவர்களிடம் அவர் பேசினார். "உங்கள் அனைவர்பாலும் நான் மிக்க மகிழ்ச்சியே அடைகிறேன்," எனக் கூறினார். "நீங்கள் பல சேவைகள் புறிந்திருக்கின்றீர்கள், உங்கள் முயற்சியிலும் மிகுந்த சிரத்தை கொண்டிருந்துள்ளீர்கள். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் இங்கு வந்து சென்றுள்ளீர்கள். நீங்கள் தொடர்ந்து ஒற்றுமையுடனிருக்க இறைவன் உங்களுக்கு அருள் புரியட்டும். நீங்கள் இருப்பின் தேவரின் சமயத்தை உயர்த்திட அவர் உங்களுக்கு உதவிடுவாராக. "63 அவரைச் சுற்றியிருந்தோர் கண்களில் நீர் ஆறாகப் பெருகியது.

அவரது மறைவு சுல்தானுக்கு தந்தி மூலமாக உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. அச்செய்தி, "பஹா என்னும் சூரியன் ஆஸ்தமனமாகிவிட்டது" என ஆரம்பித்து மாளிகையின் அருகிலேயே அவரது புனித உடலை அடக்கம் செய்வது பற்றியும் சுல்தானுக்கு அறிவித்தது. மாளிகையின் வடக்கில் உள்ள வீட்டின் சிறிய அறை ஒன்று தேர்வு செய்யப்பட்டு, அவர் மறைந்த தினத்தன்றே சூரிய அஸ்தமனத்திற்குப் பின், அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. நபில் அந்நாட்களின் வேதனையைப் பின்வருமாறு விவரிக்கின்றார்: "தூசியுலகில் ஏற்படுத்தப்பட்ட ஆன்மீகக் கிளர்ச்சி, இறைவனின் எல்லா உலகங்களையும் அதிரச்செய்தது என நான் நினைக்கின்றேன்... எனது அக மற்றும் புற நாவு நாங்கள் இருந்து அந்த நிலையை விவரிக்க சக்தியற்று இருக்கின்றன... அந்தக் குழப்பமான சூழ்நிலையில், மாளிகையைச் சுற்றியுள்ள திடல்களில் குழுமியிருந்த அக்காநகர் மற்றும் அருகிலுள்ள கிராமங்களைச் சார்ந்த பெரும் கூட்டமான மக்கள், அழுதும், தலையில் அடித்துக்கொண்டும், சோகத்தால் சப்தமாகக் கதறிக்கொண்டிருக்கவும் காணப்பட்டனர்."64

ஒரு வாரம் முழுவதும், செல்வந்தர்கள் எனவும் ஏழைககள் எனம் துக்கம் விசாரிப்போர், பஹாவுல்லாவின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூற வந்த வண்ணமாக இருந்தனர். சமூகத்தின் பல பகுதிகளிலிருந்து, பிரமுகர்கள் உட்பட, இஸ்லாமியர், கிருஸ்தவர், மற்றும் யூதர்கள், கவிஞர்கள், சமயகுருக்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் அவரது மறைவை ஒட்டிய துக்கத்தில் பங்கெடுத்தும் அவரது நற்பண்புகளையும் உயர்வையும் பாராட்டவும் செய்தனர். பலர் அவருக்கு எழுத்துப் பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். இதுபோன்ற புகழுரைகள் அப்பிரதேசத்திலுள்ள பல நகரங்களிலிருந்தும் வந்தன, அவை யாவும், இப்போது பஹாவுல்லாவின் சமயத்தைப் பிரதிநிதித்த அப்துல் பஹாவிடம் அளிக்கப்பட்டன. ஆனாலும் இவர்கள் வெளிப்படுத்திய இந்தத் துக்கம், பாதுகாவலர் ஷோகி எபெஃண்டியின் வார்த்தைகளில், உண்மைச் சூரியர் மறைந்த நேரத்தில் அவரது சமயத்தை ஏற்றுக்கொண்ட, மற்றும் அதன் பதாகையை பாரசீகம், இந்திய, ரஷ்யா, இராக், துருக்கி, பாலஸ்தீனம், எகிப்து மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் உயரத் தூக்க உறுதிபூண்ட எண்ணற்ற ஆயிரக்கணக்கானோர் இதயங்களில் இருந்து வெளிப்பட்ட கடலளவு துக்கமும், பல நேரங்களில் அவர்கள் வெளிப்படுத்திய எல்லையற்ற பக்தி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது ஒரு துளியளவே."

இப்போது, மேலே உள்ள பத்திகளின் மீது ஒரு கணம் பிரதிபலித்தப் பிறகு, ஜோடியாக உங்கள் குழுவின் மற்றோர் உறுப்பினருடன், உங்கள் சொந்த வார்த்தைகளில் பஹாவுல்லாவின் விண்ணேற்றத்தின் விவரத்தை ஒருவர் மாற்றி ஒருவராகக் கூறுங்கள்.

## பகுதி 30

அப்துல் பஹா, பஹாவுல்லாவின் விண்ணேற்றத்திற்கு பிறகு, இப்போது வழக்கத்தில் உள்ள நேர்வு நிருபத்தின் உள்ளடக்கமாக உள்ள பகுதிகளைத் தேர்ந்தெடுக்க நபிலை நியமித்தார். பஹாவுல்லா மற்றும் பாப் பெருமானாருடைய புனித சன்னதிகளில் இந்நிருபம் வாசிக்கப்படுகின்றது. அவர்களது ஆண்டு நிகழ்வுகளிலும் இது பெரும்பாலும் உபயோகிக்கப் படுகின்றது. பஹாவுல்லாவின் விண்ணேற்றம் மே மாதம் 29-ஆம் தேதி அதிகாலையில் அனுசரிக்கப்படுகின்றது. ஏற்கனவே இல்லையென்றாலும், உங்கள் சமூகத்தில் இதுபோன்ற கூட்டங்களில் நீங்கள் பங்கேற்கும்போது, மிகவும் அழகுடைய இந்த நிருபத்தின் உரையை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். எனவே, பஹாவுல்லாவின் வாழ்க்கையைப் பற்றிய இந்தப் பாடத்தை நாம் முடிக்கும்போது, நீங்கள் அந்த நிருபத்தைப் படித்துச் சிந்திப்பது பொருத்தமானது:

> **பேரழகின் வெளிப்படுத்துதலே, நித்தியத்தின் மன்னரே, மண்ணுலகிலும், விண்ணுலகிலும் உள்ளோர் அனைவருக்கும் பிரபுவானவரே! உமது அதி மேன்மைமிகு தானெனும் தன்மையிலிருந்து உதித்துள்ள புகழ்ச்சியும், உமது ஜோதிமிகு அழகிலிருந்து பிரகாசித்திடும் ஒளியும் உம்மீது இலயித்திடுமாக! உம் மூலமாகவே ஆண்டவனின் இறைமையும் அவரது அரசும், அவரது மகிமையின் மேன்மையும், வெளிப்படுத்தப்பட்டு, பூர்வீக ஒளியின் விடிவெள்ளிகள் உமது மாற்றவியலா கட்டளையெனும் வானத்தைப் பிரகாசமடையச் செய்து, படைப்புகளின் மீது, அரூபியானவரின் அழகினை வியாபிக்கச் செய்துள்ளீர் என்பதற்கு நான் சாட்சியம் கூறுகின்றேன். உமது எழுதுகோலின் ஒரே அசைவினால் உமது “ஆகு” என்னும் கட்டளை நிறைவேற்றப்பட்டுள்ளது, இறைவனின் மறைந்துள்ள மர்மங்கள்வெளிப்படுத்தப்பட்டுள்ளன; படைப்புப் பொருள்களெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டு, வெளிப்படுத்துதல்கள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதற்கு நான் மேலும் சாட்சியம் பகர்கின்றேன்.**
>
> **உமது அழகின் வாயிலாக, அன்புக்குப் பாத்திரமானவரின் அழகு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கும், உமது வதனத்தின் மூலமாக ஆவலுக்குரியவரான அவரின் வதனம் ஒளிர்வுற்றுள்ளது என்பதற்கும், உம்மிடமிருந்து ஒரே சொல்லினால் நீர் படைப்புப் பொருள்கள் அனைத்திற்கும் இடையே தீர்ப்பளித்து, அதன்மூலம் உந்தன்பால் பக்தி கொண்டோரை ஒளி என்னும் உச்சத்தை அடையவும், சமய நம்பிக்கையற்றோரை அதிபாதாளத்தில் தள்ளவும் செய்துள்ளீர் என்பதற்கு நான் சாட்சியம் அளிக்கின்றேன்.**
>
> **உம்மை அறிந்தவர் கடவுளை அறிந்தவர் என்பதற்கும், உமது முன்னிலையை அடைந்தவர் இறைவனின் முன்னிலையை அடைந்தவர் என்பதற்கும், நான் சாட்சியளிக்கின்றேன். உம்மிலும் உமது அடையாளங்களிலும் நம்பிக்கை வைத்து உமது ஆட்சியின் முன் தன்னைத் தாழ்வுப்படுத்திக் கொண்டு, உம்மைச் சந்திக்கும் பெருமை வழங்கப்பட்டு, உமது சித்தம் என்னும் நல்விருப்பத்தினை அடைந்து, உம்மை வலம் வந்து, உமது அரியாசனத்தின் முன் நிற்பவரின் ஆசி உயர்வானதாகும். உமக்கு எதிராக நடந்தவர்கள், உம்மை நிராகரித்தவர்கள், உமது அடையாளங்களை மறுத்தவர்கள், உமது ஆட்சியை எதிர்த்துப் பேசியவர்கள், உமக்கெதிராக எழுந்துள்ளவர்கள், உமது வதனத்தின்முன் செருக்கை வளரவிட்டவர்கள், உமது சான்றுகளைக் குறித்து வாதிட்டவர்கள், உமது ஆட்சியிலிருந்தும், உமது அரசிலிருந்தும் ஓட்டமெடுத்திட்ட இவர்கள், உமது கட்டளை**

என்னும் விரல்களினால் உமது புனித நிருபங்களில் பொறிக்கப்பட்டுள்ள சமய நம்பிக்கை அற்றோரது பெயர்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டுப் பெருந் துயருக்குள்ளாவர்.

என் கடவுளே, என் நேசரே, உமது கருணை எனும் வலது கரத்திலிருந்தும், உமது அன்புப் பரிவிலிருந்தும், உமது தயை என்னும் தெய்வீக மூச்சினை என்பால் மிதந்து வந்திடச் செய்வீராக, அதனால் என்னை, என்னிடமிருந்தும், இவ்வுலகிலிருந்தும் விடுவித்து, உமது முன்னிலை என்னும் அரசவையை அடையச் செய்வீராக. நீர் விரும்பியதைச் செய்திடும் சக்தி படைத்தவர் நீரே. நீர், உண்மையாகவே, அனைத்துப் பொருள்களையும் விட அதி மேன்மையானவராக இருந்து வந்திருக்கின்றீர்.

அவரின் அழகானவரே! இறைவனின் நினைவும், அவரின் புகழ்ச்சியும், கடவுளின் ஒளியும் அவரின் பிரகாசமும், உம்மீது இலயித்திடுமாக. படைப்பின் கண்கள் உம்மைப்போல் தீங்கிழைக்கப்பட்ட ஒருவரைக் கண்டதே இல்லை என்பதற்கு நான் சாட்சியம் அளிக்கின்றேன். நீர், உமது வாழ்நாள் முழுவதும், கடுந் துன்பம் என்னும் கடலின் ஆழத்தில் அமிழ்ந்திருந்தீர். ஒரு வேளையில் சங்கிலியாலும், விலங்கினாலும் பிணைக்கப்பட்டுக் கிடந்தீர்; மற்றொரு வேளை, பகைவர்களின் வாளேந்திய அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தீர். இருந்தும், அவையனைத்திற்கும் மாறாக, நீர், சர்வ ஞானியும், சர்வ விவேகியுமானவரினால் கட்டளை இடப்பட்டிருந்தவற்றை, எல்லா மனிதர்களையும் கடைப்பிடிக்குமாறு விதித்திட்டீர்.

நீர் அனுபவித்திட்டத் தீமைகளுக்காக எனது ஆவி பலியிடப்படுமாக; நீர் தாங்கிக் கொண்ட தொல்லைகளுக்காக எனது ஆன்மா பிணைமீட்பாகுமாக. உம் மூலமாகவும் உமது வதனத்தினின்று தோன்றும் ஒளியினால் பிரகாசமுற்ற முகங்களினாலும், உம் மீதுள்ள அன்பினால், தங்களுக்கு இடப்பட்ட கட்டளைகள் அனைத்தையும் கடைப்பிடித்தவர்கள் மூலமாகவும், உமக்கும், உமது உயிரினங்களுக்குமிடையே தோன்றியுள்ள திரையினை விலக்கி, இவ்வுலகிலும், வருவுலகிலும் உள்ள எல்லா நன்மைகளையும் எனக்களிப்பீராக. நீர், உண்மையாகவே, எல்லாம் வல்லவர், அதி உயர்வானவர், ஒளிமயமானவர், என்றும் மன்னிப்பவர், அதி இரக்கமுடையவர்.

பிரபுவே, எனதாண்டவரே, உமது அதி உயர்வான பட்டங்கள் நிலைத்திருக்கும் வரையிலும், அதி நேர்த்தியான பண்புகள் நீடிக்கும் வரையிலும் இப்புனித விருட்சத்தினையும் அதன் இலைகளையும், அதன் கிளைகளையும் கொப்புகளையும், நடுத்தண்டுகளையும் தளிர்களையும், ஆசீர்வதிப்பீராக. ஆகவே, அதனைத் தாக்குவோரின் விஷமத்திலிருந்தும், கொடுங்கோன்மைப் படைகளிடமிருந்தும் அதனைப் பாதுகாப்பீராக. மெய்யாகவே, நீர், எல்லாம் வல்லவர், அதிசக்திவாய்ந்தவர். பிரபுவே, என் இறைவா, உம்மை அடைந்துள்ள உமது ஊழியர்களையும், பணிப்பெண்களையும், ஆசீர்வதிப்பீராக. நித்திய அருளினைக் கொண்டுள்ள நீர், உண்மையாகவே, வள்ளன்மையே உருவானவர். என்றும் மன்னிப்பவரும், அதி தாராள குணமுடையவருமான இறைவன் உம்மையன்றி வேறிலர்.

## பகுதி 31


வருங்காலங்களில் பஹாவுல்லாவின் வாழ்க்கைச் சரிதையை உரைத்திட உங்களுக்குப் பல வாய்ப்புக்கள் தோன்றிடும் என்பது உங்கள் அனுபவத்திலிருந்து உங்களுக்குத் தெரியும். நூல் 2 ஐ முடித்ததிலிருந்து சந்தேகத்திற்கு இடமின்றி நீங்கள் பல சந்தர்ப்பங்களில் கதையைப் பகிர்ந்து கொண்டீர்கள், இது அவரது வாழ்க்கையைப் பற்றிய ஒரு குறுகிய ஆனால் விரிவான விவரணையை உங்களுக்கு வழங்கியது, இது நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் அவர்களின் வீடுகளுக்குத் தொடர்ச்சியான வருகைகளின் போது ஆராய வேண்டிய பல ஆழமான கருப்பொருள்களில் ஒன்றாகும். நீங்கள் இப்போது படித்த விவரக்குறிப்பு நூல் 2-இல் வழங்கப்பட்டதைக் காட்டிலும் விரிவானது, மேலும் சூழ்நிலைகள் குறிப்பிடுவது போல, பஹாவுல்லா என்னும் ஆளுமையைப் பற்றிய உங்கள் விவாதங்களுக்கு அவரது வாழ்க்கையின் நிகழ்வுகளைப் பற்றி நீங்கள் பெற்ற புதிய அறிவை நீங்கள் கொண்டு வர முடியும். எவ்வாறெனினும், அவரது வெளிப்பாட்டின் தன்மை, அவரது பணியின் தன்மை, அவரது தோற்றத்தினால் விடுவிக்கப்பட்ட சக்திகளின் அளவு மற்றும் மனித வரலாற்றில் இந்தக் காலகட்டத்தின் முக்கியத்துவம் குறித்து அத்தகைய நிகழ்வுகளிலிருந்து நீங்கள் பெற்ற நுண்ணறிவுகள் மிகவும் முக்கியமானவை. சூழ்நிலைகள் எவ்வாறாக இருப்பினும் - அது சமயத்திற்குப் புதியவருடன் ஒரு சிறிய உரையாடலாக இருந்தாலும் அல்லது உங்கள் கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் உள்ள ஒரு வீட்டிற்குச் செல்லும்போது வழங்கப்பட்ட விளக்கக்காட்சியாக இருப்பினும் -- இறுதி பகுப்பாய்வில், இந்த நுண்ணறிவுகள்தான் பஹாவுல்லா என்னும் ஆளுமையைப் பற்றி நீங்கள் எவ்வாறு பேசுகிறீர்கள் என்பதையும் கேட்பவருக்கு நீங்கள் என்ன தெரிவிக்கிறீர்கள் என்பதையும் பாதிக்கும். நிச்சயமாக, ஓர் எளிய விளக்கக்காட்சி தேவைப்படும் நேரங்கள் இருக்கும், மற்றும் பின்வரும் பக்கங்கள் இந்த விஷயத்தில் உங்களுக்கு உதவிடக்கூடும்.

# பஹாவுல்லா

## கடவுளின் ஜோதி




இரானின் தலைநகரான தெஹ்ரானில் 1817-ஆம் வருடம் நவம்பர் மாதம் 12-திகதியில் பஹாவுல்லா பிறந்தார். தமது சிறுவயது முதற்கொண்டே அவர் மகத்துவத்தின் அடையாளர்களை வெளிப்படுத்தினார். அவர் தமது வீட்டிலேயே சிறிதளவு கல்வி கற்பிக்கப்பட்டார். ஆனால், கடவுளால் உள்ளார்ந்த அறிவு வழங்கப்பட்ட அவர் பள்ளிக்கூடம் செல்வதற்கு அவசியமில்லாமல் போயிற்று.



ஒரு நாள் இரவு, பஹாவுல்லா பரந்த கடலொன்றில் நீந்துவது போல அவரது தந்தை கனவொன்று கண்டார். அவரது உடலில் இருந்து வீசிய ஒளி கடல் நீரை பளிச்சிடச் செய்தது. அவரது நீண்ட கருங்கேசம் எல்லா திசைகளிலும் பரவலாக மிதந்துகொண்டிருந்தது. கணக்கிலடங்கா மீன்கள் அவரைப் பின்தொடர்ந்து அவரது தலை முடி ஒவ்வொன்றின் நுனியையும் கவ்விக்கொண்டிருந்தன. அவர் எந்த ஒரு தடையும் இன்றி சுதந்திரமாக நீந்திக் கொண்டிருந்தார். இக்கனவு பஹாவுல்லா வருங்காலத்தில் அடையவிருக்கும் மகா உன்னதத்தின் பல அடையாளங்களில் ஒன்றாகும்..



பிறகு அவர் இளைஞராக இருந்தபோது, அரசரின் இராஜசபையில் ஓர் உயர் பதவி அவருக்கு அளிக்கப்பட்டது, ஆனால் அவர் அதை நிராகரித்தார். அவர் ஒடுக்கப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் ஏழைகளுக்கு உதவுவதிலும், மற்றும் நீதிக்காக போராடுவதிலுமே தமது நேரத்தை அர்ப்பணிக்க விரும்பினார்.



அவருக்கு 27 வயதானபோது, பஹாவுல்லா, எல்லா காலத்திற்கும் வாக்குறுதியாக விளங்கியவரை வரவேற்க மக்களை தயார்படுத்த வந்த இறைவனின் புதிய அவதாரபுருஷரான பாப் அவர்களிடமிருந்து புனித வாசகங்கள் அடங்கிய ஒரு சுருள் ஏட்டை பெற்றார். பஹாவுல்லா பாப் அவர்களின் செய்தியை ஏற்று அவரது மிக முக்கிய ஆதரவாளர்களில் ஒருவராக விளங்கினார்.



பாப் அவர்கள் பிரகடனப்படுத்திய செய்தியை ஏற்க விரும்பாத அதிகாரிகள், அவரது நம்பிக்கையாளர்களை துன்புறுத்தும் செயல்களில் இறங்கினர்; அதன் விளைவாக பஹாவுல்லாவின் துன்பங்களும் ஆரம்பித்தன. 1852-ஆம் ஆண்டில் அவர் கைது செய்யப்பட்டு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு தெஹரானிலேயே மிகவும் கொடிய சிறையொன்றில் அடைக்கப்பட்டார்.



இச்சிறையில், பாப் மற்றும் கடந்தகால அவதாரபுருஷர்கள் அனைவராலும் வாக்களிக்கப்பட்டவர் தாமே என பஹாவுல்லாவுக்கு இறைவன் வெளிப்படுத்தினார். இவ்விருண்ட நிலவரையிலிருந்து உண்மைச் சூரியன் உதயமாகி, உலகிற்கு ஒளி கொடுத்தும், மனித வாழ்வில் ஒரு புதிய காலத்தை பிறப்பிக்கவும் செய்தது.



நான்கு மாத சிறைவாசத்திற்கு பிறகு, அரசாங்கம் பஹாவுல்லாவை அவரது தாய்நாட்டிலிருந்து தேசப் பிரஷ்டம் செய்தது. குளிர்காலத்தின் கடுங்குளிரில், பஹாவுல்லாவும் அவரது குடும்பத்தினரும் தெஹரானிலிருந்து பாக்தாத்திற்கான நீண்ட பிரயாணத்தைத் துவங்கினர்.



பாக்தாத்தில் பஹாவுல்லாவின் விவேகம் எல்லாத் திசைகளிலும் பிரபலமடைந்தது. சமூகத்தின் எல்லா நிலைகளிலும் உள்ளவர்கள் அவரது உதவியையும் ஆலோசனையையும் நாடி அவரது இல்லத்தில் நிரம்பி வழிந்தனர்.பஹாவுல்லாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை கண்ணுற்ற அரசாங்கம், அவரது தாய்நாட்டிலிருந்து மேலும் அதிக தூரமாக அனுப்பிவிட தீர்மானித்தது



# ரித்வான் தோட்டம்
# ஏப்ரல் *1863*

பாக்தாத்தை விட்டு புறப்படுமுன், நகரத்திற்கு வெளியே உள்ள ஒரு பூங்காவில் பஹாவுல்லா 12 நாட்கள் தங்கினார். அங்கு பிரியாவிடை கூற கணக்கற்றவர்கள் சாரி சாரியாக வந்தனர். இத்தோட்டத்தில் இந்நாளிற்கான இறைவனின் அவதாரபுருஷர் தாமே என பஹாவுல்லா பிரகடணப்படுத்தினார். வருங்காலத்தில், நூற்றாண்டுகள் தோறும் ஏப்ரல் 21-ஆம் திகதியிலிருந்து மே மாதம் 2-ஆம் திகதி வரைக்கும், பஹாவுல்லாவின் உலகம் தழுவிய சமயப் பிரகடணத்தின் வருடாந்திர விழாவாக, ரித்வான் பண்டிகை எனக் கொண்டாடப்படும்.



Sulṭán ‘Abdu’l-Aziz
of the Ottoman Empire



Nicolaevitch Alexander II,
Czar of Russia



Franz-Joseph,
Austrian Emperor



Napoleon III, Emperor
of the French




Náṣiri’ d-Dín Sháh
of Persia



Pope Pius IX



Queen Victoria
of England



William I,
King of Prussia

இன்றை துருக்கி நகரங்களான, முதலாவதாக கான்ஸ்டான்டினோப்பிள், பிறகு ஆட்ரியானோப்பிள் ஆகியவை பஹாவுல்லாவின் நாடு கடப்பின் அடுத்த கட்ட இலக்குகளாக அமைந்தன. கைதியும் தேசப் பிரஷ்டியுமான பஹாவுல்லா, ஆட்ரியானோப்பிளிலிருந்து உலக அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு கடதங்கள் அனுப்பி, அவர்களை நீதியை நிலைநாட்டும்படியும் மற்றும் தங்கள் சக்திகளை பயன்படுத்தி தொல்லைகளுக்கும் போர்களுக்கும் ஒரு முடிவு கட்டும்படியும் உத்தரவிட்டார்.



மறுபடியும் பஹாவுல்லாவின் புகழ் அப்பிரதேச மக்களிடையே பரவி, இம்முறை அவரை மேலும் தூரமாக ஆக்கா நகரத்திற்கு அனுப்பிவிட அரசாங்கம் தீர்மானித்தது. அத்தேசத்தின் கொடிய குற்றவாளிகளையும் புரட்சியாளர்களையும் சென்றவிடம் தெரியாமல் போக ஆக்கா நகர சிறைச்சாலைக்கே அனுப்புவர்.



இச்சிறைவாசம் மிகக் கொடுமையாக இருந்தது. பஹாவுல்லாவின் நம்பிக்கையாளர்கள் பலர் நெடுந்தூரம் பிராயணம் செய்து ஆக்கா சென்றும், அவரது முன்னிலையை அடைய முடியாது போயினர். அவர் அவரது சிறையின் ஜன்னல் வழியாக தமது கையை அசைப்பதை தூரத்தில் இருந்து தரிசிக்க மட்டுமே அவர்களால் முடிந்தது.



பஹாவுல்லாவின் வார்த்தைகள் மற்றும் செயல்களின் சக்தி உயர்ந்தோர் தாழ்ந்தோர் என எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்து, சிறிது சிறிதாக நிலைமையும் சீராகியது. அவரது வாழ்நாட்களின் இறுதி வருடங்களை நகரத்தின் சுவர்களுக்கு வெளியே, பாஹ்ஜி இல்லத்தில் கழித்தார். ஆக்காவில், மானிடர்களுக்காக கணக்கிலடங்கா வழிகாட்டல்களை பஹாவுல்லா வெளியிட்டார், அவற்றில் அவரது அதி புனித நூலாகிய கித்தாப்'இ'அக்டாஸும் அடங்கும்.



மே மாதம் 1892-ஆம் வருடம் பஹாவுல்லா விண்ணேற்றம் அடைந்தார். அழகிய பூந்தோட்டங்களால் சூழப்பட்ட அவரது புனித உடல் கிடத்தி வைக்கப்பட்டிருக்கும் இடம், உலகிலேயே அதிப் புனிதஸ்தானமாகும். ஆக்கவும் அருகேயுள்ள ஹை·பா நகரும் பஹாவுல்லாவின் உலக அமைப்பு முறையை நிருவ மற்றும் மனிதகுலம் செழிப்புறவும் செயல்படும் பஹாய் சமூகத்தின் ஆன்மீக மற்றும் நிர்வாக மையங்களாக உள்ளன.

# குறிப்புகள்

1. From a talk given on 18 April 1912, published in The Promulgation of Universal Peace: Talks Delivered by ‘Abdu’l-Bahá during His Visit to the United States and Canada in 1912 (Wilmette: Bahá’í Publishing, 2012), par. 2, p. 34.
2. The Summons of the Lord of Hosts: Tablets of Bahá’u’lláh(Wilmette: Bahá’íPublishing, 2006), no. 3.14–15, p. 248.
3. Ibid., no. 3.16–17, pp. 248–49.
4. The Dawn-Breakers: Nabíl’s Narrative of the Early Days of the Bahá’í Revelation (Wilmette: Bahá’í Publishing Trust, 1932, 2018 printing), p. 119.
5. Ibid., pp. 119–20.
6. Bahá’u’lláh, Epistle to the Son of the Wolf (Wilmette: Bahá’í Publishing Trust, 1988, 2016 printing), p. 11.
7. Abdul Baha on Divine Philosophy (Boston: The Tudor Press, 1918), p. 53.
8. The Dawn-Breakers, p. 96.
9. Ibid., p. 104.
10. Ibid., pp. 104–5.
11. Ibid., pp. 105–6.
12. Ibid., p. 106.
13. Ibid., p. 107.
14. Ibid.
15. Ibid., pp. 107–8.
16. Selections from the Writings of the Báb (Wilmette: Bahá’í Publishing Trust, 2006, 2014 printing), no. 3:8.1, pp. 106–7.
17. Ibid., no. 3:27.1, pp. 126–27.
18. Ibid., no. 5:21.3, p. 193.
19. The Dawn-Breakers, p. 113.
20. Ibid., p. 116.
21. Gleanings from the Writings of Bahá’u’lláh (Wilmette: Bahá’í Publishing Trust, 1983, 2017 printing), CXXIX, par. 1–2, pp. 316–17.
22. From a talk given by ‘Abdu’l-Bahá on 22 May 1912, published in The Promulgation of Universal Peace, par. 6, pp. 193–94.
23. The Dawn-Breakers, pp. 607–8.
24. Tablets of Bahá’u’lláh Revealed after the Kitáb-i-Aqdas (Wilmette: Bahá’í Publishing Trust, 1988, 2005 printing), no. 4.22, p. 40.
25. Ibid., no. 7.40, p. 96.
26. Epistle to the Son of the Wolf, pp. 20–21.
27. The Dawn-Breakers, p. 632.
28. Epistle to the Son of the Wolf, p. 21.
29. Ibid., p. 22.
30. The Summons of the Lord of Hosts, no. 1.6, pp. 6–7.
31. Gleanings from the Writings of Bahá’u’lláh, XXIX, par. 5, p. 80.
32. From a letter dated 24 June 1936 written on behalf of Shoghi Effendi, in “Crisis and Victory: A Compilation of Extracts from the Bahá’í Writings”, compiled by the Research Department of the Universal House of Justice, published in The Compilation of Compilations (Maryborough: Bahá’í Publications Australia, 1991), vol. 1, no. 287, p. 148.
33. H. M. Balyuzi, Bahá’u’lláh: The King of Glory (Oxford: George Ronald, 1991, 2018 printing), p. 106.

34. Bahá'u'lláh, cited by Shoghi Effendi, God Passes By (Wilmette: Bahá'í Publishing Trust, 1974, 2019 printing), pp. 169–70.
35. Bahá'u'lláh, The Kitáb-i-Íqán: The Book of Certitude (Wilmette: Bahá'í Publishing Trust, 2003, 2018 printing), par. 278, p. 231.
36. Bahá'u'lláh, cited in God Passes By, pp. 178–79.
37. Nabíl-i-A'zam, quoted in God Passes By, pp. 215–16.
38. Epistle to the Son of the Wolf, p. 22.
39. Bahá'u'lláh, cited in God Passes By, p. 226.
40. The Kitáb-i-Íqán, par. 1, p. 3.
41. Bahá'u'lláh, The Hidden Words (Wilmette: Bahá'í Publishing Trust, 2003, 2012 printing), p. 3.
42. Bahá'u'lláh, cited in God Passes By, p. 147.
43. Bahá'u'lláh, in The Kitáb-i-Aqdas: The Most Holy Book (Wilmette: Bahá'í Publishing Trust, 1993, 2013 printing), par. 75, p. 48.
44. Nabíl-i-A'zam, quoted in God Passes By, pp. 240–41.
45. Gleanings from the Writings of Bahá'u'lláh, XIV, par. 1, 4–5, 11–12, pp. 29–34.
46. God Passes By, p. 252.
47. Bahá'u'lláh, cited in God Passes By, pp. 292–93.
48. H. M. Balyuzi, Bahá'u'lláh: The King of Glory, pp. 317–19.
49. Bahá'u'lláh, cited in God Passes By, p. 292.
50. The Proclamation of Bahá'u'lláh to the Kings and Leaders of the World (Haifa: Bahá'í World Centre, 1967, 1972 printing), p. 17.
51. Ibid., p. 28.
52. Ibid., p. 33.
53. Ibid., p. 39.
54. Ibid., p. 43.
55. Ibid., p. 47.
56. Ibid., p. 60.
57. Ibid., p. 63.
58. Ibid., p. 84.
59. Ibid., p. 95.
60. God Passes By, p. 325.
61. Edward Granville Browne, recording the words of Bahá'u'lláh, quoted by H. M. Balyuzi, Bahá'u'lláh: The King of Glory, pp. 378–80.
62. Bahá'u'lláh, in The Kitáb-i-Aqdas, par. 1–5, pp. 21–23.
63. Bahá'u'lláh, cited in God Passes By, pp. 350–51.
64. Nabíl-i-A'zam, quoted in God Passes By, pp. 351–52.
65. Bahá'u'lláh, in Bahá'í Prayers: A Selection of Prayers Revealed by Bahá'u'lláh, the Báb, and 'Abdu'l-Bahá (Wilmette: Bahá'í Publishing Trust, 2002, 2017 printing), pp. 323–27.